ஆகஸ்ட் 2021

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியாவில் செயல்படும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் வரம்பு என்ன?

அ) 1000 கிமீ

ஆ) 2000 கிமீ

இ) 4000 கிமீ ☑

ஈ) 6000 கிமீ

✓ துறைமுகங்கள், கப்பல் & நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சரான சர்பானந்த சோனோவால், உள்நாட்டு கப்பல் மசோதா, 2021'ஐ மக்கள் அவையில் அறிமுகப்படுத்தினார். இது வழிசெலுத்தல் பாதுகாப்பு, உயிர் மற்றும் சரக்கு பாதுகாப்பு மற்றும் ஏற்படக்கூடிய மாசுபாட்டைத் தடுக்க முயற்சி செய்கிறது. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவரவும், உள்நாட்டு கப்பல்களை நிர்வகிக்கும் நடைமுறைகளை வலுப்படுத்தவும் இது எண்ணுகிறது. 4000 கிமீ நீள உள்நாட்டு நீர்வழிகள் இந்தியாவில் இயங்குகின்றன.

---

2. எந்த மாநிலத்தின் இரு நகரங்கள் யுனெஸ்கோவால் 'வரலாற்று நகர்ப்புற நிலப்பரப்பு திட்டத்தின்'கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?

அ) உத்தர பிரதேசம்

ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) மகாராஷ்டிரா

ஈ) ஒடிஸா

✓ மத்திய பிரதேச மாநிலத்தைச் சார்ந்த குவாலியர் மற்றும் ஓர்ச்சா ஆகிய நகரங்கள் யுனெஸ்கோவால் 'வரலாற்று நகர்ப்புற நிலப்பரப்பு திட்டத்தின்' கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வேகமாக வளர்ந்து வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களை உள்ளடக்கிய இந்தத்திட்டம் 2011ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தியாவில் ஆஜ்மீர் மற்றும் வாரணாசி உட்பட தெற்காசியாவின் ஆறு நகரங்கள் ஏற்கனவே இத்திட்டத்தில் உள்ளன. ஓர்ச்சா மற்றும் குவாலியர் ஆகியவை முறையே ஏழாவது மற்றும் எட்டாவது நகரங்களாக சேர்க்கப்பட்டுள்ளன.

---

3. இந்தியாவின் இரண்டாவது நூல்களின் கிராமத்தை அமைத்த இந்திய மாநிலம் எது?

அ) ஒடிஸா

ஆ) கேரளா ☑

இ) கர்நாடகா

ஈ) மேற்கு வங்கம்

✓ மகாராஷ்டிராவின் சதாரா மாவட்டத்தில் உள்ள பிலார் என்ற கிராமம், கடந்த 2017ஆம் ஆண்டில் அம்மாநில அரசால் 'நூல்களின் கிராமம்' என அறிவிக்கப்பட்டது. இந்தியாவின் இரண்டாவது 'நூல்களின் கிராமம்', கேரளத்தின் கொல்லம் கொட்டாரக்கரா நகரத்திலிருந்து ஐந்து கிமீட்டர் தொலைவில் உள்ள பெருங்குளம் என்ற குக்கிராமத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. மகாத்மா காந்தியின் நினைவாக, அக்கிராமத்தில் உள்ள வாசகர்களை அதிக நூல்களைப் படிக்க ஊக்குவிக்கும் வகையில் ஒரு நூலகமும் தொடங்கப்பட்டுள்ளது.

---

4. அண்மையில் எந்த நகரத்தில், உலகின் முதல் 3D முறையில் அச்சிடப்பட்ட எஃகு பாலம் திறக்கப்பட்டுள்ளது?

அ) ஆம்ஸ்டர்டாம் ☑

ஆ) டோக்கியோ

இ) சிட்னி

ஈ) மாஸ்கோ

✓ உலகின் முதல் 3D முறையில் அச்சிடப்பட்ட எஃகு பாலமானது சமீபத்தில் ஆம்ஸ்டர்டாமில் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டது. இது MX3D என்ற ஒரு டச்சு ரோபோடிக்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது ஆகும். இந்தப் பாலத்தை நெதர்லாந்தின் மகாராணி மெக்ஸிமா திறந்து வைத்தார். நான்கு ஆண்டுகாலமாக கட்டப்பட்டு வந்த இந்தப் பாலம் ஆம்ஸ்டர்டாம் நகரத்தின் மையத்திலுள்ள பழமையான கால்வாய்களில் ஒன்றான அவுடெஜிட்ஸ் அச்செர்பர்க்வாலில் நிறுவப்பட்டுள்ளது.

5.மீகாங்–கங்கா ஒத்துழைப்பில் உள்ள நாடுகளின் எண்ணிக்கை?

அ) 5

ஆ) 6 ☑

இ) 7

ஈ) 8

✓ மீகாங்–கங்கா ஒத்துழைப்பு என்பது இந்தியா, கம்போடியா, மியான்மர், தாய்லாந்து, லாவோஸ் மற்றும் வியட்நாம் ஆகிய ஆறு நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மை அமைப்பாகும். இந்த நாடுகளுக்கிடையே அரசியல் ரீதியான ஒத்துழைப்பை அதிகரிக்க இது 2000ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. சமீபத்தில், 11ஆவது மீகாங்–கங்கா ஒத்துழைப்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் இந்தியாவின் சார்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் பங்கேற்றார்.

---

6. ஒலிம்பிக்கில் டென்னிஸ் ஒற்றையர் போட்டியில் வென்ற 3ஆவது இந்தியர் யார்?

அ) சோம்தேவ் தேவ்வர்மன்

ஆ) சுமித் நாகல் ☑

இ) யூகி பாம்ப்ரி

ஈ) ரோகன் போபண்ணா

✓ கடந்த 25 ஆண்டுகளில் முதன்முறையாக, டோக்கியோ விளையாட்டுப் போட்டியின் முதல் போட்டியில் டெனிஸ் இஸ்டோமைனை தோற்கடித்து ஒலிம்பிக் ஆடவர் ஒற்றையர் போட்டியில் வென்ற மூன்றாவது இந்தியர் என்னும் பெருமையை சுமித் நாகல் பெற்றுள்ளார். 1988ஆம் ஆண்டு சியோல் விளையாட்டுப் போட்டியில், பாரகுவேவைச் சார்ந்த விக்டோ கபல்லெரோவை வீழ்த்தி, ஒற்றையர் போட்டியில் வென்ற முதல் இந்தியராக ஆனார் ஜீஷன் அலி.

✓ அதன்பிறகு, 1996ஆம் ஆண்டு அட்லாண்டா விளையாட்டுப்போட்டிகளில் ஆடவர் ஒற்றையர் பிரிவில், பிரேசிலின் பெர்னாண்டோ மெலிகெனியை வீழ்த்தி வெண்கலம் வென்றார் லியாண்டர் பயஸ்.

---

7. இந்தியாவில் நிறுவனங்கள் சட்டம், 2013'ஐ அமல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?

அ) நிதி அமைச்சகம்

ஆ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் ☑

இ) MSME அமைச்சகம்

ஈ) வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

✓ நிறுவனங்கள் சட்டம், 2013'இன்கீழ் நிறுவனங்களை இணைப்பது தொடர்பான விதிகளை நடுவண் அரசு திருத்தியுள்ளது. நிறுவனங்கள் சட்டம், 2013'ஐ அமல்படுத்தும் நிறுவன விவகாரங்கள் அமைச்சகம், நிறுவனங்கள் (ஒருங்கிணைப்பு) விதிகள், 2014'ஐ திருத்தியுள்ளது.

✓ இச்சட்டத்தின் பிரிவு 16'இன்கீழ், ஏற்கனவேயுள்ள நிறுவனத்திற்கு புதிய பெயரை ஒதுக்கீடுசெய்யும் முறையில் திருத்தஞ்செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் செப்டம்பர் 1 முதல் நடைமுறைக்கு வரும்.

---

8. யூரோபா கிளிப்பர் மிஷனுக்கான ஏவுதள சேவைகளை வழங்க நாசாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்வெளி நிறுவனம் எது?

அ) புளூ ஆர்ஜின்

ஆ) ஸ்பேஸ் X ☑

இ) விர்ஜின் கேலக்டிக்

ஈ) போயிங்

✓ யூரோபா கிளிப்பர் மிஷனுக்கான ஏவுதள சேவைகளை வழங்குதற்காக NASA, ஸ்பேஸ் X நிறுவனத்தை தேர்ந்தெடுத்துள்ளது. வியாழனின் நிலவான யூரோபாவை விரிவாக ஆய்வு செய்வதற்காக பூமியிலிருந்து செல்லும் முதல் திட்டம் இதுவாகும்.

✓ புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து பால்கன் ஏவுகலத்தின்மூலம் வரும் 2024 அக்டோபரில் இது ஏவப்படும். நாசாவின் ஜெட் ப்ரபல்ஷன் ஆய்வகமானது ஜான்ஸ் ஹாப்கின்ஸ் அப்ளைடு இயற்பியல் ஆய்வகத்துடன் இணைந்து யூரோபா கிளிப்பர் திட்டத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

9. தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்ட அண்மைய தரவுகளின்படி, 2019-20'இல் வேலையின்மை விகிதம் என்ன?

அ) 6.1%

ஆ) 5.4%

இ) 4.8% ☑

ஈ) 3.2%

✓ தேசிய புள்ளியியல் அலுவலகத்தால் (NSO) 2019 ஜூலை – 2020 ஜூன் மாதத்திற்கு இடையில் நடத்தப்பட்ட காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பு மீதான மூன்றாமாண்டு அறிக்கையின்படி, 2019-20'இல் வேலையின்மை விகிதம் 4.8% ஆக குறைந்துள்ளது. 2018-19'இல் வேலையின்மை விகிதம் 5.8% ஆகவும், 2017-18'இல் 6.1% ஆகவும் இருந்தது. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2019-20'இல், தொழிலாளர் குறிகாட்டிகளும் அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன.

---

10. 2021-22 முதல் 2025-26 வரையிலான காலகட்டத்தில் எத்தனை நச்சுயிரியல் ஆராய்ச்சி மற்றும் கண்டறி ஆய்வகங்களை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது?

அ 12

ஆ) 42 ☑

இ) 82

ஈ) 142

✓ இந்திய அரசாங்கம் நாடு முழுவதும் 42 வைராலஜி ஆராய்ச்சி மற்றும் வைரஸ் கண்டறியும் ஆய்வகங்களை நிறுவ திட்டமிட்டுள்ளது. மொத்தம் ₹324 கோடி செலவில் இவை நிறுவப்படவுள்ளன.

✓ 2021-22 முதல் 2025-26 வரையிலான 15ஆம் நிதி ஆணையத்தின் காலத்தில் இவை நிறுவப்படும். இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் நலவாழ்வு ஆராய்ச்சித்துறையின் கீழ் உள்ள திட்டத்தின்மூலம் இவை நிறுவப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கடற்படை துணைத் தளபதியாக எஸ்.என்.கோர்'மாடே பதவியேற்பு

கடற்படை துணைத் தளபதியாக எஸ்.என்.கோர்'மாடே சனிக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார். தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடற்படையில் 39 ஆண்டு சேவையாற்றிய பின் துணைத் தளபதி பொறுப்பில் இருந்து ஓய்வுபெற்ற ஜி.அசோக் குமாரிடம் இருந்து அப்பொறுப்பை எஸ்.என்.கோர்'மாடே ஏற்றுக் கொண்டார். துணைத் தளபதி பொறுப்பேற்றதும் அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையைப் பார்'வையிட்டு ஏற்றார். முன்னதாக, கடற்படை செயல்பாடுகள் தலைமை இயக்குநர், கிழக்கு கடற்படை கட்டுப்பாட்டு மைய தலைமை அதிகாரி, பாதுகாப்புத்துறை பணியாளர் சேவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி போன்ற சவாலான பல பதவிகளை எஸ்.என்.கோர்'மாடே வகித்துள்ளார்.

கடற்படை துணைத் தளபதி பொறுப்பை ஏற்கும் முன்பு, அவர் ஒருங்கிணைந்த பாதுகாப்பு பணியாளர் தலைமையகத்தில் முப்படைகளின் செயல்பாடுகள் மற்றும் பயிற்சி பிரிவின் துணைத் தலைவர் பதவியை வகித்துள்ளார்.

---

2. சேதி தெரியுமா?

ஜூலை 16: நாட்டில் முதன் முறையாக ஹரியாணா மாநிலம் குருகிராமில் உணவு தானிய ஏடிஎம் இயந்திரத்தை அந்த மாநில அரசு நிறுவியுள்ளது.

ஜூலை 17: கீழடியில் நடந்துவரும் ஏழாம் கட்ட அகழாய்வில் சுடுமண் பெண் பொம்மை, உறைகிணறு ஆகியவை கண்டறியப்பட்டன.

ஜூலை 18: திருச்சி துப்பாக்கித் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட நவீன ரக ரிமோட் கன்ட்ரோல் துப்பாக்கி இந்தியக் கடற்படை வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்தத் துப்பாக்கி தானாகவே இலக்கைத் தேடும் நுட்பம்கொண்டது.

ஜூலை 18: ஐந்து நட்சத்திர ஹோட்டல் வசதியுடன் கூடிய ரயில் நிலையத்தை குஜராத் மாநிலம் காந்திநகரில் பிரதமர் மோடி திறந்துவைத்தார்.

ஜூலை 19: ஆந்திரம், தெலங்கானா இடையேயான தண்ணீர் பிரச்சினையால் கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் குறுக்கே அணைகள் கட்டும் உரிமையை ஒன்றிய அரசு ஏற்றுக்கொண்டது.

ஜூலை 19: தமிழ்நாட்டில் பிளஸ் 2 மாணவர்களுக்கான தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. முதன் முறையாக தசம எண்களில் மதிப்பெண்கள் கணக்கிடப்பட்டுள்ளன.

ஜூலை 20: தமிழ்நாட்டில் ரூ.17 ஆயிரம் கோடி மதிப்பில் 33 புதிய தொழில் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகின.

ஜூலை 21: சீனாவில் மணிக்கு 600 கி.மீ. வேகத்தில் செல்லும் உலகின் அதிவேக ரயில் அறிமுகமானது. மின்காந்த சக்தியில் இயங்கும் வகையில் இந்த ரயில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜூலை 23: உலக விளையாட்டுத் திருவிழாவான 32-வது ஒலிம்பிக், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் தொடங்கியது. 206 நாடுகள் பங்கேற்கும் ஒலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் 8 வரை நடைபெறுகின்றன.

---

3. உலகத் தரம் மிக்க புலிகள் காப்பகமாக ஆனைமலை, முதுமலை காப்பகங்களுக்கு அங்கீகாரம்

கோவை மாவட்டம் ஆனைமலை மற்றும் நீலகிரி முதுமலை புலிகள்காப்பகங்களை உலகத் தரமிக்கபுலிகள் காப்பகமாக அங்கீகரித்து, தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் சான்றிதழ் வழங்கியுள்ளது. இந்தியாவில் 20 மாநிலங்களில் 50 புலிகள் காப்பகங்கள் உள்ளன. அவற்றில் உலக அளவிலான புலிகள் பாதுகாப்பு தரநிலைகளை உறுதிப்படுத்துதல் ஆய்வினை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் கடந்த 2020-ம் ஆண்டு செயல்படுத்தியது. அதில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம், புலிகள் பாதுகாப்புக்கான மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் ஈடுபாடு ஆகியன கணக்கிடப்பட்டன.

புலிகள் வாழும் 20 மாநிலங்களில் உள்ள 28 புலிகள் காப்பகங்கள் தேர்வு செய்யப்பட்டு, தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தால் அமைக்கப்பட்ட குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டது. அதில் 14 புலிகள் காப்பகங்களுக்கு புலிகள் பாதுகாப்பு தரநிலையை உறுதிப்படுத்தி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

---

4. வெண்கலம் வென்றார் பி.வி.சிந்து

டோக்யோ ஒலிம்பிக் பேட்மிண்டனில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். டோக்யோ ஒலிம்பிக் மகளிர் ஒற்றையர் பிரிவு பேட்மிண்டனில் வெண்கலப் பதக்கத்திற்கான இன்று நடத்த போட்டியில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்துவும், சீன வீராங்கனை ஹி பிங்ஜியாவும் மோதினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் சீன வீராங்கனையை 21-13, 21-15 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார் பி.வி.சிந்து.

பி.வி.சிந்து வெண்கலம் வென்றதன் மூலம் டோக்யோ ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு 2ஆவது பதக்கம் கிடைத்தது. ஏற்கெனவே டோக்யோ ஒலிம்பிக் பளுதூக்குதலில் இந்தியாவின் மீராபாய் சானு வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். முன்னதாக மல்யுத்த வீரர் சுஷில் குமார் ஒலிம்பிக்கில் வெள்ளி, வெண்கலப் பதங்கங்களை வென்றிருந்தார். தற்போது அவரைத் தொடர்ந்து சிந்துவும் ஒலிம்பிக் போட்டியில் 2 பதங்களை வென்ற முதல் வீராங்கனை என்கிற வரலாற்று சாதனையை படைத்துள்ளார். 2016 ஆண்டு நடந்த ரியோ ஒலிம்பிக் போட்டியில் பி.வி.சிந்து வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

5. தமிழக மேலவையின் வரலாறு

இன்று தமிழக 'சட்டமேலவை' தனது நூற்றாண்டை நிறைவு செய்கிறது. அந்த மேலவைக்கு மூன்று தடவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்கிற முறையில், எனக்கும் இது பெருமைக்குரிய தருணம். நூறு ஆண்டுகளுக்கு முன்பு 1921-இல், நம்முடைய மேலவை (லெஜிஸ்லேடிவ் கவுன்சில்) உதயமாவதற்கு முன்பு, இந்திய நாட்டில் நடைபெற்ற சில முக்கியமான நிகழ்வுகளை விளக்குவது அவசியம். மகாத்மா காந்தி நடத்திய ஒத்துழையாமை போராட்டத்தின் விளைவாக, அப்போதைய பிரிட்டிஷ் அரசின் இந்தியாவுக்கான அமைச்சர் சர் மொண்டெகுவும் இந்திய நாட்டின் வைஸ்ராயாக இருந்த செம்ஸ்ஃபோர்ட் பிரபுவும் கூடி விவாதித்து,

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை வலுவிழக்கச் செய்ய சற்று கூடுதலான அதிகாரங்களை வழங்க வேண்டுமென முடிவெடுத்தனர்.

இது 'மொண்டெகு – செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தம்' என அந்த காலத்தில் கூறப்பட்டது. இதன் பலனாக 'இந்திய அரசாங்கத்தின் 1919 சட்டம்' பிறந்தது. இந்த சட்டத்தின் ஒரு பகுதியாக, பிரிட்டிஷாரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் (ராஜதானிகளில்) மேலவை ஏற்படுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது. அந்த வகையில் உருவானது தான், இந்த மேலவை. தமிழக மேலவை உருவாக்கப்பட்ட 1919–இல் தமிழ்நாடு இருக்கவில்லை. இது சென்னை ராஜதானியாக (பிரஸிடென்சி) இருந்தது. பிரிட்டிஷாரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் ராஜதானிகளாகவும், ஏனைய பகுதிகள் அந்தந்த ராஜாக்களின் சமஸ்தான ஆட்சிப்பகுதிகளாகவும் இருந்தன.

சென்னை ராஜதானியில் இன்றைய தமிழகம், ஆந்திர பிரதேசம், ஒடிஸா மாநிலத்தின் தெற்கு மாவட்டங்கள், மலபார் மற்றும் தெற்கு கர்நாடகம் ஆகியவை அடங்கியிருந்தன. இந்த ஒட்டுமொத்தப் பகுதிகளின் மக்கள்தொகை, அன்று நான்கு கோடியாக இருந்தது. மேலவை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இந்தப் பட்டியலில் இடம்பெற, ஒருவர் தனக்கென ஒரு வீடு அல்லது ஒரு மனை வைத்திருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிபந்தனையால், நான்கு கோடி மக்களில் வெறும் 12,48,156 பேர் மட்டும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றனர். நம்முடைய மேலவைக்கான முதல் தேர்தல், 1920–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. அப்போது 12.5 லட்சம் பேர் வாக்காளர்களாக இருந்தும் வெறும் 3,03,558 வாக்குகள் (25%) மட்டும் பதிவாயின.

பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் போராட்டம் நடத்திக் கொண்டிருந்ததால், அன்றைய காங்கிரஸ் கட்சி மேலவைக்கான தேர்தலைப் புறக்கணித்தது. தேர்தலில் காங்கிரஸ் இல்லாத நிலையில், ஜஸ்டிஸ் கட்சி ஒரு பெரிய கட்சியாக உருவெடுத்தது. அதனுடைய தலைவரான சர் பிட்டி தியாகராய செட்டி தலைமையில் அந்தக் கட்சி தேர்தல் களத்தில் இறங்கியது. 1920 நவம்பரில் நடைபெற்ற மேலவைத் தேர்தலில், 93 தொகுதிகளில் 63 தொகுதிகளில், ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்றது. சென்னை ராஜதானியின் ஆளுநராக இருந்த வெல்லிங்டன், ஆட்சி அமைக்கும்படி ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக இருந்த சர் பிட்டி தியாகராய செட்டியைக் கேட்டுக் கொண்டார். ஆனால், அவர் அதனை ஏற்க மறுத்து, தனக்கு பதிலாக சுப்புராயலு ரெட்டியாரை முதலமைச்சராக அமர்த்தினார்.

12.1.1921 அன்று, நம்முடைய மேலவை சர் பி. ராஜகோபாலாச்சாரி (ராஜாஜி அல்ல, வேறு ஒருவர்) தலைமையில் (சேர்மன்) கூடியது. அந்த அவையில் ஒரு பெண்மணி கூட இடம் பெறவில்லை என்பதால், 1.4.1921 அன்று, மீண்டும் மேலவை கூடி மேலவையில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்கிற தீர்மானத்தை நிறைவேற்றியது. இதன் விளைவாக, நம் நாட்டின் முதல் எம்பிபிஎஸ் படித்த பெண்மணியான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1926–இல், மேலவை உறுப்பினரானார். 1919 இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த மேலவை, மீண்டும் நான்கு முறை (1923, 1926, 1930,1934) தேர்ந்தெடுக்கப்பட்டது.

இதற்கிடையில், சுதந்திரப் போராட்டம் காரணமாக மக்களுக்கு அதிக ஆட்சி அதிகாரம் வழங்க வேண்டிய நிர்பந்தம் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக, 1935 இந்திய அரசின் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக எல்லா ராஜதானிகளிலும் 1937–இல், பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு சட்டமன்றப் பேரவை (லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி) வந்தது. ராஜாஜி சென்னை ராஜதானியின் முதலமைச்சர் ஆனார். அப்போதும்கூட ராஜாஜி மேலவையின் உறுப்பினராகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1953–ஆம் ஆண்டில், தமிழகம் தனி மாநிலமானதற்குப் பின் 63 உறுப்பினர்களைக் கொண்டதாக ஆனது தமிழக சட்ட மேலவை. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 21 புது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய முறையும் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த உறுப்பினர்களில், இரண்டு இடங்கள் பட்டதாரி தொகுதியின் மூலமாகவும், இரண்டு இடங்கள் ஆசிரியர் தொகுதியின் மூலமாகவும், சட்டமன்றப் பேரவையின் மூலமாகவும், உள்ளாட்சி உறுப்பினர்கள் மூலமாகவும் தலா ஏழு உறுப்பினர்களும், மூன்று உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலமாகவும் இடம்பெற்றனர். 1962–இல் ஆசிரியர் தொகுதியிலிருந்து பேராசிரியர் க. அன்பழகனும், 1964, 1978, 1984 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை நானும், மேலவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோம். தமிழக மேலவை உறுப்பினர்களாக இருந்தவர்களில் நானும், ஆர்.எம். வீரப்பனும்தான் இப்போது இருக்கிறோம்.

தமிழக மேலவையில் புகழ்பெற்ற தலைவர்களில் சிலர், முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், டாக்டர் ஏ.எல். முதலியார், டாக்டர் வி.கே. ஜான், ம.பொ.சி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, டாக்டர் யூ. ராம ராவ், டாக்டர் பி.வி. செரியன், மாணிக்கவேல் நாயக்கர், எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியார், தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி ஆகியோர். 1.11.1986 அன்று தமிழக மேலவை கலைக்கப்பட்டது. இந்த ஆண்டு, நம்முடைய மேலவை தொடங்கப்பட்டு நூறு ஆண்டு நிறைவடைகிறது.

---

6. இ–ருபி: டிஜிட்டல் கட்டண முறை; பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

இ–ருபி என்ற ஒரு நபர் மற்றும் குறிப்பிட்ட தேவைக்கான டிஜிட்டல் கட்டண தீர்வு முறையை பிரதமர் நரேந்திர மோடி, இன்று காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். இ–ருபி என்பது டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துவதற்கான ரொக்கமில்லா மற்றும் தொடர்பில்லா சாதனம். இது க்யூஆர் குறியீடு அல்லது எஸ்எம்எஸ் அடிப்படையிலான மின்னணு –சான்று. இது பயனாளிகளின் செல்போனுக்கு அனுப்பப்படுகிறது. இந்த தடையற்ற, ஒரே முறை பணம் செலுத்தும் பொறிமுறையை பயன்படுத்துபவர்கள், டெபிட் மற்றும் கிரெடிட் கார்டு இல்லாமல், டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் செயலி இல்லாமல் அல்லது நெட் பேங்கிங் முறையை பயன்படுத்தாமல், மின்னணு சான்று மூலம் சேவை அளிப்பவரிடம் பணம் செலுத்த முடியும்.

இதை யுபிஐ தளத்தில், நேஷனல் பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, நிதி சேவைகள் துறை, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் தேசிய சுகாதார ஆணையம் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கியுள்ளது. இந்த இ–ருபி, இந்த சேவைகளுக்கு ஆதரவு அளிப்பவர்களை, பயனாளிகளுடன் இணைக்கிறது மற்றும் சேவை அளிப்பவர்களையும் நேரடி தலையீடு இன்றி டிஜிட்டல் முறையில் இணைக்கிறது. பரிவர்த்தனை முடிந்தால் மட்டுமே, சேவை அளிப்பவருக்கு பணம் செலுத்தப்படுவதை இது உறுதி செய்கிறது. முன்கூட்டியே பணம் செலுத்தப்படும் (ப்ரீ–பெய்டு) முறையாக இது இருப்பதால், எந்த நடுவர் தலையீடும் இன்றி, சேவை அளிப்பவருக்கு குறித்த நேரத்தில் பணம் செலுத்தப்படுவதை இது உறுதி செய்கிறது.

நலன்சார்ந்த சேவைகளை வழங்குவதில் ஆதார கசிவு இல்லாமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கில், இது புரட்சிகரமான முயற்சியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தாய் சேய் நலத்திட்டங்கள், டி.பி ஒழிப்பு திட்டங்கள், ஆயுஸ்மான் பாரத் பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டத்தின் கீழ் மருந்துகள் மற்றும் பரிசோதனை, உர மானியம் போன்ற திட்டங்களின் சேவைகளை வழங்கவும் இதை பயன்படுத்த முடியும். ஊழியர்களின் நலன் மற்றும் கார்ப்பரேட் சமூக பொறுப்பு திட்டங்களின் ஒரு பகுதியாகவும் இந்த டிஜிட்டல் சான்றுகளை தனியார் நிறுவனங்கள் கூட பயன்படுத்த முடியும். இ–ருபி என்ற ஒரு நபர் மற்றும் குறிப்பிட்ட தேவைக்கான டிஜிட்டல் கட்டண தீர்வு முறையை பிரதமர் நரேந்திர மோடி, இன்று காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.

---

7. 3 ஆண்டுகளில் 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறார்கள் தற்கொலை!

நாடு முழுவதும், சிறார்கள் தற்கொலை செய்துகொண்டது தொடர்பாக, தேசிய குற்ற ஆவணக் காப்பகம்(என்சிஆர்பி) அறிக்கை ஒன்றை, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில், 'கடந்த 2017 முதல் 2019ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், 13,325 பெண்கள் உள்பட 24,568 சிறார்கள் தற்கொலை செய்து கொண்டனர். 2017ம் ஆண்டு 8029 சிறார்களும், 2018ம் ஆண்டு, 8,162 சிறார்களும் 2019ம் ஆண்டு 8,377 சிறார்களும் தற்கொலை செய்துகொண்டனர். இவர்கள் அனைவரும் 14 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர். நாட்டிலேயே அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில் 3,115 பேரும், அதற்கு அடுத்தபடியாக மேற்கு வங்கத்தில் 2,802 பேரும், மகாராஷ்டிரத்தில் 2,527 பேரும், தமிழ்நாட்டில் 2,035 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

தற்கொலை செய்துகொண்ட சிறார்களில், 4046 பேர் தேர்வுகளில் தோல்வியடைந்ததால் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். திருமணம் தொடர்பான காரணங்களினால், 639 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அவர்களில் 411 பேர் பெண்கள் ஆவர். காதல் தோல்வி காரணமாக, 3315 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2567 சிறார்கள் உடல்நலக் கோளாறு காரணமாகத் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 81 சிறார்கள் உடல் ரீதியிலான துன்புறுத்தல்கள்

காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சில சிறார்களின் தற்கொலைக்கு, நெருக்கமானவர் ஒருவரின் மரணம், போதைப் பழக்கம், வேலையின்மை, ஏழ்மை நிலை, தகாத உறவால் ஏற்படும் கர்ப்பம், சமூகத்தில் மதிப்பு குறைதல் ஆகியவை காரணங்களாகக் கூறப்படுகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

8. இந்தியா – வங்கதேசம் இடையே 50 ஆண்டுகளுக்குப் பிறகு சரக்கு ரயில் சேவை தொடக்கம்

இந்தியா – வங்கதேச நாடுகளிடையே 50 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சரக்கு ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இரு நாடுகளிடையே ரயில் சேவையை மீண்டும் தொடங்கும் வகையில், மேற்கு வங்க மாநிலம் ஹல்திபாரி நகரையும் வங்கதேசத்தின் சிலாஹாட்டி நகரையும் இணைக்கும் ரயில் பாதை அண்மையில் மறுசீரமைக்கப்பட்டது. மறுசீரமைக்கப்பட்ட இந்த ரயில் பாதையை கடந்த 2020–ஆம் ஆண்டு டிசம்பர் 17–ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடியும், வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனாவும் இணைந்து தொடக்கிவைத்தனர். எனினும், கரோனா பாதிப்பு சூழல் காரணமாக இந்த ரயில் பாதையில் ரயில்கள் எதுவும் அதிகாரபூர்வமாக இயக்கப்படவில்லை.

இந்த நிலையில், 58 பெட்டிகளைக் கொண்ட சரக்கு ரயில் கற்களை ஏற்றிக்கொண்டு மேற்கு வங்கத்தின் அலிபூர்துவாரில் உள்ள டிம்டிமா ரயில் நிலையத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு புறப்பட்டது. இந்த ரயில் ஹல்திபாரி வழியாக வங்கதேசத்தின் சிலாஹாடியை சென்றடைய உள்ளது. முன்னதாக, 'ஹல்திபாரி – சிலாஹாட்டி இடையே முதல் சரக்கு ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்படும்' என்று வடகிழக்கு எல்லை ரயில்வே (என்எஃப்ஆர்) செய்தித்தொடர்பாளர் சனிக்கிழமை கூறியிருந்தார். அதன்படி, இந்த ரயில் புறப்பட்டுள்ளது. ஹல்திபாரியிலிருந்து 4.5 கிலோ மீட்டர் பயணித்து சர்வதேச எல்லையை அடையும் இந்த ரயில், அதன் பிறகு வங்கதேசத்தின் சிலாஹாட்டியிலிருந்து 7.5 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய உள்ளது.

வடக்கு வங்க மாவட்டம் மட்டுமின்றி ஒட்டுமொத்த மேற்கு வங்க மாநில பொருளாதார வளர்ச்சிக்கு உதவ உள்ள இந்த சரக்கு ரயில் சேவையின் தொடக்க நிகழ்ச்சியில், வடக்கு வங்க வர்த்தக சபை தலைவர் கிஷோர் மரோதியா பங்கேற்றார். அப்போது பேசிய அவர் 'சரக்கு ரயில் சேவை மீண்டும் தொடங்கப்பட்டிருப்பது தொழிலதிபர்களிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது' என்று அவர் கூறினார்.

'இந்த ரயில் பாதை கடந்த 1965–ஆம் ஆண்டு வரை பயன்பாட்டில் இருந்தது. அதன் பிறகு, இந்தியா – பாகிஸ்தான் இடையே நடைபெற்ற போர் காரணமாக இந்தியாவுக்கும் அப்போதைய கிழக்கு பாகிஸ்தானுக்கும் (வங்கதேசம்) இடையேயான ரயில் சேவைகள் முழுமையாக ரத்து செய்யப்பட்டன. அதன் காரணமாக, இந்த ரயில் பாதையும் துண்டிக்கப்பட்டது' என்று கடந்த 2020 டிசம்பர் மாதம் ரயில்வே அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

---

1. "ஆசிய மற்றும் பசிபிக்கிற்கான ஐநா பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின்" (UNECSCAP) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) பாரிஸ்

ஆ) பாங்காக் ☑

இ) ரோம்

ஈ) வியன்னா

✓ தாய்லாந்தின் பாங்காக்கை தலைமையிடமாகக் கொண்ட ஆசிய பசிபிக்கிற்கான ஐநா பொருளாதார மற்றும் சமூக ஆணையம், சமீபத்தில், டிஜிட்டல் மற்றும் நிலைத்த வர்த்தகவசதி குறித்த உலகளாவிய ஆய்வை வெளியிட்டுள்ளது. இந்த மதிப்பீட்டின்கீழ் 143 நாடுகள் ஐந்து முக்கிய குறிகாட்டிகளில் மதிப்பெண்கள் பெற்றுள்ளன. நடப்பு 2021ஆம் ஆண்டில் இந்தியா 90.32% மதிப்பெண்களைப்பெற்றுள்ளது. 2019'இல் அது 78.49 சதவீதமாக இருந்தது. வெளிப்படைத்தன்மையின் அடிப்படையில், இந்தியா, நடப்பு 2021ஆம் ஆண்டில் 100% பெற்றுள்ளது.

---

2. இந்தியாவில் தேசிய ஒலிபரப்பு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜூலை.23 ☑

ஆ) ஜூலை.25

இ) ஜூலை.27

ஈ) ஜூலை.29

✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.23 அன்று இந்தியாவில் தேசிய ஒலிபரப்பு நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த 1927ஆம் ஆண்டு இதே நாளின் போது, நாட்டின் முதல் வானொலி ஒலிபரப்பு, அன்றைய பம்பாய் நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

✓ இந்த முதல் ஒலிபரப்பை இந்தியன் பிராட்காஸ்டிங் கம்பெனி என்ற தனியார் அமைப்பு மேற்கொண்டது. தற்போது, பிரஸார் பாரதி, தேசிய பொதுச்சேவை ஒலிபரப்பு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. அது தூர்தர்ஷன் தொலைக்காட்சி வலையமைப்பு மற்றும் அகில இந்திய வானொலி (AIR) ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த நாளை நினைவுகூரும் வகையில், அகில இந்திய வானொலி புதுதில்லியில் "புதிய இந்தியாவை உருவாக்குதல் மற்றும் ஒலிபரப்பு ஊடகம்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.

---

3. இந்தியாவில் வருமான வரி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஜூலை.24 ☑

ஆ) ஜூலை.26

இ) ஜூலை.28

ஈ) ஜூலை.30

✓ வருமான வரி நாளானது ஆண்டுதோறும் ஜூலை.24 அன்று மத்திய நேரடி வரிகள் வாரியத்தாலும் அதுசார் அலுவலகங்களாலும் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. முதலாவது விடுதலைப்போரின்போது ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வதற்காக, 1860ஆம் ஆண்டில் இதேநாளில், வருமான வரி என்னுமொரு புதிய வரி, முதன்முதலில் சர் ஜேம்ஸ் வில்சனால் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் (2021) வரும் வருமான வரி நாள், அந்நாளின் 161ஆவது ஆண்டுநாளாகும்.

---

4. டோக்கியோ 2021'க்கான இந்தியாவின் ஒலிம்பிக் குழுவில் உள்ள பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை என்ன?

அ) 100

ஆ) 127 ☑

இ) 153

ஈ) 200

✓ டோக்கியோ ஒலிம்பிக்ஸ் 2021'க்கு 127 பங்கேற்பாளர்களைக் கொண்ட பெரிய குழுவை இந்தியா அனுப்பியுள்ளது. அவர்கள் 18 வெவ்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பர். இதில் ஆடவர் மற்றும் மகளிர் ஹாக்கி அணிகளில் 2 மாற்று வீரர்கள் மற்றும் தலா ஒரு ரிசர்வ் கோல் கீப்பரும் அடங்குவர். முந்தைய 2016 ஒலிம்பிக்கில், 117 விளையாட்டு வீரர்கள், 15 விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றனர்.

---

5. நடப்பாண்டின் (2021) G20 எரிசக்தி & சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய நாடு எது?

அ) இந்தியா

ஆ) இத்தாலி ☑

இ) அமெரிக்கா

ஈ) பிரான்ஸ்

✓ இத்தாலியால் நடத்தப்படும் G20 நாடுகளின் எரிசக்தி & சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டம் நேபிள்ஸில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பு, கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள ஐநா காலநிலை மாநாடு – சிஓபி 26 நடைபெறுவதற்கு 100 நாட்களுக்கு முன்னதாக கூட்டப்பட்டிருப்பதால் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றுள்ளது.

✓ ஆனால் உறுப்புநாடுகள், தங்களது இறுதி அறிக்கையில், முக்கிய பருவ நிலைமாற்ற உறுதிமொழிகளை ஏற்றுக்கொள்ளத்தவறியதால் இந்தச் சந்திப்பு விமர்சனத்துக்கு உள்ளானது.

---

6. இந்தியாவில் தேசிய மீன் விவசாயிகள் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜூலை.10 ☑

ஆ) ஜூலை.15

இ) ஜூலை.20

ஈ) ஜூலை.25

✓ மீன்வளத்துறை ஆராய்ச்சியாளர்களான Dr K H அலிகுனி மற்றும் Dr H L சௌத்ரி ஆகியோர் நினைவாக ஆண்டுதோறும் ஜூலை.10ஆம் தேதி அன்று தேசிய மீன் விவசாயிகள் நாள் (National Fish Farmers Day) கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ மீனவர்களின் மீன்வளத் தொழிலின் மேம்பாட்டுக்காக பிரதம மந்திரி மீன்வளத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் (2021) வரும் மீன் விவசாயிகள் நாள், அந்நாளின் 21ஆம் ஆண்டுநாளாகும்.

---

7. ஆட்கடத்தலுக்கு எதிரான உலக நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜூலை.30 ☑

ஆ) ஜூலை.31

இ) ஆகஸ்ட்.01

ஈ) ஆகஸ்ட்.02

✓ ஆட்கடத்தலுக்கு உள்ளானோரின் நிலைமைகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமாக ஆண்டுதோறும் ஜூலை.30 தேதியன்று உலகெங்கும் ஆட்கடத்தலுக்கு எதிரான உலக நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ கடந்த 2013'இல், ஐநா பொது அவை, உலகளாவிய செயல்திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக ஓர் உயர்மட்டக் கூட்டத்தை நடத்தியது; அப்போது, ஜூலை.30ஆம் தேதியை ஆட்கடத்தலுக்கு எதிரான உலக நாளாக அறிவித்தது. போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐநா அலுவலகம் அதன் உறுப்புநாடுகளின் முயற்சிகளுக்கு உதவி வருகிறது. "Victims' Voices Lead the Way" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

8. நடப்பாண்டில் (2021) வரும் உலக தாய்ப்பால் வாரத்துக்கான கருப்பொருள் என்ன?

அ) Protect Breastfeeding: A Shared Responsibility ☑

ஆ) Innocenti Declaration Anniversary

இ) Exclusive Breastfeeding

ஈ) Support Lactating Mothers

✓ உலக தாய்ப்பால் வாரம் ஆகஸ்ட் முதல் வார காலத்தில் (ஆகஸ்ட் 1–7) உலகம் முழுவதும் 120 நாடுகளில் கொண்டாடப்படுகிறது.

- ✓ கடந்த 1992ஆம் ஆண்டில் உலக நலவாழ்வு அமைப்பு மற்றும் UNICEF ஆகியவற்றுடன் இணைந்து தாய்பாலூட்டலுக்கான உலக கூட்டமைப்பு (WABA) இதனை கடைப்பிடித்து வந்தது. இன்னசென்டி தீர்மானத்தில் கையொப்பமிடப்பட்டதையும் இந்த வாரம் குறிக்கிறது.
- ✓ "Protect Breastfeeding: A Shared Responsibility" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இவ்வாரத்துக்கான கருப்பொருளாகும்.

---

9. சமீபத்திய வாழ்க்கைத்தர ஆய்வின்படி, இந்தியாவில், மோசமான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ள வயது வந்தோரின் சதவீதம் என்ன?

அ) 16.2%

ஆ) 25.6%

இ) 46.2% ☑

ஈ) 72.6%

- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் கேள்விகள் மற்றும் கூடுதல் கருவிகளை அடிப்படையாகக்கொண்ட வாழ்க்கைத்தர ஆய்வானது 2021 மே மற்றும் ஜூன் மாதத்திற்கு இடையில் பல்வேறு நகரங்களில் உள்ள இந்திய வயது வந்தோரிடையே நடத்தப்பட்டது. இது ஐந்தாவது புரத வாரத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது. இந்த ஆய்வின்படி, இந்தியாவில் வயது வந்தவர்களில் கிட்டத்தட்ட 46.2% பேர் மோசமான வாழ்க்கைத் தரத்தை கொண்டுள்ளனர்.
- ✓ இதில் மோசமான வாழ்க்கைத்தர மதிப்பெண்ணுடன் அதிக சதவீத வயது வந்தோரை (65%) கொல்கத்தா பதிவு செய்திருந்தாலும், மும்பை அதிக மதிப்பெண் பெற்று முதலிடத்தில் உள்ளது. புரத வாரமானது ஆண்டுதோறும் ஜூலை 24–30 வரை, டானோன் இந்தியாவால் CII உடன் இணைந்து கொண்டாடப்படுகிறது.

---

10. சோரா என்பது எம்மாநிலத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாகும்?

அ) அஸ்ஸாம்

ஆ) அருணாச்சல பிரதேசம்

இ) மேகாலயா ☑

ஈ) மத்திய பிரதேசம்

- ✓ 'சிரபுஞ்சி' என்றும் அழைக்கப்படுகிற சோரா என்பது, வடகிழக்கு இந்திய மாநிலமான மேகாலயாவில் உள்ள ஒரு நகரமாகும். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சோரா நகரத்தில், பசுமை சோரா காடுவளர்ப்பு இயக்கத்தை தொடங்கிவைத்தார். மேலும், பெருநகர சோரா நீர்வழங்கல் திட்டத்தையும் அவர் அப்போது தொடங்கிவைத்தார்.
- ✓ இந்தக் காடுவளர்ப்பு இயக்கத்தை, அஸ்ஸாம் ரைபிள்ஸ் உதவியுடன் மேகாலய மாநில அரசு நடத்தும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நிகர வரி வருவாய் 5% அதிகரிப்பு: நிதியமைச்சர்

மத்திய அரசின் நிகர நேரடி வருவாய் கடந்த நிதியாண்டில் 5 சதவீதம் அதிகரித்துள்ளதாக நடுவண் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மக்களவையில் அளித்த எழுத்துப்பூர்வ பதிலில் கூறியுள்ளதாவது:

நேரடி மற்றும் மறைமுக வரி வருவாயை அதிகரிக்க நடுவண் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல், வரி தளங்களை விரிவாக்குதல், டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவித்தல், வரிதொடர்பான வழக்குகளை குறைத்தல் உள்ளிட்டவற்றின்மூலமாக அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதுபோன்ற காரணங்களால், கடந்த 2020–21ஆம் ஆண்டில் நிகர வரி (நேரடி மற்றும் மறைமுக வரிகள்) வசூல் ₹14.24 இலட்சம் கோடியாக அதிகரித்தது. இது, முந்தைய நிதியாண்டின் வரி வசூலான ₹13.56 இலட்சம் கோடியுடன் ஒப்பிடுகையில் 5 சதவீதம் அதிகம். இருப்பினும், வரிசாரா வருவாய் வசூல் கடந்த நிதியாண்டில் ₹3.27 இலட்சம் கோடியிலிருந்து 36 சதவீதம் குறைந்து ₹2.08 இலட்சம் கோடியானது.

மத்திய அரசின் நிகர வருவாய் (வரி மற்றும் வரிசாரா வருவாய்) வசூல் கடந்த 2020–21ஆம் நிதியாண்டில் 3.09 சதவீதம் குறைந்து ₹16.32 இலட்சம் கோடியானது என நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

---

2. கரோனா சிகிச்சையில் அஸ்வகந்தா மூலிகை: ஆய்வு மேற்கொள்கிறது ஆயுஷ் அமைச்சகம்

கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஸ்வகந்தா மூலிகையால் தயாரிக்கப்பட்ட மருந்து எந்த அளவுக்குப் பலனளிக்கும் என்பது குறித்து ஆய்வு செய்ய ஆயுஷ் அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனமும், பிரிட்டனைச் சேர்ந்த இலண்டன் சுகாதாரம் மற்றும் வெப்பமண்டல மருத்துவ மையமும் இணைந்து இந்த ஆய்வை நடத்தவுள்ளன. இதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுள்ளன.

இதன்படி, பிரிட்டனில் உள்ள லெஸ்டர்ஷைர், பர்மிங்ஹாம், லண்டன் ஆகிய மூன்று நகரங்களைச் சேர்ந்த 2,000 பேர் தேர்வுசெய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவர் என ஆயுஷ் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய இந்திய மூலிகையான அஸ்வகந்தா மனிதர்களின் உடல் ஆற்றலை அதிகரிக்கவும், மனவழுத்தத்தை குறைக்கவும், நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுவாக்கவும் உதவுகிறது. பல்வேறு நோய்களுக்கு அஸ்வகந்தா மூலிகை எவ்வாறு பலனளிக்கிறது என இதுவரை பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், முதல்முறையாக வெளிநாட்டு நிறுவனத்துடன் இணைந்து கரோனா சிகிச்சையில் அஸ்வகந்தாவின் பலன்குறித்த ஆய்வை ஆயுஷ் அமைச்சகம் மேற்கொள்கிறது.

இந்த ஆய்வில் பங்கேற்பவர்கள் தோராயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் தலா 1000 பேர் என இரு பிரிவாகப் பிரிக்கப்படுவர். ஒரு பிரிவினருக்கு தினமும் இருவேளை அஸ்வகந்தா மாத்திரை 500 மிகி வழங்கப்படும். மற்றொரு பிரிவினருக்கு அஸ்வகந்தா மாத்திரையின் வடிவம், சுவையில் வேறுபாடு தெரியாத அளவு தீங்கற்ற மாத்திரை வழங்கப்படும். மூன்று மாதம் கழித்து அவர்களின் மன மற்றும் உடல் நலத்தின் மாற்றங்கள்குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும். இச்சோதனை வெற்றிகரமாக முடிக்கப்பட்டால் இந்திய பாரம்பரிய மருத்துவ முறைக்கு அறிவியல்பூர்வமான மதிப்பீடு கிடைக்கும்.

---

3. ஐரோப்பிய நாடுகளில் தமிழ்க்கல்வி, ஆராய்ச்சிகளில் இணைந்து செயல்பட – நார்டிக் அறிவியல் தொழில்நுட்பக்கழகம் – தமிழ்ப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்:

தமிழ்க்கல்வி, ஆராய்ச்சிகளில் தஞ்சை தமிழ்ப் பல்கலைகழகமும், நார்டிக் அறிவியல், தொழில்நுட்பக்கழகமும் இணைந்து பணியாற்றும் விதமாக நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளில் தமிழ் கற்பித்தல், ஆராய்ச்சிப் பணி மற்றும் மாணவர் பரிமாற்ற நிகழ்வுகளில் இணைந்து செயல்பட, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சுவீடன் நாட்டைச் சேர்ந்த நார்டிக் அறிவியல் & தொழில்நுட்பக்கழகம், பன்னாட்டுத் தமிழர்ப்பேரவை ஆகிய நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளன.

அந்த ஒப்பந்தத்தில், ஆராய்ச்சி தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல், கூட்டு ஆராய்ச்சி நிகழ்வு, பன்னாட்டு நிதிநல்கையில் ஆய்வு மேற்கொள்ளுதல், குறுகியகாலப் பயிற்சிகளை நடத்துதல், பண்பாட்டுப் பயிற்சிகளை நடத்துதல் ஆகியவற்றை இணைந்து நடத்துவது என உறுதிசெய்யப்பட்டது.

தமிழ்ப்பல்கலை துணைவேந்தர், நார்டிக் அறிவியல் & தொழில்நுட்பக் கழகத்தின் சார்பாக சுவீடனின் சால்மர்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் கல்வியாளர் விஜய் அசோகன், தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொறுப்பு) ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

---

1. தனிப்பயனாக்கப்பட்ட விண்வெளி–மைய வணிகத்திட்டத்தை உருவாக்கியுள்ள இந்திய அமைப்பு எது?

அ) DRDO

ஆ) ISRO ☑

இ) HAL

ஈ) BEL

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) தனிப்பயனாக்கப்பட்ட விண்வெளி சார்ந்த வணிகத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. சமீபத்தில் 8 நிறுவனங்கள் இந்தத்திட்டத்தை மேற்கொள்வதற்காக இஸ்ரோவுடன் கூட்டாண்மைக்காக பதிவுசெய்துள்ளன. ஆர்வமுள்ள நபர்கள் ISRO'இன் திட்டங்கள் மற்றும் பணி தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்புகளை அதாவது அளவுகோல் மாதிரிகள், T–சட்டைகள், விண்வெளிசார் கல்வி விளையாட்டுகள், அறிவியல் பொம்மைகள் போன்றவற்றை வாங்க முடியும். இவ்விளம்பரப்பயிற்சியானது மாணவர்கள், சிறார்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விண்வெளி அறிவியல் & தொழில்நுட்பத்தில் விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் உருவாக்கும்.

---

2. நீர்நிலைகளில் மூழ்குவதைத் தடுப்பதற்கான முதலாவது உலக நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?

அ) 2021 ஜூலை.23

ஆ) 2021 ஜூலை.25 ☑

இ) 2020 ஜூலை.27

ஈ) 2020 ஜூலை.29

✓ நீர்நிலைகளில் மூழ்குவதைத் தடுப்பதற்கான முதலாவது உலக நாள், ஜூலை.25 அன்று அனுசரிக்கப்பட்டது. இந்த நாளை உலக நலவாழ்வு அமைப்பு ஒருங்கிணைந்து அனுசரித்தது. ஐநா பொது அவையானது 2021 ஏப்ரல்.28 அன்று நீர்நிலைகளில் மூழ்குவதைத் தடுப்பதற்கான உலகளாவிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. ஒவ்வோர் ஆண்டும் 236,000 பேர் நீரில் மூழ்கி இறக்கின்றனர். 5–14 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பிற்கான பத்து முக்கிய காரணங்களுள் நீரில் மூழ்குவதும் ஒன்றென உள்ளது.

---

3. சமீபத்தில் தொடங்கப்பட்ட "ஆசாத் கி ஷௌர்யா கதா" கண்காட்சி என்பது பின்வரும் எந்த விடுதலைப் போராளியின் வாழ்க்கையை அடிப்படையாக கொண்டதாகும்?

அ) சந்திரசேகர் ஆசாத் ☑

ஆ) பகத் சிங்

இ) சுபாஷ் சந்திர போஸ்

ஈ) ஜான்சி இராணி

✓ விடுதலையின் அம்ருத் மகோத்சவத்தின் ஒருபகுதியாக, தியாகி சந்திர சேகர் ஆசாதின் வாழ்வைப் போற்றும் வகையில் "ஆசாத் கி ஷௌர்யா கதா" என்ற தலைப்பிலான கண்காட்சியை புதுதில்லியில் இந்திராகாந்தி தேசிய கலை மையத்தில், மத்திய கலாச்சார இணையமைச்சர் அர்ஜுன் இராம் மேக்வால் தொடங்கிவைத்தார்.

---

4. வடகிழக்கு விண்வெளி பயன்பாடுகள் மையம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) நாகாலாந்து

ஆ) மேகாலயா ☑

இ) அஸ்ஸாம்

ஈ) சிக்கிம்

✓ வடக்கு கிழக்கு விண்வெளி பயன்பாடுகள் மையம் (NESAC) என்பது விண்வெளித்துறை மற்றும் வடகிழக்கு கவுன்சில் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும். இது மேகாலயா மாநிலத்தின் உமியத்தில் அமைந்து உள்ளது. வடகிழக்கு விண்வெளி பயன்பாட்டு மையத்தின் பல்நோக்கு மாநாட்டு மையம் மற்றும் கண்காட்சி அமைப்புக்காக அண்மையில் ஷில்லாங்கில் உள்துறை அமைச்சர் அமித்ஷா அடிக்கல் நாட்டினார்.

---

5. 2021 டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவின் முதல் பதக்கத்தை வென்ற மீராபாய் சானு சார்ந்த விளையாட்டு எது?

அ) குறுவிரையோட்டம்

ஆ) மல்யுத்தம்

இ) குத்துச்சண்டை

ஈ) பளுதூக்குதல் ☑

✓ 2021 டோக்யோ ஒலிம்பிக்கில் இந்தியாவின் பளுதூக்கும் வீராங்கனை மீராபாய் சானு, 49 கிகிராம் பிரிவில், வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். P V சிந்துவுக்குப்பிறகு ஒலிம்பிக்கில் வெள்ளிவென்ற இரண்டாவது இந்திய பெண் இவராவார். மேலும், ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற முதல் இந்திய பெண் பளுதூக்குபவர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

---

6. பிரிட்டிஷ் அரசால் வழங்கப்பட்ட அலெக்சாண்டர் டால்ரிம்பிள் விருதை வென்ற இந்திய நீரியலாளர் யார்?

அ) வினை பத்வார் ☑

ஆ) கரம்பீர் சிங்

இ) ஆர் ஹரி குமார்

ஈ) அனில் குமார் சாவ்லா

✓ இந்தியாவின் தலைமை நீரியலாளர் வைஸ் அட்மிரல் வினை பத்வார், பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்படும் அலெக்சாண்டர் டால்ரிம்பிள் விருதைப்பெற்றுள்ளார். நீரியல் மற்றும் கடல் வரைபடப் பிரிவுகளில் அவரது படைப்புகளை அங்கீகரித்து இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

✓ 2006'இல் நிறுவப்பட்ட இந்த விருது, பிரிட்டிஷ் கடற்படைக் குழுவின் முதல் நீரியலாளரின் பெயரில் வழங்கப்படுகிறது. வினை பத்வாருக்கு கடந்த 2019'இல் வழங்கப்பட்டது இவ்விருது. தொற்றுபரவல் காரணமாக சமீபத்தில் இதற்கான விழா நடைபெற்றது.

---

7. பன்னாட்டு எரிசக்தி முகமையுடன் இணைந்து, 'இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஒருங்கிணைப்பு' என்ற அறிக்கையை அறிமுகம் செய்த நிறுவனம் எது?

அ) BEE

ஆ) NITI ஆயோக் ☑

இ) PFC

ஈ) REC

✓ "இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஒருங்கிணைப்பு 2021" பற்றிய அறிக்கை ஒன்றை NITI ஆயோக்கும் பன்னாட்டு எரிசக்தி முகமையும் இணைந்து வெளியிட்டுள்ளன. புதுப்பிக்கத்தக்க வளங்கள் நிறைந்த மாநிலங்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட ஆற்றல்மாற்ற சவால்களைப் புரிந்துகொள்ள மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத் அரசுகளுடன் நடத்தப்பட்ட மும் மாநிலப்பயிலரங்கங்களின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது ஆகும் இந்த அறிக்கை. இந்தியாவின் ஆற்றல் அமைப்பிற்கு மூலங்களை அடையாளங்காணவும் நவீன தொழில்நுட்பங்களை முன்னெடுக்கவும் இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

---

8. மரபணு மாற்றஞ்செய்யப்பட்ட 'தங்க அரிசி'யை அங்கீகரித்த முதல் நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) பிலிப்பைன்ஸ் ☑

இ) சீனா

ஈ) இலங்கை

✓ பிரகாசமான மஞ்சள் நிறங்கொண்ட மரபணு மாற்றஞ்செய்யப்பட்ட 'தங்க அரிசி'யின் வணிக ரீதியான உற்பத்தியை அங்கீகரித்த உலகின் முதல் நாடாக பிலிப்பைன்ஸ் ஆனது. இவ்வரியை அதிக ஊட்டச்சத்து மிக்கதாக ஆக்குவதற்காக வைட்டமின் ஏ முன்னோடி பீட்டா கரோட்டினால் இது செறிவூட்டப்பட்டுள்ளது. இந்த அரிசி சிறார் பருவ குருட்டுத்தன்மையை எதிர்த்துப் போராடும் என்று நிபுணர்கள் நம்புகிறார்கள். சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனமும், பிலிப்பைன்ஸ் நெல் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து இந்தத் 'தங்க அரிசி'யை உருவாக்கியுள்ளன.

---

9. இந்திய இராணுவத்தால் தொடங்கப்பட்ட மிகப்பெரிய பனிச் சறுக்கு பயணமான 'ARMEX-21' என்பது பின்வரும் எந்த இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது?

அ) லடாக் மற்றும் உத்தரகண்ட் ☑

ஆ) குல்மார்க் மற்றும் லடாக்

இ) மணாலி மற்றும் குல்மார்க்

ஈ) லடாக் மற்றும் ரோதாங் கணவாய்

✓ 'ARMEX-21' என்பது ஒரு மிகப்பெரிய பனிச்சறுக்கு பயணமாகும். அது, இந்திய இராணுவத்தால் லடாக்கின் காரகோரம் கணவாயிலிருந்து உத்தரகாண்டின் லிபுலேக் கணவாய் வரை சுமார் 1500 கிமீ தூரத்தை உள்ளடக்கியுள்ளது. இது லடாக், இமாச்சலம், கார்வால் மற்றும் குமாவுன் கோட்டங்களுக்கு அருகேயுள்ள மெய்யான கட்டுப்பாட்டுக்கோட்டுக்கு நெருக்கமாக உள்ளது. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான எல்லைப்பதற்றங்களுக்கு மத்தியில் இந்தப் பயணம் நடத்தப்படுகிறது.

---

10. ரஷ்ய கடற்படையின் 325ஆவது கடற்படை தின விழாவில் பங்கேற்ற இந்தியக்கடற்படைக்கப்பல் எது?

அ) INS தபார் ☑

ஆ) INS திரிசூல்

இ) INS தல்வார்

ஈ) INS திரிகண்ட்

✓ இந்தியா, ரஷ்யா கடற்படை இடையே ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் 'இந்திரா கடற்படை' 12ஆம் கூட்டுப்பயிற்சி பால்டிக் கடலில் கடந்த 28 & 29 ஆகிய தேதிகளில் நடந்தது. இந்தக் கூட்டுப்பயிற்சி முதன் முதலில் கடந்த 2003ஆம் ஆண்டு தொடங்கியது. இந்தக் கூட்டுப் பயிற்சி இருநாட்டு கடற்படைகள் இடையேயான நீண்டகால யுக்தி கூட்டுறவை எடுத்துக்காட்டுகிறது.

✓ ரஷ்ய கடற்படையின் 325ஆவது ஆண்டுவிழாவில் பங்கேற்க INS தபார் போர்க்கப்பல் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சென்றது. அதன் ஒரு பகுதியாக இந்திரா கடற்படை-21 பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. 2 நாள் நடந்த கூட்டுப்பயிற்சியில், வான்தாக்குதலை முறியடிப்பது, கப்பல்கள் இடையே சரக்கு பரிமாற்றம், எரிபொருள் பரிமாற்றம், ஹெலிகாப்டர் செயல்பாடுகள் உட்பட பல பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அமெரிக்காவிடமிருந்து ₹600 கோடிக்கு 'ஹார்பூன்' ஏவுகணை கொள்முதல்

கப்பல்களைத் தாக்கி அழிக்கக் கூடிய திறன்கொண்ட 'ஹார்பூன்' ஏவுகணையையும் அதன் உதிரி பாகங்களையும் சுமார் ₹600 கோடி மதிப்பில் அமெரிக்காவிடமிருந்து இந்தியா கொள்முதல் செய்யவுள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'இந்தியாவுக்கு ஹார்பூன் ஏவுகணை அமைப்பை விற்பதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. ஹார்பூன் பராமரிப்பு அமைப்பு, ஏவுகணைக்கான உதிரிபாகங்கள், அதைப் பராமரிப்பதற்கான கருவிகள், ஏவுகணையைப் பரிசோதிப்பதற்கான கருவிகள், ஏவுகணையை எடுத்துச் செல்வதற்கான கருவிகள் உள்ளிட்டவையும் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளன.

ஹார்பூன் ஏவுகணை அமைப்பை சுமார் ₹600 கோடிக்கு இந்தியாவுக்கு வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக இந்தியா-அமெரிக்கா இடையேயான நல்லுறவு மேலும் வலுவடையும். இந்தோ-பசிபிக் பிராந்தியம், தெற்காசியப் பிராந்தியம் ஆகியவற்றில் அமைதி, நிலைத் தன்மை உள்ளிட்டவை நிலவுவதில் இந்தியா முக்கியப்பங்கு வகித்து வருகிறது.

பாதுகாப்புத் துறையில் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியான இந்தியாவின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு ஹார்பூன் ஏவுகணை அமைப்பு உதவும். இதன் வாயிலாக தற்போதைய, எதிர்கால பாதுகாப்பு அச்சுறுத்தல்களை இந்தியா திறம்பட எதிர்கொள்ளமுடியும். ஹார்பூன் ஏவுகணை அமைப்பை இந்தியாவுக்கு விற்பதற்கான ஆவணங்களை அமெரிக்க பாதுகாப்புத்துறை இறுதிசெய்துவருகிறது. ஏவுகணை அமைப்பு விற்பனையில் முதன்மை ஒப்பந்ததாரராக போயிங் நிறுவனம் திகழும்.

'ஹார்பூன்' ஏவுகணையின் சிறப்பம்சங்கள்:

கடந்த 1977ஆம் ஆண்டுமுதல் ஹார்பூன் ஏவுகணை அமைப்பு அமெரிக்க இராணுவத்தில் பயன்பாட்டில் உள்ளது. அடுத்தடுத்த காலகட்டங்களில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. கடலில் உள்ள கப்பல்களைத் தாக்கி அழிக்கவல்ல திறன்கொண்ட அந்த ஏவுகணை, ரேடாரின் துணையுடன் செயல்படும் தன்மைகொண்டது. கப்பல்களைத் தாக்கி அழிப்பதில் உலகின் மிகச்சிறந்த ஏவுகணை அமைப்பாக ஹார்பூன் உள்ளது.

தற்போது முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் அந்த ஏவுகணையைப் பயன்படுத்தி வருகின்றன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு 'முக்கிய பாதுகாப்பு கூட்டாளி' என்ற அந்தஸ்தை கடந்த 2016ஆம் ஆண்டில் அமெரிக்கா வழங்கியது. அதன் அடிப்படையில் பாதுகாப்புத் துறை சார்ந்த முக்கிய தொழில்நுட்பங்களையும் போர்த் தளவாடங்களையும் இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கி வருகிறது.

---

2. 'அன்னைத் தமிழில் அர்ச்சனை' திட்டம்: அறிவிப்புப் பலகையை வெளியிட்டார் முதல்வர் ஸ்டாலின்

'அன்னைத்தமிழில் அர்ச்சனை' திட்டத்தின்கீழ் கோவில்களில் வைக்கப்படும் அறிவிப்புப்பலகையை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

'அன்னைத் தமிழில் அர்ச்சனை' எனப்பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தில் தமிழகத்தில் உள்ள கோயில்களில் ஆக.06 முதல் தமிழில் அர்ச்சனை செய்யப்படவுள்ளது. முதற்கட்டமாக, 47 பெரிய கோவில்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் சென்னை திருமயிலையில் அமைந்துள்ள கபாலீஸ்வரர் தொடங்கப்படவுள்ளது.

---

3. நிறவெறிக்கு எதிராக ஐ.நா. தனிப்பிரிவு

நிறவெறிக்கு எதிரான ஐநா'இல் தனிப்பிரிவை உருவாக்க ஐநா பொதுக் குழு அனுமதி அளித்துள்ளது. இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: நிறவெறிக்கு எதிரான புதிய பிரிவு ஒன்றை அமைப்பதற்கான தீர்மானத்தை 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐநா பொது அவை நிறைவேற்றியுள்ளது.

ஆப்பிரிக்க வம்சாவளியினரின் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அந்த அமைப்பு பாடுபடும். கடந்க 2015 முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தை ஆப்பிரிக்க வம்சாவளியினருக்கான ஆண்டுகளாக ஐநா அறிவித்துள்ளது. இந்த நிலையில், நிறவெறிக்கு எதிரான தனிப்பிரிவு தொடங்கப்படுகிறது என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

4. 04-8-2021 – விடுதலைப் போராட்ட வீரர் 'தீரன்' சின்னமலையின் 216ஆவது நினைவுநாள்

---

1. சமீபத்தில் ஆப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரையில் தொடங்கிய, 12 கீழை ஆப்பிரிக்க நாடுகள் பங்கேற்ற பாதுகாப்புப்பயிற்சியின் பெயர் என்ன?

அ) வஜ்ர பிரகார்

ஆ) டஸ்ட்லிக் II

இ) கருட சக்தி

ஈ) கட்லாஸ் எக்ஸ்பிரஸ் ☑

✓ நடப்பாண்டின் (2021) கட்லாஸ் எக்ஸ்பிரஸ் என்ற பயிற்சியானது ஆப்பிரிக்காவின் கீழைக்கடற்கரையில் ஜூலை.26 அன்று தொடங்கியது. இது கீழை ஆப்பிரிக்கா மற்றும் மேலை இந்தியப்பெருங்கடலில், தேசிய மற்றும் பிராந்திய கடல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக நடத்தப்படும் ஒரு வருடாந்திர கடற்சார் பயிற்சியாகும். இப்பயிற்சியின் நடப்பாண்டு (2021) பதிப்பில், 12 கீழை ஆப்பிரிக்க நாடுகள், அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா மற்றும் IMO, UNODC, EUNAVFOR, CRIMARIO மற்றும் EUCAP சோமாலியா போன்ற பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்றன. INS தல்வார், இதில் பங்கேற்றது.

---

2. 'இந்திய உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனம்' அமைந்துள்ள இடம் எது?

அ) தஞ்சாவூர் ☑

ஆ) திருநெல்வேலி

இ) சென்னை

ஈ) சேலம்

✓ மக்களவையானது சமீபத்தில் தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில் முனைவு மற்றும் மேலாண்மை மசோதா, 2021'ஐ நிறைவேற்றியது. இது, ஹரியானாவில் உள்ள குண்டிலியில் உள்ள NIFTEM (தேசிய உணவு தொழில்நுட்ப தொழில்முனைவு & மேலாண்மை நிறுவனம்) & தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் அமைந்துள்ள IIFPT (உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியவற்றுக்கு "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள்" என்ற அந்தஸ்தை வழங்கியுள்ளது.

---

3. இந்தியாவின் முதல் பசுமை சிறப்புப்பொருளாதார மண்டலம் எது?

அ) சென்னை (தமிழ்நாடு)

ஆ) சாண்டா குரூஸ் (மகாராஷ்டிரா)

இ) கொச்சி (கேரளா)

ஈ) கண்ட்லா (குஜராத்) ☑

✓ CII'இன் இந்திய பசுமை கட்டடக் கவுன்சிலால் (IGBC) தற்போதுள்ள நகரங்களுக்கான IGBC பசுமை நகரங்கள் பிளாட்டினம் மதிப்பீட்டை அடைந்த முதல் பசுமை சிறப்பு பொருளாதார மண்டலமாக கண்ட்லா மாறியுள்ளது.

✓ கண்ட்லா, ஆசியாவின் முதல் ஏற்றுமதி செயலாக்க மண்டலமாகும். இது, இந்தியாவின் மிகப்பெரிய பல தயாரிப்பு செயல்பாட்டு சிறப்பு பொருளாதார மண்டலமாக கருதப்படுகிறது. இது, குஜராத்தின் மேற்கு கடற்கரையில் கட்ச் வளைகுடாவில் கண்ட்லா துறைமுகத்திலிருந்து 9 கிமீ தொலைவில் அமைந்துள்ளது.

---

4. UNESCO'இன் 'உலக பாரம்பரிய இடமாக' அறிவிக்கப்பட்டுள்ள இராமப்பா கோவில் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) கேரளா

ஆ) கர்நாடகா

இ) தெலுங்கானா ☑

ஈ) மகாராஷ்டிரா

✓ ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது (UNESCO) சமீபத்தில் தெலுங்கானாவின் பாலாம்பேட்டையில் அமைந்துள்ள 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமப்பா கோவிலுக்கு 'உலக பாரம்பரிய இடம்' என்ற அந்தஸ்தை வழங்கியுள்ளது. இந்தக் கோவில், 1213ஆம் ஆண்டில் காகத்திய வம்சத்தின் ரீசர்லா ருத்ராவால் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. உலக பாரம்பரியக் குழுவில் உள்ள 17 நாடுகள் ஒருமனதாக இதற்கு ஆதரவு தெரிவித்தன.

---

5. கேரள கால்நடை மருத்துவர் ஒருவர் அண்மையில் எதிலிருந்து பயோடீசலைக் கண்டுபிடித்ததற்காக காப்புரிமையைப் பெற்றார்?

அ) கண்ணாடி

ஆ) பருத்தி

இ) கோழிக்கழிவுகள் ☑

ஈ) மீன் கழிவுகள்

✓ கால்நடை மருத்துவரிலிருந்து ஒரு கண்டுபிடிப்பாளராக மாறிய ஜான் ஆபிரகாம், வெட்டப்பட்ட கோழிகளின் கழிவுகளிலிருந்து பயோடீசலைக் கண்டுபிடித்ததற்காக காப்புரிமையைப்பெற்றுள்ளார். இந்தப் பயோடீசல், டீசலின் தற்போதைய விலையின் 40 சதவீதத்தில் லிட்டருக்கு 38 கிமீ மைலேஜ் வழங்குகிறது. இது காற்று மாசுபாட்டை பாதியாக குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய காப்புரிமை அலுவலகம், 'கோழி எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்ட பயோடீசலை' கண்டுபிடித்ததற்காக காப்புரிமையை வழங்கியுள்ளது.

---

6. எந்த இந்திய மாநிலம் / யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த மக்கள், 2019-20'இல், அதிக அளவு மீன் உணவை உட்கொண்டுள்ளனர்?

அ) கேரளா

ஆ) குஜராத்

இ) இலட்சத்தீவுகள் ☑

ஈ) சத்தீஸ்கர்

✓ இந்தியாவில் மீன்நுகர்வு குறித்து மக்களவையில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட தரவுகளின்படி, 2019-20'இல் லட்சத்தீவைச் சேர்ந்த மக்கள் நபர் ஒன்றுக்கு 105.6 கிலோ மீனைச் சாப்பிட்டுள்ளனர். எனில் அவர்கள் நாளொன்றுக்கு 300 கிராம் மீன் சாப்பிடுகின்றனர். அதே வேளையில் ஹரியானா மக்கள் ஓராண்டுக்கே இவ்வளவுதான் உண்கிறார்கள்.

✓ தேசிய சராசரி ஆண்டுக்கு சுமார் 6.46 கிலோவாக உள்ளது. அந்தமான் நிகோபார் தீவுகளைச் சேர்ந்த மக்கள் நபர் ஒன்றுக்கு 59 கிலோ மீனைச் உண்டு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளனர். 25.45 கிலோவுடன் திரிபுரா மூன்றாவது இடத்தில் உள்ளது. 2019-20ஆம் ஆண்டில், நாட்டில் பிடிபட்ட மீன்களின் அளவு 141.64 லட்சம் டன் ஆகும்; அதில் 30% ஆந்திராவில் உற்பத்தி செய்யப்பட்டதாகும்.

---

7. சமீபத்தில் டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற 13 வயது மோமிஜி நிஷியா சார்ந்த விளையாட்டு எது?

அ) ஜிம்னாஸ்டிக்ஸ்

ஆ) ஸ்கேட்போர்டு ☑

இ) நீச்சல்

ஈ) துப்பாக்கிச்சுடுதல்

✓ டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் ஸ்கேட்போர்டிங் மகளிர் பிரிவில் ஜப்பானின் இளம் வீராங்கனை மோமிஜி நிஷியா தங்கம் வென்று 13 வயதில் தங்கம் வென்ற சாம்பியன் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தினார். ஆடவர் போட்டியிலும் ஜப்பானிய வீரர் யூடோ ஓரிகோம் இந்த விளையாட்டின் முதல் தங்கம் வென்ற வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார். 13 வயதான பிரேசிலியர் ரைஸ்ஸா லீல் இரண்டாவது இடத்தையும், ஜப்பானின் புனா நகாயாமா வெண்கலமும் வென்றனர்.

---

8. 'ஆபரேஷன் விஜய்' என்பது எந்த நாட்டிற்கு எதிராக இந்தியா நடத்திய ஒரு மிகப்பெரிய பாதுகாப்பு நடவடிக்கையாகும்?

அ) சீனா

ஆ) பாகிஸ்தான் ☑

இ) மியான்மர்

ஈ) இலங்கை

✓ பொதுவாக கார்கில் போர் என்றழைக்கப்படுகிற 'ஆபரேஷன் விஜய்', பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகும். அது, 1999 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.26ஆம் தேதி விஜய் திவாஸாக கொண்டாடப்படுகிறது. அது போரில் பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் வெற்றியை குறிக்கிறது.

---

9. "Vision for Everyone" **என்ற தீர்மானத்தை அங்கீகரித்துள்ள உலகளாவிய அமைப்பு எது?**

அ) UNGA ☑

ஆ) WHO

இ) உலக வங்கி

ஈ) AIIB

- ✓ ஐநா பொது அவை தனது முதல் "Vision for Everyone" தீர்மானத்தை அங்கீகரித்தது. இந்தத் தீர்மானம் வங்காளதேசம், ஆன்டிகுவா மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் நிதியளித்துள்ளன. மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்து இதற்கு நிதியளித்தன.
- ✓ 2030ஆம் வாக்கில் குறைந்தபட்சம் 1.1 பில்லியன் பார்வைக்குறைபாடு உள்ளவர்களுக்கு உதவ வேண்டும் என ஐநா பொது அவை தனது 193 உறுப்புநாடுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

---

10. **மத்திய வேளாண் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட வேளாண் டிஜிட்டல் சூழலமைப்பின் பெயர் என்ன?**

அ) அக்ரிஸ்டேக் ☑

ஆ) அக்ரோ இந்தியா

இ) ஆத்மநிர்பார் அக்ரி

ஈ) கிசான்ஸ்டேக்

- ✓ 'அக்ரிஸ்டேக்' என்னும் நாட்டின் வேளாண் டிஜிட்டல் சூழலமைப்பை உருவாக்கும் திட்டத்தை வேளாண் அமைச்சகம் தொடங்கியுள்ளது. உழவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் வேளாண் துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் அரசுக்குத் திட்டமிடல் செய்ய உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ உழவர்களுக்கு தனிப் பயனாக்கப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக, டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நிலப்பதிவுகளைப் பயன்படுத்தி, தேசிய உழவர்கள் தரவுத்தளத்தை உருவாக்குவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று வேளாண் அமைச்சகம் சமீபத்தில் அறிவித்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. குத்துச்சண்டை: லவ்லினாவுக்கு வெண்கலம்

டோக்கியோ ஒலிம்பிக்கில் மகளிருக்கான 69 கிலோ கிராம் பிரிவு குத்துச் சண்டையில் இந்தியாவின் லவ்லினா போர்கோஹெய்ன் வெண்கலப் பதக்கம் வென்றார். இந்த ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு இது 3ஆவது பதக்கமாகும். அரையிறுதிக்கு முன்னேறியிருந்த லவ்லினா, அச்சுற்றில் துருக்கியின் புசெனாஸ் சுர்மெனெலியிடம் (0–5) வீழ்ந்தார்.

குத்துச்சண்டையின் அரையிறுதிகளில் தோல்வி காணுவோருக்கும் வெண்கலம் வழங்கப்படுகிறது. இந்தியாவுக்காக ஒலிம்பிக் குத்துச் சண்டையில் பதக்கம் வென்ற 3ஆவது போட்டியாளர் லவ்லினா. முன்னதாக விஜேந்தர் சிங் (2008 பெய்ஜிங்), மேரி கோம் (2012 லண்டன்) ஆகியோர் இதேபோல் வெண்கலம் வென்றனர்.

இந்த ஒலிம்பிக்கில் லவ்லினாவுக்கு முன்பாக, பளுதூக்குதல் வீராங்கனை சாய்கோம் மீராபாய் சானு வெள்ளியும், பாட்மிண்டன் வீராங்கனை பி வி சிந்து வெண்கலமும் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

4ஆவது பதக்கத்தை உறுதி செய்தார் ரவி தாஹியா

இந்தியாவுக்காக, மல்யுத்தத்தில் ஒரு பதக்கத்தை ரவி தாஹியா உறுதி செய்துள்ளார். ஆடவருக்கான 57 கிலோ கிராம் பிரிவு இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ள அவர், தங்கம் அல்லது வெள்ளியை கைப்பற்றுவார்.

இதன்மூலம், ஒலிம்பிக் மல்யுத்தத்தில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய 2ஆவது இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். முன்னதாக, சுஷீல் குமார் 2012 லண்டன் ஒலிம்பிக்கில் அவ்வாறு இறுதிச்சுற்றுக்கு முன்னேறி அதில் வெள்ளி வென்றிருந்தார். ஒலிம்பிக் மல்யுத்தத்தில் இந்தியாவுக்காக முதலில் பதக்கம் வென்றது கே டி ஜாதவ் ஆவார். அவர் 1952 ஹெல்சிங்கி ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்றிருந்தார். இந்த ஒலிம்பிக்கில் இன்னும் ஹாக்கி, தடகளம் ஆகியவற்றிலும் இந்தியாவுக்கு பதக்கங்கள் கிடைக்கலாம் எனத் தெரிகிறது.

---

2. இந்தியாவில் முதல்முறை; 'மக்களைத்தேடி மருத்துவம்' திட்டம்: முதல்வர் ஸ்டாலின் தொடங்கிவைத்தார்

'மக்களைத்தேடி மருத்துவம்' திட்டத்தை முதல்வர் முக ஸ்டாலின் இன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கிவைத்தார். நீரழிவு நோய், இரத்த அழுத்தம், இருதய நோய்கள், டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படுவோர் உள்ளிட்ட நோயாளிகளுக்கு, வீடுகளுக்கே நேரடியாகச் சென்று தேவையான மருந்து, மாத்திரைகள், சிகிச்சைகள் வழங்க, இந்தியாவிலேயே முதன்முறையாக, 'மக்களைத்தேடி மருத்துவம்' என்ற திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்தது. பரவா நோய்களைத் தடுக்கும் வகையில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்காக ₹242 கோடி ஒதுக்கப்பட்டது. முதற்கட்டமாக, நீரழிவு நோய், இரத்த அழுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று மருந்துகள் வழங்கப்படவுள்ளன. இத்திட்டத்தில், முதற்கட்டமாக 30 இலட்சம் பேர் பயன்பெறுவர்.

---

3. '12பி' அந்தஸ்து பட்டியலில் இடம்பெற்றது தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம்

சென்னை காரப்பாக்கத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துக்கு பல்கலைக்கழக மானியக்குழு '12பி' அந்தஸ்து வழங்கியுள்ளது. இதுகுறித்து அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொறுப்பு) வெளியிட்ட செய்தி:

ஆசிரியர்கல்வியை மேம்படுத்தி சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் கடந்த 2008'இல் தமிழ்நாடு அரசின் சார்பில் தொடக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைப்படி, '12பி' அந்தஸ்து பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே மத்திய அரசின் நிதியுதவி, கல்விசார்ந்த புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்கான அனுமதி ஆகியவை வழங்கப்படும்.

---

4. தடகளம்: நீரஜ் சோப்ரா அசத்தல்

ஆடவருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தனது தகுதிச்சுற்றில் முதல் முயற்சியிலேயே 86.65 மீட்டர் தூரம் எறிந்து இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றார். இந்தியாவின் ஒலிம்பிக் வரலாற்றில் ஈட்டி எறிதல் இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்ற முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். அவருக்கு இது முதல் ஒலிம்பிக் போட்டியாகும். 15 போட்டியாளர்கள் பங்கேற்ற 'ஏ' பிரிவு தகுதிச்சுற்றில் அவரே முதலிடம் பிடித்ததும் குறிப்பிடத்தக்கது.

---

1. 'இந்தியா சைக்கிள்ஸ்4சேஞ்ச் சவாலுடன்' தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

இ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) வேளாண் அமைச்சகம்

✓ நாடு முழுவதும் மிதிவண்டி சார்ந்த முன்னெடுப்புகளை உருவாக்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், கடந்த 2020 ஆம் ஆண்டில், 'இந்தியா சைக்கிள்ஸ்4சேஞ்ச்' என்ற சவாலை அறிமுகம் செய்தது. சமீபத்தில், நாட்டின் 11 நகரங்களுக்கு 'India's Top 11 Cycling Pioneers' என்ற பட்டத்தை அவ்வமைச்சகம் வழங்கியது. அத்துடன் முதல் பருவத்தின் அடுத்த கட்டமும் தொடங்கியுள்ளது. இந்த 11 நகரங்களும் தங்களின் முயற்சிகளுக்காக தலா ₹1 கோடி பரிசினைப் பெறும்.

---

2. CSR நிதியைப் பயன்படுத்தி தனியார் மருத்துவமனைகள்மூலம் இலவச COVID-19 தடுப்பூசி இயக்கத்தை தொடங்கியுள்ள முதல் மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ தனியார் மருத்துவமனைகளில் இலவச COVID தடுப்பூசி இயக்கத்தை அறிமுகப்படுத்திய நாட்டின் முதல் மாநிலமாக தமிழ்நாடு அரசு உள்ளது. இந்தத் திட்டத்திற்கு பல்வேறு நிறுவனங்களின் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியங்கள் நிதியளிக்கின்றன.

✓ இத்திட்டத்தின்கீழ், 130 தனியார் மருத்துவமனைகள் பொதுமக்களுக்கு இலவச COVID தடுப்பூசிகளை வழங்கவுள்ளன. உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசிகளில் 75 சதவிகிதத்தை மத்திய அரசு கொள்முதல் செய்கிறது; மீதமுள்ள 25% தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகிறது. அதில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படாமலேயே உள்ளன.

---

3. COVID-19 நோயாளிகளுக்கான இந்தியாவின் முதல் உள்நாட்டு உடலியல் அளவுருக்கள் கண்காணிப்பு அமைப்பின் பெயர் என்ன?

அ) COVID BEEP ☑

ஆ) COVID SYS

இ) C19- MONITOR

ஈ) C19- CHECK

✓ "COVID BEEP" என்பது இந்தியாவின் முதல் உள்நாட்டு, கம்பியில்லா உடலியல் அளவுருக்கள் கண்காணிப்பு அமைப்பாகும். இதனை COVID-19 நோயாளிகளுக்காக, எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிட் & அணுசக்தித் துறை ஆகியவற்றுடன் இணைந்து ஐதராபாத்தின் ESIC மருத்துவக்கல்லூரி உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பை பெரிய அளவில் பயன்படுத்துவதற்காக, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்திடம் திட்டமொன்று சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

---

4. மருத்துவக்கல்லூரி சேர்க்கைகுறித்து, "அகில இந்திய ஒதுக்கீடு" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?

அ) 1975

ஆ) 1980

இ) 1986 ☑

ஈ) 1990

✓ 1986ஆம் ஆண்டில், உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்கீழ், "அகில இந்திய ஒதுக்கீடு" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வேறொரு மாநிலத்தில் அமைந்துள்ள மருத்துவக்கல்லூரியில் படிக்க விழையும் பிற மாநிலத்தைச்சேர்ந்த மாணவர்களுக்கு, இருப்பிடத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் தகுதி அடிப்படையில் வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன் இது அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ இத்திட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 15% UG இடங்களும் 50% PG இடங்களும் உள்ளன. சமீபத்தில் மத்திய சுகாதார அமைச்சகம் ஆனது இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவச் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) 27% இடஒதுக்கீடும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடும் அகில இந்திய ஒதுக்கீடு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. 2021-22 முதல் மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் இந்த இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படும்.

---

5. இந்தியாவின் எத்தனை புலிகள் காப்பகங்கள், உலகளாவிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட புலிகள் தரநிலைகளின் (CA | TS) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன?

அ) 5

ஆ) 3

இ) 11

ஈ) 14 ☑

✓ உலக புலிகள் நாளையொட்டி, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சரான பூபேந்திர யாதவ் இந்தியாவின் 14 புலிகள் காப்பகங்கள் உலகளாவிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட புலிகள் தரநிலைகளின் (CA | TS) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாகக் கூறினார்.

✓ அஸ்ஸாமில் உள்ள மானஸ், காசிரங்கா மற்றும் ஓராங்; மத்திய பிரதேசத்தின் சாத்புரா, கன்ஹா மற்றும் பன்னா; மகாராஷ்டிராவின் பெஞ்ச்; பீகாரின் வால்மீகி புலிகள் காப்பகம்; உத்தரபிரதேசத்தின் துத்வா; மேற்கு வங்கத்தின் சுந்தரவனக்காடுகள்; கேரளத்தின் பரம்பிக்குளம்; கர்நாடகத்தின் பந்திப்பூர் மற்றும் தமிழ்நாட்டின் முதுமலை மற்றும் ஆனைமலை ஆகியன அந்த 14 அங்கீகரிக்கப்பட்ட புலிகள் காப்பகங்கள் ஆகும்.

✓ CA|TS என்பது புலிகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பை நிர்வகிக்க, சிறந்த நடைமுறை மற்றும் தரங்களை நிறுவும் அளவுருக்களின் தொகுப்பாகும். இது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு கருவியாகும். CA|TS 2013'இல் தொடங்கப்பட்டது. இது புலிகள் & காப்புப்பகுதி நிபுணர்களால் உருவாக்கப்பட்டதாகும். இது 2022'க்குள் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கான உலகளாவிய குறிக்கோளான T*2'இன் ஒரு முக்கியப்பகுதியாகும். புலிகளுக்கான பாதுகாப்பான இடத்தை உறுதி செய்வதே CA|TS'இன் நீண்டகால இலக்காகும்.

---

6. நடப்பாண்டுக்கான (2021) மகாராஷ்டிர பூஷன் விருதினை வென்றவர் யார்?

அ) சச்சின் டெண்டுல்கர்

ஆ) லதா மங்கேஷ்கர்

இ) ஆஷா போஸ்லே ☑

ஈ) ரத்தன் டாடா

✓ முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தலைமையிலான, மகாராஷ்டிர பூஷன் தேர்வுக்குழு, ஆஷா போஸ்லேவை மதிப்புமிக்க மகாராஷ்டிரா பூஷன் விருது - 2021'க்கு தேர்வுசெய்துள்ளது. மகாராஷ்டிராவின் கலாச்சார விவகார அமைச்சர் அமித் தேஷ்முக் இதனை அறிவித்தார். மகாராஷ்டிர பூஷன் என்பது மகாராஷ்டிராவின் மிகவுயர்ந்த குடிமக்கள் விருதாகும்.

✓ இலக்கியம், கலை, விளையாட்டு, அறிவியல், சமூகப்பணி, பத்திரிகை & பொது நிர்வாகம் ஆகிய துறைகளில் சிறப்பான சாதனை புரிவோருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் மகாராஷ்டிர மாநில அரசால் வழங்கப்படுகின்ற இவ்விருது, முதன்முதலில் கடந்த 1996'இல் வழங்கப்பட்டது. இந்த விருதை வென்ற முதல் நபர், புருஷோத்தம் இலட்சுமண் தேஷ்பாண்டே ஆவார். மகாராஷ்டிர பூஷன் விருது வென்றோருக்கு ₹10 இலட்சம் ரொக்கப் பரிசும், நினைவுப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

---

7. "அனைவருக்கும் AI" என்ற முன்னெடுப்புக்காக CBSE மற்றும் கல்வி அமைச்சகத்துடன் ஒத்துழைத்துள்ள நிறுவனம் எது?

அ) மைக்ரோசாப்ட்

ஆ) இன்டெல் ☑

இ) விப்ரோ

ஈ) டெல்

✓ இன்டெல், CBSE மற்றும் கல்வியமைச்சகம் ஆகியவை 2021 ஜூலை.29 அன்று "அனைவருக்கும் AI" என்ற முன்னெடுப்பைத் தொடங்குவதாக அறிவித்தன. இந்த முன்னெடுப்பின் முக்கிய நோக்கம், இந்தியாவில்

உள்ள அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு (AI) பற்றிய அடிப்படை புரிதலை உருவாக்குவதாகும். அனைவருக்கும் AI என்பது 4 மணி நேர, சுயகற்றல் திட்டமாகும்.

---

8. 'சதுப்புநில சுற்றுச்சூழலமைப்பைப் பாதுகாப்பதற்கான சர்வதேச நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜூலை.23

ஆ) ஜூலை.26 ☑

இ) ஜூலை.28

ஈ) ஜூலை.30

✓ 'சதுப்புநில சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான சர்வதேச நாளானது, 2015ஆம் ஆண்டில், UNESCO'இன் பொது மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. UNESCO ஆனது ஆண்டுதோறும் ஜூலை.26ஆம் தேதியன்று சதுப்புநில சுற்றுச்சூழல் பாதுகாப்பு நாளைக் கொண்டாடுகிறது.

✓ இது சதுப்புநில அமைப்புகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு அவற்றின் நிலைத்த மேலாண்மை மற்றும் பாதுகாப்பை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. UNESCO'இன் கூற்றுப்படி, உலகளாவிய வனப்பகுதியின் ஒட்டுமொத்த இழப்புகளைவிட 3–5 மடங்கு வேகத்தில் சதுப்புநிலங்களை நாம் இழந்து வருகிறோம். உட்கட்டமைப்பு மேம்பாடு, நகரமயமாக்கல் மற்றும் உழவு நிலமாக மாற்றுதல் ஆகியன இதற்கு முக்கிய காரணங்களாக கூறப்படுகின்றது.

---

9. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது பின்வரும் எந்த மாநிலத்தில் வடகிழக்கின் முதல் சிறப்பு மையத்தை அமைக்க உள்ளது?

அ) அஸ்ஸாம்

ஆ) சிக்கிம்

இ) அருணாச்சல பிரதேசம் ☑

ஈ) மேகாலயா

✓ அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகமானது அருணாசல பிரதேசத்தின் பாபம் பரே மாவட்டத்தில் உள்ள கிமினில், வடகிழக்கின் முதல் சிறப்பு மையத்தை நிறுவவுகிறது. உயிரியல் வளங்கள் மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கான சிறப்பு மையமான இதனை உயிரித்தொழினுட்பத்துறை அங்கீகரித்துள்ளது. இதன் புதிய கட்டடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு கட்டுமானம் ஆகியவை ₹50 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

---

10. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் உருவாக்கப்பட்ட மின்னணுக்கழிவுகளின் சதவிகிதம், 2020ஆம் ஆண்டில், எவ்வளவுக்கு உயர்ந்துள்ளது?

31.6%

அ) 12.6%

ஆ) 24.6%

இ) 31.6% ☑

ஈ) 42.6%

✓ கடந்த 2020ஆம் ஆண்டில், இந்தியா, 10,14,961.2 டன் மின்–கழிவுகளை உருவாக்கியுள்ளது என மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற இணையமைச்சர் அஷ்வினி குமார் சௌபே கூறினார். இது, அதற்கு முந்தைய ஆண்டில் (2019) உருவான மின்னணுக்கழிவுகளின் அளவைவிட 31.6% அதிகமாகும்.

✓ மேலும், மின்னணுக்கழிவுகள் தொடர்பான தேசிய அளவிலான தரவுகள் 2017–18ஆம் ஆண்டிலிருந்துதான் கிடைக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஒலிம்பிக் ஹாக்கியில் இந்தியாவுக்கு வெண்கலம்: 41 ஆண்டுகளுக்குப் பிறகு பதக்கம் கைகூடியது

ஜப்பானில் நடைபெறும் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு ஒரே நாளில் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என இரு பதக்கங்கள் கிடைத்தது. அதில், ஹாக்கி போட்டியில் 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இந்தியா 5–4 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி வெண்கலப்பதக்கம் வென்றது. மல்யுதத்தில் இரவி தாஹியா 57 கிலோ பிரிவில் வெள்ளி பெற்றார். இத்துடன் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 5 ஆகியுள்ளது.

ஹாக்கி வெண்கலம், ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் 41 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ஆடவர் அணிக்கு கிடைத்துள்ள பதக்கமாகும். கடைசியாக இந்தியா 1980 மாஸ்கோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றிருந்தது. தற்போது வென்றுள்ள வெண்கலத்தையும் சேர்த்து, ஒலிம்பிக் ஹாக்கியில் இந்திய ஆடவர் அணி 8 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 12 பதக்கங்களை வென்றுள்ளது.

---

2. சேதி தெரியுமா?

ஜூலை.24: டோக்கியோ ஒலிம்பிக் 49 கிலோ பளு தூக்கும் பிரிவில் இந்தியாவின் சாய்கோம் மீராபாய் சானு இந்தியாவுக்கு முதல் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். 2000 சிட்னி ஒலிம்பிக்கில் பளு தூக்கும் பிரிவில் கர்ணம் மல்லேஸ்வரி வெண்கலப் பதக்கம் வென்ற பிறகு இந்தியா வென்றுள்ள பதக்கம் இது.

ஜூலை.24: திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கும் முத்துக்கலிங்கன் கிருஷ்ணனை நியமித்து மத்தியக் கல்வி அமைச்சகம் உத்தரவிட்டது.

ஜூலை.25: ரஷ்யாவில் நடைபெற்ற 'சர்வதேச கணித ஒலிம்பியாட் 2021' போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 5 பதக்கங்களை இந்திய மாணவர்கள் வென்றனர். இது உலகின் பழமையான அறிவியல் போட்டி.

ஜூலை.26: ஹங்கேரியில் நடைபெற்ற உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை பிரியா மாலிக் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

ஜூலை.26, 29: தெலங்கானாவில் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமப்பா கோயில், குஜராத்தில் கட்ச் பகுதியில் உள்ள தொன்மையான ஹரப்பா நகரான தோலவிரா ஆகியவற்றை உலக பாரம்பரிய சின்னங்களாக யுனெஸ்கோ அறிவித்தது.

ஜூலை.27: தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியோரை கௌரவிக்க 'தகைசால் தமிழர்' என்கிற புதிய விருதை தமிழ்நாடு அரசு உருவாக்கியது. இதன் முதல் விருதுக்குச் விடுதலைப் போராட்ட வீரரும் நூற்றாண்டு கண்ட இடதுசாரி தலைவருமான என் சங்கரய்யா தேர்வுசெய்யப்பட்டார்.

ஜூலை.27: கல்விச்சேர்க்கையில் வன்னியர்களுக்கு 10.5 சதவீதம், சீர்மரபினருக்கு 7 சதவீதம், இதர பிற்படுத்தபட்டோருக்கு 2.5 சதவீதம் சிறப்பு உள்–ஒதுக்கீடு வழங்குவதற்கான அரசாணையைத் தமிழக அரசு வெளியிட்டது.

ஜூலை.29: கேரளத்தில் ஆண் அரசு ஊழியர்கள் திருமணத்தின்போது உயரதிகாரிகளிடம் வரதட்சணை மறுப்புச்சான்றிதழ் சமர்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

ஜூலை.30: புதுக்கோட்டையில் சங்ககால பழமைவாய்ந்த பொற்பனைக் கோட்டையில் அகழாய்வுப் பணிகள் தொடங்கின.

ஆகஸ்ட்.1: டோக்கியோ ஒலிம்பிக்கில் பாட்மிண்டன் மகளிர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். 2016'இல் வெள்ளிப்பதக்கம் வென்ற சிந்து, இப்போது வெண்கலம் வென்றதன் மூலம், ஒலிம்பிக்கில் தனிநபர் பிரிவில் தொடர்ச்சியாக இருபதக்கங்களை வென்ற முதல் இந்திய வீராங்கனையாகியிருக்கிறார்.

---

1. வறண்ட நிலங்களில் மூங்கில் சோலை அமைக்கும் திட்டத்தை (BOLD) செயல்படுத்துகிற நிறுவனம் எது?

அ) KVIC ☑

ஆ) NABARD

இ) SIDBI

ஈ) இந்திய இராணுவம்

✓ பாலைவனமாவதைத் தடுக்கவும் மற்றும் ஊரக பொருளாதாரத்துக்கு உதவவும் ஜைசல்மரில் உள்ள தனோத் கிராமத்தில், மூங்கில் சோலை திட்டத்தை (**B**amboo **O**asis on **L**ands in **D**rought) காதி கிராம தொழிற்புற ஆணையம் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படை தொடங்கியது. இந்தத் திட்டமானது நிலம் பாலையாவதை குறைப்பதோடு, உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பன்னோக்கு ஊரக தொழிற்துறைக்கும் உதவியாக இருக்கும். இந்த மூங்கில் கன்றுகளை வளர்க்கும் பொறுப்பு எல்லைப் பாதுகாப்புப் படையிடம் (BSF) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

---

2. இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் தலைமையகம் அமைந்து உள்ள இடம் எது?

அ) புது தில்லி

ஆ) கொல்கத்தா ☑

இ) ராஞ்சி

ஈ) ராய்பூர்

✓ அருணாச்சல பிரதேசம், ஆந்திர பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஜம்மு & காஷ்மீர் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இந்திய புவியியல் ஆய்வு மையம் (GSI) ஏழு லித்தியம் ஆய்வுத்திட்டங்களை எடுத்துள்ளது. இதன் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.

✓ அணுவாற்றல் துறையின்கீழ் வரும் ஆய்வு & ஆராய்ச்சிக்கான அணு கனிமங்கள் இயக்குநரகம் (AMDER) கர்நாடகா மற்றும் இராஜஸ்தானில் லித்தியம் ஆய்வை மேற்கொண்டுள்ளது. இது இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு திட்டங்களின் ஒருபகுதியாக பார்க்கப்படுகிறது. ₹18,100 கோடி மதிப்பிலான இந்த உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை திட்டமானது சமீபத்தில் இந்தியாவில் மின்சார வாகன போக்குவரத்தை ஊக்குவிப்பதற்காக லித்தியம் அயன் மின்கலங்களை உருவாக்குவதாக அறிவித்தது.

---

3. ஹரப்ப நகரமான 'தோலவிரா' அமைந்துள்ள மாநிலம் எது?

அ) ஆந்திர பிரதேசம்

ஆ) மத்திய பிரதேசம்

இ) குஜராத் ☑

ஈ) கர்நாடகா

✓ மேற்கு குஜராத் மாநிலத்தின் ரான் ஆப் கட்சில் உள்ள ஹரப்ப நகரமான 'தோலவிரா', UNESCO'இன் உலக பாரம்பரிய தளங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம், இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இந்தியாவின் 40ஆவது தளமாக இது மாறியுள்ளது. இத்தளம், 1968ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. நீர் மேலாண்மை, சிறப்பு வாய்ந்த புதை குழிகள்போன்ற தனித்துவமான பண்புகளுக்கு அது பெயர்பெற்றது.

---

4. புவி அமைப்பு அறிவியல் தரவுத்தளத்தை உருவாக்கி வெளியிட்டு உள்ள அமைச்சகம் எது?

அ) உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம்

ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑

இ) சுரங்க அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ மத்திய புவி அறிவியல் அமைச்சகமானது "Earth System Science Data Portal" என்ற ஒருங்கிணைந்த தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தளமானது பொதுமக்களுக்கு புவி தொடர்புடைய பல்வேறு தரவுகளை கிடைக்கச்செய்யும். ஜூலை.27 அன்று அமைச்சகத்தின் பதினைந்தாவது உதயதின விழாவின் ஒருபகுதியாக இத்தளம் தொடங்கப்பட்டது. இந்திய அரசின் டிஜிட்டல் இந்தியா முயற்சியுடன் இணைந்து இந்த வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

---

5. 'உலக பொருளாதார கண்ணோட்டம்' என்னுமோர் அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?

அ) இந்திய ரிசர்வ் வங்கி

ஆ) UNESCO

இ) உலக வங்கி

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம் ☑

✓ பன்னாட்டுச் செலவாணி நிதியமானது "Fault Lines widen in the Global Recovery" என்ற தலைப்பில் 2021 ஜூலை மாதத்திற்கான உலக பொருளாதார கண்ணோட்டத்தின் மேம்பட்ட பதிப்பை வெளியிட்டுள்ளது. இதன்படி, உலக பொருளாதாரமானது 2021'இல் 6.0 சதவீதமும், 2022'இல் 4.9 சதவீதமும் வளரும் எனக்கணிக்கப்பட்டுள்ளது. 2021–22'க்கு ஆன இந்தியாவின் வளர்ச்சிக்கணிப்பை, 12.5 சதவீதத்திலிருந்து 9.5% ஆக பன்னாட்டுச் செலவாணி நிதியம் குறைத்துள்ளது.

---

6. C வகை கல்லீரல் அழற்சி சிகிச்சைக்காக உலகின் முதல் மலிவு விலை மருந்தான 'Ravidasvir'ஐ பதிவுசெய்துள்ள நாடு எது?



அ) இந்தியா

ஆ) சீனா

இ) மலேசியா ☑

ஈ) ரஷ்யா

✓ C வகை கல்லீரல் அழற்சி சிகிச்சைக்காக உலகின் முதல் மலிவு விலை மருந்தை மலேசியா பதிவுசெய்துள்ளது. இது உலகம் முழுவதும் அந்த நோயால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்களுக்கு, அணுகக்கூடிய சிகிச்சை முறைக்கு வழிவகுத்துள்ளது. 'Ravidasvir' என்ற மருந்து தற்போதுள்ள 'Sofosbuvir'உடன் பயன்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

✓ இந்தப் புதிய மருந்து, மலேசிய சுகாதார அமைச்சகத்தால் தொடங்கப்பட்டு, எகிப்திய மருந்து உற்பத்தியாளரான பார்கோவுடன் இணைந்து புறக்கணிக்கப்பட்ட நோய்களுக்கான முன்னெடுப்பால் (ஜெனீவாவை சார்ந்த இலாபநோக்கமற்ற மருந்து அமைப்பு) உருவாக்கப்பட்டுள்ளது.

---

7. K2 சிகரத்தை அடைந்த இளம்வயது நபரான ஷெரோஸ் காஷிப் சார்ந்த நாடு எது?

அ) இந்தியா

ஆ) பாகிஸ்தான் ☑

இ) மியான்மர்

ஈ) நேபாளம்

✓ பாகிஸ்தானைச் சார்ந்த மலையேற்ற வீரரான ஷெரோஸ் காஷிப் (19), உலகின் 2ஆம் உயரமான மலைச்சிகரமானதும் சராசரி கடல்மட்டத்தில் இருந்து 8,611 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளதுமான K2 சிகரத்தை அடைந்த மிகவும் இளம்வயது நபராக மாறியுள்ளார். சமீபத்தில் 2021 மே மாதத்தில், எவரெஸ்ட் சிகரத்தை ஏறி, பாகிஸ்தானிலிருந்து உலகின் மிக உயரமான சிகரத்தை எட்டிய இளம்வயது நபராக அவர் ஆனார்.

---

8. "அனைவருக்கும் நல்லுணவு – Good Food for All" போட்டியை நடத்திய அமைப்பு எது?

அ) உணவு மற்றும் உழவு அமைப்பு

ஆ) உலக நலவாழ்வு அமைப்பு

இ) ஐக்கிய நாடுகள் ☑

ஈ) உலக வங்கி

✓ நலமான & நிலைத்த உணவுக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக மாறுபட்ட மற்றும் தாக்கம் நிறைந்த தீர்வுகளை வழங்கும் 'சிறந்த சிறு வணிகங்களை' தேடும் நோக்கில், "அனைவருக்கும் நல்லுணவு" என்ற போட்டியை ஐநா அவை நடத்தியது.

✓ இப்போட்டியில், இந்தியாவைச்சார்ந்த மூன்று நிறுவனங்கள் – சமையல் ரூட்ஸ், ஊர்ஜா டெவலப்மெண்ட் சொல்யூஷன்ஸ் இந்தியா மற்றும் தாரு நேச்சுரல்ஸ் ஆகியவை "சிறந்த சிறு வணிகங்களுக்கான" வெற்றியாளர்களுள் ஒன்றாக இடம்பெற்றன.

---

9. நீரிடி & திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிஷ்த்வார் மாவட்டம் அமைந்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) ஜம்மு & காஷ்மீர் ☑

ஆ) அஸ்ஸாம்

இ) மேகாலயா

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ ஜம்மு மற்றும் காஷ்மீரின் மலைப்பாங்கான கிஷ்த்வார் மாவட்டம் நீரிடி மற்றும் கடுமையான வெள்ளத்தால் சமீபத்தில் பாதிக்கப்பட்டது. அம் மாநிலத்தின் பேரிடர் மீட்புப்படை இதற்கான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மலைப்பகுதி மற்றும் கடினமான நிலப்பரப்பின் காரணமாக மீட்பு நடவடிக்கைகளில் தொய்வு காணப்பட்டது.

---

10. ஐநா அவையால், "பன்னாட்டு நட்பு நாள்" கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட்.08

ஆ) ஆகஸ்ட்.01

இ) ஜூலை.30 ☑

ஈ) ஜூலை028

✓ 2011'இல், ஐநா பொது அவையானது ஜூலை.30ஆம் தேதியை சர்வதேச நட்பு நாளென அறிவித்தது. இந்நாள் பல்வேறு கலாச்சாரங்கள், நாடுகள் மற்றும் மதங்களின் மக்களிடையே நட்பு பிணைப்பை உருவாக்கி உலக அமைதியை அடைய உதவும் என்ற எண்ணத்துடன் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் அவை என்பது கடந்த 1945ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு பன்னாட்டு அமைப்பாகும். இது நியூயார்க்கை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

✓ சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்ப்பது, சர்வதேச ஒத்துழைப்பை அடைதல் மற்றும் பல்வேறு நாடுகளின் செயல்களை ஒருங்கிணைக்கும் மையமாக செயல்படுவது போன்றவை ஐநா அமைப்பின் முக்கிய நோக்கமாகும். தற்போது, 193 நாடுகள் ஐநா அவையின் உறுப்பினர்களாக உள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. முன்தேதியிட்டு வரி வசூலிக்கும் முறை ரத்து: மக்களவையில் மசோதா தாக்கல்

நிறுவனங்களிடமிருந்து முன்தேதியிட்டு வரிவசூலிக்கும் நடைமுறையை ரத்து செய்யும் வகையில் வரிவிதிப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான மசோதாவை மத்திய அரசு மக்களவையில் தாக்கல் செய்துள்ளது. முன்தேதியிட்டு வரி வசூலிக்கும் விவகாரத்தில் கெய்ர்ன், வோடபோன் நிறுவனங்கள் தொடுத்த வழக்குகளில் மத்திய அரசின் நடவடிக்கைக்கு எதிராக சர்வதேச தீர்ப்பாயம் உத்தரவிட்டிருந்த நிலையில், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வோடபோன் வழக்கு:

ஹட்சிசன் நிறுவனத்தின் பங்குகளை வாங்கியதில் ஈட்டிய லாபத்துக்கு வட்டியுடன் சேர்த்து ₹22,100 கோடியை வரியாகச் செலுத்த வேண்டும் என வோடபோன் நிறுவனத்துக்கு மத்திய அரசு உத்தரவிட்டது. இதை எதிர்த்து சர்வதேச தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட வழக்கில், வோடபோன் நிறுவனத்திடமிருந்து வரிவசூலிக்கும் நடவடிக்கைக்குத் தடை விதிக்கப்பட்டது. மேலும், இந்த வழக்கு விசாரணைக்காக வோடபோன் நிறுவனம் செலவிட்ட தொகையில் 60 சதவீதத்தை மத்திய அரசு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பாயம் உத்தரவிட்டது. அந்த உத்தரவை எதிர்த்து மத்திய அரசு மேல்முறையீடு செய்தது. அதன் மீதான விசாரணை செப்டம்பரில் நடைபெறவுள்ளது.

கெய்ர்ன் வழக்கு:

பிரிட்டனைச்சேர்ந்த கெய்ர்ன் நிறுவனத்திடமிருந்து முன்தேதியிட்டு வரி வசூல் நடைமுறையை மத்திய அரசு மேற்கொண்டது. இந்த விவகாரம் சர்வதேச தீர்ப்பாயத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கு கெய்ர்ன் நிறுவனத்துக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்நிறுவனத்துக்கு ஒட்டுமொத்தமாக சுமார் ₹12,500 கோடியை மத்திய அரசு வழங்க வேண்டுமென்று தீர்ப்பாயம் உத்தரவிட்டது. அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் தீர்ப்பாயத்தில் மத்திய அரசு முறையிட்டுள்ளது. இந்நிலையில், முன்தேதியிட்டு வரி வசூலிக்கும் நடைமுறையை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

---

2. 07–08–2021 – ஏழாவது தேசிய கைத்தறி நாள்

---

3. இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது பெயர் மாற்றம் – விளையாட்டில் சாதிப்போருக்கு தயான் சந்த் விருது: பிரதமர் நரேந்திர மோடி அறிவிப்பு

விளையாட்டுத் துறையில் சாதிப்போருக்கு இந்தியாவில் வழங்கப்படும் உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இனிமேல் இந்த விருது மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது என்றே அழைக்கப்படும் எனப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார். மதிப்புமிக்க கேல்ரத்னா விருதானது ₹25 லட்சம் பரிசுத் தொகையை உள்ளடக்கியதாகும்.

யார் இந்த தயான் சந்த்?

1905ஆம் ஆண்டு ஆக.29ஆம் தேதி அலகாபாத்தில் பிறந்த தயான் சந்த் எல்லா காலத்திலும் சிறந்த வீரர்களில் ஒருவராக கருதப்படுகிறார்.

1928ஆம் ஆண்டு முதல் 1936ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக மூன்று ஒலிம்பிக் தங்கங்களை வென்ற இந்திய ஹாக்கி அணியின் நட்சத்திர வீரர். ஹாக்கி மட்டையை கையாளுவதில் கைதேர்ந்தவராகவும், பந்தை லாவகமாக கட்டுப்படுத்தி எதிரணியிடம் பிடிகொடுக்காமல் கடத்தி செல்வதால் 'மந்திரவாதி' என்று அழைக்கப்பட்டார். தயான் சந்தின் மூத்த சகோதரர் ரூப் சிங்கும் ஹாக்கி வீரர்.

1936 பெர்லின் ஒலிம்பிக்கில் இந்திய ஹாக்கி அணியின் கேப்டனாக தயான் சந்த் இருந்தார். இறுதிப்போட்டியில் ஒலிம்பிக்கை நடத்திய ஜெர்மனியை இந்தியா எதிர்கொண்டது. இதில் தயான் சந்த் 3 கோல்களை அடித்து அசத்த இந்திய அணி 8–1 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி தங்கம் வென்றது.

தயான் சந்த் தலைமையிலான இந்திய அணியிடம் ஜெர்மனி தோல்வியடைந்ததால் அந்நாட்டு அதிபர் அடால்ப் ஹிட்லர் கடும் அதிருப்தியடைந்தார். எனினும் மறுநாளே தயான் சந்த்தை அழைத்த ஹிட்லர், ஜெர்மனி ராணுவத்தில் பணி வழங்குவதாக தெரிவித்தார். ஆனால் ஹிட்லரின் இந்தசலுகையை ஏற்க மறுத்து விட்டார் தயான் சந்த்.

தயான் சந்த் தனது இறுதி சர்வதேச போட்டியில் 1948ல் விளையாடினார், அவரது சர்வதேச ஹாக்கி வாழ்க்கையில் நானூற்றுக்கும் மேற்பட்ட கோல்களை அடித்துள்ளார். தயான் சந்தின் பிறந்தநாளான ஆகஸ்ட் 29, இந்தியாவில் தேசிய விளையாட்டு நாளாக கொண்டாடப்படுகிறது. இவருக்கு 'பத்ம பூஷன்' விருது 1956'இல் வழங்கப்பட்டது.

---

4. மின்னணுத்துறை மேம்பாட்டில் ஒத்துழைப்பு: G20 அமைச்சர்கள் கூட்டத்தில் முடிவு

டிஜிட்டல் (மின்னணு) பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் அரசு நிர்வாகத்தில் அதிக ஒத்துழைப்புடன் செயல்படுவதாக ஜி20 நாடுகளின் அமைச்சா'கள் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஜி20 நாடுகளின் மின்னணுத் துறை அமைச்சா'கள் கூட்டம் இத்தாலியின் ட்ரீஸ்டே நகரில் நடைபெற்றது. காணொலிக் காட்சி மூலம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இந்திய குழுவுக்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தலைமைதாங்கினார்.

'எழுச்சியுடன்கூடிய வலிமையான, நிலையான மற்றும் அனைத்தும் உள்ளடக்கிய மீட்புக்கான டிஜிட்டல் மயமாக்கல் பிரகடனம்' ஜி20 டிஜிட்டல் அமைச்சர்கள் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் அரசில், அதிக ஒத்துழைப்புடன் செயல்படுவதாக இந்த கூட்டத்தில் ஜி20 நாடுகளின் அமைச்சர்கள் ஒப்புக் கொண்டனர். டிஜிட்டல்மயமாக்கத்தில் இந்தியா வெற்றிகரமாக செயல்படுவதை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பகிர்ந்து கொண்டார். டிஜிட்டல் இந்தியா திட்டம் மூலம், கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து சமூக மேம்பாட்டில் சாதித்த மாற்றங்களையும் அவர் பகிர்ந்தார்.

---

5. நாடு முழுவதும் 8,001 மக்கள் மருந்தகங்கள் திறப்பு: மாநிலங்கள் அவையில் தகவல்

நாடு முழுவதும் 8,001 மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார். இதுதொடர்பாக மாநிலங்களவையில் அவர் எழுத்துபூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியதாவது:

பிரதமரின் பாரத மக்கள் மருத்துவத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கடந்த 2ஆம் தேதி வரை 8,001 மக்கள் மருந்தகங்களை மத்திய அரசு திறந்துள்ளது.

2025ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் 10,500 மக்கள் மருந்தகங்கள் திறக்கப்படும். அரசு மருத்துவமனை வளாகங்களில், கடந்த 2ஆம் தேதி வரை 1,012 மக்கள் மருந்தகங்கள் செயல்படுகின்றன. மக்கள் மருந்தக உரிமையாளர்களுக்கான ஊக்கத்தொகையை ₹2.5 லட்சத்திலிருந்து ₹5 லட்சமாக மத்திய அரசு சமீபத்தில் அதிகரித்துள்ளது.

---

6. நீரிழிவு நோயாளிகளின் காயங்களுக்கு கட்டுப்போட நவீன பேண்டேஜ்: இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கம்

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் காயங்கள் மற்றும் நாள்பட்ட காயங்களுக்கு கட்டுப்போட நவீன பேண்டேஜை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இதில் 'அகர்' என்ற கடல்பாசி செடியிலிருந்து எடுக்கப்பட்ட இயற்கை பாலிமர் பயன்படுத்தப்படுகிறது.

இது நீரிழிவு நோயாளிகளின் காயங்கள் மற்றும் நாள்பட்ட காயங்களுக்கு சிகிச்சையளிக்க மிகச்சிறந்ததாக உள்ளது. உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட இந்த பேண்டேஜுக்கு குறைந்த செலவு ஏற்படுகிறது. மக்கக்கூடிய, காயத்தை ஆற்றக்கூடிய இந்த பேண்டேஜை டாக்டர் விவேக் வர்மா தலைமையிலான கான்பூர் ஐஐடி குழுவினர் உருவாக்கியுள்ளனர். இதில் அயோடின் மற்றும் சிட்ரிக் அமிலம் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கண்டுபிடிப்புக்கு மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் மேம்பட்ட தயாரிப்பு தொழில்நுட்பங்கள் திட்டம் உதவியது.

'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சிக்கு தேசிய காப்புரிமை பெறப்பட்டுள்ளது. நவீன பேண்டேஜ்கள் தயாரிப்பில் பெரும்பாலும் வெளிநாட்டு நிறுவனங்களே ஈடுபட்டுள்ளதால், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கண்டுபிடிப்பானது புதிய வர்த்தகத்துக்கு வழிவகுத்துள்ளது.

---

7. "தங்க மகன்" நீரஜ் சோப்ரா

டோக்கியோ ஒலிம்பிக் ஈட்டி எறிதல் போட்டியில் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றுள்ளார். டோக்கியோ ஒலிம்பிக் ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா 87.58 மீட்டர் தூரம் வீசி இந்தியாவுக்கு முதல் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத்தந்தார். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியா பெற்ற முதல் தங்கப்பதக்கம் இதுவாகும்.

8.ஒலிம்பிக்ஸ் மல்யுத்தம்: இந்தியாவின் பஜ்ரங் புனியாவுக்கு வெண்கலம்

டோக்கியோ ஒலிம்பிக்ஸில் மல்யுத்தம் வெண்கலப்பதக்கத்துக்கான போட்டியில் இந்தியாவின் பஜ்ரங் புனியா வெற்றிபெற்றுள்ளார்.

இந்தியாவின் நட்சத்திர வீரரான பஜ்ரங் புனியா ஆடவர் ப்ரீஸ்டைல் 65 கிலோ பிரிவில் களம்கண்டார். காலிறுதிச்சுற்றில் ஈரானிய வீரர் மொர்டேஸாவை வீழ்த்தினார். அரையிறுதிச்சுற்றில் அசர்பைஜானின் ஹாஜி அலியெவை எதிர்கொண்டார் பஜ்ரங். 5–12 என்ற புள்ளிக் கணக்கில் தோல்வியடைந்தார் பஜ்ரங் புனியா.

வெண்கலப்பதக்கத்துக்காக நடைபெற்ற ஆட்டத்தில் கஜகஸ்தான் வீரர் நியாஸ்பெகோவுடன் மோதினார் பஜ்ரங் புனியா. ஏற்கனவே கடந்த 2019 உலக சாம்பியன்ஷிப்பில் அரையிறுதிச் சுற்றில் நியாஸிடம் தோல்வியைத் தழுவினார் பஜ்ரங். இதனால் முதல் பாதியில் 2–0 என முன்னிலை பெற்றார். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி 8–0 என்கிற புள்ளிக்கணக்கில் போட்டியில் வெற்றிபெற்று வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றினார். டோக்கியோ ஒலிம்பிக்ஸில் இந்தியாவுக்குக் கிடைத்துள்ள 6ஆவது பதக்கம் இது.

---

1. நடப்பாண்டின் (2021) "கடத்தலுக்கு எதிரான உலக நாளுக்கான" கருப்பொருள் என்ன?

அ) Save lives

ஆ) The future we want, the UN we need

இ) Human Trafficking: Call Your Government To Action

ஈ) Victims voices lead the way ☑

✓ "போதைப்பொருள் மற்றும் அது தொடர்புடைய குற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம்" ஜூலை.20 அன்று "கடத்தலுக்கு எதிரான உலக நாளை" கடைப்பிடித்தது. "Victims voices lead the way" என்பது நடப்பு ஆண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ ஆட்கடத்தலில் தப்பிப்பிழைத்தவர்களுடன் தொடர்புகொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்தக் கருப்பொருள் அமைந்துள்ளது. போதைப்பொருள் மற்றும் அது தொடர்புடைய குற்றத்திற்கான ஐநா அலுவலகம் ஒரு சர்வதேச அமைப்பு அல்லது நிறுவனமாகும். அது கடந்த 1997'இல் நிறுவப்பட்டது. இது வியன்னாவை (ஆஸ்திரியா) தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

---

2. "NISAR" என்ற திட்டத்தை தொடங்குவதற்காக ஒத்துழைத்துள்ள இரண்டு விண்வெளி ஆய்வு நிறுவனங்கள் எவை?



அ) ரோஸ்கோஸ்மோஸ் மற்றும் நாசா

ஆ) நாசா மற்றும் சிஎன்எஸ்ஏ

இ) இஸ்ரோ மற்றும் ரோஸ்கோஸ்மோஸ்

ஈ) இஸ்ரோ மற்றும் நாசா ☑

✓ NISAR (NASA–ISRO Synthetic Aperture Radar) – இது இஸ்ரோ மற்றும் நாசாவின் கூட்டுப்பணியாக 2023'இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இது அதிநவீன ரேடார் படமாக்கல் நுட்பத்தைப் பயன்படுத்தி நிலத்தின் மேற்பரப்பு மாற்றங்களை உலக அளவில் அளவிடுவதில் கவனம் செலுத்துகிறது. இத்தகவலை புவி அறிவியல் அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார். NISAR செயற்கைக்கோள், இரட்டை அதிர்வெண்களைப் பயன்படுத்தும் முதல் செயற்கைக்கோளாக இருக்கும்.

✓ இது தொலையுணரி நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படும். இது துருவ தாழ்வெப்ப மண்டலம் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதி உட்பட அனைத்து நிலப்பரப்பு ஆய்வுக்கும் பயன்படுத்தப்படும். இதன்மூலம் பூமியின் இயற்கை செயல்முறைகளைப் புரிந்துகொள்ள இயலும்.

---

3. இந்திய இராணுவம் மற்றும் இரஷ்ய இராணுவத்தின் கூட்டு இராணுவப்பயிற்சியான INDRA–21 நடைபெறும் இடம் எது?

அ) புது தில்லி

ஆ) மாஸ்கோ

இ) வோல்கோகிராட் ☑

ஈ) காசியாபாத்

✓ ஆக.1 முதல் ரஷ்யாவில் அமைந்துள்ள வோல்கோகிராட் நகரில் இந்திய மற்றும் ரஷ்ய ராணுவத்திற்கு இடையேயான 13 நாள் மெகா ராணுவப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய & இரஷ்ய இராணுவத்திற்கு இடையிலான இக்கூட்டு இராணுவப்பயிற்சியின் பெயர் INDRA.

✓ இது இந்தப்பயிற்சியின் 12ஆவது பதிப்பாகும், அதற்கு "INDRA–21" என்று பெயரிடப்பட்டுள்ளது. இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்த இராணுவப்பயிற்சி உதவுகிறது. இந்தியா மற்றும் ரஷ்யா இடையே நீண்டகால நட்பு உறவை இது வலுப்படுத்த உதவும்.

---

4. மோசமான நிதிநிலை காரணமாக 2021 ஜூலை மாத இறுதியில், ரிசர்வ் வங்கியால், எந்த வங்கியின் உரிமம் இரத்து செய்யப்பட்டது?

அ) ஆந்திர பிரதேச கிராம விகாஸ் வங்கி

ஆ) ஆர்யவர்த் வங்கி

இ) மட்காம் நகர கூட்டுறவு வங்கி லிட் ☑

ஈ) பிரதம யூபி கிராமின் வங்கி

✓ இந்திய ரிசர்வ் வங்கியாது கோவாவின் மட்கவில் அமைந்துள்ள மட்காம் நகர கூட்டுறவு வங்கியின் உரிமத்தை இரத்து செய்தது. 2021 ஜூலை 29 அன்று அதன் உரிமம் இரத்து செய்யப்பட்டது. ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, அவ்வங்கியின் தற்போதைய நிதி நிலைமையைக்கொண்டு வைப்புதாரர்களுக்கு முழு தொகையை செலுத்த முடியாது. எனவே அதன் உரிமம் இரத்து செய்யப்பட்டது.

---

5. "சர்வதேச தூயவளி வினையூக்கி – International Clean Air Catalyst" திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய நகரம் எது?

அ) சூரத்

ஆ) குருகிராம்

இ) இந்தூர் ☑

ஈ) போபால்

✓ இந்தூர் இந்தியாவின் தூய்மையான நகரமாகும். தற்போது, "சர்வதேச தூயவளி வினையூக்கி" திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய நகரமாகவும் இது மாறியுள்ளது. நகரத்தின் காற்றை தூய்மைப்படுத்தும் நோக்கில், இந்தத் திட்டம் 5 ஆண்டுகள் இயங்கும். இந்தூர் மாநகராட்சி மற்றும் மத்தியப் பிரதேச மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் இத்திட்டத்தை கவனிக்கும்.

✓ சர்வதேச தூயவளி வினையூக்கி திட்டம் என்பது நகரங்களில் தூய வளிக்கான தீர்வுகளை விரைவுப்படுத்துவதற்காக பன்னாட்டு வளர்ச்சிக்கான அமெரிக்க நிறுவனம் (USAID), WRI மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி ஆகியவற்றின் முயற்சியாகும். வாஷிங்டன் DC'ஐ தலைமையிடமாகக் கொண்டு USAID இயங்கி வருகிறது. அது 3 நவம்பர் 1961'இல் ஜான் எப் கென்னடியால் நிறுவப்பட்டது.

---

6. 3ஆவது ஆர்க்டிக் அறிவியல் அமைச்சர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்த இரண்டு நாடுகள் எவை?

அ) இந்தியா மற்றும் ஜப்பான்

ஆ) ஜப்பான் மற்றும் ஐஸ்லாந்து ☑

இ) ஜப்பான் மற்றும் ரஷ்யா

ஈ) இந்தியா மற்றும் இலங்கை

✓ மூன்றாவது ஆர்க்டிக் அறிவியல் அமைச்சர்கள் கூட்டத்தை ஜப்பானும் ஐஸ்லாந்தும் இணைந்து ஏற்பாடு செய்தன. இது மெய்நிகராக ஜப்பானால் நடத்தப்பட்டது. ஆர்க்டிக் பிராந்தியத்தில் ஆராய்ச்சி மற்றும் ஒத்துழைப்பு பற்றி விவாதிப்பதற்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. "Knowledge for a Sustainable Arctic" என்பது இந்தச் சந்திப்பின் கருப் பொருளாகும்.

---

7. 2021 ஜூலை நிலவரப்படி, உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகத்தின் அமைச்சர் யார்?



அ) பியூஷ் கோயல்

ஆ) ஜோதிராதித்ய சிந்தியா ☑

இ) நரேந்திர மோடி

ஈ) நிர்மலா சீதாராமன்

✓ வானூர்தி நிலைய பொருளாதார ஒழுங்குமுறை ஆணைய (AERA) (திருத்த) மசோதா, 2021 ஜூலை.29 அன்று மக்களவையில் உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியாவால் அறிமுகம் செய்யப்பட்டது. AERA சட்டம், 2008இன் கீழ் முக்கிய வானூர்தி நிலையத்தின் வரையறையை மாற்ற இம்மசோதா முன்மொழிகிறது.

✓ இது ஒரு சிறிய வானூர்தி நிலையத்தை ஒரு பெரிய வானூர்தி நிலையத்துடன் இணைப்பதன்மூலம் நஷ்டத்தில் இயங்கும் ஒரு சிறிய வானூர்தி நிலையத்தை தனியார்மயமாக்க வழிவகுக்கிறது. உதான் பிராந்திய இணைப்பை விரைவுப்படுத்தவும் இது உதவும்.

---

8. நடப்பாண்டின் (2021) ஐநா உணவு அமைப்புகளின் ஒத்திகை உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?

அ) பாரிஸ்

ஆ) ரோம் ☑

இ) நியூயார்க்

ஈ) சுவீடன்

- ✓ ஐநா உணவு அமைப்புகளின் ஒத்திகை உச்சிமாநாடானது சமீபத்தில் ஐநா மற்றும் இத்தாலி அரசாங்கத்தால் ரோமில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ✓ மத்திய உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர், இந்த ஒத்திகை உச்சிமாநாட்டில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தினார். 2030ஆம் ஆண்டுக்குள் நிலைக்கத்தக்க வளர்ச்சி இலக்குகளை அடைவதில் விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வேளாண் அமைச்சகத்தின் அறிக்கையை நரேந்திர சிங் தோமர் வழங்கினார். மொத்தமுள்ள 17 நிலைக்கத்தக்க வளர்ச்சி இலக்குகளில், 12 நிலைக்கத்தக்க வளர்ச்சி இலக்குகள் நேரடியாக உழவைச் சார்ந்துள்ளன.

---

9. இயங்குபடம், காட்சி விளைவுகள், விளையாட்டு & வரைகதை ஆகியவற்றிற்கான தேசிய அளவிலான சிறப்பு மையத்தை நிறுவ உதவும் கல்வி நிறுவனம் எது?

அ) ஐஐடி மும்பை ☑

ஆ) ஐஐடி சென்னை

இ) ஐஐடி கரக்பூர்

ஈ) ஐஐடி பெங்களூரு

- ✓ இயங்குபடம் (animation), காட்சி விளைவுகள் (visual effects), இணைய விளையாட்டு (gaming) மற்றும் வரைகதை (comics) ஆகியவற்றிற்கான தேசிய அளவிலான சிறப்பு மையமானது ஐஐடி மும்பையுடன் இணைந்து அமைக்கப்படும் என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் அறிவித்துள்ளார். இந்தியாவில் ஓர் உலகத்தரம் வாய்ந்த திறமைக்குழுமத்தை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கம். ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறையானது இந்தியாவில் வளர்ந்து வரும் துறைகளுள் ஒன்றாகும்.

---

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற காங்ரா ஓவியத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ) இமாச்சல பிரதேசம் ☑

ஆ) உத்தரகாண்ட்

இ) மத்திய பிரதேசம்

ஈ) உத்தர பிரதேசம்

- ✓ காங்ரா ஓவியம் என்பது இமாச்சல பிரதேச மாநிலத்தின் காங்ராவின் சித்திரக்கலையாகும். இந்தக் காங்ரா ஓவியம், முன்னாள் சமஸ்தான பிரதேசமான காங்ராவின் ஆட்சியாளர்களின்கீழ் ஒரு தனித்துவமான கலை வடிவமாக உருவானது.
- ✓ ஆனால் அரசாங்கத்தின் ஆதரவில்லாமல், இந்தத் தனித்துவமான கலை பிரபலமடையாமல் போனது. இந்தக் கலையை மீண்டும் பிரபலமாக்கும் நோக்கில், காங்ரா ஓவியக் கலைஞர்களுக்கு உதவுவதற்காக, காங்ரா கலையின் வணிக வடிவத்தை தயாரிப்பதில், காங்ரா கலை ஊக்குவிப்பு சங்கம் சோதனை மேற்கொண்டது. அவர்கள் காங்ரா ஓவியத்தைக் கொண்டு சேலைகளை அலங்கரிக்க முடிவுசெய்துள்ளனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கண்கவர் வாணவேடிக்கைகளுடன் நிறைவுபெற்ற ஒலிம்பிக் திருவிழா

கண்கவர் கலை நிகழ்ச்சிகள், வாணவேடிக்கைகளுடன் டோக்கியோ ஒலிம்பிக் போட்டி நிறைவடைந்தது. டோக்கியோ ஒலிம்பிக்கின் நிறைவு விழா மைதானத்தில் பார்வையாளர்களின்றி நடத்தப்பட்டு முடித்து வைக்கப்பட்டது. கடந்த 2020 ஜூலை – ஆகஸ்டில் நடைபெற இருந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டி, கரோனா தொற்று சூழல் காரணமாக இந்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கரோனா சூழலின் தீவிரம் குறையாத நிலையில் இந்த ஆண்டும் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் சிக்கல் இருந்தது. டோக்கியோ நகர மக்கள் உள்பட பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புகள் எழுந்தன. எனினும், அத்தகைய சவால்களைக் கடந்து பெரிதாக பாதிப்புகள் ஏதும் இன்றி வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலிம்பிக்கின் தொடக்க நிகழ்ச்சியானது 'ஒன்றிணைந்து முன்னேறுதல்' என்பதை கருத்துருவை அடிப்படையாகக் கொண்டிருந்த நிலையில், நிறைவு நிகழ்ச்சியானது 'நாம் பகிர்ந்துகொள்ளும் உலகம்' என்ற கருத்தைக் கொண்டிருந்தது. அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக்கில் ஒட்டுமொத்தமாக 39 தங்கப்பதக்கங்களை வென்றுள்ள அமெரிக்கா 41 வெள்ளி, 33 வெண்கலம் உள்பட மொத்தம் 113 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 38 தங்கப்பதக்கங்களை வென்றுள்ள சீனா 2ஆவது இடத்தில் உள்ளது. 1 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களுடன் இந்தியா 48ஆவது இடத்தில் உள்ளது. ஒலிம்பிக்கின் கடைசி தங்கப்பதக்கத்தை செர்பியா வென்றது. முதல் தங்கப் பதக்கத்தை சீனா வென்றது.

---

2. இனி வாட்ஸ் அப்பில் கரோனா தடுப்பூசி சான்றிதழ்

கரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான சான்றிதழை வாட்ஸ் அப்பில் இனி நொடிகளில் பெறலாம் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தனது சுட்டுரையில், 90131 51515 வாட்ஸ்அப் எண்ணில் covid certificate என அனுப்ப வேண்டும். சம்பந்தப்பட்ட நபர் OTP எண்ணை பதிவு செய்தவுடன் தடுப்பூசி சான்றிதழை நொடிகளில் பெறலாம்.

---

3. மத்திய அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபாவுக்கு ஓராண்டு பதவி நீட்டிப்பு

மத்திய அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபாவுக்கு ஓராண்டு பணி நீட்டிப்பு அளித்து மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்தது. முன்னாள் உள்துறை செயலரான கௌபா, கடந்த 2019ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவைச் செயலராக இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டார். இப்போது, அப்பதவிக்காலம் நிறைவடைவதையடுத்து அவருக்குப் பணிநீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஜார்க்கண்ட் மாநில பிரிவைச் சேர்ந்த, கடந்த 1982ஆம் ஆண்டு இஆப அதிகாரியான ராஜீவ் கௌபா, அடுத்த ஓராண்டுக்கு மத்திய அமைச்சரவைச் செயலர் பதவியில் இருப்பார். ஜம்மு–காஷ்மீருக்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து இரத்து செய்யப்பட்ட பிறகு, அந்த மாநிலம் இரு யூனியன் பிரதேசங்களாகப்பிரிக்கப்பட்டது. இது தொடர்பாக கடந்த 2019ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஜம்மு–காஷ்மீர் மறு நிர்மாணச்சட்டத்தை வகுப்பதில் ராஜீவ் கௌபா முக்கிய பங்கு வகித்தார்.

---

4. முதல் பெண் அதிகாரிகளை போரில் ஈடுபடுத்தும் ஐடிபிபி

இந்தியா–திபெத்திய எல்லை காவல் படையை பாதுகாக்கும் இந்தியா–சீன எல்ஏசி, முதல் இரண்டு பெண் அதிகாரிகளை போரில் நியமித்தது. முசோரியில் அமைந்துள்ள ஐடிபிபி அதிகாரிகள் பயிற்சி அகாடமியில் மொத்தம் 53 அதிகாரிகள் தேர்ச்சி பெற்ற அணிவகுப்பு நடைபெற்றது. எல்லைப் பாதுகாப்புப் படையின் பல அறியப்படாத உண்மைகள் மற்றும் புகைப்படங்களைக் கொண்ட 680 பக்கங்களைக் கொண்ட முதல் 'ஐடிபிபியின் வரலாறு' புத்தகம் ஐடிபிபி இயக்குநர் ஜெனரல் எஸ் எஸ் தேஸ்வாலால் வெளியிடப்பட்டது.

ஐடிபிபி 2016ஆம் ஆண்டு முதல் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் நடத்தப்பட்ட அகில இந்தியத் தேர்வின்மூலம் தனது போராளிகளில் பெண் போர் அதிகாரிகளை நியமிக்கத் தொடங்கியது. இதற்கு முன்பு, இது கான்ஸ்டபூலரி வரிசையில் போர் பெண்களை மட்டுமே கொண்டிருந்தது. மொத்தமுள்ள 53 அதிகாரிகளில், 42 அதிகாரிகள் பொதுப்பணிப்போரில் உள்ளனர், அதே நேரத்தில் 11,000 பேர் சுமார் 90,000 பணியாளர்கள் வலுவான மலைப்போர் பயிற்சி பெற்ற பொறியியல் பிரிவில் உள்ளனர். இந்த அதிகாரிகள் இப்போது நாட்டின் ஐடிபிபி அமைப்புகளில் நியமிக்கப்படுவார்கள், இதில் சீனாவுடனான எல்ஏசி மற்றும் சத்தீஸ்கரிலுள்ள நக்சல் எதிர்ப்பு செயல்பாட்டு தியேட்டர் ஆகியவை அடங்கும்.

---

5. இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் கூட்டு கடற்படைப் பயிற்சி

இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் விதமாக இரு நாடுகளும் இணைந்து கூட்டு கடற்படை பயிற்சியில் ஈடுபட்டன. ஐக்கிய அரபு அமீரகம் தலைநகர் அபுதாபியை ஒட்டிய கடற்பகுதியில் நடைபெற்ற இப்போர் பயிற்சி தொடர்பாக இந்திய கடற்படை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் இடையே அபுதாபியில் 'ஸையத் தல்வார்' கூட்டு கடற்படை பயிற்சி நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படை சார்பில் INS கொச்சி போர்க்கப்பல், இரண்டு ஒருங்கிணைந்த சீ கிங் எம்கே 42பி ஹெலிகாப்டர்கள் பங்கேற்றன.

ஐக்கிய அரபு அமீரகம் சார்பில் அல்–தா ஃப்ரா போர்க் கப்பல், ஏஎஸ்565பி பேந்தர் ஹெலிகாப்டர் பயிற்சியில் ஈடுபட்டன. இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையிலான திறன் மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்த தேடுதல், மீட்பு, மின்னணு தொழில்நுட்பம் உள்பட பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என இந்திய கடற்படை செய்தித் தொடர்பாளரும் கமாண்டருமான விவேக் மத்வால் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்திய வான்படை தலைமை தளபதி ஆர் கே எஸ் பதௌரியா ஐக்கிய அரபு அமீரகம் சென்றதைத் தொடர்ந்து இந்தக் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. நடப்பாண்டின் (2021) லோகமான்ய திலக் தேசிய விருதினை வென்றவர் யார்?

அ) சஞ்சை குப்தா

ஆ) தீபக் திலக்

இ) சைரஸ் பூனாவல்லா ☑

ஈ) ஆதார் பூனாவல்லா

✓ லோகமான்ய திலக் அறக்கட்டளையின் தலைவரான தீபக் திலக், சமீபத்தில், சீரம் இந்தியா நிறுவனத்தின் (SII) தலைவர் Dr சைரஸ் பூனாவல்லா, நடப்பாண்டுக்கான (2021) லோகமான்ய திலக் விருது வழங்கி கௌரவிக்கப்படுவார் என்று அறிவித்தார்.

✓ கோவிஷீல்டு தடுப்பூசியின் உற்பத்திவழியில் சமூகத்திற்கான அவரது பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. லோகமான்ய திலக் தேசிய விருது, கடந்த 1983'இலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது, ஆண்டுதோறும், லோகமான்ய திலகரின் நினைவு நாளான ஆக.1 அன்று வழங்கப்படுகிறது.

---

2. இந்தியாவில் முதன்முறையாக "இசுலாமிய பெண்கள் உரிமை நாள்" கடைப்பிடிக்கப்பட்ட தேதி எது?

அ) ஆகஸ்ட் 12

ஆ) ஜூலை 30

இ) ஆகஸ்ட் 1 ☑

ஈ) ஜூலை 26

✓ ஆக.1 அன்று, "இசுலாமிய பெண்கள் உரிமைகள் நாள்" முதல்முறையாக நாடுமுழுவதும் கடைப்பிடிக்கப்பட்டது. 'முத்தலாக்'கிற்கு எதிரான சட்டம் கொண்டுவரப்பட்டு ஈராண்டுகள் நிறைவானதை அடுத்து, இந்த நாள் கொண்டாடப்பட்டது. சிறுபான்மை விவகாரங்கள் துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வியின் கூற்றுப்படி, 2019 ஆக.1 அன்று முத்தலாக் முறைக்கு எதிராக அரசு சட்டம் இயற்றியது. அச்சட்டம், 'முத்தலாக்' சமூக முறைகேட்டை ஒரு கடுங்குற்றமாக மாற்றியது.

---

3. 2 ஒலிம்பிக் பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண்மணி யார்?

அ) தீபிகா குமாரி

ஆ) மனிகா பத்ரா

இ) P V சிந்து ☑

ஈ) சாய்னா நேவால்

✓ 2 ஒலிம்பிக் பதக்கங்களை வென்ற முதல் இந்தியப்பெண்மணி P V சிந்து ஆவார். அவர் தனது முதல் ஒலிம்பிக் பதக்கமான வெள்ளிப்பதக்கத்தை, கடந்த 2016ஆம் ஆண்டு நடந்த ரியோ ஒலிம்பிக்கில் வென்றார்.

✓ சீனாவின் ஹீ பிங் ஜியாவோவை வீழ்த்தி 2021 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெண்கலத்தை வென்றார். P V சிந்து, தெலுங்கானாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்தவராவார். அவரது தனிப்பட்ட பயிற்சியாளர் பார்க் டே சாங் மற்றும் தேசிய பயிற்சியாளர் புல்லேலா கோபிசந்த் ஆவார். 2020'இல் அவருக்கு 'பத்ம பூஷன்' விருது வழங்கப்பட்டது. 'பத்மஸ்ரீ' (2015), இராஜீவ் காந்தி கேல் ரத்னா (2016) அர்ஜுனா (2013) ஆகிய விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

---

4. 2021 ஆகஸ்ட்டில் புதிய தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் ஆக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) V N கௌல்

ஆ) ராஜீவ் மகரிஷி

இ) சோமா ராய் பர்மன்

ஈ) தீபக் தாஸ் ☑

✓ தீபக் தாஸை இந்தியாவின் புதிய தலைமைக்கணக்குக்கட்டுப்பாட்டாளர் ஆக இந்திய அரசு நியமித்துள்ளது. இந்தப் பொறுப்பானது நடுவண் நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையின் கீழ் வருகிறது. தீபக் தாஸ், 25 ஆவது தலைமைக்கணக்குக்கட்டுப்பாட்டாளர் ஆவார்.

✓ இந்த நியமனத்திற்கு முன்பு வரை, மத்திய நேரடி வரிகள் வாரியத்தில் முதன்மை கணக்குக் கட்டுப்பாட்டாளராக அவர் பணியாற்றினார்.

5. கொரோனா சிகிச்சையில், 'அஸ்வகந்தா' மூலிகையின் பயன் குறித்த ஆய்வை நடத்துவதற்காக ஆயுஷ் அமைச்சகத்துடன் கூட்டு சேர்ந்துள்ள நிறுவனம் எது?

அ) கௌதம புத்தர் பல்கலைக்கழகம்

ஆ) IIT தில்லி

இ) பதஞ்சலி ஆயுர்வேத கல்லூரி

ஈ) லண்டன் சுகாதாரம் & வெப்பமண்டல மருத்துவப்பள்ளி ☑

✓ கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'அஸ்வகந்தா' மூலிகையால் தயாரிக்கப்பட்ட மருந்து எந்த அளவுக்குப் பலனளிக்கும் என்பது குறித்து ஆய்வு செய்ய மத்திய ஆயுஷ் அமைச்சகம் முடிவுசெய்துள்ளது. ஆயுஷ் அமைச்சகத்தின் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனமும், பிரிட்டனைச் சேர்ந்த லண்டன் சுகாதாரம் மற்றும் வெப்பமண்டல மருத்துவ மையமும் இணைந்து இந்த ஆய்வை நடத்தவுள்ளன. இதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுள்ளன.

✓ இதன்படி, பிரிட்டனில் உள்ள லெஸ்டர்ஷைர், பர்மிங்ஹாம், லண்டன் ஆகிய மூன்று நகரங்களைச் சேர்ந்த 2000 பேர் தேர்வு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவர் என ஆயுஷ் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. பீரங்கிப்படையின் புதிய தலைமை இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

அ) மேஜர் ஜெனரல் விகாஸ் ஜோஷி

ஆ) லெப்டினன்ட் ஜெனரல் J P சிங்

இ) லெப்டினன்ட் ஜெனரல் தருண் குமார் சாவ்லா ☑

ஈ) லெப்டினன்ட் ஜெனரல் வினோத் நாயனார்

✓ பீரங்கிப்படை தலைமை இயக்குநராக லெப்டினன்ட் ஜெனரல் தருண் குமார் சாவ்லா, 2021 ஆகஸ்ட்.1 அன்று பொறுப்பேற்றுக்கொண்டார். இராணுவத்தில் 39 ஆண்டுகள் பணியாற்றி ஜூலை.31 அன்று ஓய்வு பெறும் லெப்டினன்ட் ஜெனரல் கே இரவி பிரசாத்திடமிருந்து அவர் இந்தப் பொறுப்பைப் பெற்றுக்கொள்வார்.

✓ லெப்டினன்ட் ஜெனரல் தருண் குமார் சாவ்லா, டேராடூனில் உள்ள புனித தோமையார் உயர்நிலைப்பள்ளி, கடக்வாஸ்லாவில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமி ஆகியவற்றின் முன்னாள் மாணவராவார். அவர் கடந்த 1984ஆம் ஆண்டு பீரங்கிப் படையில் இணைந்தது முதல் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார். அவர், லைபீரியாவில் உள்ள ஐநா இயக்கத்தின் ராணுவ பார்வையாளராக பணியாற்றினார்.

---

7. எந்த நாட்டின் தலைமையின்கீழ், BRICS பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்குழு கூட்டம், 2021 ஏற்பாடு செய்யப்பட்டது?

அ) பிரேசில்

ஆ) இரஷ்யா

இ) இந்தியா ☑

ஈ) சீனா

✓ அண்மையில், ஜூலை 28–29 அன்று இந்தியாவின் தலைமையில், மெய்நிகர் முறையில், "BRICS பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்குழு" கூட்டம் நடந்தது. இது BRICS பயங்கரவாதத்திற்கு எதிரான செயற் குழுவின் ஆறாவது கூட்டமாகும்.

✓ BRICS தலைவர்களால் கடந்த 2020'இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட, 'BRICS பயங்கரவாதத்திற்கு எதிரான உத்தி'யை செயல்படுத்துவதற்கான சிறப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய BRICS பயங்கரவாத எதிர்ப்பு செயல்திட்டம் இக்கூட்டத்தில் இறுதியாக்கம் செய்யப்பட்டது.

---

8. பாலர்பள்ளிக்குழந்தைகளுக்காக இந்திய அரசு தொடங்கியுள்ள முன்னெடுப்பின் பெயர் என்ன?

அ) NDEAR

ஆ) SAFAL

இ) வித்யா பிரவேஷ் ☑

ஈ) கல்வி வங்கி

✓ ஜூலை.29 அன்று தேசிய கல்விக்கொள்கை, 2020'இன் விரிவாக்கத்தின் ஒருபகுதியாக சில முன்னெடுப்புகளை பிரதமர் மோடி தொடங்கினார்.

✓ தொடக்கப்பள்ளி மாணவர்களுக்காக, பாலர்பள்ளிக்குழந்தைகளுக்காக 'வித்யா பிரவேஷ்' என்ற முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பின்கீழ், குழந்தைகளை பள்ளிக்குத் தயார்செய்யும் நோக்கில் 3 மாத விளையாட்டு அடிப்படையிலான பாடத்தொகுதி உருவாக்கப்படும். இது இரண்டாம் நிலை மட்டத்தில், இந்திய சைகை மொழி பாடத்தையும் உள்ளடக்கும்.

---

9. தென்மேற்கு இரயில்வேயின் (SWR) புதிய பொது மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) இராகுல் ஜைன்

ஆ) சஞ்சை குமார் மொகந்தி

இ) சஞ்சீவ் மிட்டல்

ஈ) சஞ்சீவ் கிஷோர் ☑

✓ கர்நாடக மாநிலம், ஹுப்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் தென்மேற்கு இரயில்வேயின் புதிய பொதுமேலாளராக சஞ்சீவ் கிஷோர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்குமுன்பாக, இரயில்வே வாரியத்தின் கூடுதல் உறுப்பினராக (உற்பத்தி அலகுகள்) பணியாற்றி வந்தார். தென்மேற்கு இரயில்வே ஆனது இந்தியாவின் 18 இரயில்வே மண்டலங்களுள் ஒன்றாகும். இது, 2003'இல் தெற்கு ரயில்வே மற்றும் தெற்கு மத்திய இரயில்வேயிலிருந்து பிரித்து உருவாக்கப்பட்டது.

---

10. பார்வையற்றோருக்காக அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தால் வடிவமைக்கப்பட்ட தனிப்பட்ட வாசிப்பு சாதனத்தின் பெயர் என்ன?

அ) திங்க் பேட்

ஆ) இண்டி டிரஸ்ட்

இ) கின்டில்

ஈ) திவ்ய நயன் ☑

✓ சண்டிகரில் அமைந்துள்ள CSIR – மத்திய அறிவியல் கருவிகள் அமைப்பு ஆனது பார்வைக்குறைபாடுள்ளவர்களுக்காக "திவ்ய நயன்" என்ற தனிப்பட்ட வாசிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளது. இந்தச் சாதனத்தில், எந்தவொரு அச்சிடப்பட்ட அல்லது டிஜிட்டல் ஆவணத்தையும் பேச்சு வடிவத்தில் அணுகலாம். பயனர் படிக்கவேண்டிய ஆவணத்தின்மீது சாதனத்தை வைத்து கைமுறையாகவும் மேவி பயன்படுத்தலாம்.

✓ மொழி அடிப்படையிலான ஒளியியல் உரு நுட்ப உதவியுடன் படம் உரையாகவும், உரை பேச்சு மற்றும் ஒலிவடிவமாகவும் மாற்றப்படுகிறது. அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றமானது (CSIR) 1942 செப்டம்பர் மாதத்தில் இந்திய அரசால் நிறுவப்பட்டது. இந்தியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பாக இது உள்ளது. சாந்தி ஸ்வரூப் பட்நாகரால் இந்த நிறுவனம் நிறுவப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தின் கடன்சுமை ₹5.70 லட்சம் கோடி: நிதிநிலை வெள்ளை அறிக்கையில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்

கடந்த அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் வரிவருவாயில் மிகப்பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் சுமை வரும் மார்ச் மாதத்தில் ₹5.70 இலட்சம் கோடியாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து, அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அளித்த பேட்டி:

மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP), சொந்த வரி வருவாய் விகிதத்தில் அனைத்து மாநிலங்களின் சராசரி வீழ்ச்சியைவிட, தமிழ்நாட்டில் பெருமளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

2018–19 நிதியாண்டில் முதல் முறையாக தேசிய சராசரி அளவை விட தமிழகத்தின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வரி வருவாயின் விகிதம் குறைந்துள்ளது. கடந்த 2020–21 நிதியாண்டில் வருவாய் பற்றாக்குறை ₹61,320 கோடியாக உள்ளது. இது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.16 சதவீதமாகும். 2006–11ஆம் ஆண்டு வரையில் வருவாய் உபரியாக இருந்தது. இதன்பின்பு, அதிமுக ஆட்சிக் காலத்தில் ₹17 ஆயிரம் கோடி அளவுக்கு வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டது.

மொத்த கடன் சுமை: பொதுத்துறை நிறுவனங்களுக்கான கடன் சுமை உள்பட ஒட்டுமொத்தமான கடன்கள் வரும் மார்ச் மாதத்தில் ₹5 லட்சத்து 70,189 கோடியாக இருக்கும். கடந்த காலங்களில் ஊழியர்களுக்கான ஊதியம், ஓய்வூதியம் ஆகியவற்றை அளிக்க வருவாய்கள் போதிய அளவுக்கு வந்தன. ஆனால், இப்போது அரசு ஊழியர்களுக்கான ஊதியம், ஓய்வூதியம் போன்ற செலவுகளைக்கூட கடன்கள் பெற்று பூர்த்திசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வருவாய் பற்றாக்குறை, கடன்கள் அதிகரிப்புக்கு கரோனா நோய்த் தொற்றை மட்டும் காரணம் கூற முடியாது. தமிழ்நாட்டில் கரோனாவுக்கு முன்பாகவே வருவாயில் சரிவு ஏற்படத் தொடங்கிவிட்டது. வருமானம் வராத காரணத்தால், நிதிப்பற்றாக்குறையும் உயர்ந்துள்ளது.

குடும்பத்துக்கு ₹2.64 இலட்சம் கடன்: தமிழகத்தின் ஒட்டுமொத்த கடன் சுமையை ஒரு தனி நபருக்கு பிரித்து அளித்தால், அது ஒரு நபருக்கு ₹1.10 லட்சமாக இருக்கும். அதன்படி, ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் ₹2 லட்சத்து 63,976 கடன் உள்ளது. இந்தக் கடன் சுமையை, வருவாயை ஈட்டுவதன் மூலமாகவே குறைக்க முடியும். மாநிலத்துக்கு 4 வகைகளில் வருவாய் கிடைக்கிறது. மாநிலத்தின் வரி வருவாய், வரியல்லாத வருமானம், மத்திய அரசிடம் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய பங்கு, மானியங்கள்–திட்டங்கள்மூலமாக வர வேண்டியது என நான்கு அம்சங்களின் வழியாக வருவாய் கிடைக்கிறது.

இதில், மாநில வரிகள் மூலமாகக் கிடைக்கக்கூடிய வருவாயில் மிகப் பெரிய சரிவு ஏற்பட்டுள்ளது. 2008–09ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய் வரவுகளின் நிலை 13.35 சதவீதமாக இருந்தது. ஆனால், கடந்த நிதியாண்டில் (2020–21) 4.19 சதவீதமாகக் குறைந்துள்ளது.

---

2. மூன்று மசோதாக்களுக்கு மக்களவை ஒப்புதல்

மூன்று மசோதாக்களுக்கு மக்களவை ஒப்புதல் அளித்துள்ளது. சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் கடந்த 1942ஆம் ஆண்டு ஆகஸ்டில் தொடங்கியது. அந்த இயக்கத்தின் 79ஆவது ஆண்டு தினம் ஆக.9ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.

தேசிய ஹோமியோபதி ஆணைய சட்டத் திருத்த மசோதா, இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரை மாநில அரசுகளே கண்டறிவதற்கு வழிவகை செய்யும் அரசமைப்புச் சட்ட (127ஆவது திருத்தம்) மசோதா, வரையறுக்கப்பட்ட கூட்டாண்மைச் சட்டத்திருத்த மசோதா மற்றும் வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகச் சட்டத் திருத்த மசோதா ஆகியன தாக்கல் செய்யப்பட்டன.

---

3. புவி வெப்பமயமாதல் வேகமாகி உள்ளது: ஐ.நா. அறிக்கை

புவி வெப்பமயமாதல் எதிர்பார்த்ததைவிட மிகவும் வேகமாகி வருவதாக ஐநா அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: புவி வெப்பமயமாதல் நடவடிக்கை எதிர்பார்த்ததைவிட மிகவும் வேகமாக நிகழ்ந்து வருகிறது.

இதனை கருத்தில்கொள்ளும்போது, உலக நாடுகளின் தலைவர்கள் 10 ஆண்டுகளில் நிர்ணயித்துள்ள வரம்பைக் காட்டிலும் புவி அதிக வெப்பம் அடைந்துவிடும் சூழல் ஏற்பட்டுள்ளது. இது மனித குலத்துக்கு மிகவும் பேரழிவை ஏற்படுத்தும். புவிவெப்பமயமாதலிலிருந்து தப்பித்துவிடுவோம் என எண்ணும் வகையில், உலகின் எந்தப் பகுதியும் பாதுகாப்பானதாக இல்லை. எனவே, எங்கும் ஓடவும் முடியாது; ஒளியவும் முடியாது.

பிரச்னையின் தீவிரத்தை உணர்ந்து புவி வெப்பமயமாதலை 1.5 டிகிரி செல்ஷியஸுக்குள் கட்டுப்படுத்த உலக நாடுகளின் தலைவர்கள் வரம்பை நிர்ணயம் செய்தனர். ஆனால், ஏற்கனவே புவியின் வெப்ப அதிகரிப்பு அளவு 1.1 டிகிரி செல்ஷியஸை எட்டிவிட்டது. இந்த நிலையில், வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இது நிர்ணயிக்கப்பட்ட அளவான 1.5 டிகிரி செல்ஷியஸை தாண்டிவிடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

புவி வெப்பமடைவதால் ஏற்கனவே கடல்மட்டம் உயர்வு, பனிக்கட்டி உருகுதல், வெப்ப அலைகள், வறட்சி, வெள்ளம், புயல் போன்ற மோசமான இயற்கைப் பேரழிவுகளை சந்தித்து வருகிறோம். மேலும், ஆர்டிக் கடலின் பனிப் பாறைகள் கோடையில் வேகமாக உருகி வருவது சுற்றுச்சூழல் சமநிலையை வெகுவாக பாதித்துள்ளது.

இவற்றை கருத்தில்கொள்ளும்போது, புவி மேலும் வெப்பமடையுமானால் நிலைமை இன்னும் மோசமாகும் என அதில் கூறப்பட்டுள்ளது.

---

4. டோக்கியோ ஒலிம்பிக்: ஏற்றங்களும்... ஏமாற்றங்களும்...

சாதித்துக் காட்டியிருக்கிறது டோக்கியோ. கரோனா சூழலில் பொது இடங்களில் நூற்றுக்கணக்கில் மக்கள் கூடினாலே அது பாதிப்பை அதிகரிக்கும் எனும் நிலையில், சுமார் 30,000 பேரை ஒரு (ஒலிம்பிக்) கிராமத்தில் திரட்டி வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது டோக்கியோ ஒலிம்பிக். அதற்காக மேற்கொண்ட முயற்சிகளும், முன்னேற்பாடுகளும் நிச்சயம் அபாரமானவை, பாராட்டுக்குரியவை. கரோனா சூழலில் மனித இனத்துக்கான மிகப்பெரிய நம்பிக்கையும், உத்வேகமும் அளித்திருக்கிறது டோக்கியோ ஒலிம்பிக்.

ஏற்கெனவே ஓராண்டு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், நடப்பாண்டிலும் இந்த ஒலிம்பிக்கை நடத்துவதற்கு தடைகள் ஏற்படாமல் இல்லை. உலக நாடுகளில் கரோனா 'அலை'யடித்துக் கொண்டிருக்கும் சூழலில், ஆயிரக் கணக்கானோரை கூட்டி போட்டியை நடத்துவதற்கு பல்வேறு தரப்பிலும் எதிர்ப்பு எழுந்தது. ஏன், போட்டி நடத்தப்பட்ட டோக்கியோ நகரிலேயே பலத்த எதிர்ப்பு இருந்தது.

ஆனாலும், ஒலிம்பிக் கனவுடன் ஓயாமல் தங்களை தயார்படுத்தியிருந்த போட்டியாளர்களின் கனவுகளை கலைக்க விரும்பவில்லை டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிகள்.

ஒலிம்பிக் போட்டி தொடங்கும் நிலையில் டோக்கியோவில் கரோனா சூழல் சற்று தீவிரமடைந்தது அச்சத்தை ஏற்படுத்தியது. சவால்களைக் கடந்து போட்டியை நடத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளன அந்தக் கமிட்டிகள். கரோனா சூழலில் சுமார் இரு ஆண்டுகளாக வழக்கமான போட்டிகளில் பங்கேற்க முடியாமல் மன உளைச்சலில் இருந்த சர்வதேச போட்டியாளர்களுக்கு இந்த ஒலிம்பிக் வரப்பிரசாதமாக இருந்தது.

அத்தகைய ஒலிம்பிக்கில் இந்தியாவும் உத்வேகத்துடன் பங்கேற்று, புதிய உச்சத்தை எட்டியிருக்கிறது. தனது ஒலிம்பிக் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் 7 பதக்கங்களை வென்றிருக்கிறது. ஒட்டுமொத்தமாக ஒலிம்பிக்கில் இது இந்தியாவுக்கு முன்னேற்றமே. இந்த ஒலிம்பிக்கில் இந்தியா கண்ட சாதனைகளை பார்ப்போம்.

பதக்கம்

நீரஜ் சோப்ரா (ஈட்டி எறிதல் – தங்கம்)

டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவின் பிரம்மாஸ்திரம். இந்தியாவின் 124 போட்டியாளர்களில் கடைசியாக களம் கண்டு வரலாற்றுத் தங்கம் வென்றவர். சர்வதேச போட்டிகளில் ஏற்கனவே தங்கம், வெள்ளியாக தட்டித்தூக்கியிருந்த நீரஜ் மீதான நம்பிக்கை அதிகமாகவே இருந்தது. அது எந்தவிதத்திலும் பொய்த்து விடாதபடி வென்றுள்ளார்.

தகுதிச்சுற்றிலேயே முதலிடம் பிடித்து பதக்கத்துக்கு முன்பதிவு செய்த நீரஜ், இறுதிச்சுற்றில் எறிந்த இரண்டாவது முயற்சி, ஒலிம்பிக் தடகளத்தில் இந்தியாவுக்கு முதல் தங்கமாக மாறியது. பாராட்டுகளாலும், பரிசுகளாலும் நிறைக்கப்படும் நீரஜ் சோப்ரா, நிச்சயம் அடுத்த போட்டிகளிலும் இந்தியாவுக்காக சாதனைகள் படைப்பார்.

சாய்கோம் மீராபாய் சானு (பளுதூக்குதல் – வெள்ளி)

இந்தியாவுக்காக முதல் நாளிலேயே முதல் பதக்கம் வென்றவர். சிட்னி ஒலிம்பிக்கில் (2000) கர்ணம் மல்லேஸ்வரி வெண்கலம் வென்ற பிறகு, ஒலிம்பிக் பளுதூக்குதலில் இந்தியாவின் 21 ஆண்டுகால பதக்க தாகத்தை தீர்த்தவர்.

சானு பதக்கம் வெல்வது ஏற்கனவே கணிக்கப்பட்டது. 49 கிலோ எடைப் பிரிவில் 202 கிலோ எடையை தூக்கி 2ஆம் இடம்பிடித்தார். ரியோ ஒலிம்பிக்கில் சரிவைச் சந்தித்தாலும், அதிலிருந்து மீண்டு இதில் சாதனை படைத்தார்.

குஞ்சராணி தேவியைப் பார்த்து இந்த விளையாட்டில் ஈடுபாடு கொண்ட சானுவின் வசமே, கிளீன் & ஜெர்க் பிரிவு உலக சாதனை (119 கிலோ) உள்ளது. பளுதூக்குதலில் இந்தியாவின் நம்பகமான வீராங்கனை.

ரவிகுமார் தாஹியா (மல்யுத்தம் – வெள்ளி)

57 கிலோ பிரீஸ்டைல் பிரிவு இறுதிச்சுற்றில் போராடித்தோற்று வெள்ளிப் பதக்கம் பெற்றார். இந்தியாவுக்கு மல்யுத்தத்தில் ஏற்கெனவே ஒலிம்பிக் பதக்கம் வென்று தந்த சுஷீல்குமார், யோகேஷ்வர் தத் ஆகியோரை உருவாக்கிய தில்லி சத்ரசால் மைதானமே இவருக்குமான பயிற்சி களம்.

உலக சாம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்ற அடிப்படையில் தனது முதல் ஒலிம்பிக்கிற்கு வந்து, அதையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். அரையிறுதியில் கஜகஸ்தான் வீரர் சனாயேவ் கையில் கடித்து கடுமையான காயத்தை ஏற்படுத்தியும், அதை பொருட்படுத்தாமல் இறுதிச்சுற்றில் விளையாடினார்.

பி வி சிந்து (பாட்மிண்டன் – வெண்கலம்)

ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளி வென்றதால், இதில் தங்கம் வெல்வார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டார். ஆனாலும், விடாமல் போராடி வெண்கலம் வென்று, தொடர்ந்து இருஒலிம்பிக்குகளில் இந்தியாவுக்காக பதக்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை எட்டினார்.

சிந்துவுக்கு எப்போதும் சவாலாக இருக்கும் சீன தைபேவின் டை ஸு யிங்கிடம் அரையிறுதியில் தோற்று, பிறகு வெண்கலப்பதக்கத்துக்கான சுற்றில் வெற்றிபெற்றார். இந்த ஒலிம்பிக்கில் 6 ஆட்டங்களில் விளையாடிய சிந்து, அதில் அரையிறுதி ஆட்டம் தவிர இதர ஆட்டங்களில் நேர் செட்களில் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

லவ்லினா போர்கோஹெய்ன் (குத்துச்சண்டை – வெண்கலம்)

முதல் ஒலிம்பிக்கிலேயே வெண்கலம் (69 கிகி பிரிவு) வென்றிருக்கிறார். டோக்கியோ ஒலிம்பிக் குத்துச்சண்டையில் இந்தியாவுக்கு கிடைத்த ஒரே பதக்கம். கிக் பாக்ஸராக இருந்து, பின்னர் குத்துசண்டைக்கு மாறியவர். ஒலிம்பிக் பயிற்சிக்காக ஐரோப்பா செல்ல இருந்த நிலையில் கரோனாவால் பாதிக்கப்பட்டு அந்த வாய்ப்பு தடைபட்டபோதும், திறமையை வெளிப்படுத்தி பதக்கம் வென்றுள்ளார்.

முதல் சுற்றில் ஜெர்மனியின் நாடினே அபெட்ஸ் (3–2), காலிறுதியில் சீன தைபேவின் நீன் சின் சென் (4–1) ஆகியோரை வென்ற லவ்லினா, அரை இறுதியில் துருக்கியின் புசெனாஸ் சுர்மெனெலியிடம் போராடி வீழ்ந்து வெண்கலம் பெற்றார்.

பஜ்ரங் புனியா (மல்யுத்தம் – வெண்கலம்)

தங்கம் வெல்வார் என்ற நம்பிக்கை இருந்த நிலையில், சற்றே சறுக்கி வெண்கலத்துடன் திரும்புகிறார். இவருக்கும் இது முதல் ஒலிம்பிக் போட்டி. 65 கிலோ பிரிவில் முதலிரு சுற்றுகளில் அபாரமாக வென்றாலும், அரையிறுதியில் உலக சாம்பியனான அஜர்பைஜானின் ஹாஜி அலியேவிடம் வீழ்ந்தார் (5–12). பின்னர் வெண்கலப் பதக்கத்துக்கான சுற்றில் கஜகஸ்தானின் தௌலத் நியாஸ்பெகோவை 8–0 என முழுமையாக வீழ்த்தினார். 34 கிகி எடை இருந்தபோது, ஒரு போட்டியில் 60 கிகி பிரிவில் பங்கேற்று அந்த எடைப்பிரிவு எதிராளியை சாய்த்தவர்.

ஆடவர் ஹாக்கி அணி (வெண்கலம்)

41 ஆண்டுகால தவத்துக்கு, கிடைத்தது வரம். முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தி அட்டகாசமாக தொடங்கிய ஆடவர் அணி, அடுத்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் மோசமாக தோற்றது. மூன்றாவது ஆட்டத்தில் மீண்டு ஸ்பெயினை வீழ்த்த, நான்காவது ஆட்டத்தில் அர்ஜென்டீனாவையும், 5ஆவது ஆட்டத்தில் ஜப்பானையும் தோற்கடித்து நாக் அவுட் சுற்றுக்கு முன்னேறியது.

காலிறுதியில் இங்கிலாந்தை வென்றாலும், அரையிறுதியில் பெல்ஜியத்திடம் தோற்றது. பிறகு 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் ஜெர்மனியை வென்றது. ஒலிம்பிக் ஹாக்கியில் 8 முறை தங்கம் வென்ற வரலாற்றைக் கொண்ட இந்திய ஹாக்கி அணி, இந்த வெற்றியின்மூலம் மீண்டும் புதிய சகாப்தத்தை தொடங்கும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கேப்டன் மன்பிரீத் சிங், கோல்கீப்பர் ஸ்ரீஜேஷ், சிம்ரன்ஜீத் சிங் ஆகியோரின் ஆட்டம் குறிப்பிடத்தக்கது.

---

1. உயிரியல் தரவுத்தளங்களின் அடிப்படையில், இந்தியாவின் தர நிலை (rank) என்ன?

அ) 1ஆவது

ஆ) 2ஆவது

இ) 3ஆவது

ஈ) 4ஆவது ☑

✓ உயிரியல் தரவுத்தளங்களுக்கு பங்களிக்கும் முதல் இருபது நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், "Biotech–PRIDE" வழிகாட்டுதல்களை வெளியிட்டார். PRIDE என்ற சொல்லுக்கு தரவு பரிமாற்றத்தின்மூலம் ஆராய்ச்சி & கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்" என்று பொருள். இது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரித்தொழில்நுட்பத்துறையால் உருவாக்கப்பட்டது.

✓ இந்த வழிகாட்டுதல்கள், நாடு முழுவதும் உள்ள பல்வேறு ஆராய்ச்சிக் குழுக்களில், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கு தகவல்பரிமாற்றத்தை செயல்படுத்தும். ஆரம்பத்தில், இந்திய உயிரியல் தரவு மையம் இந்த வழிகாட்டுதல்களை செயல்படுத்தும். தற்போதுள்ள பிற தரவுத்தொகுப்புகள் / தரவு மையங்கள் BioGrid என்ற உயிரியல் தரவு மையத்துடன் இணைக்கப்படும்.

---

2. கலப்பு 4x100 மீ மெட்லி ரிலேவில் உலக சாதனை படைத்துள்ள நாடு எது?

அ) இந்தியா

ஆ) சீனா

இ) ஜப்பான்

ஈ) பிரிட்டன் ☑

✓ சமீபத்தில் நிறைவுற்ற டோக்கியோ ஒலிம்பிக்கில், பிரித்தானியா, நீச்சல் நிகழ்வான 4x100 மீ மெட்லி ரிலே போட்டியில் தங்கப்பதக்கம் வென்றது. ஆண் மற்றும் பெண் உட்பட நான்கு பிரிட்டிஷ் நீச்சல் வீரர்கள் கலப்பு 4x100 மீ மெட்லி ரிலேவில் பங்கேற்றனர். அவர்கள் மொத்தம் 3:37.58 வினாடிகள் நேரத்தை எடுத்துக்கொண்டு முதல் இடத்தைப் பிடித்தனர். இந்தக் காலப்பகுதியில் நிகழ்வை முடித்து உலக சாதனை படைத்தனர். இந்த உலக சாதனை 4 நீச்சல் வீரர்கள் – கேத்லீன் டாசன், ஆடம் பீட்டி, ஜேம்ஸ் கை மற்றும் அன்னா ஹாப்கின் ஆவர்.

---

3. காரைக்கால் துறைமுகம் அமைந்துள்ள மாநிலம் (அ) யூனியன் பிரதேசம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) புதுச்சேரி ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கேரளம்

✓ துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகம் ஆனது காரைக்கால் துறைமுகம் (புதுச்சேரி) மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் (இலங்கை) இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்குவதற்காக புதுச்சேரி மற்றும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து முன்மொழிவுகளைப்பெற்று குழுவொன்றை அமைத்துள்ளது. இந்தியா மற்றும் இலங்கை இடையேயான இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2011'இல் கையெழுத்திடப்பட்டது.

---

4. புதிதாக வெளியிடப்பட்ட "Nehru, Tibet and China" என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ) அரவிந்த் அதிகா

ஆ) ரமேஷ் நாராயண்

இ) அவ்தார் சிங் பாசின் ☑

ஈ) ராமச்சந்திர குகா



✓ பென்குயின் ரேண்டம் ஹவுஸ் இந்தியா, அவ்தார் சிங் பாசின் எழுதிய "நேரு, திபெத் மற்றும் சீனா" என்ற புதிய நூலை வெளியிட்டது. அவ்தார் சிங் பாசின், ஓர் அசல் காப்பக ஆவணங்களை வெளியிடுபவரும் ஆவார்.

✓ "நேரு, திபெத் மற்றும் சீனா" என்ற இந்நூல், இந்தியாவின் சுதந்திரம் முதல் 1962 இந்திய–சீனப் போர் வரை நடந்த பல்வேறு விவரங்கள் மற்றும் நிகழ்வுகள்பற்றி விவரிக்கிறது. அவ்தார் சிங் பாசின், வெளியுறவு அமைச்சகத்தில் சுமார் முப்பதாண்டு காலம் பணியாற்றியுள்ளார். அவர், வரலாற்றுப் பிரிவின் இயக்குநராக இருந்து 1993'இல் ஓய்வுபெற்றார். தெற்காசிய விவகாரங்களில் அவர், "India in Sri Lanka: Between Lion & the Tigers" போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

---

5. 2021 ஆகஸ்ட்டுக்கான ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ள நாடு எது?

அ) ஜெர்மனி

ஆ) பிரான்ஸ்

இ) ஐக்கியப் பேரரசு

ஈ) இந்தியா ☑

✓ ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தரமற்ற உறுப்பினராக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியா, 2021 ஆகஸ்ட்டிற்கு அதன் தலைவராக செயல்படும். இந்தியா, நார்வே, அயர்லாந்து, மெக்ஸிகோ & கென்யா ஆகியவை நிரந்தரமற்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டன. 15 உறுப்பினர்களைக் கொண்ட UNSC'க்கு, 2021 ஜனவரி.1 முதல் இரண்டு ஆண்டுகாலத்திற்கு அந்நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

✓ துனிசியா, கடந்த ஜனவரி மாதத்தில் தலைவராக இருந்தது. உறுப்பு நாடுகளின் பெயரின் ஆங்கில அகரவரிசைப்படி, தலைமைப் பதவி கிடைக்கப்பெறும்.

---

6. 100% COVID–19 தடுப்பூசி செலுத்தப்பெற்ற இந்தியாவில் முதல் நகரம் எது?

அ) சூரத்

ஆ) நொய்டா

இ) புவனேசுவரம் ☑

ஈ) இந்தூர்

✓ புவனேசுவர் மாநகராட்சி (தென்கிழக்கு மண்டலம்) மண்டல துணை ஆணையர் அன்ஷுமன் ராத், 100% COVID–19 தடுப்பூசி செலுத்தப்பெற்ற முதல் நகரமாக புவனேசுவரம் மாறியுள்ளதாக கூறினார். முன்களப் பணியாளர்கள், சுகாதாரப்பணியாளர்கள், 18–44 வயதுக்குட்பட்டோர், 45 வயதிற்கு மேற்பட்டோர் என வெவ்வேறு பிரிவுகளின் குடிகளை வகைப்படுத்தியதன்மூலம் 2021 ஜூலை.31ஆம் தேதிக்குள்ளாகவே புவனேசுவர் மாநகராட்சி இந்த இலக்கை அடைந்தது.

---

7. ஒரே ஒலிம்பிக் போட்டியில் ஏழு பதக்கங்களை வென்ற முதல் பெண் நீச்சல் வீராங்கனை யார்?

அ) எம்மா மெக்கியன் ☑

ஆ) சாரா ஸ்ஜோஸ்ட்ரோம்

இ) பெர்னில் புளும்

ஈ) கெய்லி மெக்கவுன்

✓ ஒரே ஒலிம்பிக் போட்டியில் ஏழு பதக்கங்களை வென்ற முதல் பெண் நீச்சல் வீராங்கனை என்ற பெருமையை எம்மா மெக்கியன் பெற்று உள்ளார். டோக்கியோ ஒலிம்பிக்கில் அவர் 7 பதக்கங்களை வென்றார். அவர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனையாவார்.

✓ டோக்கியோ ஒலிம்பிக்கில், அவர் இரண்டுமுறை ஒலிம்பிக் சாதனையை முறியடித்தார். அவர், 50மீ பிரீஸ்டைல் போட்டியை 24.02 வினாடிகளில் முடித்து உலக சாதனை படைத்தார். பின்னர் 50 மீ பிரீஸ்டைலை 24 வினாடிகளில் முடித்து மீண்டும் அந்தச் சாதனையை முறியடித்தார். ஒரு விளையாட்டு / நிகழ்வில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தங்கங்களை வென்ற நீச்சல்காரர்களில் மைக்கா பெல்ப்ஸ், மாட் பியோண்டி மற்றும் ஓட்டோ ஆகியோருடன் எம்மா மெக்கியனும் தற்போது இணைகிறார்.

8.2020 டோக்கியோ பாராலிம்பிக்ஸிற்கான இந்தியாவின் கீதத்தை இயற்றியவர் யார்?

அ) யோகேஷ்வர் தத்

ஆ) தீபா மாலிக்

இ) சஞ்சீவ் சிங் ☑

ஈ) வருண் சிங் பதி

✓ மாற்றுத்திறனாளி கிரிக்கெட் வீரரான சஞ்சீவ் சிங், 2020 டோக்கியோ பாராலிம்பிக்கிற்கான இந்தியாவின் கீதத்தை இயற்றி பாடியுள்ளார். "கர் தே கமல் து" என்று தொடங்கும் இந்தக் கீதத்தை இந்திய விளையாட்டு அமைச்சர் அனுராக் தாக்கூர் வெளியிட்டார். டோக்கியோ ஒலிம்பிக்கில், இந்தியாவிலிருந்து 54 விளையாட்டு வீரர்கள் ஒன்பது விளையாட்டுப் பிரிவுகளில் பங்கேற்கிறார்கள்.

---

9. சமீபத்தில் காலமான நெல்லியோடே வாசுதேவன் நம்பூதிரியுடன் தொடர்புடைய நடனம் எது?

அ) கதக்

ஆ) கதகளி

இ) பரதநாட்டியம் ☑

ஈ) மோகினியாட்டம்

✓ நெல்லியோடே வாசுதேவன் நம்பூதிரி என்பவர் ஒரு கதகளி கலைஞர் ஆவார். அவர் கேரள மாநிலத்தைச் சார்ந்தவராவார். சமற்கிருதம் மற்றும் ஹிந்து புராணங்களில் அறிஞரான அவர், கேந்திர சங்கீத நாடக அகாடமி, கேரள சங்கீத நாடக அகாடமி விருது, கேரள மாநில கதகளி பரிசு போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றவர்.

---

10. வட இந்தியாவின் முதல் மந்தாரை (orchid) பாதுகாப்பு மையம் திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?

அ) ஹரியானா

ஆ) உத்தரகாண்ட் ☑

இ) பஞ்சாப்

ஈ) இமாச்சல பிரதேசம்

✓ உத்தரகாண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்தில் வட இந்தியாவின் முதல் மந்தாரை பாதுகாப்பு மையம் திறக்கப்பட்டுள்ளது. மந்தாரை இனங்களை பாதுகாப்பது மற்றும் உள்ளூர் மக்களுக்கு சுற்றுலா மற்றும் வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குவதே இந்தப் பாதுகாப்பு மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

✓ "*Orchidaceae*" என்ற அறிவியல் பெயர்கொண்ட மந்தாரை என்பது ஒரு பூக்குந்தாவரமாகும். அனைத்து மந்தாரை இனங்களும் CITES'இன்கீழ் பாதுகாக்கப்படுகின்றன. கடந்த 1975 ஜூலை.1'இல் CITES நிறுவப்பட்டது. ஐவோன் ஹிகுவெரோ, CITES'இன் தற்போதைய பொதுச்செயலாளர் ஆவார். இதன் தலைமையகம் சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கிரசென்ட் கல்வி நிறுவனத்திற்கு மத்திய அரசின் விருது

வண்டலூர் B S அப்துர் ரகுமான் கிரசென்ட் உயர்கல்வி நிறுவனத்திற்கு மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற கல்வித் திட்டத்தின் கீழ் சிறந்த பசுமை வளாக விருது வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் தூய்மை செயல்திட்டத்தின் அங்கமாக மாவட்ட அளவில் கல்வி நிறுவன வளாகங்களில் பசுமை மரங்கள் வளர்ப்பு, கழிவுநீர் மேலாண்மை, மரபுசாரா எரிசக்தி பயன்பாடு, தூய்மை வளாக மேலாண்மை உள்ளிட்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களுக்கு மத்திய அரசு பசுமை வளாக விருதுடன் ரொக்கப்பரிசாக ₹5,000 வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

---

2. இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம் 2.0: பிரதமர் மோடி தொடக்கிவைத்தார்

ஏழைக்குடும்பங்களுக்கு இரண்டாம்கட்ட இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தை (பிரதம மந்திரி உஜ்வலா யோஜனா 2.0) பிரதமர் மோடி தொடக்கிவைத்தார்.

வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள ஐந்து கோடி ஏழைக்குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவதற்காக, பிரதமரின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம் (பிரதம மந்திரி உஜ்வாலா யோஜனா 1.0) கடந்த 2016ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பின்னர், அந்தத் திட்டத்தில் SC/ST பிரிவினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏழு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக, 8 கோடி பேருக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்குவதற்கு இலக்கு மாற்றியமைக்கப்பட்டது. அந்த இலக்கையும் கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்டில் அடைந்து, 8 கோடி பேருக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டு விட்டது.

அதைத்தொடர்ந்து, ஒரு கோடி ஏழைக்குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்படும் என்று கடந்த மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 1 கோடி ஏழைக் குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் நோக்கில், இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம் 2.0 தொடங்கப்பட்டுள்ளது.

---

3. ATM'இல் பணம் இல்லாவிட்டால் வங்கிகளுக்கு அபராதம்: அக்டோபர் 1 முதல் அமல்

தானியங்கி பணப்பட்டுவாடா மையத்தில் (ATM) பணம் இல்லாமல் இருந்தால் சம்பந்தப்பட்ட வங்கிக்கு அபராதம் விதிக்க இந்திய ரிசர்வ் வங்கி முடிவுசெய்துள்ளது. அக்.1ஆம் தேதி முதல் இது நடைமுறைக்கு வருகிறது. ATM'இல் பணம் இல்லாததால் வங்கி வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் அசௌகர்யங்களைக் குறைக்கும் வகையிலும், ATM'இல் எப்போதும் பணம் இருப்பதை உறுதி செய்யும் வகையிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து 10 மணி நேரத்துக்கு மேல் ATM பணம் இல்லாமல் இருந்தால் ₹10,000 அபராதம் விதிக்கப்படும். இதற்கு ஏற்றபடி வங்கிகள் பணம் நிரப்புவதற்கான தங்களது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ளவேண்டும் என்று RBI அறிவித்துள்ளது.

வங்கி அல்லாத பிற நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு ATM நிர்வகிக்கும் நிறுவனங்கள் பணத்தை நிரப்பத் தவறினாலும் இந்த அபராதம் உண்டு. அதே நேரத்தில் வங்கிகள் அந்த அபராதத்தொகையை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து வசூலித்துக் கொள்ளலாம். வங்கிகளின் தொடர் விடுமுறை, மக்கள் அதிக அளவில் ATM இயந்திரத்தை நாடும் மாதத்தின் முதல் வாரம் மற்றும் திருவிழா காலங்களில் பல ATM'களில் பணம் இல்லாத சூழல் நிலவுகிறது.

இதனால் வங்கிக்கணக்கில் பணம் இருந்தும் அதனைக் கையில் எடுக்க முடியாமல் திண்டாடும் சூழல் உருவாகிறது. RBI'இன் இந்த நடவடிக்கை மக்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2021 ஜூன் மாதம் நிலவரப்படி நாட்டில் 2,13,766 ATM'கள் உள்ளன.

---

4. நீரஜ் சோப்ராவுக்குக் கௌரவம்: ஆகஸ்ட் 7, தேசிய ஈட்டி எறிதல் நாள்

நீரஜ் சோப்ராவைக் கௌரவப்படுத்தும் விதமாக ஆகஸ்ட் 7ஆம் தேதியை தேசிய ஈட்டி எறிதல் நாளாகக் கொண்டாடப்படும் என இந்தியத் தடகள சம்மேளனம் அறிவித்துள்ளதற்குப் பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்துள்ளார்கள். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தடகள பிரிவில் இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா (23) தங்கப்பதக்கம் வென்று வரலாறு படைத்தார். இறுதிச்சுற்றில் அவர் 87.58 மீட்டர் தூரம் எறிந்து முதலிடம் பிடித்தார். கடந்த 1920 ஆன்ட்வெர்ப் ஒலிம்பிக் போட்டியில் தொடங்கி, 101 ஆண்டுகளாக அந்த விளையாட்டுத் திருவிழாவில் களம் கண்டுவரும் இந்தியாவுக்கு தடகளத்தில் கிடைத்துள்ள முதல் மகுடம் இது. முன்னதாக ஒலிம்பிக் தடகளத்தில் ஓட்டப்பந்தயத்தில் மில்கா சிங் (1960 ரோம்), பி டி உஷா (1984 லாஸ் ஏஞ்சலீஸ்) போராடி தவற விட்ட பதக்க வாய்ப்புகளை, தற்போது நீரஜ் சோப்ரா தட்டிச்சென்றுள்ளார்.

இந்நிலையில் ஆக.7 அன்று ஈட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்றார் நீரஜ் சோப்ரா. இதையொட்டி ஆக.7ஆம் தேதியை தேசிய ஈட்டி எறிதல் நாளாக தேதி கொண்டாடப்படும் என இந்தியத் தடகள சம்மேளனம் அறிவித்துள்ளது. இதற்குப் பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்துள்ளார்கள். அடுத்த வருடம் முதல் ஒவ்வொரு மாநிலத்திலும் ஈட்டி எறிதல் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அதற்கடுத்த வருடம் நாட்டிலுள்ள 600'க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் ஈட்டி எறிதல் போட்டிகள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1.ஆர்மீனியாவின் பிரதமராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) நிகோல் பாஷின்யன் ☑

ஆ) ஆர்தர் சர்க்ஸியன்

இ) அரம் வர்தேவனியன்

ஈ) ஆர்மென் சர்க்கிஸியன்

✓ சிவில் ஒப்பந்தக்கட்சியின் தலைவர் நிகோல் பஷின்யன், ஆர்மீனியாவின் பிரதமராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் முதன் முதலில் கடந்த 2018'இல் பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆர்மீனிய பிரதமர் பதவிக்கான பஷின்யனின் வேட்புமனுவை அந்நாட்டு அதிபர் ஆர்மென் சர்க்கிஸியன் அங்கீகரித்தார். ஆர்மீனியா, ஆசியாவில் உள்ள ஒரு நாடு. இது ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையே உள்ள காகசஸ் மலைப் பகுதியில் அமைந்துள்ளது. யெரெவன், ஆர்மீனியாவின் தலைநகரம் ஆகும். ஆர்மீனிய டிராம் அதன் நாணயமாகும்.

---

2. UNSC விவாதக் கூட்டத்திற்கு தலைமை வகித்த முதல் இந்தியப் பிரதமர் யார்?

அ) இந்திரா காந்தி

ஆ) டாக்டர் மன்மோகன் சிங்

இ) நரேந்திர மோடி ☑

ஈ) அடல் பிஹாரி வாஜ்பாய்

✓ ஐநா பாதுகாப்பு அவையின் (UNSC) நிரந்தரமற்ற உறுப்பினராக இந்தியா தனது ஈராண்டு பதவிகாலத்தை 2021 ஜனவரி.1 அன்று தொடங்கியது. இந்தியா, ஆகஸ்ட் மாதத்தில் UNSC'இன் தலைவர் பதவியை வகிக்கிறது. UNSC விவாதக்கூட்டத்திற்கு தலைமைவகிக்கும் முதல் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி ஆவார்.

✓ இந்தியா, 1950–51, 1967–68, 1972–73, 1977–78, 1984–85 & 1991–92 ஆகிய ஆண்டுகளில் UNSC'இல் உறுப்பினராக இருந்தது. உலக அமைதியை நிலைநாட்டுவதற்கு உலக நாடுகள் சங்கம் தவறியதை அடுத்து, இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, UNSC உருவாக்கப்பட்டது. UNSC'இன் முதல் அமர்வு 1946 ஜன.17 அன்று நடைபெற்றது. இது, ஐநா அவையின் ஆறு முக்கிய அமைப்புகளில் ஒன்றாகும். பன்னாட்டளவில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது இதன் பணியாகும்.

---

3. டோக்கியோ ஒலிம்பிக்கில், மகளிர் ஒற்றையர் பாட்மிண்டனில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?

அ) கிரேசியா போலி

ஆ) P V சிந்து

இ) தை சூ–யிங்

ஈ) சென் யூபி ☑

✓ டோக்கியோ ஒலிம்பிக்கில் மகளிர் ஒற்றையர் பாட்மிண்டனில் 2021 ஆக. 2 அன்று தங்கப்பதக்கத்தை வென்றார் சென் யூபி. 21–18, 19–21, 21–18 என்ற கணக்கில் தைவானின் தை சூயை வீழ்த்தி அவர் பட்டத்தை கைப்பற்றினார். அவர் ஒரு சீன பாட்மிண்டன் வீராங்கனையாவார்.

✓ அவர், 2016 ஆசிய மற்றும் உலக ஜூனியர் சாம்பியன்ஷிப்பில் பெண்கள் ஒற்றையர் ஜூனியர் பட்டங்களை வென்றுள்ளார். 2017ஆம் ஆண்டில், அவருக்கு, 2017ஆம் ஆண்டின் மிகவும் நம்பிக்கைக்குரிய விளையாட்டு வீராங்கனை விருது வழங்கப்பட்டது.

4.2021 ஆக.2 அன்று டோக்கியோ ஒலிம்பிக்கில், ஆடவர் ஒற்றையர் பாட்மிண்டனில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?

அ) விக்டர் ஆக்செல்சன் ☑

ஆ) சென் லாங்

இ) கெவின் கார்டன்

ஈ) வாங் சூ–வெய்

✓ ஆகஸ்ட் 2, 2021 அன்று டோக்கியோ ஒலிம்பிக்கில், ஆடவர் ஒற்றையர் பாட்மிண்டனில் விக்டர் ஆக்செல்சன் தங்கப்பதக்கம் வென்றார். அவர் டென்மார்க்கைச் சேர்ந்தவர். 2016ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற சீனத்தின் சென் லாங்கை அவர் தோற்கடித்தார். விக்டர் ஆக்செல்சன் 2017 உலக சாம்பியன் மற்றும் 2020 கோடைகால ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவர்.

✓ உலக ஜூனியர் சாம்பியன்ஷிப்பை வென்ற முதல் ஐரோப்பிய வீரர் என்ற பெருமையைப்பெற்றார். அவர், 2010'இல் கொரியாவின் காங் ஜி–வூக்கை தோற்கடித்து உலக ஜூனியர் சாம்பியன்ஷிப்பை வென்றார்.

---

5. ஆஸ்திரேலிய பிரதமரின் சிறப்பு வர்த்தக தூதுவராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

அ) டோனி அபோட் ☑

ஆ) S ஜெய்சங்கர்

இ) பியூஷ் கோயல்

ஈ) ராகேஷ் அஸ்தானா

✓ டோனி அபோட், இந்தியாவுக்கான ஆஸ்திரேலிய பிரதமரின் சிறப்பு வர்த்தக தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். COVID பிந்தைய மீட்சிக்கு உதவும் வர்த்தக மற்றும் முதலீட்டு இணைப்புகளை ஆழப்படுத்தும் நோக்கத்துடன் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ "பாதுகாப்பான மற்றும் நெகிழ்திறனுடனான விநியோகச் சங்கிலிகளை" உருவாக்குவதே இந்த முன்மொழியப்பட்ட சந்திப்பின் முக்கிய நோக்கம் ஆகும். டோனி அபோட், ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமராக இருந்துள்ளார். அவர், 2013–2015 வரை, ஆஸ்திரேலியாவின் 28ஆவது பிரதமராக இருந்தார்.

---

6. NCRB'இன் தரவுகளின்படி, கடந்த 2019'இல் வேலையின்மை காரணமாக பின்வரும் எம்மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன?

அ) பீகார்

ஆ) கர்நாடகா ☑

இ) இராஜஸ்தான்

ஈ) இமாச்சல பிரதேசம்

✓ வேலைவாய்ப்பின்மை காரணமாக நிகழ்ந்த தற்கொலைகள், 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019'இல் 24% அதிகரித்துள்ளது. NCRB' இன் தரவுகளின்படி, கர்நாடக மாநிலத்தில், 2019'இல், வேலையின்மை காரணமாக அதிகபட்ச தற்கொலைகள் (553) நிகழ்ந்துள்ளன. கர்நாடக மாநிலத்தைத் தொடர்ந்து மகாராஷ்டிரமும், தமிழ்நாடும் உள்ளன.

✓ தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) என்பது இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் சிறப்பு உள்ளூர் சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் குற்றத் தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வுசெய்யும் ஓர் இந்திய நிறுவனம் ஆகும். 1986'இல் NCRB நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது. உள்துறை அமைச்சகத்தின்கீழ் இது செயல்படுகிறது. இராம்பால் பவார் இ கா ப, இதன் தற்போதைய இயக்குநராக உள்ளார்.

---

7. டோக்கியோ ஒலிம்பிக்கில், ஹாக்கியில் வெண்கலப்பதக்கத்தை வெல்வதற்காக, இந்தியா, எந்த நாட்டைத் தோற்கடித்தது?

அ) பெல்ஜியம்

ஆ) ஜெர்மனி ☑

இ) அர்ஜென்டினா

ஈ) நெதர்லாந்து

✓ இந்திய ஆடவர் ஹாக்கி அணியானது ஜெர்மனி அணியை 5–4 என்ற கணக்கில் வென்று, 41 ஆண்டுகளுக்குப்பிறகு ஒலிம்பிக் பதக்கத்தை (வெண்கலப்பதக்கம்) வென்றுள்ளது. ஒலிம்பிக் வரலாற்றில் ஹாக்கியில் இந்தியா வெல்லும் மூன்றாவது வெண்கலப்பதக்கம் இதுவாகும். 1968 மெக்ஸிகோ நகர ஒலிம்பிக் போட்டியில் ஒரு பதக்கமும் 1972 முனிச் ஒலிம்பிக் போட்டியில் ஒரு பதக்கமும் என இரு பதக்கங்களை இந்தியா ஏற்கனவே வென்றுள்ளது.

---

8. சமக்ர சிக்ஷா திட்டமானது எந்த வகுப்பிலிருந்து எந்த வகுப்பு வரை உள்ளடக்கிய ஒரு திட்டமாகும்?

அ) பாலர் வகுப்பிலிருந்து 11ஆம் வகுப்பு வரை

ஆ) பாலர் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை

இ) பாலர் வகுப்பிலிருந்து 9ஆம் வகுப்பு வரை

ஈ) பாலர் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை ☑

- ✓ பள்ளிக்கல்விக்கான முழுமையான கல்வி (சமக்ர சிக்ஷா) திட்டத்தை 2021–22ஆம் ஆண்டு முதல் 2025–26ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டு காலத்திற்கு தொடர பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு அனுமதியளித்துள்ளது.
- ✓ அங்கன்வாடி பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல்; மாணவிகளின் விடுதிகளுக்கு அணையாடை வழங்கும் எந்திரங்கள் & சாம்பலாக்கிகள் ஆகியவை வழங்குதல்; மேல்நிலைப்பள்ளிகளில் துணைப்பாட பிரிவுகளுக்குப்பதில் புதிய பாடப்பிரிவுகளை சேர்த்தல்; முழுமையான, முன்னேற்றத்தை தெரிவிக்கும் பல பரிமாண அறிக்கை, முழுமையான மதிப்பெண் அட்டை வடிவில் அறிமுகப்படுத்துதல்; அனைத்து கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயாக்களையும் மேம்படுத்துதல் ஆகியவை திருத்தப்பட்ட இந்தத் திட்டத்தின் முன்னெடுப்புகளுள் ஒன்றாகும். சமக்ர சிக்ஷா திட்டமானது பாலர் பள்ளி முதல் 12ஆம் வகுப்பு வரையிலான பள்ளிக்கல்வியை உள்ளடக்கியது.

---

9. DefExpo–2022 நடைபெறவுள்ள இடம் எது?

அ) காந்திநகர் ☑

ஆ) சூரத்

இ) குருகிராம்

ஈ) லக்னோ

- ✓ DefExpo–2022 ஆனது 2022 மார்ச் 11, 13 அன்று காந்திநகரில் (குஜராத்) நடைபெறவுள்ளது. பாதுகாப்பு அமைச்சகமானது ஈராண்டுகளுக்கு ஒரு முறை பாதுகாப்பு கண்காட்சி மற்றும் ஏரோ இந்தியா வடிவில் இராணுவ கண்காட்சிகளை ஏற்பாடு செய்கிறது. 'DefExpo' என்பது அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சகத்தின் தரை மற்றும் கடற்படை அமைப்புகளின் கண்காட்சியாகும். DefExpo'இன் முந்தைய பதிப்பு லக்னோவில் நடந்தது. 2014'க்கு முன்புவரை, இது, புதுதில்லியில் மட்டுமே நடத்தப்பட்டு வந்தது.

---

10. ஒலிம்பிக்கில், 100 மீ மற்றும் 200 மீ பட்டங்களை தக்கவைத்துக் கொண்ட முதல் பெண்மணி யார்?

அ) எலைன் தாம்சன் ☑

ஆ) டினா ஆஷர்–ஸ்மித்

இ) இமானி–லாரா லான்சிகோட்

ஈ) டேரில் நீட்டா

- ✓ 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில், எலைன் தாம்சன், 100 மீ மற்றும் 200 மீ ஒலிம்பிக் பட்டங்களை வென்ற முதல் பெண்மணி ஆனார். அவர், ஜமைக்காவைச் சேர்ந்தவர். அவர் 4 முறை ஒலிம்பிக் சாம்பியnaவார். அவர் 100 மீ (பெண்கள் பிரிவு) பந்தயத்தை 10.61 வினாடிகளில் முடித்து தேசிய மற்றும் ஒலிம்பிக் சாதனையை படைத்தார். 200 மீ ஓட்டத்தை, 21.53 வினாடிகளில் முடித்து 2ஆவது வேகமான பெண் எனச் சாதனை படைத்துள்ளார். அமெரிக்காவின் கிரிபித்–ஜாய்னர் முதல் வேகமான பெண்மணியாக கருதப்படுகிறார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சிறந்த பேரூராட்சியான கல்லக்குடி; சாத்தியமானது எப்படி?

திருச்சி மாவட்டம், லால்குடி அருகே குப்பைக் கிடங்கை வளமீட்பு பூங்காவாக மாற்றியமைத்து, மண் புழு உரம், இயற்கை உரம் போன்றவற்றைத் தயாரித்து விற்பதன் மூலம் வருவாயைப் பெருக்கியுள்ள கல்லக்குடி பேரூராட்சியை தமிழகத்தில் சிறந்த பேரூராட்சியாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்தப் பேரூராட்சிப் பகுதி உணவகங்கள், வணிக நிறுவனங்கள், மற்றும் பொதுமக்களிடமிருந்து பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களால் தினசரி பெறப்படும் குப்பைகளை அதே பகுதியில் சுமார் 1.30 ஏக்கர் இடத்தில் மலை போலக் கொட்டி வைக்கின்றனர்.

இவற்றை மக்கும், மக்கா குப்பை என தரம் பிரித்து, மக்கும் குப்பைகளிலிருந்து மண்புழு உரம், இயற்கை உரம், மீன் கழிவுகளிலிருந்து மீன் அமிலம், முட்டை ஓடுகளிலிருந்து கல்ரோஸ் உரம் போன்றவற்றைத் தயாரித்து பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் விற்கின்றனர். மேலும், மக்காத குப்பைகளான பிளாஸ்டிக் போன்றவற்றை அருகிலுள்ள சிமெண்ட் ஆலைகளுக்கும் விற்கின்றனர். இதனால் குப்பைகள் சேமிக்கும் இடத்தின் அளவு குறுகியதால், பிற இடங்களில் மூலிகைச் செடிகளான ஓமவள்ளி, கருந்துளசி, நொச்சி, ஆடாதுளை, முடக்கத்தான் போன்றவற்றை வளர்க்கின்றனர்.

இங்கு தயாரிக்கும் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி தென்னை, கொய்யா, நாவல் மரம் மற்றும் காய்கறித் தோட்டங்கள் அமைத்து அதிலிருந்தும் வருவாய் பெறுகின்றனர். இக் குப்பை கிடங்கின் ஒரு பகுதியில் வளர்க்கப்படும் ஆடு, மாடு, கோழி, வாத்து, முயல், புறா, மீன் போன்றவற்றின் கழிவுகளும் உரங்கள் தயாரிக்கப் பயன்படுவதுடன், மாடுகளின் கழிவுகளிலிருந்து இயற்கை வாயுவும் தயாரிக்கப்படுகிறது. இது குப்பைக் கிடங்கில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தேநீர் தயாரிக்க உதவுகிறது.

இதுமட்டுமல்லாது இந்தக் குப்பைக் கிடங்கில் நான்கில் ஒரு பகுதி இடத்தில் குப்பைக் கிடங்கும் பிற இடங்களில் மண் புழு உரம் உள்ளிட்ட உரங்கள் தயாரிக்கும் இடமாகவும், பிற இடங்களில் பசுமைத் தோட்டம் அமைத்து அதில் அப்பகுதி மக்கள் நடைப்பயிற்சி செல்லும் வகையிலும் அமைத்து வளமீட்பு பூங்காவாக மாற்றியுள்ளனர் பேரூராட்சி செயல் அலுவலர் சாகுல் அமீது தலைமையிலான பணியாளர்கள். இது மட்டுமல்லாது பேரூராட்சிப் பகுதியில் பொது சுகாதாரம், தெருவிளக்கு, குடிநீர் விநியோகம், வறுமை ஒழிப்பு, நிதி மேலாண்மை போன்ற பணிகளையும் சிறப்பாக செய்துள்ளனர் பேரூராட்சி நிர்வாகத்தினர்.

இந்தப் பணிகளை ஆய்வு செய்த திருச்சி மண்டலப் பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர், அதன் ஆய்வறிக்கையை சென்னை பேரூராட்சி இயக்குநருக்கு அனுப்பியதன் மூலம் தமிழகத்தில் உள்ள 528 பேரூராட்சிகளில் கல்லக்குடி சிறந்த பேரூராட்சியாக அறிவிக்கப்பட்டு அதற்கான விருது, ரொக்கப் பரிசாக ரூ. 10 லட்சம் வரும் ஆக. 15– ஆம் தேதி சென்னையில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் முதல்வர் மு. க. ஸ்டாலின் வழங்கவுள்ளார். பணியாளர்கள், மக்கள் ஒத்துழைப்பே காரணம்: இதுகுறித்து கல்லக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் சாகுல்அமீது கூறுகையில், பேரூராட்சியின் அனைத்துப் பணியாளர்களும் மக்களுக்குச் சிறப்பான பணியாற்றினர். இதற்கு காரணம் பேரூராட்சி நிர்வாகம் அவர்களை பல்வேறு வகைகளில் ஊக்கப்படுத்தியதே. மேலும் பொதுமக்களும் பேரூராட்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கினர் என்றார் அவர்.

---

2. கடற்படைக்கு வரலாற்றுத் தருணம்! | இந்திய கடற்படையின் வரலாற்றுச் சாதனை குறித்த தலையங்கம்

இந்தியா தனது சுதந்திர தின பவள விழா ஆண்டை நெருங்கும் வேளையில் மிகப் பெரிய வரலாற்றுச் சாதனையொன்றை நிகழ்த்தியிருக்கிறது. இந்திய கடற்படைக்காக இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட போர்க்கப்பல் தனது முதல் சுற்று சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின், ரஷியா, பிரான்ஸ், சீனா ஆகிய ஆறு நாடுகளுக்கு மட்டும்தான் தாங்களே வடிவமைத்து விமான தளங்களுடன் கூடிய போர்க்கப்பல்களை வடிவமைத்து கட்டமைக்கும் வல்லமை இருந்து வந்தது. இப்போது 76% உதிரி பாகங்களை இந்தியாவிலேயே தயாரித்து, ஒரு போர்க்கப்பலை உருவாக்கி வெற்றிகரமாக அதன் சோதனை ஓட்டத்திலும் இறங்கியிருப்பதன் மூலம் இந்தியாவின் சா்வதேச வல்லமை உறுதிப்பட்டிருக்கிறது.

இந்திய கடற்படைக்கு இது ஒரு வரலாற்றுத் தருணம். இதற்கு முன்னாலும் இந்திய கடற்படையிடம் விமானம் தாங்கி போர்க்கப்பல்கள் இருந்தன என்றாலும், அவை எதுவும் இந்தியாவில் கட்டுமானம் செய்யப்பட்டவை அல்ல. 1961–இல் இந்திய கடற்படையில் இணைந்த ஐஎன்எஸ் விக்ராந்த்தும், 1982–இல் இணைந்த ஐஎன்எஸ் விராத்தும் பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல்கள். அதற்குப் பிறகு இந்திய கடற்படை வாங்கிய ஐஎன்எஸ் விக்ரமாதித்யா, ரஷியாவால் உருவாக்கப்பட்டது. ஆனால், இப்போதைய ஐஎன்எஸ் விக்ராந்த் அப்படியல்ல. 76% இந்தியாவில் கட்டுமானம் செய்யப்பட்ட, நாமே தயாரித்திருக்கும் போர்க்கப்பல்.

இந்தக் கப்பலை வடிவமைத்ததிலும், கட்டுமானம் செய்ததிலும் இந்திய கடற்படையின் கடற்படை வடிவமைப்பு இயக்ககமும், அரசு நிறுவனமான கொச்சி கப்பல் கட்டுமானத் தளமும் பாராட்டப்பட வேண்டியவை. காலதாமதம், அதிகரித்துவிட்ட முதலீடு என்று எத்தனையோ தடைகளையும், பிரச்னைகளையும் தாண்டி வியக்க வைக்கும் பிரம்மாண்டமான போர்க்கப்பல் உருவாகியிருக்கிறது. கொச்சின் கப்பல் கட்டுமானத் தளம் பல வர்த்தகக் கப்பல்களைத் தயாரித்திருப்பதற்கும் இப்போதைய ஐஎன்எஸ் விக்ராந்த் உருவாக்கப்பட்டிருப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

கடற்படையிலிருந்து ஓய்வு பெற்றிருக்கும் ஐஎன்எஸ் விராத்தின் பராமரிப்புப் பணிகளை தொடர்ந்து மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த அனுபவம் கொச்சி கப்பல் கட்டுமானத் தளத்துக்கு இதை உருவாக்குவதில் கைகொடுத்திருக்கிறது என்று கூறலாம்.

1980 முதலே நமக்கென்று நாமே போர்க்கப்பல் தயாரிக்க வேண்டும் என்கிற கனவு இந்திய கடற்படைக்கு இருந்து வந்தது. ஆனால், 2002–இல் வாஜ்பாய் ஆட்சியில்தான் அமைச்சரவையின் பாதுகாப்புக் குழு, இந்தியாவுக்கென்று இந்தியாவில் தயாரிக்கப்படும் போர்க்கப்பலுக்கு அனுமதி வழங்கியது. 2009–இல் மன்மோகன் சிங் அரசால் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2014–இல் காலதாமதத்துக்கு ஏற்றவாறு அந்த ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு, இப்போது ரூ.20,000 கோடி செலவில் ஐஎன்எஸ் விக்ராந்த் தனது வெற்றிகரமான சோதனை ஓட்டத்தை கடந்த புதன்கிழமை தொடங்கியது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதலாவது விமானம் தாங்கி இந்த போர்க்கப்பல் பல அம்சங்களில் மேம்பாடு உடையது. இதன் தயாரிப்பின் காரணமாக அரசு நிறுவனமான ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா, தரமான இரும்பை உருவாக்கும் திறன் பெற்றிருக்கிறது. இதன் உதிரி பாகங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில் நுட்பத்தை டிஃபன்ஸ் மெட்டலர்ஜிக்கல் ஆய்வுக் கூடமும் பெற்றிருக்கிறது. கொச்சி கப்பல் கட்டுமானத் தளம், போர்க்கப்பல்களை உருவாக்கும் தொழில் நுட்ப மேம்பாட்டை அடைந்திருக்கிறது. 40,000 டன் எடையுள்ள விமானம் தாங்கி போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த், 222 மீட்டர் நீளமும், 62 மீட்டர் அகலமும், 59 மீட்டர் உயரமும் கொண்ட பிரம்மாண்டம். இதில் காணப்படும் எட்டு டீசல் அல்டர்னேட்டர்களின் மூலம் உருவாக்கப்படும் 24 மெகாவாட் மின்சாரத்தால் ஒரு நகரத்திற்கே ஒளியூட்ட முடியும். இந்தக் கப்பலில் பயன்படுத்தப்பட்ட கேளிள்களின் நீளம் 2,000 கி.மீ. இதற்குத் தேவைபட்ட சிறிய, பெரிய குழாய்களின் மொத்த நீளம் 120 கி.மீ.

ஐஎன்எஸ் விக்ராந்த் 12 அடுக்குகள் கொண்டது. அதில் ஐந்து அடுக்குகள் கப்பலுக்கு மேலே உயர்ந்து நிற்கின்றன. ஏறத்தாழ 1,700 பேருக்கான வசதிகள், கடற்படை வீரர்களாக மகளிரும் பங்கு பெறுவதால் அவர்களுக்கான வசதிகளும் இதில் இணைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் 2,300 அறைகள் உள்ளன. 30 விமானங்கள், தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் பைட்டர் ஜெட்டுகள், ஹெலிகாப்டர்கள் ஆகியவற்றை இந்த போர்க்கப்பல் உள்ளடக்கியுள்ளது. அதில் விக்ரமாதித்யா போலவே, எம்ஜிஜி 29 கே விமானங்கள் இடம்பெறும் என்று தெரிகிறது. கமோவ் 31 ஹெலிகாப்டர்கள், புதிதாக வாங்க இருக்கும் அமெரிக்காவின் சிகாக் ஹெலிகாப்டர்கள் ஆகியவையும் இடம்பெறும்.

18 கடல் மைல் வேகத்தில் 7,500 கடல் மைல்கள் பயணிக்கும் திறன் கொண்ட ஐஎன்எஸ் விக்ராந்த். இந்திய கடற்படைக்கு மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்பு தொழில்துறைக்கும் மிகப் பெரிய வரப்பிரசாதம். கப்பலிலுள்ளஉதிரி பாகங்களை வழங்கியிருப்பதில் நூற்றுக்கும் அதிகமான சிறு, குறு, நடுத்தர தொழிற்சாலைகள் உள்பட 550 நிறுவனங்கள் பங்கு பெற்றிருக்கின்றன. 2012 வரை ஒரு விமானம் தாங்கி போர்க்கப்பல்கூட இல்லாமல் இருந்த சீனா, இப்போது இரண்டாவது கப்பலை தயாரித்துவிட்டது. சீனாவிடம் ஐந்து விமானம் தாங்கிய போர்க்கப்பல்கள் இருக்கின்றன. அதனால், காலதாமத்தைத் தவிர்த்து அடுத்த விமானம் தாங்கிய போர்க்கப்பலுக்கு நாம் தயாராக வேண்டும்.

---

3. ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் பயணம் தோல்வி

புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளுடன் ஜிஎஸ்எல்வி எஃப் 10 ராக்கெட் இன்று வியாழக்கிழமை விண்ணில் பாய்ந்த சிறிது நேரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு ராக்கெட் பயணம் தோல்வியில் முடிந்தது. புவி கண்காணிப்புப் பணிகளுக்காக இஓஎஸ்–03 என்ற அதிநவீன செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்தது. இந்த செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த திட்டமிடபட்டது. ஆனால், கரோனா பரவலால் ராக்கெட் ஏவுதல் பணிகளில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் நோய்த்தொற்று பரவல் சற்று தணிந்துள்ள நிலையில், மீண்டும் திட்டப்பணிகளை இஸ்ரோ முடுக்கிவிட்டுள்ளது. அதன்படி இஓஎஸ்–03 செயற்கைக்கோள் ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவண் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் உள்ள 2–ஆவது ஏவுதளத்தில் இருந்து வியாழக்கிழமை காலை 5.43 மணிக்கு விண்ணில் ஏவுவதற்கான இறுதிக் கட்டப் பணிகளில் விஞ்ஞானிகள் குழுவினர் ஈடுபட்டு வந்தனர். இதற்கான 26 மணி நேர கவுண்ட் டவுன் புதன்கிழமை அதிகாலை 3.43 மணிக்கு தொடங்கியது. இந்நிலையில் இன்று (வியாழக்கிழமை) காலை 5.43 மணிக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்ட நிலையில், கிரையோஜெனிக் என்ஜின் பகுதியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக திட்டம் தோல்வி அடைந்தது என இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

---

4. டெக்ஸாஸ் பல்கலை.யில் உதவித் தொகையுடன் கூடிய கல்விக்கு தமிழக வீராங்கனை தேர்வு

தமிழகத்தைச் சேர்ந்த வட்டு எறிதல் ஜூனியர் வீராங்கனை கிருஷ்ணா ஜெயசங்கர் (18), அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் விளையாட்டுக்கான முழு உதவித்தொகையுடன் (சுமார் ரூ.1.5 கோடி) சேர்க்கை பெற்றுள்ளார். டெக்ஸாஸின் எல் பாசோ நகரில் இருக்கும் அந்த பல்கலைக்கழகத்தில் இத்தகைய உதவித்தொகையுடன் சேர்க்கை பெற்றிருக்கும் முதல் இந்திய வட்டு எறிதல் வீராங்கனை, முதல் தமிழக தடகள வீராங்கனை ஆகிய பெருமைகளை அவர் பெற்றுள்ளார்.

தற்போது ஜமைக்காவின் கிங்ஸ்டன் நகரில் பயிற்சியாளர் ஹொரேஸ் மைக்கேல் வாசெலிடம் பயிற்சி பெற்று வரும் கிருஷ்ணா ஜெய்சங்கர், ஜூனியர் மகளிர் வட்டு எறிதல் தரவரிசையில் இந்திய அளவில் முதலிடத்திலும், ஆசிய அளவில் 8–ஆவது இடத்திலும் இருக்கிறார். வட்டு எறிதலில் அவர் சிறப்பிடத்தில் இருப்பதன் அடிப்படையில் டெக்ஸாஸ் பல்கலைக்கழகம் அவருக்கு இந்த வாய்ப்பை வழங்கியுள்ளது. அந்தப் பல்கலை.யில் 'கைன்சியாலஜி' எனப்படும் உடலியக்கம் சார்ந்த 5 ஆண்டு படிப்பை தேர்வு செய்துள்ளார் கிருஷ்ணா ஜெயசங்கர்.

முன்னதாக அவர் 40.69 மீட்டர் தூரம் வட்டு எறிந்து 2019–இல் நடைபெற்ற 18 வயதுக்கு உள்பட்ட மகளிருக்கான தெற்கு மண்டல ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப்பில் எட்டப்பட்ட சாதனையை முறியடித்துள்ளார். அத்துடன், 2019 தேசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப்பில் 18 வயதுக்கு உள்பட்ட மகளிர் பிரிவில் 3–ஆவது வீராங்கனையாக வந்தார். கிருஷ்ணா ஜெய்சங்கரின், தந்தை ஜெயசங்கர் மேனன் இந்திய கூடைப்பந்து அணியின் முன்னாள் கேப்டன் என்பதும், அவரது தாயார் பிரசன்னா ஜெயசங்கர் இந்திய மகளிர் கூடைப்பந்து அணியின் முன்னாள் கேப்டன் மற்றும் தேசிய தேர்வாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

5. தமிழகத்தின் சிறந்த மாநகராட்சியாக தஞ்சாவூர் தேர்வு

தமிழகத்தின் சிறந்த மாநகராட்சியாக தஞ்சாவூர் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டு அதற்கான அறிவிப்பு இன்று வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தும் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தமிழக அரசால் தேர்வு செய்யப்பட்டு, சுதந்திர தினத்தன்று அதற்கான விருதும் பரிசுத் தொகையும் தமிழக முதல்வரால் வழங்கப்படும். அதன்படி இந்த ஆண்டுக்கான தஞ்சாவூர் மாநகராட்சி தமிழகத்தின் சிறந்த மாநகராட்சியாக தேர்வு செய்யப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளும், நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியும், நீர் மேலாண்மையை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை பாராட்டி நகர்புற வளர்ச்சி துறை சார்பில், தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின் வருகிற ஆகஸ்ட் 15–ம் தேதி சுதந்திர தினத்தன்று, சென்னையில் மாநகராட்சி ஆணையரிடம் சிறந்த மாநகராட்சிக்கான விருது 25 லட்சத்துக்கான பரிசுத் தொகைக்கான காசோலை வழங்க உள்ளார்.

---

1. ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்ற மூன்றாவது இந்திய குத்துச்சண்டை வீராங்கனை யார்?

அ) லவ்லினா போர்கோஹெய்ன் ☑

ஆ) புசெனாஸ் சுர்மெனெலி

இ) மேரி கோம்

ஈ) சாக்ஷி சௌத்ரி

✓ விஜேந்தர் சிங் மற்றும் மேரி கோம் ஆகியோருக்குப் பிறகு ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற 3ஆவது இந்திய குத்துச்சண்டை வீரராக ஆனார் லவ்லினா போர்கோஹெய்ன். 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில், அவர் வெண்கலம் வென்றார். அஸ்ஸாமின் கோலாகாட்டைச் சேர்ந்த அவர், 2018 AIBA பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் மற்றும் 2019 AIBA மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் ஆகியவற்றில் வெண்கலம் வென்றுள்ளார். அஸ்ஸாமில் இருந்து அர்ஜுனா விருது பெற்ற 6ஆவது நபராவார் இவர்.

---

2. ஹார்பூன் கூட்டு பொதுச் சோதனைத் தொகுப்புகளை இந்தியாவுக்கு விற்க ஒப்புதல் அளித்துள்ள நாடு எது?

அ) ரஷ்யா

ஆ) இஸ்ரேல்

இ) இங்கிலாந்து

ஈ) அமெரிக்கா ☑

✓ ஹார்பூன் என்பது அனைத்து வானிலைக்கும் ஏற்ற ஒரு கப்பல் எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு ஆகும். 82 மில்லியன் டாலர் மதிப்பீட்டிலான ஒரு ஹார்பூன் கூட்டு பொதுச் சோதனை மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. இது தற்கால மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான இந்தியாவின் திறனை மேம்படுத்த உதவும். இந்த ஒப்பந்தத்தின் முதன்மை ஒப்பந்தக்காரர் அமெரிக்காவின் சிகாகோவை தலைமையிடமாகக்கொண்ட போயிங் நிறுவனமாகும்.

---

3. மத்திய பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) மசோதா, 2021'இன்படி, சிந்து மத்திய பல்கலைக்கழகம் நிறுவப்படவுள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ) லடாக் ☑

ஆ) ஜம்மு காஷ்மீர்

இ) பஞ்சாப்

ஈ) ஹரியானா

✓ 2021 ஆகஸ்ட்.6 அன்று லடாக் யூனியன் பிரதேசத்தில் ஒரு மத்திய பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. மத்திய கல்வியமைச்சர் தர்மேந்ர பிரதான், மத்திய பல்கலைக்கழகங்கள் (திருத்த) மசோதா, 2021 பற்றி தனது சுருக்கமான அறிக்கையில், ஆண்டுதோறும் சுமார் 7,000 மாணவர்கள் கல்விக்காக லடாக்கிலிருந்து வெளியேறுவதாகவும் மத்திய பல்கலைக்கழகத்தை நிறுவுவதன்மூலம் சுமார் 2,500 மாணவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலயே கல்விக்கான வாய்ப்பைப் பெறுவார்கள் என்றும் கூறினார். ₹760 கோடி செலவில், சிந்து மத்திய பல்கலை நிறுவப்படவுள்ளது.

---

4. தற்போதுள்ள சிந்து நீர் ஒப்பந்தத்தின்படி, பின்வரும் எந்த மூன்று ஆறுகளின் நீரானது இந்தியாவின் தடையற்ற பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது?

அ) சிந்து, ஜீலம் மற்றும் செனாப்

ஆ) கங்கை, யமுனா மற்றும் கோதாவரி

இ) சட்லஜ், பியாஸ் மற்றும் ராவி ☑

ஈ) பியாஸ், கோஸி மற்றும் பாகீரதி

✓ நாடாளுமன்றக் குழுவொன்று, ஆற்றுவடிநிலத்தின் நீர் விநியோகத்தில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்தும், ஒப்பந்தத்தில் காணாத பிற சவால்களுக்கு தீர்வுகாண்பது குறித்தும் பாகிஸ்தானுடன் சிந்து நதிநீர் ஒப்பந்தம் குறித்து மறு பேச்சுவார்த்தை நடத்த பரிந்துரைத்துள்ளது.

✓ 2021 ஆகஸ்ட்.5 அன்று, நீர்வள ஆதார நிலைக்குழு அவ்வறிக்கையை மக்களவையில் தாக்கல்செய்தது. 1960ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தானால் கையெழுத்திடப்பட்ட சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின்படி, சட்லஜ், பியாஸ் மற்றும் ராவி நதிகளின் அனைத்து நீரும் இந்தியாவின் தடையற்ற பயன்பாட்டிற்காக ஒதுக்கப்படுகிறது. மேற்கு சிந்து, ஜீலம் & செனாப் நதிகளின் பெரும்பாலான நீர் பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்படுகிறது.

---

5. தேசிய கைத்தறி நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) 6 ஆகஸ்ட்

ஆ) 8 ஆகஸ்ட்

இ) 5 ஆகஸ்ட்

ஈ) 7 ஆகஸ்ட் ☑

✓ 2021 ஆகஸ்ட்.7 அன்று ஜவுளி அமைச்சகம் ஏழாவது தேசிய கைத்தறி தினத்தை கொண்டாடியது. இந்த நாளில், கைத்தறி நெசவு சமூகம் இந்தியாவின் சமூகப்பொருளாதார வளர்ச்சியில் அது ஆற்றும் பங்களிப்புக்காக கௌரவிக்கப்படுகிறது. அஸ்ஸாமின் கோலாகாட் மாவட்டத்தில் உள்ள மொஹ்பரா, கேரளத்தின் திருவனந்தபுரத்திலுள்ள கோவளம் மற்றும் ஸ்ரீநகரின் புட்காமில் உள்ள கனிஹாமா ஆகியவை 3 கைத்தறி கைவினை கிராமங்களாக அந்தந்த மாநில அரசுகளுடன் இணைந்து ஜவுளி அமைச்சகத்தால் அமைக்கப்பட உள்ளன.

---

6. PM–DAKSH யோஜனாவை செயல்படுத்துகிற அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

இ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

ஈ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

✓ பிரதமரின் தக்ஷ் தளம் மற்றும் பிரதமரின் தக்ஷ் திறன்பேசி செயலியை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் தொடங்கி உள்ளது. தேசிய மின்னாளுகை பிரிவுடன் (NeGD) இணைந்து மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் உருவாக்கியுள்ள இந்த தளமும், செயலியும் பின்தங்கியோர், பட்டியல் பிரிவினர் மற்றும் தூய்மை தொழிலாளிகளுக்கு திறன் வளர்த்தல் திட்டங்களை கிடைக்கச்செய்யும்.

✓ பிரதமரின் தக்ஷ் திட்டம் 2020–21ஆம் ஆண்டு முதல் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

---

7. டோக்கியோ ஒலிம்பிக்கில், மல்யுத்த வெள்ளிப்பதக்கம் வென்ற ரவி தஹியா சார்ந்த மாநிலம் எது?

அ) குஜராத்

ஆ) ஹரியானா ☑

இ) பஞ்சாப்

ஈ) அஸ்ஸாம்

✓ ரவி தஹியா, ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளி வென்ற இரண்டாவது இந்திய மல்யுத்த வீரராவார். அவர் உலக சாம்பியனான சௌர் உகுவேவிடம் ஆடவர் பிரீஸ்டைல் 57 கிகி பிரிவில் பட்டத்தை இழந்தார். ரவி தஹியா, ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்தவராவார்.

---

8. நடப்பாண்டுக்கான (2021) ஐஸ்னர் விருதை வென்ற இந்திய காட்சிக்கலைஞர் & இல்லுஸ்ட்ரேட்டர் யார்?

அ) ஆனந்த் ராதாகிருஷ்ணன் ☑

ஆ) ஜிபின் வர்கீஸ்

இ) பாஸ்கர் ராவ்

ஈ) பிரியேஷ் திரிவேதி

✓ இந்திய காட்சிக்கலைஞரான ஆனந்த் ராதாகிருஷ்ணன் சிறந்த ஓவியர் / பல்லூடக கலைஞருக்கான நடப்பாண்டின் (2021) ஐஸ்னர் விருதை வென்றுள்ளார். ராம் வி எழுதிய கிராபிக் நாவலான 'Blue in Green'க்கான விருதை இங்கிலாந்தைச் சேர்ந்த நிறவியலாளர் ஜான் பியர்சனுடன் அவர் பகிர்ந்துகொண்டார். இவ்விருது, கிராபிக் நாவல்களின் மேதை வில் ஐஸ்னரின் பெயரால் வழங்கப்படுகிறது. "காமிக் துறையின் ஆஸ்கர்" என அழைக்கப்படும் இவ்விருது, 32 பிரிவுகளில் வழங்கப்படுகிறது.

---

9. மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) தெலுங்கானா

✓ மக்களின் வீட்டுக்கேச் சென்று அத்தியாவசிய நலவாழ்வுச் சேவைகளை வழங்குவதற்காக, தமிழக முதல்வர் மு க ஸ்டாலின், கிருஷ்ணகிரியில் உள்ள சாமனப்பள்ளி சிற்றூரில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின்கீழ் 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் உடல்நலக்குறைவு உள்ளவர்களின் வீடுகளுக்கேச் சென்று சிகிச்சையளிக்கப்படும். திடீர் இறப்பு மற்றும் பரவா நோய்களும் இதன் மூலம் கண்டறியப்படும்.

---

10. 2020 டோக்கியோ ஒலிம்பிக்கின் பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?

அ) சீனா

ஆ) ஜப்பான்

இ) அமெரிக்கா ☑

ஈ) ஜெர்மனி

✓ 2020 டோக்கியோ விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் ஆகஸ்ட்.8 அன்று நிறைவுற்றதாக பன்னாட்டு ஒலிம்பிக் கமிட்டி தலைவர் தாமஸ் பாக் அறிவித்தார். அமெரிக்கா 39 தங்கப்பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது. சீனா 38 தங்கப்பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் உள்ளது. போட்டியை நடத்திய ஜப்பான், 27 தங்கங்களுடன் மூன்றாமிடத்தையும், கிரேட் பிரிட்டன் 22 தங்கப்பதக்கங்களுடன் நான்காமிடத்திலும் மற்றும் 20 தங்கங்களுடன் ரஷ்ய ஒலிம்பிக் கமிட்டி ஐந்தாவது இடத்திலும் உள்ளது. இந்தியா 1 தங்கம், 2 வெள்ளி மற்றும் 4 வெண்கலத்துடன் 48 ஆவது இடத்தைப் பிடித்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தைச் சேர்ந்த 8 காவல் அதிகாரிகள் மத்திய அரசின் விருதுக்குத் தேர்வு

குற்ற வழக்குகளில் சிறப்பாக விசாரணை நடத்திய காவல் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மத்திய அரசின் விருதுக்குத் தமிழகத்தைச் சேர்ந்த 8 காவல் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

2018–ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று, குற்ற வழக்குகளில் சிறப்பாக விசாரணை நடத்திய காவல் அதிகாரிகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகத்தின் சார்பில் பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குற்ற வழக்குகள் சம்பந்தமான விசாரணைகளில் தொழில்முறைத் தன்மையை ஊக்குவிக்கவும், சிறப்பாக விசாரணை நடத்துபவர்களை ஊக்குவிக்கவும், இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. காவல்துறை மட்டுமின்றி, சிபிஐ, என் ஐ ஏ அதிகாரிகளுக்கும் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த 6 காவல் அதிகாரிகளுக்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. அதன்படி, இந்த ஆண்டு நாடு முழுவதும் 152 காவல் அதிகாரிகளுக்கு இந்த விருதுகள் மத்திய உள்துறை அமைச்சகத்தால் ஆக.12'இல் அறிவிக்கப்பட்டன. இதில், தமிழகத்தைச் சேர்ந்த 8 காவல் அதிகாரிகளுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சிபிசிஐடி காவல் ஆய்வாளர் (நாகப்பட்டினம்) சரவணன், அனைத்து மகளிர் காவல் நிலையம் (திருவண்ணாமலை) காவல் ஆய்வாளர் அன்பரசி, புதுச்சத்திரம் காவல் நிலையம் (கடலூர்) காவல் ஆய்வாளர் கவிதா, வெங்கல் காவல் நிலையம் (திருவள்ளூர்) காவல் ஆய்வாளர் ஜெயவேல், திருப்போரூர் காவல் நிலையம் (செங்கல்பட்டு) காவல் ஆய்வாளர் கலைச்செல்வி, சென்னை பெருநகர காவல்துறை உளவுப்பிரிவு காவல் ஆய்வாளர் மணிவண்ணன், குரோம்பேட்டை காவல் நிலையம் (சென்னை) காவல் ஆய்வாளர் சிதம்பர முருகேசன், நாகர்கோவில் சிறப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் கண்மணி ஆகியோருக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

---

2. நிலவில் தண்ணீர் இருப்பதை கண்டுபிடித்தது 'சந்திரயான்–2'

நிலவில் நீர் மூலக்கூறுகள் இடம்பெற்றிருப்பது இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) சந்திரயான்–2 விண்கலம் அனுப்பிய தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது. இஸ்ரோ முன்னாள் தலைவர் ஏ.எஸ்.கிரண்குமார் இணைந்து எழுதியிருக்கும் ஆய்வுக் கட்டுரையில் இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்–2 விண்கலத்தை கடந்த 2019 ஜூலை 22–ம் தேதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இஸ்ரோ அனுப்பியது. பல்வேறு கட்ட பயணத்துக்கு பிறகு, சந்திரயான் விண்கலம் வெற்றிகரமாக நிலவை நெருங்கியது. ஆனால், செப்.7–ம் தேதி சந்திரயான் விண்கலத்தின் லேண்டர் கலன் திட்டமிட்டபடி நிலவில் தரையிறங்கவில்லை. திடீர் தொழில்நுட்பக் கோளாறால் லேண்டர் வேகமாக சென்று நிலவின் தரையில் மோதி தகவல் தொடர்பிலிருந்து விலகியது.

எனினும், விண்கலத்தின் மற்றொரு பகுதியான 'ஆர்பிட்டர்' நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இந்த ஆர்பிட்டர் 2 ஆண்டுகளுக்கு மேலாக நிலவை சுற்றிவந்து தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு, பூமிக்கு தகவல்களை அனுப்பி வருகிறது. இந்த தரவுகள் மூலம் நிலவின் பரப்பில் நீர் மூலக்கூறுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நடப்பு அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளுக்கான வலைதளத்தில் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் கூறியிருப்பதாவது:

ஆர்பிட்டரில் இடம்பெற்றிருக்கும் ஐஐஆர்எஸ் கருவி எடுத்து அனுப்பியிருக்கும் ஆரம்ப கட்ட புகைப்பட தரவுகளில், இயற்பியல் அடிப்படையிலான வெப்ப திருத்த ஆய்வுகள் மேற்கொண்ட பிறகு, நிலவின் பரப்பில் '29என்' மற்றும் '62என்' இடையேயான அட்சரேகை பகுதியில் 'ஓஹெச் (ஹைட்ராக்ஸில்), ஹெச்2ஓ' ஆகிய நீர் மூலக்கூறுகள் பரவலாக இடம்பெற்றிருப்பது தெளிவாக தெரிகிறது. முன்பு, அதிக அளவில் ஓஹெச் மூலக்கூறுகள் இருக்க வாய்ப்பிருப்பதாக கண்டறியப்பட்ட நிலவின் உயர் வெப்ப பகுதியைக் காட்டிலும், இப்போது கண்டறியப்பட்டிருக்கும் தாதுக்கள் நிறைந்த பாறைகளில் அதிக அளவில் ஓஹெச், ஹெச்2ஓ மூலக்கூறுகள் இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. நிலவின் சுற்றுப் பாதையில் ஆர்பிட்டர் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருவதோடு, எடுக்கும் புகைப்படங்களை முன்னர் அனுப்பப்பட்ட சந்திரயான்–1 விண்கலத்துக்குத் தவறாமல் அனுப்பி வருகிறது என்று ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. 2021 ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் எட்டாவது நீதித்துறை அமைச்சர்கள் சந்திப்பை நடத்திய நாடு எது?

அ) இந்தியா

ஆ) தஜிகிஸ்தான் ☑

இ) சீனா

ஈ) ரஷ்யா

✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நடப்பாண்டுக்கான (2021) 8ஆவது நீதித்துறை அமைச்சர்கள் கூட்டத்தை தஜிகிஸ்தான் நடத்தியது.

✓ மத்திய சட்டம் & நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, தஜிகிஸ்தானில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 2021ஆம் ஆண்டு 8ஆவது நீதித்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்றார். இந்தக் கூட்டத்திற்கு தஜிகிஸ்தான் குடியரசின் நீதி அமைச்சர் M K அசுரியோன் தலைமை வகித்தார். SCO அதன் 20ஆவது ஆண்டு நிறைவை "20 years of SCO: Cooperation for Stability and Prosperity" என்ற கருப்பொருளின்கீழ் கொண்டாடுகிறது. அடுத்த சந்திப்பு 2022ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் நடைபெறும்.

---

2. கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து UNSC உயர்மட்ட விவாதத்திற்கு தலைமைதாங்கியவர் யார்?

அ) எஸ். ஜெய்சங்கர்

ஆ) TS திருமூர்த்தி

இ) சையது அக்பருதீன்

ஈ) நரேந்திர மோடி ☑

✓ கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து வலியுறுத்தும் "Enhancing Maritime Security" என்ற தலைப்பிலான UNSC உயர்மட்ட விவாதத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமை தாங்கினார். பிரதமர் நரேந்திர மோடி, சர்வதேச சட்டத்தின்படி சர்ச்சைகளை சமாதானமாக தீர்த்துவைக்க வேண்டும் என அந்த விவாதத்தில் கூறினார். UNSC விவாதத்திற்கு தலைமை வகிக்கும் முதல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆவார்.

3.பன்னாட்டு அமைதி & நம்பிக்கையின் ஆண்டாக ஐநா அவையால் அறிவிக்கப்பட்ட ஆண்டு எது?

அ) 2020

ஆ) 2022

இ) 2021 ☑

ஈ) 2019

✓ ஐநா அவையானது 2021ஆம் ஆண்டை பன்னாட்டு அமைதி மற்றும் நம்பிக்கையின் ஆண்டாகவும், நிலையான வளர்ச்சிக்கான சர்வதேச ஆக்கபூர்வ பொருளாதார ஆண்டாகவும், பழங்கள் மற்றும் காய்கறிகளின் சர்வதேச ஆண்டாகவும், குழந்தைத் தொழிலாளர்களை ஒழிப்பதற்கான சர்வதேச ஆண்டாகவும் அறிவித்துள்ளது. மேலும், கத்தோலிக்க திருச் சபை, 2021'ஐ புனித ஜோசப்பின் ஆண்டாக அறிவித்துள்ளது.

---

4. தீர்ப்பாய சீர்திருத்த மசோதா, 2021'இன்கீழ், எத்தனை மேல் முறையீட்டு தீர்ப்பாயங்கள் ஒழிக்கப்படும்?

அ) 5

ஆ) 6

இ) 7

ஈ) 9 ☑

✓ திரைப்பட சான்றளிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (FCAT) உட்பட ஒன்பது மேல்முறையீட்டு நீதிமன்றங்களை ஒழிக்கக்கோரும் மசோதா நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. ஆக.9'இல் முன்மொழியப்பட்ட இச்சட்டம் மாநிலங்களவைக்குச் சென்றுள்ளது. தீர்ப்பாய சீர்திருத்த மசோதா, 2021'க்கு ஆக.3 அன்று மக்களவை ஒப்புதல் அளித்தது.

✓ இந்த மசோதாவின்படி, அத்தகைய தீர்ப்பாயங்களில் உள்ள அனைத்து வழக்குகளும் வணிக நீதிமன்றம் / உயர்நீதிமன்றத்திற்கு மாற்றப்படும். பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு, ஒரே மாதிரியான விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகளையும் இந்த சட்டம் வழங்குகிறது.

5. ஆகஸ்ட்.13 அன்று தனது முதல் காகிதமற்ற பட்ஜெட்டை தாக்கல் செய்த மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) சிக்கிம்

✓ தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் காகிதமில்லா பட்ஜெட்டை அந்த மாநிலத்தின் நிதியமைச்சர் P T R பழனிவேல் தியாகராஜன், ஆகஸ்ட்.13 அன்று தாக்கல்செய்தார். இது தமிழ்நாட்டின் முதல் டிஜிட்டல் பட்ஜெட் ஆகும். இது, 2020-21ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டமாகும்.

---

6. தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தால் நடத்தப்பட்ட எந்த ஆய்வின் கீழ், இந்தியாவில் வறுமை அதிகரித்து வருகிறது என்பதைக் காட்டுகிறது?

அ) நுகர்வு செலவின ஆய்வு ☑

ஆ) காலமுறை தொழிலாளர் படை கணக்கெடுப்பு

இ) தேசிய கணக்குகள் புள்ளிவிவரங்கள் 2021

ஈ) தேசிய குறிகாட்டி கட்டமைப்பு

✓ இந்தியாவின் நுகர்வு செலவின ஆய்வானது (Consumption Expenditure Survey) ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும், தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தால் நடத்தப்படுகிறது. ஆனால், 2011-2012 முதல் CES தரவு வெளியிடப்படவில்லை. இந்த ஆய்வின்கீழ் இந்தியாவில் வறுமை மீண்டும் அதிகரித்து வருவதற்கான தெளிவான அறிகுறிகள் உள்ளன.

✓ 2017-18ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட CES'இன் தரவுகள் அரசாங்கத்தால் பகிரங்கப்படுத்தப்படவில்லை. 2021-22'இல் ஒரு புதிய CES நடத்தப்பட வாய்ப்புள்ளது, அதற்கான தரவுகள் 2022'இன் இறுதியில் கிடைக்கும்.

---

7. ஆன்லைன் விளையாட்டுகளை தடைசெய்யும் தமிழ்நாட்டின் சட்டத்தை சமீபத்தில் இரத்துசெய்த உயர்நீதிமன்றம் எது?

அ) சென்னை உயர்நீதிமன்றம் ☑

ஆ) கேரள உயர்நீதிமன்றம்

இ) மும்பை உயர்நீதிமன்றம்

ஈ) கொல்கத்தா உயர்நீதிமன்றம்

✓ ஆன்லைன் விளையாட்டுகளான போக்கர், ரம்மி மற்றும் பங்குகளை உள்ளடக்கிய பிற திறன்சார்ந்த விளையாட்டுகளுக்கு தடை விதித்த தமிழக அரசின் சட்டத்தை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. ஆன்லைன் விளையாட்டுகளைத் தடைசெய்த தமிழ்நாடு இணையவழி விளையாட்டுக்கள் சட்டத்தில் ஒரு திருத்தத்தை மட்டும் இரத்து செய்த உயர்நீதிமன்றம், ஆன்லைன் விளையாட்டுகளுக்கு முழுமையான தடை என்பது விதிமுறையற்றது மற்றும் பகுத்தறிவற்றது எனக் கூறியது.

---

8. தேசிய தொழில்துறை வழித்தட திட்டத்தின் (NICP)கீழ் இதுவரை எத்தனை தொழில்துறை வழித்தடங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன?

அ) 10

ஆ) 11 ☑

இ) 20

ஈ) 21

✓ தேசிய தொழில்துறை வழித்தட திட்டத்தின் (NICP) ஒருபகுதியாக நாடு முழுவதும் நான்கு கட்டங்களாக உருவாக்கப்படும் 32 திட்டங்களுடன் 11 தொழில்துறை வழித்தடங்களை உருவாக்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவை தில்லி-மும்பை தொழில்துறை வழித்தடம், சென்னை-பெங்களூரு தொழில்துறை வழித்தடம், கோயம்புத்தூர் வழியாக கொச்சி வரை சென்னை பெங்களூரு-தொழில்துறை வழித்தட விரிவாக்கம் தொழில்துறை வழித்தடம், பெங்களூரு-மும்பை தொழில் துறை வழித்தடம், வைசாக்-சென்னை தொழில்துறை வழித்தடம், ஒடிசா பொருளாதார வழித்தடம் & தில்லி-நாக்பூர் தொழில்துறை வழித்தடம்.

---

9. உலக இளையோர் மேம்பாட்டு குறியீட்டில் இந்தியாவின் நிலை என்ன?

அ) 122 ☑

ஆ) 132

இ) 121

ஈ) 131

✓ லண்டனில் உள்ள காமன்வெல்த் செயலகம், ஆக.10 அன்று வெளியிட்ட 181 நாடுகளிலுள்ள இளையோரின் நிலையை அளவிடும் புதிய உலக இளையோர் மேம்பாட்டு குறியீட்டில், இந்தியா 122ஆவது இடத்தில் உள்ளது. நைஜர் கடைசி இடத்திலும் சிங்கப்பூர் முதலிடத்திலும் உள்ளது.

✓ இளையோர் கல்வி, வேலைவாய்ப்பு, நலவாழ்வு, சமத்துவம் & சேர்த்தல், அமைதி & பாதுகாப்பு மற்றும் அரசியல் மற்றும் குடிமக்களின் பங்கேற்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக் குறியீடு 0.00 (குறைந்த) மற்றும் 1.00 (மிக உயர்ந்த) மதிப்பெண் அடிப்படையில் நாடுகளைத் தரவரிசைப் படுத்துகிறது. இது 15 மற்றும் 29 வயதிற்குட்பட்ட உலகின் 1.8 பில்லியன் மக்களின் நிலையை வெளிப்படுத்த, எழுத்தறிவு மற்றும் வாக்களிப்பு உட்பட 27 குறிகாட்டிகளைப் பயன்படுத்துகிறது.

---

10. அண்மையில் எந்த நாட்டோடு இணைந்து அல்–மொஹெத் அல் –ஹிந்தி – 2021 என்ற கடற்படை பயிற்சியில் இந்தியா பங்கேற்றது?

அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑

ஆ) சௌதி அரேபியா

இ) கத்தார்

ஈ) ஓமன்

✓ இந்தியா மற்றும் சௌதி அரேபியா இடையே வளர்ந்துவரும் பாதுகாப்பு உறவுகளுக்கு சான்றாக, இந்திய மேற்கு கடற்படையின் INS கொச்சி, இம்மாதம், அல்–ஜுபைல் துறைமுகத்துக்கு சென்றது.

✓ இந்தக் கப்பலின் வருகை, இருதரப்பு பாதுகாப்பு உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை அறிவிக்கிறது. ரியாத்திலுள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட ஓர் அறிக்கையில், "அல்–மொஹெத் அல்–ஹிந்தி" என்ற இரு நாடுகளுக்கும் இடையேயான முதல் கடற்படை பயிற்சியின் துறைமுக கட்டம் தொடங்கியதாக கூறப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழக நிதிநிலை அறிக்கை: பெட்ரோல் விலை ரூ.3 குறைந்தது

பெட்ரோல் மீது விதிக்கப்படும் மாநில அரசின் வரி லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.2,756 கோடி தள்ளுபடி செய்யப்படும் என நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார். மேலும், நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள நான்கு முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நான்கு முக்கிய அம்சங்கள்: தரவுகளை மையமாகக் கொண்டுள்ள நான்கு முக்கிய நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார். அதன்படி, அனைத்து மக்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான பொருளாதார நிலையை நன்கு அறிய, அனைத்துத் துறைகளிலுள்ள தரவுகளை ஒருங்கிணைப்பதற்கான முயற்சி எடுக்கப்படும். இதன்படி, பல கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு மானியங்கள் வழங்கப்படுவது மேம்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

மாநிலத்திலுள்ள அனைத்து பொது சேவைகளிலும் மின்னணு அளவீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்படும் எனவும், கொள்முதல் செய்யும் அனைத்து துறைகளிலும் மின்னணு கொள்முதல் முறை பின்பற்றப்படும் எனவும் நிதிநிலை அறிக்கையில் அமைச்சர் தியாகராஜன் தெரிவித்தார். ஒப்பந்தப்புள்ளிகள், பணிகளுக்கு பணம் செலுத்துதல் உள்ளிட்ட அனைத்தும் கணினிமயமாக்கப்படும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கை: முக்கிய அம்சங்கள்

* பெட்ரோல் மீதான வரி ரூ.3 குறைக்கப்படும்.

* மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன் ரூ.2,756 கோடி தள்ளுபடி.

* 2022–ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு.

* ஆண்டுதோறும் ஜூன் 3–இல் செம்மொழித் தமிழ் விருது (ரூ.10 லட்சம்) அளிக்கப்படும்.

* பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.3 கோடியாக அதிகரிக்கப்படும்.

* இல்லத்தரசிகளுக்கு ஊதியம்: தகுதியானவர்களுக்கு மட்டும்...

* நடப்பாண்டில் புதிதாக 10 அரசு கலை–அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.

* சித்த மருத்துவத்துக்கு தனிப் பல்கலைக்கழகம் * கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம்

* புதிதாக 6 இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள்

* தூத்துக்குடி மாவட்டத்தில் மரச்சாமான் தயாரிப்பு பூங்கா உருவாக்கப்படும்.

* 4 இடங்களில் டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

* 9 மாவட்டங்களில் புதிய சிப்காட் பூங்காக்கள் அமைக்கப்படும்.

* பொது நிலங்கள் மேலாண்மைக்கு தனி அமைப்பு உருவாக்கப்படும்.

* ரூ.2,000 கோடியில் ஜல் ஜீவன் இயக்கம் செயல்படுத்தப்படும்.

* ரூ.1,000 கோடியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்.

* ரூ.500 கோடியில் பருவநிலை மாற்ற இயக்கம் அமைக்கப்படும்.

* ரூ.100 கோடியில் நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

* 100 ஆண்டுகால பேரவை நிகழ்வு ஆவணங்கள் கணினிமயமாக்கப்படும்.

* திருச்சியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டப்படும்.

* தமிழ் ஆட்சி மொழிப் பயன்பாடு வலுப்படுத்தப்படும்.

* சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு ரூ.4,807.56 கோடி ஒதுக்கப்படும்.

* போக்குவரத்து ஆணையரகம், போக்குவரத்து–சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் என மாற்றப்படும்.

* 10 ஆண்டுகளில் ஆயிரம் தடுப்பணைகள்–கதவணைகள் கட்டப்படும்.

* காசிமேடு மீன்பிடி தளம் மேம்படுத்தப்படும்.

* உள்ளாட்சி அமைப்புகள் துணையுடன் 10 கடற்கரைகள் மேம்படுத்தப்படும்.

* ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் உருவாக்கப்படும்.

* 1,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.

* மாநில கல்விக் கொள்கை வகுக்க உயர் நிலைக் குழு உருவாக்கப்படும்.

* அடிப்படை கல்வி, கணித அறிவை உறுதி செய்ய தனி இயக்கம் ஏற்படுத்தப்படும்.

* மாதிரிப் பள்ளிகள் அமைக்க சிறப்புத் திட்டம்.

* 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கரில் நில வங்கித் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

* நந்தம்பாக்கம், காவனூரில் நிதிநுட்ப நகரங்கள்.

* துணிநூல் துறையில் கவனம் செலுத்த தனி இயக்குநரகம்.

---

2. புவிசார் குறியீடு வழங்கப்பட்ட 3 பொருள்களுக்கு சிறப்பு அஞ்சல் உறைகள் வெளியீடு

புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ள நாச்சியார்கோவில் குத்துவிளக்கு, மதுரை சுங்குடி சேலைகள் மற்றும் நாகர்கோவிலில் தயாரிக்கும் கோவில் நகைகள் ஆகியவற்றுக்கு இந்திய அஞ்சல்துறை சார்பில் சிறப்பு அஞ்சல் உறைகள் வெளியிடப்பட்டன.

நாடு முழுவதும் 365 பொருள்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக கர்நாடகாவில் 47 பொருள்களுக்கும், அடுத்தபடியாக தமிழகத்தில் 39 பொருள்களுக்கும் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதில், நாச்சியார்கோவில் குத்துவிளக்கு அஞ்சல் உறை ரூ.75ம், மதுரை சுங்குடி சேலைகள் மற்றும் நாகர்கோவிலில் தயாரிக்கும் கோவில் நகைகள் அஞ்சல்உறை தலா ரூ.50ம் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---

3. கேரளத்தில் ட்ரோன் தடயவியல் ஆய்வு மையம் தொடக்கம்: நாட்டில் முதல் முறை

ஆளில்லா சிறியரக விமானங்கள் (ட்ரோன்) பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கி வரும் நிலையில், ட்ரோன் தடயவியல் ஆய்வு மையத்தை நாட்டிலேயே முதல் முறையாக கேரள காவல் துறையினர் தொடங்கியுள்ளனர். ஜம்மு விமானப் படைத் தளத்தில் கடந்த ஜூன் 27–ஆம் தேதி ட்ரோன்கள் மூலமாக பயங்கரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர். அதில் கட்டடங்களுக்கு சிறிய அளவிலான சேதம் ஏற்பட்டது; விமானப் படை வீரர்கள் இருவர் காயமடைந்தனர். ஜம்முவில் உள்ள ராணுவப் படைத் தளத்தில் அடுத்த நாளே ட்ரோன் மூலமாகத் தாக்குதல் நடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, ஜம்மு–காஷ்மீரின் சில மாவட்டங்களில் ட்ரோன் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது. ட்ரோன்கள் மூலமாக நாட்டின் பாதுகாப்புக்குப் புதிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுவரும் வேளையில், ட்ரோன் தடயவியல் ஆய்வு மையத்தை கேரள காவல் துறையினர் தொடங்கியுள்ளனர்.

---

4. வேளாண் பட்ஜெட்: அறிய வேண்டிய அனைத்து விவரங்களும்.

தமிழ்நாட்டு வரலாற்றில் முதன்முறையாக, 2021–22 ஆம் ஆண்டில் வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை 14.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. இதில் இடம்பெற்ற முக்கிய திட்டங்கள் மற்றும் முக்கிய கொள்கை முடிவுகள் பின்வருமாறு.

1. 2021–22 ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் சார்புத்துறைகளுக்கு என்று ரூ.34,220.65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், சர்க்கரைத்துறை, விதைச்சான்று மற்றும் அங்கக சான்றளிப்புத்துறை கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளம், கூட்டுறவுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வனத்துறை, நீர்வள ஆதாரத்துறை, கூட்டுறவுத்துறை, பால்வளத்துறை போன்ற உழவர் நலன் சார்ந்த துறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் பலன்கள் ஒட்டு மொத்த கிராம வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஒருங்கிணைக்கப்படும். இதற்காக ஒட்டுமொத்தமாக ரூ.34,220.65 கோடி நிதி ஒதுக்கீடு.

2. ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் அறிமுகம். நடப்பாண்டில் 2500 கிராமங்களில் நீர் ஆதாரங்களை உருவாக்கி, சாகுபடிப் பரப்பினை உயர்த்தி, விவசாயிகளின் வருமானம் உயர்வதற்கான திட்டப்பணிகளுக்காக ரூ.250 கோடி மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு. மத்திய, மாநில அரசுத் திட்டங்களை ஒன்றிணைத்து, ரூ.995.45 கோடி, ஆக மொத்தம் ரூ.1,245.45 கோடியில் திட்டம் செயல்படுத்தப்படும்.

3. நெல் விவசாயிகளின் நலனுக்காக, நெல்லிற்கான கொள்முதல் விலை சாதாரண இரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ.2,015 ம், சன்ன இரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ.2,060 என உயர்த்தி நிர்ணயம். இதற்காகும் கூடுதல் செலவினத்தொகை ரூ.99.38 கோடி, ஆக மொத்தம்ரூ.319.38 கோடி ஒதுக்கீடு.

4. சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், பயிர் சாகுபடி மட்டுமல்லாது இதர தொழில்களையும் மேற்கொண்டு, ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்ட வல்ல ஒருங்கிணைந்த பண்ணையம், கூட்டுப்பண்ணையத்திற்காக ரூ. 119.402 கோடி ஒதுக்கீடு

5. விவசாயிகளின் பம்ப்செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்காக தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ரூ. 4,508.23 கோடி நிதி ஒதுக்கீடு.

6. பயிர்க் காப்பீட்டுத்திட்டத்தில் விவசாயிகளின் சார்பாக, காப்பீட்டுக் கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.2,327 கோடி நிதி ஒதுக்கீடு.

7. முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத்திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் மாடித்தோட்ட தளைகள் விநியோகம், காய்கறி விதைத் தளைகள் விநியோகத்திற்காக ரூ.95 கோடி நிதி ஒதுக்கீடு

8. நுண்ணீர் பாசனத்திட்டத்தின்கீழ், சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் தொடர்ந்து மானியம் வழங்கி, 1,50,000 எக்டரில் செயல்படுத்திட ரூ. 982.48 கோடி நிதி ஒதுக்கீடு.

9. முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின் கீழ், நடப்பாண்டில், தொகுப்பு அணுகுமுறையில் 7.5 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் 3 இலட்சம் விவசாயிகள் பலன்பெறும் வகையில், ரூ,146.64 கோடி நிதி ஒதுக்கீடு.

10. ரூ.140 கோடி மானியத்தில் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம்.

11. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின் கீழ், 70 சதவிகித மானியத்தில் 5,000 விவசாயிகள் பயன்பெறுவதற்கு ரூ. ரூ.114.68 கோடி ஒதுக்கீடு.

12. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் ஆராய்ச்சி மற்றும் வேளாண் கல்வியை வலுப்படுத்துவதற்கு ரூ. 573.24 கோடி

13. கோயம்புத்தூரில் உள்ள வளங்குன்றா வேளாண்மைக்கான துறை 'நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்' என பெயர் மாற்றம் செய்து, நம்மாழ்வார் பெயரில் இயற்கை வேளாண்மைக்கான ஆராய்ச்சி மையம் உருவாக்கி இயற்கை வேளாண்மை தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை வலுப்படுத்த ரூ.3 கோடி.

14. மண் வளத்தை பாதுகாத்து, ஆரோக்கியமான உணவை மக்களுக்கு வழங்குவதற்காக இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ரூ.33.03 கோடியில் செயல்படுத்தப்படும்.

15. பாரம்பரிய நெல் வகைகளைத் திரட்டி, பாதுகாத்து, விதை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் வகையில், நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்.

16. வேளாண்மை பட்டதாரிகள் மற்றும் இதர இளைஞர்கள் வேளாண்மை பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் ரூ.7.68 கோடியில் செயல்படுத்தப்படும். திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படும்.

17. நமது மாநில மரமான பனை மரத்தை நம்பி உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த, பனை தொடர்பான பல்வேறு தொழில்களை ஊக்குவிக்க, ரூ.3 கோடியில் பனை மேம்பாட்டுத் திட்டம். தேவையில்லாமல் பனை மரத்தினை வெட்டும் நடைமுறை நெறிமுறைப்படுத்தப்படும்.

18. நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், தென்னை, பருத்தி, பழங்கள் போன்ற பயிர்களின் சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும், உற்பத்தியை உயர்த்தவும் மொத்தமாக ரூ.300.56 கோடி ஒதுக்கீடு.

19. கரும்பு விவசாயிகளின் நலனுக்காக, கரும்பு உற்பத்திக்கான ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ரூ42.50, கூடுதல் "சிறப்பு ஊக்கத்தொகையாக" டன் ஒன்றுக்கு ரூ.150/– வழங்குவதற்கு ரூ.178.83 கோடி நிதி, கரும்பு உற்பத்திக்கான சிறப்புத்திட்டத்திற்கு ரூ.2 கோடி நிதி

20. வேளாண்மையின் மகத்துவத்தை இளைஞர்கள் அறிந்து கொள்ளும் வகையில், சென்னையில் மரபுசார் வேளாண்மைக்கான அருங்காட்சியகம்.

21. மண்வெட்டி, களைக்கொத்து, இரும்புச்சட்டி, கடப்பாரை, கதிர் அரிவாள் அடங்கிய வேளாண் உபகரணங்கள் தொகுப்பு அரை இலட்சம் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ரூ.15 கோடி ஒதுக்கீடு.

22. இயற்கை வேளாண்மை, ஏற்றுமதி, புதிய கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு மாநில அளவிலான பரிசு.

23. வேளாண் தொடர்பான பல்வேறு முக்கிய பிரச்சினைகளை அவ்வப்போது ஆய்வு செய்து, தீர்வு காண மாநில அளவில் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் உயர்நிலைக்குழு.

24. நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த, எலுமிச்சை, முருங்கை, கறிவேப்பிலை, கற்பூரவல்லி, திப்பிலி, கற்றாழை, புதினா போன்ற

மருத்துவ குணம் கொண்ட மூலிகைச் செடிகள் அடங்கிய இரண்டு இலட்சம் ஊட்டச்சத்துத் தளைகள் வழங்கும் திட்டத்திற்காக ரூ.2.18 கோடி நிதி ஒதுக்கீடு.

25. திருவள்ளூர், கடலூர், நாமக்கல், தென்காசி மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்த ரூ.12.50 கோடி

26. கடலூர் மாவட்டத்தில் பலாவிற்கான சிறப்பு மையம் துவக்கம்

27. கடலூர் மாவட்டம் வடலூரில் புதியதாக அரசு தோட்டக்கலை பூங்கா அமைக்க ரூ.1 கோடி

28. குறைந்த வாடகையில் இயந்திரங்களை வழங்கும் திட்டத்தினை, வலுப்படுத்துவதற்காக, ரூ. 23.29 கோடியில் நவீன வேளாண் இயந்திரங்கள் கொள்முதல்.

29. மழை நீரினை சேமித்து, பயிர் உற்பத்தியை பெருக்க விவசாயிகளின் வயல்களிலேயே 500 பண்ணைக்குட்டைகள் அமைக்க ரூ.5 கோடி ஒதுக்கீடு.

30. மூன்று ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு புதிய மின்மோட்டார் பம்பு செட்டுகள் வாங்க, ரூ.10,000 /– வீதம் 1,000 விவசாயிகளுக்கு மானியம் வழங்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.

31. தற்போதுள்ள 50 உழவர் சந்தைகளை புனரமைக்க ரூ.12.50 கோடி, புதிதாக 10 உழவர் சந்தைகளை உருவாக்க ரூ. 6 கோடி ஒதுக்கீடு.

32. 2007–08 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 40 வேளாண் விளைபொருட்களுக்கு ஒரே சீராக உறுதி அறிவிக்கை.

33. ஈரோடு, திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கடலூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருளை சேமிக்கவும், பரிவர்த்தனை செய்வதற்கான வசதிகள் செய்து தருவதற்காக ரூ.10 கோடி.

34. ஒட்டன்சத்திரம், பண்ருட்டி ஆகிய இரண்டு இடங்களில் 10 கோடி ரூபாய் செலவில் குளிர்பதனக் கிடங்குகள்

35. நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை பகுதியில் பழங்குடி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் மிளகினை பதப்படுத்தி சேமித்து வைக்க பரிவர்த்தனைக்கூடம், உலர்களத்துடன் கூடிய பதப்படுத்தும் மையம் அமைக்க ரூ.50 இலட்சம்.

36. நீலகிரி, எடப்பள்ளி கிராமத்தில் ரூ.2 கோடி மதிப்பில் 'ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்' .

37. கடலூர், விழுப்புரம், சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருப்பூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ரூ.3.5 கோடி மதிப்பில் 28 உலர்கலங்கள்.

38. விவசாயிகளுக்கு ஏற்றுமதி குறித்த விவரங்கள், விற்பனை வாய்ப்புகள், தரச் சான்றுகள் பெறும் முறைகள் போன்றவற்றை ஒருங்கிணைத்து வழங்கிட சென்னை, கிண்டியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் வேளாண் ஏற்றுமதி சேவை மையம். அ. முதன்முறையாக ஏற்றுமதியாளராகப் பதிவு செய்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஹஞுநுனுஹ தரச்சான்று ஆய்வுக்கு 50 சதவிகித மானியம்

39. ஈரோடு மாவட்டம் தாளவாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் சேமிப்புக் கிடங்கு, பரிவர்த்தனைக்கூடம், கூட்டரங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம், மின்னணு எடை மேடை ஆகிய கட்டமைப்பு வசதிகள் அமைத்துத் தர 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

40. முருங்கை அதிகளவில் விளையும் தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர், மதுரை மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகள் 'முருங்கைக்கான ஏற்றுமதி மண்டலமாக' அறிவிப்பு. அ. மதுரையில் முருங்கைக்கென சிறப்பு ஏற்றுமதி சேவை மையம் அமைத்து, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரித்திட உலர்த்திகள், இலைகளை பொடியாக்கும் இயந்திரங்கள், தானியங்கி சிப்பம் கட்டும் இயந்திரம் போன்ற கட்டமைப்பு வசதிகள் அமைத்துத் தர ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.

41. சென்னை மாநகராட்சியில் கொளத்தூர் பகுதியில் விளைபொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்கான நவீன விற்பனை மையம் துவங்க ரூ.1 கோடி.

42. மின்னணு ஏலம் மூலம் விவசாயிகள் தங்களின் விளைபொருளுக்கு உரிய விலை பெற இணையதளம் மற்றும் சிறப்பு மென்பொருளுக்காக ரூ.10 கோடி.

43. கொல்லிமலை மிளகு, பண்ருட்டி பலா, மண்ணச்ச நல்லூர் பொன்னி அரிசிக்கு புவிசார் குறியீடு பெற அரசு நடவடிக்கை

44. உணவுப்பதப்படுத்துதலுக்கு தனிக்கவனம் செலுத்தி முன்னேற்றுவதற்காக, உணவுப் பதப்படுத்துதலுக்கென தனி அமைப்பு. அ. மீன் பதப்படுத்துதலுக்கு நாகப்பட்டினம், தேங்காய்க்கு கோயம்புத்தூர், வாழைக்கு திருச்சி, மஞ்சளுக்கு ஈரோடு, சிறு தானியங்களுக்கு விருதுநகர் என ஐந்து தொழில்கற்கும் மையங்கள் தொடங்க நடவடிக்கை

45. ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் மஞ்சள் பயிருக்கான ஆராய்ச்சி மையம் அமைக்க 2 கோடி ரூபாய்

46. கிருஷ்ணகிரியில் தோட்டக்கலைக் கல்லூரி புதியதாக துவங்குவதற்கு முதற்கட்ட நிதியாக ரூ.10 கோடி ஒதுக்கீடு.

47. தமிழ் வழி பயிலும் மாணவர்களில் வசதிக்காக தமிழில் வேளாண் மற்றும் தோட்டக்கலை கல்வி அறிமுகம்

48. வேளாண்மையில், தொழில் முனைவோர்களை ஈர்க்க, வேளாண் தொழில் முனைப்பு மையம் வலுப்படுத்தப்படுவதுடன் தேவையான இடங்களில் தொழில் முனைப்பு மையம்.

49. காவேரி டெல்டா வேளாண் பெருமக்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வு வளமாக, திருச்சி–நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இடையேயான பகுதியை வேளாண் தொழிற்சாலைகளுக்கான பெருந்தடமாக அறிவிக்கை.

---

5. சிறப்பாக பணிபுரிந்த தமிழக காவல் துறையினர் 24 பேருக்கு குடியரசு தலைவர் விருது

தமிழக காவல் துறையினர் 24 பேர் குடியரசுத் தலைவர் விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். காவல்துறையில் சிறப்பாகப் பணிபுரிந்தவர்களுக்கு ஆண்டுதோறும் குடியரசுத்தலைவர் விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இவ்விருதுக்கு தமிழகத்தில் இருந்து தேர்வாகியுள்ள 24 காவல் துறை அதிகாரிகளின் தேர்வாகியுள்ளனர்.

---

6. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் திட்டம்: 24 பேருக்கு பணி நியமன உத்தரவு முதல்வர் வழங்கினார்

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தின்கீழ், 24 பேருக்கு அர்ச்சகர் பணி நியமனத்துக்கான உத்தரவுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி சென்னை கபாலீஸ்வரர் கோயில் திருமண மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வு குறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி: இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். அதன் அடிப்படையில், முதல் கட்டமாக அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களில் காலியாகவுள்ள அர்ச்சகர், பட்டாச்சாரியார், ஓதுவார், பூசாரி உள்ளிட்ட பணியிடங்களுக்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

அனைத்து ஜாதியினரும் அர்ச்சராகும் திட்டத்துக்கான அரசாணை முன்னாள் முதல்வர் கருணாநிதி தலைமையிலான கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்டது. அவரது வழியில் செயல்படும் அரசானது, இப்போது முறையாகப் பயிற்சி பெற்ற அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன்படி, கோயில் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயின்று தேர்வு செய்யப்பட்ட 24 அர்ச்சகர்கள், இதர பாட சாலையில் பயிற்சி பெற்ற 34 அர்ச்சகர்களுக்கு பணி நியமன உத்தரவுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை வழங்கினார். மேலும், ஓதுவார்கள், நந்தவனம் பராமரிப்பு உள்பட 208 காலிப் பணியிடங்களுக்கான உத்தரவுகளை அவர் அளித்தார்.

---

7. ஆக. 14–ஆம் தேதி பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினம்

இந்திய பிரிவினையின்போது நிகழ்ந்த மக்களின் போராட்டங்களையும், தியாகங்களையும் நினைவுகூரும் வகையில் ஆகஸ்ட் 14–ஆம் தேதியானது 'பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினமாக' அனுசரிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார். இதுதொடர்பாக பிரதமர் மோடி சுட்டுரையில் சனிக்கிழமை வெளியிட்ட பதிவுகளில், 'பிரிவினையின் வலிகளை ஒருபோதும் மறக்க முடியாது. லட்சக்கணக்கான நமது சகோதரர்களும் சகோதரிகளும்

இடம்பெயர்ந்தனர். அப்போது வெறுப்புணர்வால் ஏற்பட்ட வன்முறையில் பலர் உயிரிழந்தனர். அந்தப் போராட்டத்தையும் மக்களின் தியாகங்களையும் நினைவுகூரும் வகையில் ஆகஸ்ட் 14–ஆம் தேதியானது பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினமாக அனுசரிக்கப்படும். இந்த தினத்தில் சமூகப் பிரிவினைகள், ஒற்றுமையின்மை உள்ளிட்டவற்றை நீக்கி சமூக நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சமூக மேம்பாடு ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக மக்கள் உறுதியேற்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் அறிவிப்பைத் தொடர்ந்து, ஆக. 14–ஆம் தேதியை பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினமாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டது. உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி: மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'ஆண்டுதோறும் சுதந்திர தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். ஆனால், சுதந்திரத்துடன் பிரிவினையின் துயரங்களையும் மக்கள் அனுபவிக்க நேரிட்டது. பிரிவினையின்போது உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினம் அனுசரிக்கப்படும். பிரிவினையின்போது மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களை எதிர்கால சந்ததியினருக்குத் தெரியப்படுத்துவதற்கு இந்த தினம் வழிவகுக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் நாட்டை தனியாக உருவாக்கி, இரு நாடுகளுக்கும் சுதந்திரம் வழங்க பிரிட்டிஷ் அரசு 1947–ஆம் ஆண்டில் முடிவு செய்தது. அதைத் தொடர்ந்து, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பல லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். இந்தியா–பாகிஸ்தான் பிரிவினையின்போது நடந்த வகுப்புவாத வன்முறையில் லட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்தியா தனது சுதந்திர தினத்தை ஆக. 15–ஆம் தேதியும், பாகிஸ்தான் தனது சுதந்திர தினத்தை ஆக. 14–ஆம் தேதியும் கொண்டாடுகின்றன.

1. வருமான வரி சட்டத்தில், சர்ச்சைக்குரிய முன்தேதியிட்டு வரி வசூல்செய்யும் முறையை நீக்குவதற்காக, அண்மையில், வரிவிதிப்பு சட்டங்கள் மசோதா, 2021 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. 2012ஆம் ஆண்டில் முன்தேதியிட்டு வரி வசூல் செய்யும் முறை சேர்க்கப்பட்டபோது நிதியமைச்சராக இருந்தவர் யார்?

அ) ப சிதம்பரம்

ஆ) பிரணாப் முகர்ஜி ☑

இ) அருண் ஜேட்லி

ஈ) ஜஸ்வந்த் சிங்

✓ வரிவிதிப்பு சட்டங்கள் (திருத்த) மசோதா, 2021 ஆனது ஆகஸ்ட் 6, 2021 அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. வரிவிதிப்பு சட்டங்கள் (திருத்த) மசோதா, 1961ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தை திருத்துகிறது. 2012 மே.28ஆம் தேதிக்கு முன்னர் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், முன்தேதியிட்டு வரி வசூல் செய்யும் முறை திருத்தத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் எந்த வரி கோரிக்கையும் வைக்கப்படாது. பிரணாப் முகர்ஜி நிதியமைச்சராக இருந்தபோது, 2012' இல் முன்தேதியிட்டு வரி வசூல் செய்யும் முறை சேர்க்கப்பட்டது.

---

2. சமீபத்தில் மூன்றாண்டுகாலம் பதவிநீட்டிப்புப்பெற்றவரும் தேசிய பெண்கள் ஆணையத்தின் தற்போதைய தலைவருமானவர் யார்?

அ) அஜய் தியாகி

ஆ) M R குமார்

இ) ரேகா சர்மா ☑

ஈ) டாக்டர் திருதி பானர்ஜி

✓ 2021 ஆகஸ்ட்.7 அன்று தேசிய பெண்கள் ஆணையத்தின் தற்போதைய தலைவராக இருந்து வரும் ரேகா சர்மாவுக்கு மூன்றாண்டு காலத்திற்கு பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. 07.08.2021 அல்லது 65 வயதுவரை அல்லது அடுத்த உத்தரவு வரும் வரை அவர் இப்பதவியில் இருப்பார்.

---

3. மும்பையின் புகழ்பெற்ற மரைன் டிரைவின் பதிப்பாகக் கூறப்படும் 'கங்கை பாதை' திறக்கப்படுகிற இந்திய நகரம் எது?

அ) கொல்கத்தா

ஆ) வாரணாசி

இ) பாட்னா ☑

ஈ) கான்பூர்

✓ பீகார் மாநிலத்தின் தலைநகரமான பாட்னா, மும்பையின் புகழ்பெற்ற மரைன் டிரைவின் பதிப்பைப் பெறவுள்ளது. 5.50 கிமீ நீளமுள்ள திஹா–AN சின்ஹா இன்ஸ்டிடியூட் கங்கா பாதையானது அடுத்த ஆண்டு திறக்கப்படவுள்ளது. நெரிசலான அசோக் ராஜபாத்தில் போக்குவரத்தை குறைப்பதற்காக கங்கை நதியின் தென்கரையில் வரவிருக்கும் ₹3,390 கோடி மதிப்பிலான திட்டத்தின் ஒருபகுதியாக 'கங்கை பாதை' உள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்த நீளம் 20.50 கிமீ ஆகும்.

---

4. சமீபத்தில், ஒரு முகவர் வங்கியாக செயல்பட, ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்ட வங்கி எது?

அ) HDFC வங்கி

ஆ) ஐசிஐசிஐ வங்கி

இ) கனரா வங்கி

ஈ) கர்நாடக வங்கி ☑

✓ அண்மையில், அரசு வணிகங்கள் தொடர்பான பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்காக, ரிசர்வ் வங்கியால் கர்நாடக வங்கி ஒரு 'முகவர் வங்கி'யாக மாற்றப்பட்டது. நடுவணரசு மற்றும் மாநிலங்களின் வருவாய் ரசீதுகள் & கொடுப்பனவுகள், ஓய்வூதிய கொடுப்பனவுகள், முத்திரைக் கட்டண வசூல் போன்ற அரசு வணிகங்களை மேற்கொள்ள 'முகவர் வங்கி' என்ற முறையில் கர்நாடக வங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

---

5. நடப்பாண்டின் (2021) ராணுவ விளையாட்டுக்களை நடத்துகிற நாடு எது?

அ) ரஷ்யா ☑

ஆ) இந்தியா

இ) பிரான்ஸ்

ஈ) அமெரிக்கா

✓ 2021 ஆக.22ஆம் தேதி முதல் செப்.4ஆம் தேதி வரை நடைபெறவுள்ள பன்னாட்டு இராணுவ விளையாட்டுகளில் பங்கேற்க இந்திய இராணுவத்தின் 101 உறுப்பினர் குழு ரஷ்யா செல்கிறது.

✓ இராணுவ ஸ்கவுட் மாஸ்டர்ஸ் போட்டி (ASMC), எல்ப்ரஸ் ரிங், போலார் ஸ்டார், துப்பாக்கி சுடும் எல்லை மற்றும் உயரமான பகுதி நிலப்பரப்பில் பல்வேறு பயிற்சிகள், பனியில் செயல்பாடுகள், துப்பாக்கி சுடும் திறன்கள், பல்வேறு போட்டிகளில் தடைகள் நிறைந்த நிலப்பரப்பில் போர் பொறியியல் திறன்களை காட்டும் பாதுகாப்பான பாதை விளையாட்டுகள் உள்ளிட்ட பல போட்டிகளில் இந்தக் குழுவினர் பங்கேற்பர். திறந்த நீர் மற்றும் பால்கன் வேட்டை விளையாட்டுகளுக்கு இந்தக் குழுவைச் இருவர் பார்வையாளர்களாக இருப்பர்.

---

6. 2021 டோக்கியோ ஒலிம்பிக்கின் ஆடவர் கால்பந்தில் தங்கப் பதக்கம் வென்ற நாடு எது?

அ) அர்ஜென்டினா

ஆ) ஆஸ்திரேலியா

இ) பிரேசில் ☑

ஈ) எகிப்து

✓ 2021 ஆகஸ்ட்.7 அன்று நடந்த டோக்கியோ ஒலிம்பிக்கின் ஆடவர் கால்பந்தில், பிரேசில் அணி 2–1 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது. பிரேசில் அணிக்காக மால்கம் மற்றும் மேத்தியஸ் குன்ஹா கோலடித்தனர். ஸ்பெயின் அணிக்காக மைக்கேல் ஒயர்ஸபால் கோலடித்தார். மெக்ஸிகோ, 3–1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வீழ்த்தி வெண்கலம் வென்றது. மகளிர் கால்பந்தில் தங்கப் பதக்கம் வெல்ல, 1–1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்ததால் கனடா 3–2 என்ற கோல் கணக்கில் சுவீடனை வீழ்த்தியது. ஆஸ்திரேலியாவை 4–3 என்ற கணக்கில் வென்று, அமெரிக்கா வெண்கலம் தை வென்றது.

---

7. இந்தியாவின் தலைமை தேர்தல் ஆணையர், 'FEMBoSA'இன் 11 ஆவது ஆண்டுக்கூட்டத்தை தொடங்கிவைத்தார். இந்தியாவின் தற்போதைய தலைமை தேர்தல் ஆணையர் யார்?

அ) அச்சல் குமார் ஜோதி

ஆ) சுனில் அரோரா

இ) ராஜீவ் குமார்

ஈ) சுஷில் சந்திரா ☑

✓ இந்தியாவின் தலைமை தேர்தல் ஆணையரும் FEMBoSA'இன் தற்போதைய தலைவருமான சுஷில் சந்திரா, தேர்தல் ஆணையர்கள் இராஜீவ் குமார் மற்றும் A C பாண்டே ஆகியோருடன் இணைந்து ஆக.11 அன்று தெற்காசியாவின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் (FEMBo SA) மன்றத்தின் 11ஆவது ஆண்டுக் கூட்டத்தை தொடங்கி வைத்தார். இக்கூட்டம், மெய்நிகர் முறையில், பூட்டானின் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டது.

---

8. இந்தியாவின் முதல் 'வாட்டர்+' நகரமாக அறிவிக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ) கொல்கத்தா

ஆ) பெங்களூரு

இ) இந்தூர் ☑

ஈ) ஹைதராபாத்

✓ நாட்டின் தூய்மையான நகரமான இந்தூர், 'ஸ்வச் சர்வேக்ஷன்–2021' இன்கீழ் இந்தியாவின் முதல் 'வாட்டர்+' நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது என மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார். இதற்கான சான்றிதழை நடுவணரசிடமிருந்து இந்தூர் நகரம் பெற்றது.

9. "வெள்ளையனே வெளியேறு இயக்கம்" குறித்த கண்காட்சியை தொடக்கியுள்ள அமைச்சகம் எது?

அ) கலாச்சார அமைச்சகம் ☑

ஆ) சுற்றுலா அமைச்சகம்

இ) கல்வி அமைச்சகம்

ஈ) வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

✓ 2021 ஆக.8 அன்று கலாச்சார அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி, புது தில்லியில் 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' குறித்த கண்காட்சியைத் தொடங்கிவைத்தார். இந்தியா விடுதலை அடைந்த 75ஆவது ஆண்டை கொண்டாடும், "ஆசாதி கா அம்ரித மகோத்சவத்தின்" ஒருபகுதியாக, இந்திய தேசிய ஆவணக்காப்பகம் நவ.8வரை தொடரும் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

---

10. சயீத் தல்வார் – 2021 என்ற பயிற்சியை நடத்திய நாடுகள் எவை?

அ) இந்தியா மற்றும் ரஷ்யா

ஆ) இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ☑

இ) இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா

ஈ) இந்தியா மற்றும் அமெரிக்கா

✓ இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் இடையே அபுதாபியில் 'சயீத் தல்வார்' கூட்டு கடற்படை பயிற்சி நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படை சார்பில் INS கொச்சி போர்க்கப்பல், இரண்டு ஒருங்கிணைந்த சீ கிங் எம்கே 42பி ஹெலிகாப்டர்கள் பங்கேற்றன.

✓ ஐக்கிய அரபு அமீரகம் சார்பில் அல்–தாஃப்ரா போர்க் கப்பல், ஏஎஸ்565பி பேந்தர் ஹெலிகாப்டர் பயிற்சியில் ஈடுபட்டன. இருநாடுகளின் கடற் படைகளுக்கு இடையிலான திறன் & ஒருங்கிணைப்பை மேம்படுத்த தேடுதல், மீட்பு, மின்னணு தொழில்நுட்பம் உள்பட பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ரூ.100 லட்சம் கோடியில் 'உத்வேகம்' திட்டம்: பிரதமர் நரேந்திர மோடி

நாட்டில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ரூ.100 லட்சம் கோடி மதிப்பில் 'உத்வேகம்' திட்டம் (கதி சக்தி) செயல்படுத்தப்படும் என்று சுதந்திர தின உரையில் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். அடுத்த 25 ஆண்டுகளை நாட்டுக்குப் பெருமைதரும் ஆண்டுகளாக மாற்ற வேண்டுமென்று நாட்டு மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். நாட்டின் 75–ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

தில்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி தேசியக் கொடியேற்றினார். அதையடுத்து நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரை: நாடு கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு துறைகளில் முன்னேறி வருகிறது. ஆனால், வளர்ச்சியின் உச்சத்தை இன்னும் அடைய வேண்டியிருக்கிறது. அனைத்துக் கிராமங்களுக்கும் சாலை வசதிகள், அனைத்துக் குடும்பத்துக்கும் வங்கிக் கணக்கு, சமையல் எரிவாயு இணைப்பு, அனைத்து தகுதியான நபர்களுக்கும் மருத்துவக் காப்பீடு ஆகியவற்றை ஏற்படுத்தித் தர வேண்டியுள்ளது.

வரலாற்று உச்சம்: நாட்டில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகளும் அந்நியச் செலாவணி கையிருப்பும் வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளன.

சுதந்திரத்தின் நூற்றாண்டைக் கொண்டாடவுள்ள அடுத்த 25 ஆண்டுகளில் புதிய இலக்குகளுடன் பயணிக்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் இந்தியா முன்னின்று விளங்குவதை மக்கள் உறுதி செய்ய வேண்டும். 'தற்சார்பு இந்தியா' என்ற இலக்கை அடுத்த 25 ஆண்டுகளில் அடைய வேண்டும்.

அனைவரின் முயற்சி:

அனைவருடன் இணைந்து, அனைவருடைய நம்பிக்கையின் அடிப்படையில், அனைவரின் முயற்சியுடன், அனைவருக்குமான வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டும். நாட்டின் இலக்குகளை அடைவதற்கு இந்தக் கொள்கை மிகவும் முக்கியமானது. நாட்டின் வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு அனைவருடைய முயற்சியும் அவசியம். 'உத்வேகம்' தேசிய பெருந்திட்டத்தின் கீழ் ரூ.100 லட்சம் கோடியில் போக்குவரத்து உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. இத்திட்டம் எதிர்கால பொருளாதார மண்டலங்களை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருக்கும்.

ஹைட்ரஜன் திட்டம்:

எரிசக்தித் துறையில் 2047–ஆம் ஆண்டுக்குள் (சுதந்திர நூற்றாண்டு) தற்சார்பு அடைவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை அடையும் நோக்கில், மாசுபாட்டை ஏற்படுத்தாத ஹைட்ரஜனை எரிபொருளாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. தேசிய ஹைட்ரஜன் திட்டத்தின் கீழ் ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரித்து, அதை மற்ற நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் மையமாக இந்தியாவை மாற்றுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

'வந்தே பாரத்' ரயில்கள்:

நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டைக் கொண்டாடும் வகையில், 75 வாரங்களுக்குள் நாடு முழுவதும் 75 'வந்தே பாரத்' ரயில்கள் இயக்கப்படவுள்ளன. வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்கள் அனைத்தும் விரைவில் ரயில்கள் மூலமாக இணைக்கப்படும். மக்களிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் நோக்கில், மதிய உணவுத் திட்டம் உள்ளிட்டவற்றுக்காக வழங்கப்படும் அரிசியில் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளவுள்ளது.

சிறு விவசாயிகளின் நலன்: நாட்டில் உள்ள விவசாயிகளில் 80 சதவீதம் போர் சிறு விவசாயிகளாக உள்ளனர். அவர்களது நலனை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறு விவசாயிகள் நாட்டின் பெருமையாக மாற வேண்டும்.

தலித்துகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், பொதுப் பிரிவைச் சேர்ந்த ஏழைகள் ஆகியோருக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் உரிய இடஒதுக்கீடு கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்து வருகிறது. மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கான இடங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

தாய்மொழியில் கல்வி:

ஏழ்மைக்கு எதிரான போராட்டத்தில் புதிய தேசிய கல்விக் கொள்கை முக்கியப் பங்கு வகிக்கும். அக்கொள்கை வாயிலாக தாய்மொழிக் கல்வி ஊக்குவிக்கப்படும். 2–ஆம் உலகப் போருக்குப் பிறகு நாடுகளுக்கிடையேயான தொடர்பின் தன்மை மாறியது. கரோனா தொற்று பரவல் கட்டுக்குள் வந்தபிறகும் சர்வதேசத் தொடர்பு மாற்றங்களைச் சந்திக்கும். கிராமப் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 2024–ஆம் ஆண்டுக்குள் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கப்படும். கடந்த 2 ஆண்டுகளில் 4.5 கோடி வீடுகளுக்கு குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தயாரிப்போம்:

அனைத்துத் துறைகளிலும் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தை மேம்படுத்த வேண்டும். பல்வேறு துறைகளுக்கு உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. 7 ஆண்டுகளுக்கு முன் ரூ.56,000 கோடி மதிப்பிலான செல்லிடப்பேசிகளை இந்தியா இறக்குமதி செய்து வந்தது. தற்போது சுமார் ரூ.21,000 கோடி மதிப்பிலான செல்லிடப்பேசிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சுற்றுச்சூழலைக் காப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரி செலுத்தும் விதிமுறைகள் எளிமையாக்கப்பட்டு வருகின்றன.

தக்க பதிலடி:

எதிரிகளுக்கு நாட்டின் எல்லைப் பகுதிகளில் தக்க பதிலடியை இந்தியா வழங்கி வருகிறது. எதிரிப் படைகள் மீது துல்லியத் தாக்குதலும் வான்வழித் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் எந்தவொரு கடினமான முடிவையும் நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா தயங்காது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ஜம்மு–காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் கண்கூடாகத் தெரிகின்றன. அங்கு தொகுதி மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் ஜம்மு–காஷ்மீர் பேரவைக்குத் தேர்தல் நடத்தப்படும்.

விலைமதிப்பற்ற தருணம்:

இதுதான் இந்தியாவுக்கான விலைமதிப்பற்ற தருணம். இளைஞர்கள், விவசாயிகள் உள்ளிட்ட தற்காலத் தலைமுறையினர் கற்பனைக்கு எட்டாத இலக்குகளையும் அடையும் திறமை கொண்டவர்களாக உள்ளனர் என்றார் பிரதமர் மோடி.

---

2. சுதந்திர தின விழாவில் விருது பெற்றோர் விவரம்

சுதந்திர தின விழாவில் பல்வேறு விருதுகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். விருது பெற்றோர் விவரம்:

அறிவியல் தொழில்நுட்பத்துக்கான அப்துல் கலாம் விருது: திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இயற்பியல் பள்ளியில் நேரற்ற இயக்கவியல் (சர்ய் கண்ய்ங்ஹழ் ஈஹ்ய்ஹம்ண்ஹீள்) துறை பேராசிரியர் மு.லட்சுமணனுக்கு அறிவியல் தொழில்நுட்பத்துக்கான அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது. இந்த விருதானது ரூ.5 லட்சம் காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

முதல்வரின் நல் ஆளுமை விருது: சென்னை கிண்டி அரசு கரோனா மருத்துவமனை இயக்குநர் நாராயணசாமிக்கும், மாற்றுத் திறனாளி மாணவர்களுக்காக கல்வித் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்ததற்காக மாநிலக் கல்லூரிக்கும், நில எடுப்பு நடைமுறைகள் மின் தொகுப்பினால் எளிமையாக்கப்பட்டு வெளிப்படைத் தன்மை கொண்டு வந்ததற்காக, வேலூர் மாவட்ட வருவாய் அலுவலராக இருந்து இப்போது நிலநிர்வாக இணை இயக்குநராக உள்ள ஜெ.பார்த்திபனுக்கும் நல் ஆளுமை விருது அளிக்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகள் நலன்: மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாகச் செயல்பட்டு வரும் நிறுவனமாக, திருச்சி ஹோலி கிராஸ் சர்வீஸ் சொசைட்டி, மாற்றுத் திறனாளிகளுக்காக பணியாற்றி வரும் சிறந்த மருத்துவராக சேலம் அழகாபுரம் பூ.பத்மப்ரியா, சிறந்த சமூகப் பணியாளராக திருநெல்வேலி மரிய அலாசியஸ் நவமணி, அதிகளவில் வேலைவாய்ப்பு அளித்ததற்காக சென்னை அய்யப்பன்தாங்கலைச் சேர்ந்த வீ ஆர் யுவர் வாய்ஸ் நிறுவனமும் விருதுக்காக தேர்வு செய்யப்பட்டன. இந்த விருதுகள் 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழை அடக்கியது. மாற்றுத் திறனாளிகளுக்காக சிறப்பாகச் செயல்படும் சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியாக, ஈரோடு மாவட்ட வங்கி தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான விருது: சிறந்த மாநகராட்சியான தஞ்சாவூருக்கு ரூ.25 லட்சம், சிறந்த நகராட்சிகளான உதகை, திருச்செங்கோடு, சின்னமனூருக்கு முறையே ரூ.15 லட்சம், ரூ.10 லட்சம் மற்றும் ரூ.5 லட்சம், சிறந்த பேரூராட்சிகளான கல்லக்குடி, மேல்பட்டம்பாக்கம், கோட்டையூருக்கு முறையே ரூ.10 லட்சம், ரூ.5 லட்சம் மற்றும் ரூ.3 லட்சம் அளிக்கப்பட்டன.

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த அரவிந்த் ஜெயபால் (58) குழந்தைகளின் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்தியதுடன், பின்தங்கிய மாணவர்களுக்கு விமானப் பயண அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்), கரோனா காலத்தில் உதவிகளைச் செய்த திருவாரூர் மாவட்டம் நெ.பசுருதீன், நீலகிரி மாவட்டம் ச.ரஞ்சித்குமார் ஆகியோர் மாநில இளைஞர் விருதுக்கான ஆண்கள் பிரிவுக்கு தேர்வு செய்யப்பட்டனர். ரத்ததானத்தை வலியுறுத்தி செயல்பட்டு வரும் திண்டுக்கல் மாவட்டம் க.மகேஸ்வரி, முதியோர் நலன் காக்கப் பாடுபடும் கடலூர் மாவட்டம் அமலா ஜெனிபர், கரோனா காலத்தில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய உதவிய சென்னையைச் சேர்ந்த எஸ்.மீனா ஆகியோர் மாநில இளைஞர் பெண்கள் பிரிவுக்கு தேர்வு செய்யப்பட்டனர். ரூ.50,000 காசோலை, பாராட்டுச் சான்று, பதக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது இவ்விருது.

அவ்வையார் விருது

சக்தி மசாலா நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர் சாந்தி துரைசாமிக்கு அவ்வையார் விருது வழங்கப்பட்டது. மசாலா நிறுவனம் மட்டுமின்றி, சக்தி தேவி தொண்டு அறக்கட்டளைமூலம் உடல், மனநலம் குன்றிய குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை, அறிவுசார் ஊனமுற்றோருக்காக சக்தி பள்ளி, சக்தி ஆட்டிசம் சிறப்புப் பள்ளி, சக்தி மருத்துவமனை மூலம் 15-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சேவை, 41 அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறார். இந்த விருதானது ரூ.1 லட்சத்துக்கான காசோலை, 8 கிராம் பதக்கம், சான்றிதழ், பொன்னாடை ஆகியன அடங்கியது.

சிறந்த மூன்றாம் பாலினர் விருது: தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கிரேஸ் பானு, சிறந்த மூன்றாம் பாலினர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படுள்ளார்.

---

3. விமானப் படை விமானிகள் இருவருக்கு வாயு சேனா பதக்கம்: குடியரசுத் தலைவர் வழங்கினார்

விமானப் படையினரின் சிறப்பான பணிகளுக்கு வழங்கப்படும் வாயு சேனா பதக்கம் ஸ்குவாட்ரான் லீடர் தீபக் மோகனன், விங் கமாண்டர் உத்தர் குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இந்தப் பதக்கங்களை வழங்கினார்.

இந்திய விமானப் படையின் விமானி ஸ்குவாட்ரான் லீடர் தீபக் மோகனன், கடந்த ஏப்ரல் 2017 முதல் கடலோரக் காவல் படை ஸ்குவாட்ரான் பணியில் ஈடுபட்டு வருகிறார். கடந்த ஆண்டு செப்டம்பர் 4-இல் 3.40 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெயுடன் பயணித்துக் கொண்டிருந்த எம்டி டயமண்ட் என்ற பிரம்மாண்ட கப்பலில் இலங்கை அருகே பயங்கர தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, சேத்தக் ஹெலிகாப்டரின் கேப்டனாகப் பணியாற்றிய ஸ்குவாட்ரான் லீடர் தீபக் மோகனன், அதீத துணிச்சலை வெளிப்படுத்தி தீயை அணைப்பதில் தமது உயிரையும் பொருட்படுத்தாது சிறப்பாக பணியாற்றினார். எண்ணெய்க் கசிவு மற்றும் மிகப்பெரிய விபத்து நடைபெறாமல் தடுக்கப்பட்டதில் பெரும் பங்கு வகித்தார். இத்தகைய தலைசிறந்த வீரத்தை கௌரவிக்கும் வகையில் ஸ்குவாட்ரான் லீடர் தீபக் மோகனனுக்கு வாயு சேனா விருது வழங்கப்பட்டது.

இந்திய விமானப் படையின் பைலட் விங் கமாண்டர் உத்தர் குமார், கடந்த 2017, ஜூலை மாதத்திலிருந்து சுகோய்-30 ரக போர் விமானத்தின் விமானியாகப் பணியாற்றுகிறார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 4-இல் வானில் பறந்து கொண்டே தமது விமானத்தில் இருந்து மற்றொரு விமானத்திற்கு எரிபொருளை நிரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில், மற்றொரு சுகோய்-30 ரக போர் விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த எரிவாயு நிரப்பும் குழாய் உடைந்து போனது. எனினும் குழாயின் ஒரு முனை விங் கமாண்டர் உத்தர் குமாரின் விமானத்தில் தொடர்ந்து பொருத்தியிருக்க, எரிவாயு கசியும் அபாயம் ஏற்பட்டது. மேலும், எரிவாயு குழாய் உடைந்த விமானத்தின் சீரான இயக்கமும் தடைப்பட்டது.

இதுபோன்ற எதிர்பாராத அபாய நிலையை உணர்ந்து எரிவாயு கசிவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விமானப் பணியாளர்களுக்கு விங் கமாண்டர் உத்தர் குமார் உடனடியாக ஆலோசனை வழங்கினார். மிகக் கவனமாகத் திட்டமிட்டு விமானத்தை பாதுகாப்பாகத் தரையிறக்கினார். அவரது பாராட்டத்தக்க வீரம் மற்றும் விமானம் ஓட்டும் திறமையால் மிகப்பெரிய தீ விபத்து தடுக்கப்பட்டதுடன், 2 விமானங்களும் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டன. இந்தப் போற்றுதலுக்குரிய வீர தீரச் செயலுக்காக விங் கமாண்டர் உத்தர் குமாருக்கு வாயு சேனா பதக்கம் வழங்கப்பட்டது.

---

1. 2020 டோக்கியோ ஒலிம்பிக்கின் பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?

அ) அமெரிக்கா ☑

ஆ) சீனா

இ) ஜப்பான்

ஈ) இந்தியா

✓ 2020 டோக்கியோ விளையாட்டுக்கள், ஆக.8 அன்று நிறைவுற்றதாக பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்தின் தலைவர் தாமஸ் பாக் அறிவித்தார். அமெரிக்கா, 39 தங்கங்கள் வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. சீனாவை அமெரிக்காவைவிட ஒரு தங்கம் குறைவாகப் பெற்று இரண்டாமிடம் பெற்றது.

✓ போட்டியை நடத்திய ஜப்பான் 27 தங்கங்களுடன் மூன்றாமிடத்தையும், கிரேட் பிரிட்டன் 22 தங்கப்பதக்கங்களுடன் நான்காமிடத்தையும் 20 தங்கங்களுடன் ரஷ்ய ஒலிம்பிக் கமிட்டி ஐந்தாமிடத்தையும் பிடித்தது. இந்தியா 1 தங்கம், 2 வெள்ளி மற்றும் 4 வெண்கலத்துடன் 48ஆவது இடத்தைப் பிடித்தது.

---

2. ஆண்டுதோறும் சர்வதேச பழங்குடிகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 09 ☑

ஆ) ஆகஸ்ட் 10

இ) ஆகஸ்ட் 11

ஈ) ஆகஸ்ட் 12

✓ சர்வதேச பழங்குடிகளின் நாளானது ஆண்டுதோறும் ஆகஸ்ட்.9 அன்று கொண்டாடப்படுகிறது. "Leaving no one behind: Indigenous peoples and the call for a new social contract" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். உலகம் முழுவதும் 90 நாடுகளில், 476 மில்லியனுக்கும் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இது, உலக மக்கள்தொகையில் 6.2% ஆகும். பழங்குடி மக்கள் தனித்துவமான கலாசாரம், மரபுகள் மற்றும் மொழிகள் ஆகியவற்றின் பரந்த பன்முகத் தன்மையைக் கொண்டவர்கள்.

---

3. சமீபத்தில், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 79ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. மும்பையில் எந்த இடத்திலிருந்து கொண்டு 'மகாத்மா' காந்தி வெள்ளையனை விரட்டுவதற்காக "செய் அல்லது செத்துமடி" என முழக்கமிட்டார்?

அ) ஆகஸ்ட் கிரந்தி மைதானம் ☑

ஆ) ராஜாபாய் மணிக்கூண்டு

இ) அமைதி கோபுரம்

ஈ) மணி பவன்

✓ 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 79ஆம் ஆண்டுவிழா 2021 ஆகஸ்ட்.8 அன்று அனுசரிக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு இதே நாளன்று, 'தேசத்தந்தை' 'மகாத்மா' காந்தி, பிரிட்டிஷாரை நாட்டைவிட்டு விரட்டும் நோக்கில் அனைத்து இந்தியர்களை நோக்கியும் "செய் அல்லது செத்து மடி" என்று முழக்கமிட்டார். மும்பையிலுள்ள ஆகஸ்ட் கிரந்தி மைதானம் (கோவாலியா) என்ற இடத்திலிருந்து இந்த இயக்கம் தொடங்கியது. ஆண்டுதோறும் ஆகஸ்ட் கிரந்தி நாளாக இது கடைப்பிடிக்கப்படுகிறது.

---

4. ஒலிம்பிக் தடகளப்போட்டிகளில் இதுவரை எத்தனை பதக்கங்க–ளை இந்தியா வென்றுள்ளது?

அ) 1 ☑

ஆ) 2

இ) 3

ஈ) 10

✓ நீரஜ் சோப்ரா, ஆண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதிப்போட்டியில் 87.58 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தடகளத்தில் இந்தியாவுக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க தங்கப்பதக்கத்தை வென்றுதந்தார். ஒலிம்பிக் தடகளத்தில், இது, இந்தியா வெல்லும் முதல் தங்கப்பதக்கமாகும்.

---

5. நாட்டிலுள்ள எத்தனை காவல்துறை அதிகாரிகளுக்கு உள்துறை அமைச்சரின் சிறந்த புலனாய்வு விருது வழங்கப்பட்டுள்ளது?

அ) 151

ஆ) 152 ☑

இ) 155

ஈ) 145

✓ 2021ஆம் ஆண்டுக்கான, "சிறந்த புலனாய்வுக்கான மத்திய உள்துறை அமைச்சரின் பதக்கம்", அகில இந்திய அளவில் 152 காவல்துறை அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வில் சிறந்த செயல்திறனை ஊக்குவிக்கவும், புலனாய்வில் சிறப்பாக செயல்படும் அதிகாரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கவுமாக, கடந்த 2018ஆம் ஆண்டில் இவ்விருது நிறுவப்பட்டது. இந்த ஆண்டுக்கான (2021) விருதாளர்களுள் தமிழ்நாட்டைச் சேர்ந்த நால்வர் உட்பட, 28 பேர் மகளிர் அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

6. நுண்–உணவு செயலாக்க நிறுவனங்கள் திட்டத்தின் PM முறைப்படுத்தலின்கீழ் 7,500 SHG உறுப்பினர்களுக்கு தொடக்க நிதியாக பிரதமரால் அறிவிக்கப்பட்ட நிதி எவ்வளவு?

அ) ₹35 கோடி

ஆ) ₹45 கோடி

இ) ₹15 கோடி

ஈ) ₹25 கோடி ☑

✓ 2021 ஆகஸ்ட்.12 அன்று பிரதமர் நரேந்திர மோடி, உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகத்தின் PMFME (PM Formalisation of Micro Food Processing Enterprises) திட்டத்தின்கீழ் 7,500 SHG உறுப்பினர்களுக்கு ₹25 கோடி மற்றும் 75 FPO'களுக்கு ₹4.13 கோடி நிதியாக வழங்கினார். இந்த SHG'கள் தீனதயாள் அந்தியோதயா யோஜனா–தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (DAY–NRLM) ஊக்குவிக்கப்படுகின்றன.

---

7. மத்திய & மாநில அரசுகள் மற்றும் தனியார் துறை பிரிவுகளின் துறைசார்ந்த நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் எத்தனை பணியாளர்களுக்கு பிரதம அமைச்சரின் ஷ்ராம் விருதுகள் வழங்கப்படும்?

அ) 67

ஆ) 75

இ) 59

ஈ) 69 ☑

✓ 2021 ஆக.12 அன்று, இந்திய அரசு, 2018ஆம் ஆண்டிற்கான பிரதமரின் ஷ்ராம் விருதுகளை அறிவித்தது. இந்த விருதுகள் மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் தனியார் துறைகளின் துறைசார்ந்த மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் 69 தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அவர்களின் தனித்துவமான செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

✓ இந்த ஆண்டு (2021) பிரதமரின் ஷ்ராம் விருதுகள் மூன்று பிரிவுகளில் வழங்கப்படுகின்றன. அவை, ஷ்ராம் பூஷன் விருதுகள் (₹1,00,000/– ரொக்கப் பரிசு), ஷ்ராம் வீர்/ஷ்ராம் வீராங்கனா விருதுகள் (₹60,000/– ரொக்கப் பரிசு) மற்றும் ஷ்ராம் ஸ்ரீ/ஷ்ராம் தேவிவிருதுகள் (₹40,000/– ரொக்கப் பரிசு) ஆகும்.

---

8. 2021 CONCACAF தங்கக்கோப்பையை வென்ற அணி எது?

அ) அமெரிக்கா ☑

ஆ) மெக்ஸிகோ

இ) கோஸ்ட்டா ரிக்கா

ஈ) கத்தார்

✓ US ஆடவர் தேசிய அணியானது இறுதிப்போட்டியில் மெக்ஸிகோவை தோற்கடித்து 16ஆவது CONCACAF தங்கக்கோப்பையை வென்றது. இறுதிப்போட்டி, அமெரிக்காவின் நெவாடாவின் லாஸ் வேகாஸில் உள்ள அலெஜியண்ட் அரங்கில் நடந்தது. இந்தக் கோப்பை, அமெரிக்கா வென்ற 7ஆவது தங்கக்கோப்பையாகும். ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டி, CONCACAF'ஆல் நடத்தப்படுகிறது.

9. ஆகஸ்ட் மாதத்தின் எந்தத் தேதி, உலக சிங்கங்கள் நாளாக கொண்டாடப்படுகிறது?

அ) ஆகஸ்ட் 09 ☑

ஆ) ஆகஸ்ட் 10

இ) ஆகஸ்ட் 11

ஈ) ஆகஸ்ட் 12

- ✓ சிங்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆக.10 அன்று உலக சிங்கங்கள் நாள் கொண்டாடப்படுகிறது. சிங்கத்தின் பாதுகாப்பிற்கான ஆதரவை திரட்டவும் இந்த நாள் முயற்சி செய்கிறது. விலங்குகளுக்கான உலகளாவிய நிதியத்தின்படி (WWF), சிங்கங்கள், புல்வெளிகள் மற்றும் சமவெளிகளில் மட்டுமே வாழ்கிறது.
- ✓ சசன்–கிர் தேசியப்பூங்காவின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் கம்பீரமான ஆசிய சிங்கத்தின் தாயகம் இந்தியா ஆகும். WWF'இன் கூற்றுப்படி, சிங்கங்கள் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா முழுவதும் காணப்பட்டன. ஆனால் சமீப காலமாக, அவற்றின் எண்ணிக்கை இந்தக் கண்டங்களில் குறைந்து வருகிறது. சிங்கங்களைப் பாதுகாப்பதற்கான முன்னெடுப்பு, 2013'இல் தொடங்கப்பட்டது. முதல் உலக சிங்கங்கள் நாள் 2013'இல் அனுசரிக்கப்பட்டது.

---

10. எஞ்சிய ஆசிய சிங்கங்கள் காணப்படுகிற தேசியப்பூங்கா எது?

அ) துத்வா தேசியப்பூங்கா

ஆ) கசிரங்கா தேசியப்பூங்கா

இ) கிர் தேசியப்பூங்கா ☑

ஈ) கன்ஹா புலிகள் காப்பகம்

- ✓ எஞ்சிய ஆசிய சிங்கங்கள் குஜராத் மாநிலத்தின் கிர் தேசியப்பூங்காவில் காணப்படுகின்றன. 2020ஆம் ஆண்டில், குஜராத்தின் கிர் காடுகளில் வாழும் ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை சுமார் 29% அதிகரித்தது. சிங்கங்கள் பரவி வாழும் பகுதியும் 36% அதிகரித்துள்ளது.
- ✓ கிர் தேசியப் பூங்கா மற்றும் வனவுயிரி சரணாலயமானது சசன்–கிர் என்றும் அழைக்கப்படுகிறது. இது, இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தலலா கிர் அருகிலுள்ள ஒரு காடு, தேசியப்பூங்கா மற்றும் வனவிலங்கு சரணாலயமாகும். கடந்த 1965'இல் இந்தத் தேசியப்பூங்கா நிறுவப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னை உள்பட 10 இடங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையம்: மத்திய அரசு அமைக்கிறது

கைத்தறி துறைக்கு பெரியளவில் ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு புதிய நடவடிக்கைகளை ஜவுளி அமைச்சகம் எடுத்து வருகிறது. இதன்படி, சென்னை உள்பட 10 இடங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கைத்தறி துறையில் வடிவமைப்பு சார்ந்த உயர்சிறப்பு நிலையை எட்டும் வகையிலும், நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு மாதிரி, பொருள் மேம்பாடு மற்றும் உருவாக்கத்துக்கான வடிவமைப்பு களஞ்சியங்களை வழங்கும் நோக்கத்திலும் சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், கண்ணூர், இந்தூர், நாகபுரி, மீரட், பாகல்பூர் மற்றும் பானிப்பட் ஆகிய இடங்களில் உள்ள நெசவாளர் சேவை மையங்களில் மேலும் 10 கைத்தறி வடிவமைப்பு வள மையங்களை மத்திய தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம் (நிஃப்ட்) அமைக்கவுள்ளது.

ஜவுளி அமைச்சகத்தின் அமைப்பாக நிஃப்ட் விளங்குவதாலும், நவீன நாகரிகம் மற்றும் வடிவமைப்பு உள்ளிட்டவற்றில் நிஃப்ட்டின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி கைத்தறி துறைக்கு பெரியளவில் சந்தை இணைப்புகளை வழங்க முடியுமென்பதாலும், இப்பணிக்காக நிஃப்ட்டை அமைச்சகம் தேர்ந்தெடுத்துள்ளது.

நெசவாளர் சேவை மையங்களில் நிஃப்ட் படிப்படியாக அமைக்கவிருக்கும் கைத்தறி வடிவமைப்பு வள மையங்களின் மூலம் நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு வடிவமைப்பு மற்றும் வளங்கள் குறித்த விரிவான தகவல்கள் கிடைக்கும். தில்லி, மும்பை, ஆமதாபாத், புவனேசுவரம், குவாஹாட்டி, ஜெய்ப்பூர் மற்றும் வாரணாசியில் உள்ள நெசவாளர் சேவை மையங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள எட்டாவது கைத்தறி வடிவமைப்பு வள மையத்தை தேசிய கைத்தறி தினமான கடந்த 7 –ஆம் தேதி திறந்துவைக்கப்பட்டது.

---

2. தூத்துக்குடி வஉசி துறைமுகம் நிலக்கரி கையாள்வதில் சாதனை:

தூத்துக்குடி வஉசி துறைமுக பொறுப்புக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வஉசி துறைமுகத்தின் கப்பல் சரக்குதளம் 9–ல் கடந்த 15.08.2021 அன்று எம்.வி. ஸ்டார் லாரா என்ற கப்பலில் இருந்து 57,090 டன் நிலக்கரியை 24 மணி நேரத்தில் கையாண்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. இச்சாதனையானது இதற்கு முன்பு கடந்த 27.10.2020 அன்று கப்பல் சரக்கு தளம் 9–ல் எம்.வி. ஓசன் ட்ரீம் என்ற கப்பலில் இருந்து 24 மணி நேரத்தில் கையாளப்பட்ட அளவான 56,785 டன் நிலக்கரியை விட அதிகம்.

மார்செல் தீவு கொடியுடன் வந்துள்ள எம்.வி. ஸ்டார் லாரா என்ற பனமாக்ஸ் வகை கப்பல் 14.20 மீட்டர் மிதவை ஆழம் கொண்டது. இந்தோனேசியா நாட்டில் உள்ள முரா புரோவ் என்ற துறைமுகத்தில் இருந்து 77,675 டன் நிலக்கரியை ஏற்றிக்கொண்டு வஉசி துறைமுகம் வந்துள்ளது. இக்கப்பலில் வந்த 77,675 டன் நிலக்கரியும் இந்தியா கோக் & பவர் பிரைவேட் லிட் நிறுவனத்துக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. புதிய சாதனை படைக்க காரணமாக இருந்த அனைத்து ஊழியர்களுக்கும் துறைமுக பொறுப்புக் கழக தலைவர் தா கி ராமச்சந்திரன் பாராட்டு தெரிவித்தார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. இந்தியாவுடன் புதுவை இணைந்த நாள்: கீழூர் நினைவிடத்தில் மரியாதை

பிரான்ஸ் ஆதிக்கத்திலிருந்த புதுவை மாநிலம், கடந்த 1962 ஆகஸ்ட்.16 ஆம் தேதி இந்தியாவுடன் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டது. முன்னதாக, புதுச்சேரி அருகே உள்ள கீழூர் பகுதியில் பொதுமக்கள் முன்னிலையில், தலைவர்கள் வாக்கெடுப்பை நடத்தி, இதற்கான முடிவை எடுத்தனர். இதையடுத்து, தாயகத்துடன் புதுவை சட்டப்பூர்வமாக இணைந்தது. இந்த நாளில், கீழூரில் வாக்கெடுப்பு நடைபெற்ற இடத்தில் புதுவை அரசு சார்பில் ஆண்டுதோறும் மரியாதை செலுத்தப்படுகிறது.

---

4. நரிக்குறவர் மொழி உள்பட பத்து மொழிகளில் வெளியாகிறது திருக்குறள்

நரிக்குறவர் இன மக்கள் பேசும் வாக்ரிபோலி மொழி உள்பட பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளதாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா.சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மத்திய கல்வி அமைச்சகம், திருக்குறளை இந்திய அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள 21 மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது. இந்த நிறுவனம், ஏற்கெனவே பஞ்சாபி (2012), மணிப்புரி (2012), தெலுங்கு (2014), கன்னடம் (2014), குஜராத்தி (2015) ஆகிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது. மேலும் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புகளின் தொகுப்புகளையும் மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக வரும் அக்டோபர் மாதம் மலையாளம், மராத்தி, ஒடியா, ஹிந்தி, நேபாளி, உருது, அரபி, பாரசீகம், வாக்ரிபோலி (நரிக்குறவர் மொழி), படுகு ஆகிய பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளன. இது தவிர மொழிபெயர்ப்புத் திட்டத்தின் மூலமாகவும், குறுந்திட்ட ஆய்வுகள் மூலமாகவும் வரப் பெற்றுள்ள ஆய்வுகள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலம் நூலாக்கம் பெற்று வருகின்றன. அந்த வகையில் உ.வே.சாமிநாதையர் நாட்குறிப்பு, உ.வே.சாமிநாதையர் அருஞ்சொல் அகராதியும் சங்கநூற் சொல்லடைவும், நற்றிணை (கன்னட மொழிபெயர்ப்பு), தொல்காப்பியம் (ஹிந்தி மொழிபெயர்ப்பு), பதிற்றுப்பத்து (கன்னட மொழிபெயர்ப்பு) ஆகியவை உள்ளிட்ட 20 நூல்கள் செப்டம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளன என அதில் தெரிவித்துள்ளார்.

1.தேசிய கல்விக்கொள்கை-2020'ஐ அமல்படுத்திய நாட்டின் முதல் மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம்

ஆ) கர்நாடகா ☑

இ) குஜராத்

ஈ) மத்திய பிரதேசம்

✓ தேசிய கல்விக்கொள்கை-2020'இன் அமலாக்கம் தொடர்பாக உத்தரவு பிறப்பித்த நாட்டின் முதல் மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது என்று மாநில உயர்கல்வி அமைச்சர் CN அஸ்வத் நாராயண் கூறினார். நடப்பு கல்வியாண்டு 2021-2022 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், தேசிய கல்விக்கொள்கை-2020 அமல்படுத்துவது குறித்து கர்நாடக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

---

2. செயற்கை நுண்ணறிவின்மூலமான கண்டுபிடிப்பு ஒன்றுக்கு காப்புரிமை வழங்கிய உலகின் முதல் நாடு எது?

அ) தென்னாப்பிரிக்கா ☑

ஆ) இங்கிலாந்து

இ) ஆஸ்திரேலியா

ஈ) சுவீடன்

✓ செயற்கை நுண்ணறிவின் (AI) மூலம் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புக்கு காப்புரிமை வழங்கிய உலகின் முதல் நாடாக தென்னாப்பிரிக்கா மாறி உள்ளது. பிராக்டல் வடிவவியலை அடிப்படையாகக் கொண்ட உணவு கொள்கலன் அமைப்புக்கு அந்நாடு காப்புரிமை வழங்கியுள்ளது. DABUS (Device for Autonomous Bootstrapping of Unified Sentience) எனப்படும் AI அமைப்பால் அவ்வமைப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

✓ இந்த DABUS'ஐ ஸ்டீபன் தாலர் என்பவர் உருவாக்கியுள்ளார். இது சிக்கலான செயல்பாடுகளைச் செய்யக்கூடியது என்பதால் படைப்பாற்றல் எந்திரங்கள் என்று குறிப்பிடப்படுகிறது. கெட்டுப்போன உணவுகள் குறித்த எச்சரிக்கைகள், அவசர எச்சரிக்கை அமைப்பு போன்றவை DABUS'இன் முக்கிய செயல்பாடுகளாகும்.

---

3. உஜ்வாலா 2.0 திட்டத்தை, பிரதமர் மோடி, எம்மாநிலத்திலிருந்து தொடங்கினார்?

அ) இராஜஸ்தான்

ஆ) உத்தர பிரதேசம் ☑

இ) மேற்கு வங்கம்

ஈ) அஸ்ஸாம்

✓ உத்தர பிரதேசத்தின் மகோபாவில் சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்கி, உஜ்வாலா 2.0 (பிரதமரின் உஜ்வாலா திட்டம்) திட்டத்தை பிரதமர் மோடி காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கிவைத்தார்.

✓ முன்னெப்போதும் இல்லாத எண்ணிக்கையிலான மக்களின், குறிப்பாக பெண்களின் வாழ்வை உஜ்வாலா திட்டம் ஒளிமயமாக்கியுள்ளதாக பிரதமர் கூறினார். சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடியான மங்கள் பாண்டேவின் சொந்த ஊரான உத்தர பிரதேசத்தின் பாலியாவிலிருந்து கடந்த 2016ஆம் ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

---

4. வேளாண் தானியங்கி வானிலை நிலையங்களை நிறுவிய நிறுவனம் எது?

அ) இந்திய வானிலை மையம் ☑

ஆ) DRDO

இ) CSIR

ஈ) NDMA

✓ நாட்டு மக்களுக்கு, குறிப்பாக உழவர்களுக்கு துல்லியமான வானிலை முன்னறிவிப்பை வழங்குவதற்காக இந்திய வானிலை ஆய்வு மையம் வேளாண் தானியங்கி வானிலை நிலையங்களை நிறுவியுள்ளது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சிலின் கீழுள்ள கிரிஷி விக்யான் மையங்களில் அமைந்துள்ள மாவட்ட அக்ரோமெட் அலகுகளில் அவை நிறுவப்பட்டுள்ளன.

5.ராம்சார் தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 'பிந்தவாஸ்' அமைந்துள்ள மாநிலம் எது?

அ) குஜராத்

ஆ) இராஜஸ்தான்

இ) ஒடிஸா

ஈ) ஹரியானா ☑

✓ சமீபத்தில், இந்தியாவிலிருந்து மேலும் நான்கு ஈரநிலங்கள் ராம்சார் செயலகத்திலிருந்து ராம்சார் தளங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத் தளங்கள், குஜராத்தைச் சார்ந்த 'வாத்வானா' மற்றும் 'தோல்' மற்றும் ஹரியானாவைச் சார்ந்த 'சுல்தான்பூர்' மற்றும் 'பிந்தவாஸ்'. இதன்மூலம் இந்தியாவில் உள்ள ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 46 ஆக மாறி உள்ளது. மேலும், இந்தத் தளங்களின் பரப்பளவு தற்போது 1,083,322 ஹெக்டேர் அளவுக்கு உயர்ந்துள்ளது.

✓ இந்த அங்கீகரிப்பின்மூலம் ஹரியானா மாநிலம் அதன் முதல் ராம்சார் தளத்தையும், 2012'இல் அறிவிக்கப்பட்ட நால்சரோவருக்குப்பின் குஜராத் மேலும் மூன்று ராம்சார் தளத்தையும் பெறுகிறது.

---

6. எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில், நடப்பாண்டின் (2021) முதலீட்டாளர் உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்படுகிறது?

அ) மகாராஷ்டிரா

ஆ) குஜராத் ☑

இ) கர்நாடகா

ஈ) தில்லி

✓ முதலீட்டாளர் உச்சிமாநாடு குஜராத் அரசால் சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்படுகிறது.

✓ இம்முதலீட்டாளர் உச்சிமாநாடு, அலங்காவில் உள்ள கப்பல் உடைக்கும் தொழிலகம் வழங்கும் ஒருங்கிணைந்த ஸ்கிராப்பிங் மையத்தின் வளர்ச்சியில் கவனஞ்செலுத்தும். குஜராத் மாநிலத்தின் காந்திநகரில் இது நடத்தப்படுகிறது. இந்த உச்சிமாநாட்டில் பல்வேறு முதலீட்டாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசு அமைச்சகங்களின் பங்கேற்பு இருக்கும். தேசிய வாகன அழிப்புக் கொள்கையானது 2021 ஆக.13 அன்று பிரதமரால் அறிவிக்கப்பட்டது.

---

7. COVID தொற்றுக்கு மத்தியில் பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு உலக சுகாதார அமைப்பின் தலைமை அறிவியலாளர் உலக நாடுகளை வலியுறுத்தியுள்ளார். உலக சுகாதார அமைப்பின் தற்போதைய தலைமை அறிவியலாளர் யார்?

அ) ககன்தீப் காங்

ஆ) மரியா வான் கெர்கோவ்

இ) Dr சௌமியா சுவாமிநாதன் ☑

ஈ) நார்மன் போர்லாக்

✓ உலக நலவாழ்வு அமைப்பின் தலைமை அறிவியலாளர் Dr சௌமியா சுவாமிநாதன், COVID தொற்றுநோய்க்கு மத்தியில் பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு நாடுகளை வலியுறுத்தினார்.

✓ COVID-19 மறைமுகமாக கல்வியை பெரிதும் பாதித்துள்ளது. எனவே, சரியான உடல்நலத்தை பராமரிக்கும் அதேவேளையில் பள்ளி திறப்புக்கு முன்னுரிமை அளிக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். COVID-19 தொற்றுநோய் காரணமாக, 1.5 பில்லியன் சிறார்களின் கல்வி பாதிப்பு அடைந்துள்ளது. 2021 ஜனவரி மாதத்தில், கல்வி உரிமை மன்றம் தனது அறிக்கையை வெளியிட்டது. அதில், COVID தொற்றுநோய் காரணமாக, இந்தியாவில், 10 மில்லியன் பெண்கள் இடைநிலைப்பள்ளிக்கல்வியை விட்டு வெளியேறக் கூடும் எனக் கூறப்பட்டுள்ளது.

---

8. எந்த நிறுவனத்துடன் இணைந்து, அரசு மின்னணு சந்தை தளமானது தேசிய பொது கொள்முதல் மாநாட்டின் 5ஆவது பதிப்பை ஏற்பாடு செய்துள்ளது?

அ) இந்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை கூட்டமைப்பு

ஆ) ASSOCHAM

இ) NASSCOM

ஈ) இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு ☑

✓ அரசு மின்னணு சந்தை தளம், இந்திய தொழிற்துறை கூட்டமைப்புடன் இணைந்து தேசிய பொது கொள்முதல் கூட்டத்தின் ஐந்தாவது பதிப்பை ஆக.9 மற்றும் 10 ஆகிய தேதிகளில், "தொழில்நுட்பத்துடன் கூடிய அரசு கொள்முதல்–தரம், வெளிப்படைத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை நோக்கி" என்ற கருப்பொருளில் நடைபெற்றது. மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல், ஆக.9 அன்று காணொலி வாயிலாக இந்தக் கூட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

---

9. நடப்பாண்டில் (2021) 7 TRIFED வான் தன் விருதுகளை வென்ற மாநிலம் எது?

அ) அருணாச்சல பிரதேசம்

ஆ) நாகாலாந்து ☑

இ) சிக்கிம்

ஈ) இமாச்சல பிரதேசம்

✓ பல்வேறு பிரிவுகளில் முன்மாதிரியான செயல்திறனுக்காக வான் தன் விகாஸ் யோஜனா (VDVY) மற்றும் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) திட்டங்களில் ஏழு மதிப்புமிக்க தேசிய விருதுகளை நாகாலாந்து மாநிலம் வென்றுள்ளது.

✓ VDVY மற்றும் MSP'க்கான சிறு வன உற்பத்திப்பொருட்கள் திட்டமானது விவசாயிகளின் தொழில்முனைவுத் திட்டங்களில் உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களின் செயலாக்கம், கட்டுதல், சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் கவனஞ்செலுத்துகிறது என அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த ஆய்வு, சிறந்த பயிற்சி மற்றும் அதிக எண்ணிக்கையிலான வான் தன் விகாஸ் கொத்துகளை நிறுவியது ஆகிய மூன்று பிரிவுகளில் நாகாலாந்து முதலிடத்தில் உள்ளது.

---

10. ஸ்கைட்ராக்ஸ் உலக வானூர்தி நிலைய விருதுகள் – 2021'இல், உலகின் முதல் 50 சிறந்த வானூர்தி நிலையங்களுள் ஒன்றென இடம்பெற்றுள்ள இந்திய வானூர்தி நிலையம் எது?

அ) சத்ரபதி சிவாஜி மகாராஜா சர்வதேச விமான நிலையம், மும்பை

ஆ) இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், தில்லி ☑

இ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் விமான நிலையம், கொல்கத்தா

ஈ) இராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையம், ஹைதராபாத்

✓ நடப்பாண்டின் (2021) ஸ்கைட்ராக்ஸ் உலக வானூர்தி நிலைய விருது தரவரிசை சமீபத்தில் வெளியிடப்பட்டது. அதில் தில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், 2021'இல் உலகின் சிறந்த 50 விமான நிலையங்களில் ஒன்றென இடம்பெற்றுள்ளது. தில்லி விமான நிலையமானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தியாவின் சிறந்த விமான நிலையமாக இடம்பெறுகிறது. மும்பை, ஹைதராபாத் மற்றும் பெங்களூரு ஆகியவை உலகின் 100 சிறந்த விமான நிலையங்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளன.

✓ ஸ்கைட்ராக்ஸ்–2021 உலக விமான நிலையத்தின் விருது பட்டியலில், தில்லி, 45ஆவது இடத்தில் உள்ளது. 2020ஆம் ஆண்டில் 50ஆவது இடத்தில் அது இருந்தது. இந்த நிலையை அடைந்த முதல் இந்திய விமான நிலையம் தில்லி விமான நிலையம் ஆகும். ஹைதராபாத், 64 ஆவது இடத்தில் உள்ளது. மும்பை, 65ஆவது இடத்தில் உள்ளது. பெங்களூரு, 71ஆவது இடத்தில் உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சேதி தெரியுமா?

ஜூலை.24: டோக்கியோ ஒலிம்பிக் 49 கிலோ பளு தூக்கும் பிரிவில் இந்தியாவின் சாய்கோம் மீராபாய் சானு இந்தியாவுக்கு முதல் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். 2000 சிட்னி ஒலிம்பிக்கில் பளு தூக்கும் பிரிவில் கர்ணம் மல்லேஸ்வரி வெண்கலப் பதக்கம் வென்ற பிறகு இந்தியா வென்றுள்ள பதக்கம் இது.

ஜூலை.24: திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கும் முத்துக்கலிங்கன் கிருஷ்ணனை நியமித்து மத்தியக் கல்வி அமைச்சகம் உத்தரவிட்டது.

ஜூலை.25: ரஷ்யாவில் நடைபெற்ற 'சர்வதேச கணித ஒலிம்பியாட் 2021' போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 5 பதக்கங்களை இந்திய மாணவர்கள் வென்றனர். இது உலகின் பழமையான அறிவியல் போட்டி.

ஜூலை.26: ஹங்கேரியில் நடைபெற்ற உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை பிரியா மாலிக் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

ஜூலை.26, 29: தெலங்கானாவில் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள 13–ஆம்நூற்றாண்டைச் சேர்ந்த ராமப்பா கோயில், குஜராத்தில் கட்ச் பகுதியில் உள்ள தொன்மையான ஹரப்பா நகரான தோலாவீரா ஆகியவற்றை உலகப் பாரம்பரிய சின்னங்களாக யுனெஸ்கோ அறிவித்தது.

ஜூலை.27: தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களைக் கவுரவிக்க 'தகைசால் தமிழர்' என்கிற புதிய விருதைத் தமிழக அரசு உருவாக்கியது. இதன் முதல் விருதுக்குச் சுதந்திரப் போராட்ட வீரரும் நூற்றாண்டு கண்ட இடதுசாரி தலைவருமான என் சங்கரய்யா தேர்வு செய்யப்பட்டார்.

ஜூலை.27: கல்விச் சேர்க்கையில் வன்னியர் களுக்கு 10.5 சதவீதம், சீர்மரபினருக்கு 7 சதவீதம், இதர பிற்படுத்தபட்டோருக்கு 2.5 சதவீதம் சிறப்பு உள் ஒதுக்கீடு வழங்குவதற்கான அரசாணையைத் தமிழக அரசு வெளியிட்டது.

ஜூலை.29: கேரளத்தில் ஆண் அரசு ஊழியர்கள் திருமணத்தின்போது உயரதிகாரிகளிடம் வரதட்சணை மறுப்புச் சான்றிதழ் சமர்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

ஜூலை.30: புதுக்கோட்டையில் சங்ககால பழமை வாய்ந்த பொற்பனைக்கோட்டையில் அகழாய்வுப் பணிகள் தொடங்கின.

ஆக.1: டோக்கியோ ஒலிம்பிக்கில் பாட்மிண்டன் மகளிர் பிரிவில் இந்தியாவின் P V சிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். 2016–இல் வெள்ளிப் பதக்கம் வென்ற சிந்து, இப்போது வெண்கலம் வென்றதன் மூலம், ஒலிம்பிக்கில் தனிநபர் பிரிவில் தொடர்ச்சியாக இரு பதக்கங்களை வென்ற முதல் இந்திய வீராங்கனையாகியிருக்கிறார்.

---

1. பன்னாட்டு இளையோர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 07

ஆ) ஆகஸ்ட் 08

இ) ஆகஸ்ட் 10

ஈ) ஆகஸ்ட் 12 ☑

✓ உலக இளையோர் நாளானது ஆக.12 அன்று கொண்டாடப்படுகிறது "Transforming Food Systems: Youth Innovation for Human and Planetary Health" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருள் ஆகும். முதல் உலக இளையோர் நாள், 1999'இல் கொண்டாடப்பட்டது.

---

2. மின்சார வாகனங்களுக்கான மின்னேற்ற உட்கட்டமைப்பை நிறுவுவதற்கான கையேட்டை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ) தேசிய வளர்ச்சிக் கழகம்

ஆ) NITI ஆயோக் ☑

இ) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஈ) சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

✓ மின்சார வாகனங்களுக்கான மின்னேற்ற (charging) உட்கட்டமைப்பை நிறுவுவதற்கான கொள்கைகள் மற்றும் விதிமுறைகளை வகுப்பதில் மாநில அரசுகள் & உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டுவதற்கான கையேடு ஒன்றை NITI ஆயோக் வெளியிட்டது. மின்னேற்ற உட்கட்டமைப்பை மேம்படுத்தி மின்சார போக்குவரத்திற்கு நாடு வேகமாக மாறுவதற்கு உதவுவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும்.

✓ NITI ஆயோக், மின் அமைச்சகம், மின்சார சிக்கனத்திற்கான அலுவலகம் மற்றும் உலக வளங்கள் நிறுவனம், இந்தியா ஆகியவை இணைந்து இக்கையேட்டை உருவாக்கியுள்ளன.

---

3. தேசிய மருந்து விலையிடல் ஆணையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) கமலேஷ் குமார் பந்த் ☑

ஆ) சுப்ரா சிங்

இ) Dr ராகேஷ் சர்வால்

ஈ) Dr K ராஜேஸ்வர ராவ்

✓ கமலேஷ் குமார் பந்த் இ ஆ ப, மத்திய அமைச்சரவையின் நியமனக் குழுவால் தேசிய மருந்து விலையிடல் ஆணையத்தின் (NPPA) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமானத்திற்கு முன்பு இமாச்சல பிரதேச அரசாங்கத்தின் முதன்மைச் செயலாளர் (வருவாய்) & இமாச்சல பிரதேசத்தில் நிதி ஆணையர் (மேல்முறையீடு) & இமாச்சல பிரதேச மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத் தலைவராக பந்த் பணிபுரிந்துள்ளார்.

---

4. செயற்கைக்கோள் தொலைபேசி வசதிகொண்ட இந்தியாவின் முதல் தேசியப்பூங்கா எது?

அ) கசிரங்கா தேசியப்பூங்கா ☑

ஆ) கிர் தேசியப்பூங்கா

இ) ஆனைமுடி சோலை தேசியப்பூங்கா

ஈ) அன்ஷி தேசியப்பூங்கா

✓ கசிரங்கா தேசியப்பூங்காவானது செயற்கைக்கோள் தொலைபேசிகள் வசதிகொண்ட இந்தியாவின் முதல் தேசியப்பூங்காவாக மாறியுள்ளது. இச்செயற்கைக்கோள் தொலைபேசிகள் மொபைல் இணைப்புகளற்ற (அ) மோசமான சிக்னலுள்ள பூங்காவின் 6 சரகங்களில் பயன்படுத்தப்படும். பாரத் சஞ்சார் நிகம் லிட் வழங்கும் சேவைக்கான மாதாந்திர செலவை அந்தப் பூங்காவின் அதிகாரிகள் ஏற்றுக்கொள்வார்கள்.

---

5. உலக யானைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 10

ஆ) ஆகஸ்ட் 12 ☑

இ) ஆகஸ்ட் 14

ஈ) ஆகஸ்ட் 16

✓ உலக யானைகள் நாளானது ஆக.12 அன்று கடைபிடிக்கப்படுகிறது. யானைகள் பாதுகாப்பில் இந்நாள் கவனம் செலுத்துகிறது.

✓ யானைகளுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்குதல், தந்த வர்த்தகத்தை தடுப்பது, அமலாக்க கொள்கைகளை மேம்படுத்துதல், யானைகளின் வாழ்விடத்தை பாதுகாத்தல், சட்டத்துக்குப் புறம்பான வேட்டையைத் தடுத்தல், சிறைபிடிக்கப்பட்ட யானைகளை அவற்றின் இயற்கை வாழ்வு இடங்களில் கொண்டுவிடுதல் போன்ற முயற்சிகளை மேற்கொள்வதை உலக யானைகள் நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

6. எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில், உலகின் இரண்டாவது மிகப்பெரிய புதுப்பிக்கப்பட்ட அதிநவீன தேசிய மரபணு வங்கியை நரேந்திர சிங் தோமர் திறந்து வைத்தார்?

அ) புது தில்லி ☑

ஆ) உத்தர பிரதேசம்

இ) குஜராத்

ஈ) கோவா

✓ புது தில்லியில் உள்ள பூசாவில் உள்ள தேசிய தாவர மரபணு வளங்கள் பணியகத்தில் உலகின் இரண்டாவது பெரிய புதுப்பிக்கப்பட்ட அதிநவீன தேசிய மரபணு வங்கியை மத்திய உழவு & உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் திறந்துவைத்தார்.

✓ உயிரி வலுவூட்டப்பட்ட பயிர் வகைகளின் தேவையை உணர்ந்த அரசு அதனை சமாளிக்க முயற்சிக்கிறது. தாவர மரபணு வளங்களின் (PGR) விதைகளை வருங்கால சந்ததியினருக்குப் பாதுகாப்பதற்காக 1996ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தேசிய மரபணு வங்கி, விதைகளின் வடிவில் சுமார் ஒரு மில்லியன் ஜெர்ம்பிளாஸத்தை பாதுகாக்கும் திறன்கொண்டதாகும். தற்போது 2.7 லட்சம் இந்திய ஜெர்ம்ப்ளாசம் உள்ளது (மொத்தம் 4.52 லட்சம் ஜெர்ம்ப்ளாசங்கள் உள்ளன).

7.உலக தடகள தரவரிசையில் நீரஜ் சோப்ராவின் தரநிலை என்ன?

அ) 01

ஆ) 02 ☑

இ) 03

ஈ) 04

✓ 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் பெற்று, உலக தடகள தரவரிசையில் ஈட்டியெறி வீரர் நீரஜ் சோப்ரா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். நீரஜ் சோப்ரா, 1315 மதிப்பெண்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். முதலிடத்தில் 1396 மதிப்பெண்கள் பெற்ற ஜெர்மன் தடகள வீரர் ஜோஹன்னஸ் வெட்டர் உள்ளார்.

---

8. ஐந்து தனித்துவமான ஆப்பிள்களை பஹ்ரைனுக்கு ஏற்றுமதி செய்வதற்காக எந்த மாநிலத்துடன் APEDA ஒத்துழைத்துள்ளது?

அ) ஜம்மு & காஷ்மீர்

ஆ) இமாச்சல பிரதேசம் ☑

இ) உத்தரகாண்ட்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை புதிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் தனது முயற்சிகளின் தொடர்ச்சியாக, 5 பிரத்தியேக வகை ஆப்பிள்களை இமாச்சல பிரதேச தோட்டக்கலை பொருட்கள் சந்தைப்படுத்துதல் மற்றும் பதப்படுத்துதல் நிறுவனத்துடன் (HPMC) இணைந்து பஹ்ரைனுக்கு வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மற்றும் மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஏற்றுமதி செய்துள்ளது.

✓ இராயல் டெலிசியஸ், டார்க் பிரௌன் காலா, ஸ்கார்லெட் ஸ்பர், ரெட் வெலோக்ஸ் மற்றும் கோல்டன் டெலிசியஸ் ஆகிய இந்த வகைகள், இமாச்சல பிரதேசத்திலுள்ள விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டு APEDA'இல் பதிவுபெற்ற DM என்டர்பிரைசஸ் நிறுவனத்தால் ஏற்றுமதி செய்யப்பட்டது.

---

9. மாணிக் என்ற புதிய டர்போஃபேன் எஞ்சினுடனான குரூஸ் ஏவுகணையை சோதனை செய்த நாடு எது?

அ) இந்தியா ☑

ஆ) இஸ்ரேல்

இ) ஜெர்மனி

ஈ) ஜப்பான்

✓ இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'மாணிக்' டர்போஃபேன் எஞ்சின்மூலம் இயக்கப்படும் 'நிர்பை' என்ற உள்நாட்டு தொழில்நுட்ப குரூஸ் ஏவுகணையை ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாக சோதித்துள்ளது. இந்த ஏவுகணையை பெங்களூருவில் உள்ள DRDO ஆய்வகமான ஏரோநாட்டிக்கல் டெவலப்மெண்ட் எஸ்டாப்லிஷ்மெண்ட் வடிவமைத்துள்ளது. இந்த இயந்திரம் மற்றொரு DRDO ஆய்வகமான பெங்களூருவில் அமைந்துள்ள கேஸ் டர்பைன் ஆராய்ச்சி நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

✓ 1000 கிலோமீட்டர் தொலைவு சென்று தாக்கும் திறன்கொண்ட 'நிர்பை' சப்ஸானிக் ஏவுகணை, ஒடிசா கடற்கரையில் உள்ள ராணுவ சோதனை மையத்தில் இருந்து ஏவப்பட்டது; அது, 15 நிமிடங்களில் சுமார் 150 கிலோமீட்டரை கடந்துசென்றது.

---

10. உலக இடதுகை பழக்கமுள்ளவர்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 12

ஆ) ஆகஸ்ட் 13 ☑

இ) ஆகஸ்ட் 14

ஈ) ஆகஸ்ட் 15

✓ உலக இடதுகை பழக்கமுள்ளவர்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஆக.13 அன்று கொண்டாடப்படுகிறது. பெரும்பான்மையான மக்களைப் போலல்லாமல், இடதுகை பழக்கத்துடன் பிறந்தோரை அங்கீகரிக்கும் விதமாக இந்நாள் உள்ளது. உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 10–12 சதவீதத்தினர், இடதுகை பழக்கமுடையோராக உள்ளனர். இடதுகை பழக்கமுடையோரைக் கண்டு அஞ்சும் மக்களும் உள்ளனர். இந்நிலை சினிஸ்ட்ரோபோபியா (Sinistrophobia) என்று அழைக்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு: வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

தமிழகத்தில் செப். 1 முதல் பள்ளிகள் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பின்பற்றப்பட வேண்டிய கரோனா வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக மருத்துவத்துறை வெளியிட்டுள்ளது. கரோனா தொற்று காரணமாக 2020 மார்ச் மாதம் முதல் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன.

இந்நிலையில், கரோனா தொற்று குறைந்து வரும் நிலையில் மீண்டும் பள்ளிகள் திறப்பது குறித்து பள்ளிக்கல்வித்துறை பல்வேறு தரப்பினரிடையே ஆலோசனை மேற்கொண்டது. அதன் அடிப்படையில் செப்.1ஆம் தேதி 9 முதல் 12 வகுப்பு வரை 50 சதவீத மாணவர்களுடன் பள்ளிகளை திறக்க உத்தேச தேதியை தமிழக அரசு அறிவித்திருந்தது. இந்நிலையில், பள்ளிகள் திறக்கப்பட்டால் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை மாநில மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவத்துறை இன்று வெளியிட்டுள்ளது.

அனைத்து பள்ளிகளிலும் கிருமி நாசினி மற்றும் கைகழுவ தண்ணீர் உள்ளிட்டவை ஏற்பாடு செய்திருக்க வேண்டும்

கரோனா அறிகுறி உள்ள மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் பள்ளிக்கு வர அனுமதிக்க கூடாது

மாணவர்களுக்கு சத்து மாத்திரை மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையானவை வழங்க வேண்டும்

கரோனா தடுப்பூசி செலுத்த தகுதியான மாணவர்கள் அனைவரும் கட்டாயம் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும்

ஒரே நேரத்தில் 50 சதவீத மாணவர்கள் மட்டுமே அனுமதிக்க வேண்டும்

பள்ளி வளாகத்தை சுத்தமாக வைத்திருப்பதை பள்ளி நிர்வாகம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் உறுதி செய்யவேண்டும்

பள்ளிகளில் உள்ள மேஜைகள், கேண்டீன், கழிவறைகள், அனைத்து வகுப்பறைகள், நூலகம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்திருக்க வேண்டும்

பள்ளி வாகனங்களை கிளம்புவதற்கு முன்பாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்

பள்ளிகளில் ஒவ்வொரு இருக்கைக்கும் நடுவே குறைந்தது 6 அடி இடைவெளி இருக்க வேண்டும்

ஆசிரியர்கள் அறை, அலுவலகம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும்

பள்ளியின் கழிவறைக்கு வெளியே, கைக்கழுவுமிடம் உள்ளிட்ட பகுதிகளில் சமூக இடைவெளியை பின்பற்றி வட்டம் போடப்பட்டிருக்க வேண்டும்

பள்ளிகளில் விழாக்கள் அல்லது நிகழ்ச்சிகள் நடத்துவதை தவிர்க்க வேண்டும் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பள்ளிகளுக்கு வர அனுமதி இல்லை

---

2. பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.11,040 கோடியில் தேசிய திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

உள்நாட்டில் பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.11,040 கோடி மதிப்பிலான தேசிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை, மத்திய அமைச்சர்கள் அனுராக் தாக்குர், நரேந்திர சிங் தோமர் ஆகியோர் செய்தியாளர்களிடம் விவரித்தனர். அப்போது அனுராக் கூறியதாவது:

அடுத்த 5 ஆண்டுகளில் பாமாயில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் வெளிநாடுகளில் இருந்து அதை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கும் தேசிய அளவிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.11,040 கோடி செலவில் அந்தமான் நிகோபார் தீவுகளிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதில் மத்திய அரசின் பங்களிப்பாக ரூ.8,844 கோடியும், மாநில அரசுகளின் பங்களிப்பாக ரூ.2,196 கோடியும் செலவிடப்படும். மத்திய அரசின் 'தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்– பாமாயில் உற்பத்தி' என்ற திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றார் அவர்.

மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறியதாவது: நாடு முழுவதும் தற்சமயம், 3.70 லட்சம் ஹெக்டேரில் பாமாயில் சாகுபடி செய்யப்படுகிறது. வரும் 2025–26–ஆம் ஆண்டுக்குள் மேலும் 6.5 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு சாகுபடி பரப்பை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் பாமாயில் சாகுபடி பரப்பு 10 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கும். இதன் மூலம், வரும் 2025–26–ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு பாமாயில் உற்பத்தி 11.20 லட்சம் டன்னாகவும், 2029–30–ஆம் ஆண்டுக்குள் 28 லட்சம் டன்னாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாமாயில் சாகுபடியில் எண்ணெய் வித்துகள் வளர்த்து, லாபம் கிடைப்பதற்கு 5 முதல் 7 ஆண்டுகள் வரை ஆகும். அவ்வளவு காலம் சிறு விவசாயிகளால் காத்திருக்க முடியாது. மேலும், பாமாயில் வித்துகள் உற்பத்தியில் விவசாயிகள் வெற்றி பெற்றிருந்தாலும், அவர்களுக்கு உரிய விலை கிடைப்பதில் நிச்சயமின்மை நிலவி வந்தது.

வடகிழக்கு மாநிலங்களில் பாமாயில் சாகுபடி செய்வதற்கு உகந்த சூழல் உள்ளது. ஆனால், எண்ணெய் உற்பத்திக்கான தொழிற்சாலைகள் இல்லாததால் பாமாயில் சாகுபடி நடைபெறவில்லை. இவற்றைக் கருத்தில்கொண்டு பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க, அதனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய பாமாயில் உற்பத்தித் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதேபோன்று விவசாயிகளுக்கு முதல்முறையாக விலை உத்தரவாதமும் அளிக்கப்படவுள்ளது என்றார் அவர்.

வேளாண் சந்தைப்படுத்துதல் நிறுவனத்தை வலுப்படுத்த ரூ.77.45 கோடி: வடகிழக்கு பிராந்திய வேளாண் சந்தைப்படுத்துதல் நிறுவனத்தை ரூ.77.45 கோடியில் வலுப்படுத்தும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதுகுறித்து மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் கூறியதாவது: பொதுத் துறை நிறுவனமான வடகிழக்கு பிராந்திய வேளாண் சந்தைப்படுத்துதல் நிறுவனம், வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது. அந்த நிறுவனத்தை ரூ.77.45 கோடியில் வலுப்படுத்த பிரதமர் மோடி தலைமையிலான

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் சிறந்த சாகுபடி முறைகள், விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல், இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை உர பயன்பாட்டை ஊக்குவித்தல், அறுவடைக்குப் பிந்தைய பணிகள் போன்ற புதுமையான திட்டங்களை அந்த நிறுவனம் அமல்படுத்துவதற்கு இந்த நிதியுதவி உதவிகரமாக இருக்கும். இதன்மூலம், வடகிழக்கு மாநில விவசாயிகளின் விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பது உறுதிசெய்யப்படும். மேலும், உற்பத்திப்பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதன்மூலம் வடகிழக்கு விவசாயிகளின் விளைபொருள்களை சர்வதேச சந்தைகளில் விற்பனை செய்ய ஊக்கப்படுத்த முடியும். நிறுவனத்தின் வருவாய் அதிகரித்து செலவுகளும் குறையும். நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 33,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றார் அவர்.

புவியியல் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு:

புவியியல் ஆராய்ச்சியில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்திய புவியியல் ஆய்வு மையம், அமெரிக்காவின் புளோரிடா சர்வதேச பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அதிகாரிகள் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தியா–ஸ்விட்சர்லாந்து இடையே ஒப்பந்தம்:

மருத்துவ ஆராய்ச்சியில் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், ஸ்விட்சர்லாந்தின் எதிர் நுண்ணுயிர்த் தடுப்பு ஆராய்ச்சி அமைப்புக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதேபோல், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் ஸ்விட்சர்லாந்தின் பவுண்டேஷன் பார் இன்னோவேட்டிவ் நியூ டயக்னாஸ்டிக்ஸ் நிறுவனத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

---

3. தென்சீனக் கடல் பகுதியில் இந்தியா– வியத்நாம் கடற்படை பயிற்சி

தென்சீனக் கடல் பகுதியில் இந்தியா–வியத்நாம் கடற்படைகள் கூட்டாக போர் பயிற்சியில் ஈடுபட்டன. பல்வேறு வளங்களைக் கொண்டுள்ள தென்சீனக்கடல்பகுதியையொட்டி வியத்நாம், பிலிப்பின்ஸ், சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் உள்ளன. அங்கு பிற நாடுகளைப் பின்தள்ளிவிட்டு தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட சீனா முயன்று வருகிறது. இந்தச் சூழ்நிலையில் வியத்நாமுடன் இணைந்து இந்தியா அப்பகுதியில் கூட்டுப் பயிற்சி நடத்தியுள்ளது.

இப்பயிற்சிக்கு சீனா ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்திய கடற்படையின் ரன்விஜய் ஏவுகணை போர்க்கப்பல், ஐஎன்எஸ் கோரா ஆகியவை இப்பயிற்சியில் பங்கேற்றன.

வியத்நாமை ஒட்டியுள்ள தென்சீனக் கடல் பகுதியில் எண்ணெய் துரப்பணப் பணிகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. எனவே, தென்சீனக்கடல் உரிமை தொடர்பான பிரச்னையில் சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா கொண்டுள்ளது. எனவே, இந்தக் கடற்படைப் பயிற்சி கூடுதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தென்சீனக்கடலில் பெரிய அளவில் ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட வளங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, அக்கடல் பகுதி முழுமைக்கும் சீனா உரிமை கொண்டாடி வருகிறது. அதே நேரத்தில் தென்சீனக்கடலில் எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ள வியத்நாம், பிலிப்பின்ஸ், புருணே உள்ளிட்ட நாடுகளும் அக்கடல் பகுதியில் தங்கள் உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

---

4. இந்தியாவில் முதல்முறையாக வியத்நாம் துணைத் தூதரகம்

இந்தியாவில் முதல்முறையாக வியத்நாம் துணைத் தூதரகம் பெங்களூரில் திறக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பெங்களூரில் புதன்கிழமை வியத்நாம் நாட்டுக்கான இந்திய தூதர் பான் சன் சௌ செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரில் திறக்கப்பட்டுள்ள வியத்நாம் துணைத் தூதரகத்தின் கௌரவ துணைத் தூதராக என் எஸ் சீனிவாஸ் மூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

வியத்நாம் மற்றும் இந்தியாவுக்கு இடையே முதலீடுகளை மேம்படுத்துவதற்காகவே துணைத் தூதரகம் திறக்கப்பட்டுள்ளது. வியத்நாமின் 80 சதவீத மக்கள் பெய்த்த மதத்தை பின்பற்றி வருவதால், இந்தியாவுக்கும் வியத்நாமுக்கும் இடையே வரலாற்று ரீதியான தொடர்பு உள்ளது.

வியத்நாமின் 26ஆவது முதலீட்டு பங்குதாரராக இந்தியா உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான தொழில் முதலீட்டு உறவை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். மருந்து, ஆட்டோமொபைல் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பத் துறைகளில் முதலீடு செய்ய வியத்நாம் சிறந்த நாடாகும். அந்நாட்டில் முதலீடு செய்வதற்கான எல்லா வாய்ப்புகளும் பெங்களூரில் உள்ளன என்றார்.

---

5. ஜூனியர் மல்யுத்தம்: இந்தியாவுக்கு 6 பதக்கங்கள்

ரஷியாவில் நடைபெற்ற உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் பிரிவில் இந்தியாவுக்கு ஒரு வெள்ளி, 5 வெண்கலம் என 6 பதக்கங்கள் கிடைத்துள்ளன. ஆடவருக்கான 61 கிலோ பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் ரவீந்தர் 3–9 என்ற கணக்கில் ஈரான் வீரர் ரஹ்மான் மௌசா அமௌசத்காலிலியிடம் வீழ்ந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். ஆடவருக்கான பிளே ஆஃப் சுற்றில் 74 கிலோ பிரிவில் இந்தியாவின் யாஷ் 12–6 என்ற கணக்கில் கிர்ஜிஸ்தானின் ஸ்டாம்புல் ஜானிபெக்கை வென்றார். 92 கிலோ பிரிவில் பிருத்வி பாபாசாஹேப் பாட்டீல் 2–1 என்ற கணக்கில் ரஷியாவின் இவான் கிரிலோவை வீழ்த்தி வெண்கலம் வென்றார். 125 கிலோ பிரிவில் அனிருத் 7–2 என்ற கணக்கில் அஜர்பைஜானின் அய்தின் அஹமதோவை வென்றார். இவர்களுக்கு முன் கௌரவ் பல்யான் (79 கிலோ), தீபக் (97 கிலோ) ஆகியோரும் வெண்கலப் பதக்கம் வென்றிருந்தனர்.

மகளிருக்கான 76 கிலோ பிரிவில் இந்தியாவின் பிபாஷா அதிரடியாக 6–3 என்ற கணக்கில் கஜகஸ்தானின் தில்னாஸ் முல்கினோவாவையும், 9–4 என்ற கணக்கில் மங்கோலியாவின் ஆட்பாக் அல்ஸிபாட்டையும் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். 50 கிலோ பிரிவில் இந்தியாவின் சிம்ரன் அரையிறுதியில் அமெரிக்காவின் எமிலி கிங் ஷில்சனிடம் தோல்வி கண்டார். இதர இந்திய போட்டியாளர்களான சிதோ (55 கிலோ), குசும் (59 கிலோ), அர்ஜு (68 கிலோ) ஆகியோர் தங்களது காலிறுதிச்சுற்றுகளில் தோற்று வெளியேறினர்.

---

6. யு–20 உலக தடகள சாம்பியன்ஷிப்: இந்திய கலப்பு ரிலே அணிக்கு வெண்கலம்

கென்யாவில் நடைபெறும் 20 வயதுக்கு உள்பட்டோருக்கான (யு–20) உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 4*400 மீட்டர் ரிலேவில் இந்திய கலப்பு அணி வெண்கலப் பதக்கம் வென்றது. இப்பிரிவின் தகுதிச்சுற்றில் இந்தியாவின் பரத் ஸ்ரீதர், பிரியா மோகன், சும்மி, கபில் ஆகியோர் அடங்கிய அணி 3 நிமிஷம் 23.3 விநாடிகளில் இலக்கை எட்டி 2–ஆவது அணியாக இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றிருந்தது. பின்னர் இறுதிச்சுற்றில் 3 நிமிஷம் 20.60 விநாடிகளில் இலக்கை எட்டி 3–ஆம் இடம் பிடித்தது அதே இந்திய அணி. நைஜீரியா அணி 3 நிமிஷம் 19. 70 விநாடிகளில் வந்து தங்கமும், போலந்து அணி 3 நிமிஷம் 19.80 விநாடிகளில் வந்து வெள்ளியும் வென்றன.

இந்தப் போட்டியின் வரலாற்றில் இந்தியா வென்ற 5–ஆவது பதக்கம் இதுவாகும். இதற்கு முன் 2002–இல் வட்டு எறிதல் வீராங்கனை சீமா அன்டில் வெண்கலமும், 2014–இல் வட்டு எறிதல் வீராங்கனை நவ்ஜீத் கௌர் தில்லான் வெண்கலமும், 2016–இல் ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தங்கமும், 2018–இல் ஓட்டப் பந்தய வீராங்கனை ஹீமா தாஸ் தங்கமும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

7. தமிழகம், புதுவை ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது

தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வான ஆசிரியர்கள் பட்டியலை மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்த சர்வபள்ளி ராதாகிருஷ்ணனை போற்றும் வகையில் அவரது பிறந்த நாளான செப்டம்பர் 5–ஆம் தேதி ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

நாட்டில் ஆசிரியர் பணியில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு இந்நாளில் தேசிய நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதிலும் இருந்து 44 ஆசிரியர்களை மத்திய கல்வி அமைச்சகம் தேர்வு செய்துள்ளது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து திருச்சி மாவட்டம், பிராட்டியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியை கே ஆஷா தேவி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை டி லலிதா ஆகிய இருவரும் விருதுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஆசிரியர் ஆஷா தேவி மாணவர்களுக்கு 10'க்கும் மேற்பட்ட தனித்திறன் பயிற்சிகள் வழங்குவது, மாணவா'கள் எண்ணிக்கையை அதிகரித்தது போன்ற பல்வேறு செயல்பாடுகளில் சிறந்து விளங்கியுள்ளார். அதேபோன்று ஆராய்ச்சி சார்ந்த கல்வியை, தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கற்றுக்கொடுக்கும் செயல்முறைகளை ஆசிரியர் லலிதா அறிமுகப்படுத்தியுள்ளார்.

இதேபோன்று புதுச்சேரி மணப்பட்டு அரசு நடுநிலைப்பள்ளியைச் சேர்ந்த அறிவியல் ஆசிரியர் வி ஜெயசுந்தரும் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். கிராமப்புற மாணவர்களுக்கு புதுமையான முறையில் கல்வி கற்பிப்பதால் இவ்விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார். வழக்கமாக தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் தில்லி விக்யான் பவனில் செப்.5ஆம் தேதி குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் கையால் விருது வழங்கப்படும். கடந்த ஆண்டு கரோனா தொற்றுப் பரவல் காரணமாக அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடியரசுத்தலைவர் சார்பில் காணொலிக்காட்சிமூலம் விருதுகள் வழங்கப்பட்டன.

---

8. துபை மருத்துவப் பல்கலையில் சிறப்பிடம் பெற்ற வேதாரண்யம் மாணவிக்கு 'கோல்டன்' விசா

துபை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பார்மஸி பட்டப்படிப்பில் சிறப்பிடம் பெற்ற வேதாரண்யம் மாணவிக்கு, அந்நாட்டரசு 10 ஆண்டுகளுக்கான 'கோல்டன்' விசா வழங்கி பாராட்டியுள்ளது.

நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகே உள்ள தோப்புத் துறையை சேர்ந்தவர் ஷர்மினா பேகம் பஷீர் அகமது. இவர், துபை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பார்மஸி முதுகலை பட்டம் படித்து முடித்துள்ளார். பல்கலைக்கழக அளவிலான தேர்ச்சி மதிப்பீட்டில், ஷர்மினா பேகம் பஷீர் அகமது 2ஆம் இடம்பிடித்தார். இதைத்தொடர்ந்து, அந்நாட்டு அரசின் அறிவிப்பின்படி, 10 ஆண்டுகளுக்கான 'கோல்டன்' விசா அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

9. உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் மணிமேகலை

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை காப்பியம் உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது.

பௌத்த சமயம் உலகம் முழுவதும் பரவியிருந்தாலும், தற்போது அச்சமயத்துக்கான முழுமையான காப்பியமாக இருப்பது தமிழிலுள்ள மணிமேகலை மட்டுமே. சிலப்பதிகாரத்துக்கு அடுத்ததாக இலக்கிய அழகில் பெருமை வாய்ந்த இக்காப்பியத்தை எழுதியவர் சீத்தலைச் சாத்தனார். துறவறத்தை வலியுறுத்தும் இக்காப்பியத்தின்மூலம் 1,500 ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய பல சமூக சீர்திருத்தக் கருத்துகளை அறிந்துகொள்ளமுடிகிறது.

பசி ஒழிப்பு, மது ஒழிப்பு, குற்றச்செயல் ஒழிப்பு, சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக மாற்றுதல், சகிப்புத் தன்மை உள்ளிட்டவற்றை வலியுறுத்தும் மணிமேகலை காப்பியத்தை உலக அளவில் கொண்டு செல்ல வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இக்காப்பியத்தை உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தொடங்கியுள்ளது. இதில், முதல்கட்டமாக தாய்லாந்தின் தாய், சீனம், ஜப்பானியம், கொரிய, பர்மிய, வியத்நாம், மலாய், சிங்களம், கம்போடியம், இந்தோனேஷியம், மங்கோலியம் உள்பட 18 மொழிகளில் மொழிபெயர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், முதல் மொழியாக தாய்லாந்திலுள்ள தாய் மொழியில் மொழிபெயர்ப்பதற்கான ஆணை சமீபத்தில் வழங்கப்பட்டது. இதை தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த முனைவர் சுவித் விபுல்ஸ்ரசத் மொழிபெயர்க்கிறார்.

---

1. பிரிவினையின் அதிர்ச்சி ஏற்பட்டதன் நினைவு தினமாக (Partition Horrors Remembrance Day) அறிவிக்கப்பட்டுள்ள தேதி எது?

அ) ஆகஸ்ட் 10

ஆ) ஆகஸ்ட் 12

இ) ஆகஸ்ட் 14 ☑

ஈ) ஆகஸ்ட் 18

✓ நமது மக்களின் போராட்டங்கள் மற்றும் தியாகங்களின் நினைவாக, ஆகஸ்ட்.14ஆம் தேதி, பிரிவினையின் அதிர்ச்சி ஏற்பட்டதன் நினைவு தினமாகக் கடைப்பிடிக்கப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

---

2. அமெரிக்க கடற்படை தலைமையிலான தென்கிழக்கு ஆசிய கூட்டுறவு & பயிற்சி (SEACAT) என்ற ராணுவப் பயிற்சியில் இந்திய கடற்படை பங்கேற்றுள்ளது. இந்தப் பயிற்சி எங்கே நடைபெற்றது?

அ) ஆஸ்திரேலியா

ஆ) புருனே

இ) சிங்கப்பூர் ☑

ஈ) திமோர்–லெஸ்டே

✓ சிங்கப்பூரில் அமெரிக்க கடற்படை தலைமையிலான தென்கிழக்கு ஆசிய கூட்டுறவு & பயிற்சி என்ற (SEACAT) இராணுவப் பயிற்சியில் இந்திய கடற்படை பங்கேற்றது. ஒன்றிணைந்து செயற்படுவதை மேம்படுத்துவது, கடல்சார் பாதுகாப்பு குறித்த சிக்கல்களைப் பகிர்ந்து கொள்வது மற்றும் விதிகள் அடிப்படையிலான பன்னாட்டு ஒழுங்கை பராமரிப்பது இந்த SEACAT–2021'இன் முக்கிய நோக்கமாகும்.

✓ பயிற்சியில் பங்கேற்கும் மற்ற நாடுகளுள் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், புருனே, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, மாலத்தீவு, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், தென் கொரியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து, திமோர்–லெஸ்டே, ஐக்கிய இராச்சியம் மற்றும் வியத்நாம் ஆகியவை அடங்கும். முதன்முதலில் கடந்த 2002ஆம் ஆண்டில் இந்த SEACAT பயிற்சி நடத்தப்பட்டது.

---

3. முதன்முறையாக டிரோன் தடயவியல் ஆய்வகம் & ஆராய்ச்சி மையத்தை தொடங்கியுள்ள மாநிலக் காவல்துறை எது?

அ) தமிழ்நாடு

ஆ) இராஜஸ்தான்

இ) கேரளா ☑

ஈ) பீகார்

✓ அதிகரித்துவரும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் நோக்கில் கேரள மாநிலக் காவல்துறை, முதன்முறையாக, டிரோன் தடயவியல் ஆய்வகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை தொடங்கியுள்ளது. டிரோன்களின் அச்சுறுத்தல் அம்சங்களுக்கு தீர்வுகாண்பதோடு, ஆளில்லா வான்வழி வாகனங்களின் பயன்பாட்டுப் பகுதியையும் கண்காணிக்கும் பணியை இந்த ஆய்வகம் & ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளும். கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், இந்தத் தடயவியல் ஆய்வகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை திறந்துவைத்தார்.

4.நடப்பாண்டு உலக உயிரி எரிபொருள் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ) Promotion of Biofuels for a Better Environment ☑

ஆ) Promote Green Fuels & Save Earth

இ) End use of Fossil Fuels

ஈ) Save Green Planet

✓ வழக்கமான புதைபடிவ எரிபொருட்களுக்கு மாற்றாக புதைபடிவம் சாராத எரிபொருட்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் ஆக.10 அன்று உலக உயிரி எரிபொருள் நாள் அனுசரிக்கப்படுகிறது. உயிரி எரிபொருள் துறையில் அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னெடுப்புகளையும் இந்நாள் சிறப்பிக்கிறது. நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Promotion of Biofuels for a Better Environment" ஆகும்.

---

5. உலக உடலுறுப்புதான நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 10

ஆ) ஆகஸ்ட் 13 ☑

இ) ஆகஸ்ட் 14

ஈ) ஆகஸ்ட் 16

✓ மக்கள் தங்களின் விலைமதிப்பற்ற உடலுறுப்புகளை தானம் செய்வதை ஊக்குவிப்பதற்காக, ஆண்டுதோறும் ஆக.13 அன்று உலக உடலுறுப்பு தான நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ ஆண்டுதோறும், உடலுறுப்பு மாற்று சிகிச்சைக்காக காத்திருப்போரில் சுமார் ஐந்து இலட்சம் பேர், உடலுறுப்பு கிடைக்காத காரணத்தினால் மரணிக்கிறார்கள். உடலுறுப்பு மாற்று சிகிச்சைக்கு காத்திருப்போரின் எண்ணிக்கைக்கும், உடலுறுப்பு கிடைக்கும் எண்ணிக்கைக்கும் இடையே பெருமளவு வித்தியாசம் உள்ளது. உடலுறுப்பு தானம் என்பது நோயுற்று, உடலுறுப்பு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மற்றொருவர் அந்த உடலுறுப்பைத் தானமாக அளிப்பதாகும். இதை, ஒருவர், உயிருடன் இருக்கும்போதோ அல்லது இறந்தபிறகோ மேற்கொள்ளமுடியும். சிறு நீரகம், நுரையீரல், இருதயம், கண், சிறு குடல், கல்லீரல், கணையம், விழிப்படலம், தோல் திசுக்கள், எலும்புத்திசுக்கள், இதயக்குழாய்கள் மற்றும் நரம்புகள் ஆகியவற்றை ஒருவர் தானமாக வழங்கவியலும்.

---

6. சமீபத்தில் உலக நிழற்பட நாள் கடைப்பிடிக்கப்பட்ட தேதி எது?

அ) ஆகஸ்ட் 18

ஆ) ஆகஸ்ட் 19 ☑

இ) ஆகஸ்ட் 20

ஈ) ஆகஸ்ட் 21

✓ நிழற்படக்கலையையும், அதில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட்.19 அன்று உலக நிழற்பட நாள் கொண்டாடப்படுகிறது. 19ஆம் நூற்றாண்டில் லூயிஸ் டாகுவேரே என்பவர் 'டாகுரியோடைப்' என்ற நிழற்பட செயல்முறையை வடிவமைத்தார். பிரான்ஸ் அகாடமி இம்முயற்சியை 1839 ஜன.9 அன்று அறிவித்தது. அதன்பின், 1839'இல் பிரான்ஸ் நாட்டு அரசு, ஆக.19 அன்று 'டாகுரியோடைப்' செயல்பாட்டை உலக மக்கள் அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தலாம் என அறிவித்தது.

✓ அந்த ஆகஸ்ட்.19ஆம் தேதிதான் உலகம் முழுவதும் நிழற்பட நாளாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. 1826'இல், பிரான்ஸ் நாட்டவரான ஜோசப் நைஸ்போர் நீப்ஸ் என்பவர், முதல் நிலையான நவீன நிழற்படத்தை எடுத்தார்.

---

7. உலக மனிதநேய நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 18

ஆ) ஆகஸ்ட் 19 ☑

இ) ஆகஸ்ட் 20

ஈ) ஆகஸ்ட் 21

✓ உலக மனிதநேய நாள் (World Humanitarian Day) என்பது மனிதநேயப் பணியாளர்களையும், மனிதநேய காரணங்களுக்காக தம் இன்னுயிரை இழந்தவர்களையும் நினைவுகூரும் ஒரு சிறப்பு நாளாகும். 2003 ஆக.19 அன்று பாக்தாத்தில் உள்ள ஐநா தலைமையகத்தில் நிகழ்ந்த வெடி குண்டுத்தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். அதனை நினைவு கூரும் விதமாக ஆண்டுதோறும் ஆகஸ்ட்.19 அன்று உலக மனிதநேய நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

---

8. இந்தியாவில் சமூக நல்லிணக்க நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 20 ☑

ஆ) ஆகஸ்ட் 18

இ) ஆகஸ்ட் 15

ஈ) ஆகஸ்ட் 14

✓ 1984 – 1989 வரை இந்தியாவின் 6ஆவது பிரதமராக பணியாற்றினார் இராஜீவ் காந்தி. 1984ஆம் ஆண்டு தனது தாயார் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாற்பதாவது வயதில் இளவயது

இந்திய பிரதமராக பதவியேற்றார். 1991 மே.21ஆம் தேதி அன்று, இராஜீவ், தமிழ்நாட்டில் உள்ள திருப்பெரும்புதூரில் நடந்த தேர்தல் பேரணியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) மனித வெடிகுண்டுத்தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டார். அவரது நினைவுநாள், "தேசிய பயங்கரவாத எதிர்ப்பு நாளாகவும்" அனுசரிக்கப்படுகிறது.

---

9. உலக மூத்த குடிமக்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 20

ஆ) ஆகஸ்ட் 21 ☑

இ) ஆகஸ்ட் 22

ஈ) ஆகஸ்ட் 23

✓ முதியோர்களை பாதிக்கும் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.21 அன்று உலக மூத்த குடிமக்கள் நாள் கொண்டாடப்படுகிறது. முதியோர்கள் சமுதாயத்திற்கு அளித்த பங்களிப்புகளை இந்நாள் அங்கீகரிக்கிறது & ஏற்றுக்கொள்கிறது. முதியோர்களின் அர்பணிப்பு, சாதனைகள் மற்றும் வாழ்நாள் முழுவதும் அவர்கள் இந்தச்சமுதாயத்திற்கு வழங்கிய சேவைகளை பாராட்டுவதற்கு இந்நாள் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

---

10. புதிய இணையவெளி பாதுகாப்பு பல் வழங்குநர் அறக்கட்டளை நிதியத்தைத் (Cybersecurity Multi–Donor Trust Fund) தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஆ) ஐரோப்பிய மத்திய வங்கி

இ) இந்திய ரிசர்வ் வங்கி

ஈ) உலக வங்கி ☑

✓ உலக வங்கி அதன் திட்டங்கள் மற்றும் நிதியுதவி ஆகியவற்றில் சைபர் பாதுகாப்பு கருதுகோள்களின் கணிசமான பிரதிபலிப்பை உறுதி செய்ய உதவும் வகையில், சைபர் பாதுகாப்பு மேம்பாட்டு நிகழ்ச்சி நிரலை சிறப்பாக வரையறுக்கவும் மற்றும் முறையாக உருவாக்கவும் புதிய இணையவெளி பாதுகாப்பு பல் வழங்குநர் அறக்கட்டளை நிதியத்தைத் அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ உலக வங்கியின் பரந்த டிஜிட்டல் மேம்பாட்டு கூட்டாண்மை குடையின் கீழ் ஓர் அறக்கட்டளை நிதியமாக உருவாக்கப்பட்டுள்ள இந்த நிதியம் எஸ்டோனியா, ஜெர்மனி, ஜப்பான் மற்றும் நெதர்லாந்தினைச் சார்ந்த நன்கொடையாளர்களின் பங்களிப்புடன் தொடங்கப்பட்டது. நாடுகளும் அதன் குடிகளும் தற்போதைய டிஜிட்டல் மாற்றம் மற்றும் வளர்ச்சியை முழுமையாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்திக் கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு இது உதவுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. போர்விமானங்களைப் பாதுகாக்க அதிநவீன தொழில்நுட்பம்: டிஆர்டிஓ உருவாக்கம்

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான போர் விமானங்களை எதிரி நாட்டு ஏவுகணை தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வகையில், அதிநவீன 'சாஃப்' தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ளது.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம், எதிரி நாட்டு ஏவுகணைகளைத் திசை திருப்பிவிட்டு போர் விமானங்கள் பாதுகாப்பாக தப்பித்துவிட முடியும். இதன் சோதனை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, இந்தத் தொழில்நுட்பத்தை போர் விமானங்களில் சேர்க்கும் பணிகளை இந்திய விமானப் படை தொடங்கியுள்ளது.

இதுகுறித்து டிஆர்டிஓ வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஜோத்பூர் மற்றும் புணேயில் உள்ள டிஆர்டிஓ ஆய்வகங்கள் இணைந்து உருவாக்கியுள்ள இந்த நவீன தொழில்நுட்பம், போர் விமானத்தில் பொருத்தும் வகையிலான 'சாஃப்' கேட்ரிட்ஜ் – 118/ஐ' என்ற கருவி உருவாக்கப்பட்டுள்ளது. அதில், சிறு அலுமினியம் அல்லது துத்தநாகம் பூசப்பட்ட நார்த் துகள்கள் லட்சக்கணக்கில் அடைக்கப்பட்டிருக்கும். போர் விமானம் பறந்து கொண்டிருக்கும்போது, இந்தத் துகள்களை வெளியேற்றி காற்றில் பறக்கவிடுவதன் மூலம், தாக்க வரும் எதிரி நாட்டு ஏவுகணையை ரேடார் உதவியுடன் திசை திருப்பிவிட முடியும். அதன் மூலம் போர்விமானத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

வான்படையின் தொடர் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில், அதிக எண்ணிக்கையில் இந்தக் கருவியை உற்பத்தி செய்வதற்காக உற்பத்தி நிறுவனங்களுடன் இத்தொழில்நுட்பம் பகிர்ந்துகொள்ளப்பட உள்ளது என்று டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

---

2. ஜூனியர் மல்யுத்தம்: பிபாஷாவுக்கு வெள்ளி

ரஷியாவில் நடைபெறும் உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்திய வீராங்கனை பிபாஷா வெள்ளி வென்றார். அத்துடன் இரு வெண்கலப் பதக்கங்களும் இந்தியாவுக்கு கிடைத்தது. இதில் பிபாஷா, 76 கிலோ பிரிவு இறுதிச்சுற்றில் அமெரிக்காவின் கைலி ரெனீ வெல்கரிடம் தோற்று வெள்ளி பெற்றார்.

62 கிலோ கிராம் பிரிவு வீராங்கனையான சஞ்சு தேவி, அரையிறுதியில் அஜர்பைஜானின் பிர்குல் சோல்டானோவாவை 8–5 என்ற கணக்கில் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். அதில் அவர் ரஷியாவின் அலினா கசாபிவாவை எதிர்கொள்ள இருக்கிறார்.

அதேபோல், 65 கிலோ பிரிவு அரையிறுதியில் இந்திய வீராங்கனை பாதேரி – ருமேனியாவின் அமினா ரோக்ஸானா கபெஸானை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றார். அதில் மால்டோவாவின் இரினா ரிகான்சியை அவர் சந்திக்கிறார்.

வெண்லகப் பதக்கத்துக்கான சுற்றுகளில் 50 கிலோ பிரிவில் சிம்ரன் 7–3 என்ற கணக்கில் பெலாரஸின் நடாலியா வராகினாவையும், 55 கிலோ பிரிவில் சிதோ – தொழில்நுட்பப் புள்ளிகள் அடிப்படையில் துருக்கியின் மெல்டா டெரென்க்ஸியையும் வீழ்த்தினர். குசும் (59 கிலோ), ஸ்னேஹா (72 கிலோ) ஆகியோர் அந்தச் சுற்றில் தோல்வி கண்டனர். பிங்கி (53 கிலோ), மான்சி (57 கிலோ) ஆகியோர் காலிறுதியில் தோற்றனர்.

---

3. சைடஸ் கேடிலா கரோனா தடுப்பூசிக்கு DCGI ஒப்புதல்: சிறார்களுக்கும் செலுத்த அனுமதி

கரோனா தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டின் அடிப்படையில் பயன்படுத்த இந்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு ஆணையம் (DCGI) ஒப்புதல் அளித்தது. பிளாஸ்மிட் டிஎன்ஏ அடிப்படையில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் தடுப்பூசி இது என்பதோடு, இந்தியாவில் 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் செலுத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் முதல் தடுப்பூசி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கடந்த ஜனவரி 16ஆம் தேதி முதல் கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கோவேக்ஸின்' மற்றும் சீரம் நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் 'கோவிஷீல்ட்' ஆகிய இரண்டு தடுப்பூசிகளும் அவசரகால பயன்பாட்டின் அடிப்படையில் முதலில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. பின்னர், ரஷியாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசிக்கு அனுமதி அளிக்கப்பட்டு, இந்தியாவில் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த தடுப்பூசிகள் அனைத்தும், இரண்டு தவணைகளாக 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு செலுத்தக் கூடிய தடுப்பூசிகளாகும்.

இப்போது, நான்காவதாக குஜராத் மாநிலம் ஆமதாபாத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சைடஸ் கேடிலா மருந்து நிறுவனம், மத்திய உயிரி தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து முழுவதும் உள்நாட்டில் உருவாக்கியுள்ள 'சைகோவ்–டி' தடுப்பூசியை அவசரகால பயன்பாடு அடிப்படையில் பயன்படுத்த இந்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

வித்தியாசம் என்ன?

இது நாட்டில் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள மூன்று தடுப்பூசிகளைப் போல் அல்லாமல், 3 தவணைகளாக செலுத்தக்கூடிய தடுப்பூசியாகும். இது, முதல் முறையாக 12 முதல் 18 வயது வரையிலான சிறார்களுக்கும் செலுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பிளாஸ்மிட் டிஎன்ஏ அடிப்படையில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் தடுப்பூசி இதுவாகும்.

இது 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் தட்பவெப்பநிலையில் சேமித்து வைக்கப்படுகிறது. இருந்தபோதிலும், 25 டிகிரி செல்ஷியஸ் தட்பவெப்ப நிலையில் குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு நல்ல நிலைத்தன்மையை இந்த தடுப்பூசி கொண்டிருப்பது தெரியவந்துள்ளது. அதன் காரணமாக இந்த தடுப்பூசியை பல்வேறு பகுதிகளுக்கு அனுப்புவது எளிது என்பதோடு, குளிரூட்டிகளில் ஏற்படும் பிரச்னை காரணமாக தடுப்பூசி வீணாவதும் குறையும்.

இந்த தடுப்பூசி பயன்பாட்டில் உள்ள மற்ற தடுப்பூசிகளைப் போன்று ஊசி மூலமாக அல்லாமல், 'ஃபார்மா ஜெட்' முறையை பயன்படுத்தி வலி இல்லாத வகையில் உடலில் செலுத்தக் கூடிய தடுப்பூசி என்று சைடஸ் கேடிலா நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆண்டுக்கு 10 முதல் 12 கோடி தடுப்பூசிகள் உற்பத்தி செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய உயிரி தொழில்நுட்பத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சைடஸ் கேடிலாவின் தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டின் அடிப்படையில் பயன்படுத்துவதற்கான ஒப்புதலை டிசிஜிஐ அளித்தது. இது கரோனா நோய் பாதிப்பிலிருந்து சிறந்த பாதுகாப்பைத் தரும் என்பதோடு, உடலில் நோய் எதிர்ப்புத் திறனை நன்கு ஊக்குவிக்கும்.

இத்தடுப்பூசி, உருமாற்றம்பெறும் கரோனா தீநுண்மிகளுக்கு எதிராகவும் சிறப்பாக செயல்படக் கூடியதாகும். இந்த தடுப்பூசி 28,000 தன்னார்வலர்களுக்கு செலுத்தப்பட்டு நடத்தப்பட்ட மூன்றாம் கட்ட பரிசோதனையில், 66.6 சதவீத செயல்திறன் இருப்பது தெயிவந்துள்ளது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய கரோனா தடுப்பூசி பரிசோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது என்று தெரிவித்துள்ளது.

---

4. உலக டேபிள் டென்னிஸ்: மணிகா–சத்தியன் ஜோடி சாம்பியன்

உலக டேபிள் டென்னிஸ் கன்டென்டர் போட்டியில் இந்தியாவின் மணிகா பத்ரா / ஜி சத்தியன் இணை கலப்பு இரட்டையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றது. மணிகா/சத்தியன் இணை தனது இறுதி ஆட்டத்தில், உலகின் 94ஆம் நிலையில் இருக்கும் ஹங்கேரிய ஜோடியான டோரா மதரசாஸ் / நான்டோர் எக்செகியை 11–9, 9–11, 12–10, 11–6 என்ற செட்களில் வீழ்த்தியது.

மணிகா / சத்தியன் இணை கலப்பு இரட்டையரில் அதிகம் இணைந்து பங்கெடுத்திருக்காத நிலையில், இந்த சாம்பியன் பட்டம் அவர்களுக்கு நினைவில் நிற்கக் கூடியதாக அமைந்துள்ளது. கலப்பு இரட்டையர் பிரிவில் மணிகா, மூத்த வீரரான சரத் கமலுடன் இணைந்து ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலம் வென்றுள்ளார். இந்த ஜோடி சமீபத்தில் டோக்கியோ ஒலிம்பிக்கிலும் களம் கண்டது.

இந்த உலக டேபிள் டென்னிஸ் போட்டியில் கலப்பு இரட்டையரில் சாம்பியனாகியுள்ள மணிகா, மகளிர் ஒற்றையரில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது. டோக்கியோ ஒலிம்பிக்கில் முதல் சுற்றிலேயே தோற்று வெளியேறிய சத்தியனுக்கு இந்தப் பட்டம் ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.

---

5. மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆவணி மூலத் திருவிழா: இறைவன் விறகு விற்ற திருவிளையாடல்

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆவணி மூலத்திருவிழாவில், இறைவன் விறகுவிற்ற லீலையுடன் திருவிளையாடல்கள் நிறைவடைந்தன.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் நடைபெறும் திருவிழாக்களில் முக்கியமானது ஆவணி மூலத்திருவிழா. ஆகஸ்ட் 5 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய ஆவணி மூலத் திருவிழாவில், மதுரையில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அனைத்தும் நிகழ்த்தப்படுகின்றன.

இதைத்தொடர்ந்து, கோயில் 2ஆம் பிரகாரத்தில் சந்திரசேகர் உற்சவம் ஆக.10ஆம் தேதி வரை நடைபெற்றது. ஆகஸ்ட்.11'இல் கருங்குருவிக்கு உபதேசத்துடன் திருவிளையாடல்கள் தொடங்கின. அதையடுத்து, நாரைக்கு முக்தியளித்தது, மாணிக்கம் விற்ற திருவிளையாடல், தருமிக்கு பொற்கிழி அருளியது, சிவனடியாருக்கு உலவாக்கோட்டை அருளியது, பாணனுக்கு அங்கம் வெட்டியது மற்றும் திருஞானசம்பந்தர் சைவ சமய ஸ்தாபித வரலாறு, வளையல் விற்ற திருவிளையாடல் மற்றும் அன்று இரவு பட்டாபிஷேகம், நரியை பரியாக்கிய லீலை ஆகியன நடைபெற்றன.

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பிட்டுக்கு மண் சுமந்த லீலை கோயில் வளாகத்தில் நடைபெற்றது. தொடர்ந்து, பத்தாம் நாளன்று இறைவன் விறகு விற்ற லீலை நடைபெற்றது. இதில், தலையில் விறகு சுமக்கும் கோலத்துடன் சுந்தரேசுவரர் பிரியாவிடை மீனாட்சியம்மனுடன் எழுந்தருளினார். இத்துடன், கோயிலில் ஆவணி மூலத்திருவிழா திருவிளையாடல்கள் நிறைவடைந்தன.

---

1. தலித் பந்து திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) தெலுங்கானா ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) சத்தீஸ்கர்

✓ தெலுங்கானா மாநிலத்தின் உசூர்நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சலபள்ளி கிராமத்தில் தலித் பந்து திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

✓ தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்குவதன்மூலம் அவர்களின் வருமானம் ஈட்டும் செயல்பாட்டைத் தேர்வுசெய்வதற்காக தலா ₹10 இலட்சம் நிதியுதவியை வழங்கி முதலமைச்சர் கே சந்திரசேகர் ராவ் இத்திட்டத்தை தொடங்கிவைத்தார். மேலும், ஒரு தனி பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்படும். தலித் பந்து சமிதிகள், கிராமம் முதல் மாநில அளவில் பல்வேறு நிலைகளில் நிறுவப்படும். மேலும் அவற்றிடம், தலித் பாதுகாப்பு நிதியத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் ஒப்படைக்கப்படும்.

---

2. பிரதான் மந்திரி கதிசக்தி முன்னெடுப்பில் முதலீடு செய்யப்படும் தொகை எவ்வளவு?

அ) ₹150 இலட்சம் கோடி

ஆ) ₹300 இலட்சம் கோடி

இ) ₹200 இலட்சம் கோடி

ஈ) ₹100 இலட்சம் கோடி ☑

✓ பிரதமர் நரேந்திர மோடி ஆகஸ்ட் 15, 2021 அன்று ₹100 லட்சம் கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதான் மந்திரி கதிசக்தி முன்னெடுப்பை அறிவித்தார். இந்த முன்னெடுப்பு, இந்தியாவில் வாழும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும். இது உட்கட்டமைப்பின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும். இது புதிய எதிர்கால பொருளாதார மண்டலங்களின் சாத்தியக்கூறுகளையும் அதிகரிக்கிறது.

---

3. உலக நீரழிவுக்கு முந்தையநிலை நாளாக கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 14 ☑

ஆ) ஆகஸ்ட் 18

இ) ஆகஸ்ட் 21

ஈ) ஆகஸ்ட் 23

✓ நீரழிவு நோயைப் பற்றிய விழிப்புணர்வை பரப்பவும், நீரழிவு நோயின் தாக்கத்தை சமன் செய்யவுமாக, முதல் உலகளாவிய நிகழ்வு, ஆகஸ்ட்.14 அன்று உலக நீரழிவுக்கு முந்தையநிலை நாளாக நடத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி ஆண்டுதோறும் ஆக.14ஆம் தேதி அன்று உலக நீரழிவுக்கு முந்தையநிலை நாள் கடைப்பிடிக்கப்படும். நீரழிவு நாளுக்கு 90 நாட்களுக்கு முன்னதாக இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

✓ நீரழிவு நோயின் முன்னேற்றத்தைத்தடுப்பதற்கு 90 நாட்கள் ஆகும். இந்தியாவில் வாழும் 9 கோடி மக்கள், நீரழிவுக்கு முந்தையநிலையுடன் வாழ்கின்றனர். இவர்களுள் கிட்டத்தட்ட 75 சதவீதத்தினர், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் நீரழிவு நோயால் பீடிக்கப்படுவார்கள்.

4.ஆயுர்வேதத்தில் உலகின் முதல் உயிரிவங்கி அமைக்கப்படவுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) உத்தரகாண்ட்

ஆ) உத்தர பிரதேசம்

இ) கோவா

ஈ) புது தில்லி ☑

✓ மத்திய ஆயுஷ் அமைச்சர் சர்பானந்த சோனோவால் சமீபத்தில் உலகின் முதல் ஆயுர்வேத உயிரி வங்கி புது தில்லியில் அமைக்கப்படும் என்று அறிவித்தார். AIIA என்பது புது தில்லியில் உள்ள ஒரு பொது ஆயுர்வேத மருத்துவ மற்றும் ஆராய்ச்சிநிறுவனமாகும். இது ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம், பல்வேறு ஆயுர்வேத துறைகளில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட படிப்புகளை வழங்குகிறது.

---

5. இந்தியா முழுவதும் உள்ள 20 தனியார் மருத்துவமனைகளால் மேற்கொள்ளப்படும் சுகாதார கேள்வி ஆய்வை (Health QUEST) தொடக்கி வைத்துள்ளவர் யார்?

அ) **டாக்டர் கே சிவன் ☑**

ஆ) டாக்டர் ஹர்ஷ் வர்தன்

இ) மன்சுக் எல் மாண்டவியா

ஈ) டாக்டர் பல்ராம் பார்கவா

✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) செயலாளரும் தலைவருமான டாக்டர் கே சிவன், இந்தியா முழுவதும் 20 தனியார் மருத்துவமனைகளால் மேற்கொள்ளப்படும் சுகாதார கேள்வி ஆய்வை (Health **QUEST** – **Q**uality **U**pgradation **E**nabled by **S**pace **T**echnology) முறையாகத் தொடங்கிவைத்தார். இந்த ஆய்வின் குறிக்கோள், மனிதத் தவறுகளை குறைப்பதும், மருத்துவமனைகளின் அவசர மற்றும் தீவிரச் சிகிச்சைப் பிரிவுகளில் சுழிய குறைபாடு மற்றும் தரமான சேவையை அடைவதும் ஆகும். இந்த ஆய்வு, ISRO'இன் தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கேற்ப, நாட்டில் நிலவும் சுகாதார அமைப்பின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

6. கீழ்காணும் எந்த இந்திய நகரத்தில், உலகின் முதல் நடமாடும் அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது?

அ) பெங்களூரு

ஆ) மும்பை

இ) கொல்கத்தா ☑

ஈ) சென்னை

✓ கொல்கத்தாவின் டிராம்களுக்குள் அமைக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் அருங்காட்சியகத்தை, இந்தியா விடுதலை அடைந்து 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கு வங்க போக்குவரத்து மற்றும் வீட்டுவசதி அமைச்சர் பிர்ஹத் ஹக்கீமால் திறந்துவைத்தார். சுதந்திரப் போராட்டம், பிரிவினை மற்றும் 1947 நிகழ்வுகளில் மக்களின் ஒற்றுமை குறித்து இந்த அருங்காட்சியகம் விளக்குகிறது. இது, டிசம்பர் மாத இறுதி வரை எஸ்ப்ளனேடில் (மத்திய கொல்கத்தா) காட்சிக்கு வைக்கப்படும். ஜன.1 முதல் நகரின் மற்ற பகுதிகளுக்குச் செல்லும்.

---

7. AFC மகளிர் ஆசிய கோப்பை 2022'க்கு முன்னதாக இந்திய மகளிர் கால்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராக தாமஸ் டென்னர்பி நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிகழ்வை நடத்தும் நாடு எது?

அ) சீனா

ஆ) ஜப்பான்

இ) இந்தியா ☑

ஈ) தென் கொரியா

✓ AFC மகளிர் ஆசிய கோப்பை இந்தியா – 2022'க்கு முன்னதாக, இந்திய மகளிர் கால்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராக தாமஸ் டென்னெர்பி பொறுப்பேற்கிறார். AFC மகளிர் ஆசிய கோப்பை – 2022, ஜன.20–பிப்.6 வரை இந்தியாவால் நடத்தப்படவுள்ளது.

✓ இந்தியாவின் U–17 உலகக்கோப்பை அணிக்கான பொறுப்பில் இருந்த டென்னர்பி, ஆசிய கோப்பை முடிந்தவுடன் அந்தப் பணிக்குத் திரும்புவார். 2022 AFC மகளிர் ஆசிய கோப்பை, AFC மகளிர் ஆசிய கோப்பையின் 20ஆவது பதிப்பாகும்.

---

8. அண்மையில், எந்நாட்டின் கடற்படையுடன் இணைந்து, இந்திய கடற்படை, தென்சீனக்கடலில் கூட்டுப்பயிற்சிகளை நடத்தியது?

அ) தாய்லாந்து

ஆ) ஜப்பான்

இ) கம்போடியா

ஈ) வியட்நாம் ☑

✓ தென்சீனக்கடலில் இந்திய கடற்படை கப்பல்கள் பணியமர்த்தப்பட்டு வருவதன் தொடர்ச்சியாக, வியட்நாம் கடற்படையுடன் இருதரப்பு கூட்டு பயிற்சியில் 2021 ஆகஸ்ட் 18 அன்று இந்திய கடற்படை ஈடுபட்டது. இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையேயான உறவை மேலும்

வலுப்படுத்துவதற்கும், இந்திய–வியட்நாம் இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

✓ போர் பயிற்சிகள், ஆயுத பயிற்சிகள் மற்றும் ஹெலிகாப்டர் செயல்பாடுகள் உள்ளிட்டவை கடல் பிரிவில் நடைபெற்றன. கடந்த பல வருடங்களாக இருகடற்படைகளுக்கிடையே நடந்துவரும் தொடர் உரையாடல்கள் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்தியுள்ளன.

---

9. பேரிடர் மேலாண்மைத் துறையில் எந்த நாட்டுடன் இந்தியா கூட்டாளியாக, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

அ) தென் கொரியா

ஆ) சுவிச்சர்லாந்து

இ) வங்காளதேசம் ☑

ஈ) நேபாளம்

✓ பேரிடர் மேலாண்மை, மீட்பு மற்றும் பாதிப்பு குறைப்பு துறைகளில் ஒத்துழைப்புடன் செயல்பட இந்தியா, வங்கதேசம் இடையே கடந்த மார்ச் மாதம் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இந்த ஒப்பந்தத்தால், இருதரப்பு பேரிடர் மேலாண்மை முறைகளால், இரு நாடுகளும் பயனடையும். பேரிடர் மேலாண்மை துறையில் தயார்நிலை, நடவடிக்கை, திறன் மேம்பாடு ஆகியவற்றை வலுப்படுத்த உதவும்.

10.எந்த ஆண்டுக்குள், ஏழைகளுக்கு, பல்வேறு திட்டங்களின் கீழ், வலுவூட்டப்பட்ட அரிசியை வழங்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளது?

அ) 2023

ஆ) 2022

இ) 2025

ஈ) 2024 ☑

✓ 2024ஆம் ஆண்டிற்குள் பல்வேறு திட்டங்களின்கீழ் ஏழைகளுக்கு செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்குவதாக பிரதமர் மோடி அறிவித்தார். இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாட்டை தீர்க்கும் பொருட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஏழைக்கும் ஊட்டச்சத்து வழங்குவது அரசாங்கத்தின் முன்னுரிமையாகும். ஏழைப்பெண்கள் மற்றும் ஏழை குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் இல்லாதது அவர்களின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது என்ற கருத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்திய சீன எல்லையில் 11,000 அடி உயரத்தில் மூலிகைப் பூங்கா

உத்தரகண்டில் இந்தியா–சீனா எல்லைப் பகுதிக்கு அருகே 11,000 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைப் பூங்கா திறந்துவைக்கப்பட்டது. சமோலி மாவட்டத்தின் மனா கிராமமானது இந்திய எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கடைசி கிராமமாகும். புகழ்பெற்ற பத்ரிநாத் கோயிலுக்கு அருகே இந்த கிராமம் அமைந்துள்ளது.

கடல்மட்டத்திலிருந்து சுமார் 11,000 அடி உயரத்தில் உள்ள அந்த கிராமத்தில் மூலிகைப் பூங்கா அமைக்கப்பட்டது. மத்திய அரசின் காடு வளர்த்தல் நிதித் திட்டத்தின் கீழ் உத்தரகண்ட் வனத் துறையால் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டது. நாட்டில் மிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைப் பூங்கா இதுவாகும். அந்தப் பூங்காவானது சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இது குறித்து உத்தரகண்ட் வனத்துறையின் தலைமை பாதுகாவலர் சஞ்சீவ் சதுர்வேதி கூறுகையில், "மூலிகைப் பூங்கா 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இமயமலையின் உயரமான பகுதிகளில் காணப்படும் சுமார் 40 மூலிகை இனங்கள் பூங்காவில் வளர்க்கப்பட்டுள்ளன.

அதில் பல்வேறு மூலிகை இனங்கள் அழியும் நிலையில் உள்ளவையாக சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு கூட்டமைப்பால் (ஐயுசிஎன்) அறிவிக்கப்பட்டவை. மருத்துவ குணங்கள் நிறைந்த பல்வேறு மூலிகைச் செடிகளும் பூங்காவில் வளர்க்கப்பட்டுள்ளன. பத்ரி துளசி, பத்ரி மரம், போஜ்பத்ரா மரம், ரித்தி, விருத்தி, ஜீவக், ரிஷ்பக், ககோலி, பிரம்மகமல், நீல்கமல், கூட் உள்ளிட்ட மூலிகைகளும் வளர்க்கப்பட்டுள்ளன" என்றார்.

2. பருவநிலை மாற்றத்தால் இந்திய சிறார்களுக்கு அதிக அச்சுறுத்தல்

பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த சிறார்களுக்கு அதிக அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக யுனிசெஃப் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் சிறார்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து ஐ.நா.வின் யுனிசெஃப் அமைப்பு ஆய்வு மேற்கொண்டது. அதையடுத்து, சிறார்களுக்கான பருவநிலை அச்சுறுத்தல் குறியீட்டை அந்த அமைப்பு முதல் முறையாக வெளியிட்டது.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் புயல்கள், வெப்பக் காற்றுகள் உள்ளிட்டவற்றால் சிறார்களின் சுகாதாரம், கல்வி, பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து அந்தக் குறியீடு வெளியிடப்பட்டுள்ளதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது. சிறார்களுக்கு அதிக அச்சுறுத்தல் காணப்படும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 26–ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 14–ஆவது இடத்திலும், வங்கதேசம் 15–ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 25–ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளம் (51), இலங்கை (61), பூடான் (111) ஆகியவை சிறார்களுக்குக் குறைந்த அச்சுறுத்தல் காணப்படும் நாடுகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

வெள்ளம், காற்று மாசுபாடு ஆகியவற்றால் ஏற்படும் சமூக–பொருளாதார விளைவுகளால் பெண்களும் சிறார்களும் அதிகமாக பாதிக்கப்பட வாய்ப்புள்ள 33 நாடுகளில் இந்தியாவையும் யுனிசெஃப் சேர்த்துள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் சுமார் 60 கோடி இந்தியர்கள் தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்வர் என்றும், உலகின் வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸுக்கு அதிகமாக உயர்ந்தால், இந்தியாவில் வெள்ளப்பெருக்கு நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உடனடி நடவடிக்கை அவசியம்: அறிக்கை தொடர்பாக யுனிசெஃப் அதிகாரிகள் கூறுகையில், 'பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் சிறார் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவர் என்பதை அறிந்து கொள்வதற்கும், அந்தப் பாதிப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த அறிக்கை உதவும்.

வறட்சி, வெள்ளம், காற்று மாசுபாடு ஆகிய பேரிடர்கள் தெற்காசியாவில் உள்ள லட்சக்கணக்கான சிறார்களை வீடற்றவர்களாக மாற்றுவதோடு அவர்களின் பட்டினிக்கும் காரணமாக இருக்கும். கரோனா தொற்று பரவல் அந்த அச்சுறுத்தலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. சிறாரின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசுகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்' என்றனர்.

---

3. நாட்டின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின்திட்டம் தொடக்கம்

நாட்டின் மிகப்பெரிய மிதவை சூரிய சக்தி ஒளிமின் திட்டத்தை ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினம், சிம்ஹாத்ரி அனல்மின் நிலையத்தின் நீர்த்தேக்கத்தில் தேசிய அனல்மின் கழகம் உருவாக்கியுள்ளது.

25 மெகாவாட் திறன் கொண்ட இந்தத் திட்டத்தை கடந்த 2018–ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது. தேசிய அனல்மின் கழகத்தின் மண்டல நிர்வாக இயக்குநர் திரு சஞ்சய் மதன் இந்தத் திட்டத்தை சனிக்கிழமை தொடக்கி வைத்தார். நீர்த்தேக்கத்தில் சுமார் 75 ஏக்கர் பரப்பளவில், ஒரு லட்சத்திற்கும் அதிகமான சூரியசக்தி ஒளிமின்னழுத்த தகடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுமார் 7,000 வீடுகளுக்கு ஒளியூட்டுவது மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 46,000 டன் கரியமில வாயுவின் பயன்பாட்டையும் இந்தத் திட்டம் குறைக்கும். மேலும் இதன் மூலம் ஆண்டிற்கு 1,364 மில்லியன் லிட்டர் தண்ணீர் சேமிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் 6700 வீடுகளின் தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. யு–20 உலக தடகள சாம்பியன்ஷிப் : நடைப் பந்தயத்தில் அமித் காத்ரிக்கு வெள்ளி

இருபது வயதுக்கு உள்பட்டோருக்கான (யு–20) உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 10,000 மீட்டர் நடைப் பந்தயத்தில் இந்தியாவின் அமித் காத்ரி (17) வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தினார். பந்தய இலக்கை அவர் 42 நிமிஷம் 17.94 விநாடிகளில் எட்டி 2–ஆம் இடம் பிடித்தார். கென்யாவின் ஹெரிஸ்டோன் வன்யோனி (42:10.84) முதலிடமும், ஸ்பெயினின் பால் மெக்ராத் (42:26.11) 3–ஆம் இடமும் பிடித்தனர். முன்னதாக, ஃபெடரேஷன் கோப்பை ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றிருக்கும் அமித் காத்ரிக்கு, இது

முதல் சா'வதேச போட்டியாகும். அந்த தேசிய சாம்பியன்ஷிப்பில் பந்தய இலக்கை 40 நிமிஷம் 40.97 விநாடிகளில் எட்டியதே அவரது தனிப்பட்ட 'பெஸ்ட்' ஆகும்.

இப்போட்டியில் இந்தியாவுக்கு இது 2–ஆவது பதக்கமாகும். முன்னதாக கலப்பு ரிலே 4*400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவுக்கு கடந்த புதன்கிழமை வெண்கலப் பதக்கம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

---

5. ஆக. 26 முதல் 'மலபார்' கூட்டு கடற்படைப் பயிற்சி

நாற்கரக் கூட்டமைப்பு (க்வாட்) நாடுகளான இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகியவை பங்கேற்கும் 'மலபார்' கூட்டு கடற்படைப் பயிற்சி வரும் 26–ஆம் தேதிமுதல் நடைபெறவுள்ளது. இந்தியா–அமெரிக்கா கடற்படைகள் பங்கேற்ற மலபார் கூட்டுப் பயிற்சியானது கடந்த 1992–ஆம் ஆண்டுமுதல் ஆண்டுதோறும் நடைபெற்று வந்தது. கடந்த 2015–இல் இந்தப் பயிற்சியில் ஜப்பான் இணைந்தது. கடந்த ஆண்டு நடைபெற்ற பயிற்சியில் ஆஸ்திரேலியா இணைந்தது. நடப்பாண்டுக்கான மலபார் கூட்டு கடற்படைப் பயிற்சி அமெரிக்காவின் குவாம் தீவில் வரும் 26–ஆம் தேதிமுதல் 29–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தப் பயிற்சியில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கடற்படைக் கப்பல்கள் பங்கேற்கின்றன.

பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய கடற்படைக் கப்பல்களான ஷிவாலிக், காட்மாட் ஆகியவை சனிக்கிழமை குவாம் தீவை அடைந்தன. கூட்டுப் பயிற்சி குறித்து இந்தியக் கடற்படையின் செய்தித் தொடர்பாளர் விவேக் மத்வால் கூறுகையில், "நாடுகளுக்கு இடையேயான இயங்கு தன்மையை மேம்படுத்தவும், சிறந்த செயல்முறைகளைக் கற்றுக் கொள்ளவும், கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடைமுறைகளில் பரஸ்பர புரிதலை வளர்த்துக் கொள்ளவும் இந்தப் பயிற்சி உதவும்.

இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், ஹெலிகாப்டர்கள், தொலைதூர கடல்சார் கண்காணிப்பு விமானம் ஆகியவை பயிற்சியில் பங்கேற்கவுள்ளன. கரோனா தொற்று பரவல் கட்டுப்பாடுகளுக்கு இடையேயும் இந்தப் பயிற்சிகள் நடைபெறுவதன் மூலம், கடல்சார் பாதுகாப்பின்மீது 'க்வாட்' நாடுகள் கொண்டுள்ள உறுதித்தன்மை வெளிப்படுகிறது. தரை, ஆகாயம், நீர்ப்பகுதிகள், நீருக்கு அடியில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிப்பது தொடர்பான செயல்முறைப் பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நீர்மூழ்கிக் கப்பல்கள், ஏவுகணைகளைத் தாக்கி அழித்தல் உள்ளிட்ட பயிற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

பயிற்சியில் பங்கேற்கும் ஐஎன்எஸ் ஷிவாலிக், காட்மாட் ஆகியவற்றில் பல்வேறு ஆயுதங்களும் சென்சார்களும் பொருத்தப்பட்டுள்ளன. ஹெலிகாப்டர்களை சுமந்து செல்லும் வசதி கொண்ட இந்த இரண்டு கப்பல்களும் இந்தியாவின் போர் கட்டமைப்புத் திறனை எடுத்துரைக்கும்' ' என்றார். இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் சூழலில், 'க்வாட்' கூட்டமைப்பு நாடுகளின் கூட்டு கடற்படைப் பயிற்சி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

6. உலக சம்ஸ்கிருத தினம்: பிரதமர் வாழ்த்து

உலக சமஸ்கிருத தினத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். சமஸ்கிருத மொழியில் சுட்டுரையில் தமது வாழ்த்துகளை அவர் மக்களிடம் பகிர்ந்துள்ளார். கடந்த 1969–ஆம் ஆண்டு முதல் உலக சம்ஸ்கிருத தினம் ஆகஸ்ட் 22–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் இந்த நாளில் அந்த மொழியை மேம்படுத்துவதற்கான கருத்தரங்குகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

---

7. உலக தடகளப் போட்டி: வெள்ளி வென்றார் ஷைலி சிங்

20 வயதுக்குட்பட்டோர் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி மகளிர் நீளம் தாண்டுகலில் வெள்ளிப் பதக்கம் வென்றார் இந்தியாவின் ஷைலி சிங். கென்ய தலைநகர் நைரோபியில் நடைபெறும் இப்போட்டியின் ஒரு பகுதியாக ஞாயிற்றுக்கிழமை நீளம் தாண்டுதல் போட்டி நடைபெற்றது. இதில் ஸ்வீடன் வீராங்கனை மஜா அஸ்காக் 6.60 மீ தூரம் குதித்து தங்கப் பதக்கம் வென்றார். இந்தியாவின் ஷைலி 6.59 மீ தூரம் குதித்து வெள்ளி வென்றார். உக்ரைன் வீராங்கனை மரியா 6.50 மீ தூரத்துடன் வெண்கலம் வென்றார். 1 செ.மீ தூரத்தில் தங்கப் பதக்கத்தை இழந்தார் ஷைலி சிங். உலக சீனியர் தடகளப் போட்டி நீளம் தாண்டுதலில் வெண்கலம் வென்ற அஞ்சு பாபி ஜார்ஜின் அகாதெமியில் பயிற்சி பெறுகிறார் ஷைலி. இப்போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

---

1. உலக இளையோர் வில்வித்தை சாம்பியன்ஷிப்பில், இந்தியா, எத்தனை தங்கப்பதக்கங்களை வென்றது?

அ) 1

ஆ) 2

இ) 3 ☑

ஈ) 4

✓ வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியா மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. உலக இளைஞர் வில்வித்தை சாம்பியன்சிப் போட்டியில், இந்திய அணி, 15 பதக்கங்களை வென்றது. 2021 உலக வில்வித்தை இளைஞர் சாம்பியன்ஷிப் போட்டியானது போலந்தின் வுரோக்லாவில் நடைபெற்றது. 15 பதக்கங்களில், மகளிர் மற்றும் ஆடவர் 'காம்பவுண்ட்' நிகழ்வு மற்றும் கலப்பு அணி நிகழ்வுகளில் மூன்று தங்கப்பதக்கங்களை இந்தியா வென்றது. இறுதிப்போட்டியில், பெண்கள் அணி துருக்கியை 228–216 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது.

---

2. ஓராண்டு முழுவதும் நடைபெறும் அம்ரித் மகோத்சவ் வினாடி வினா திட்டத்தை தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ) AIR ☑

ஆ) CSIR

இ) இஸ்ரோ

ஈ) NITI ஆயோக்

✓ அகில இந்திய வானொலியானது (AIR) தேசிய மற்றும் பிராந்திய அலைவரிசைகளில் 'ஆசாதி கா சபர் ஆகாஷ்வாணி கே சாத்' என்ற தனித்துவமான புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக அகில இந்திய வானொலியின் செய்தி சேவைகள் பிரிவினால், ஓராண்டு கால–த்திற்கு அம்ரித் மகோத்சவ் வினாடிவினா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

3. 'Freedom Cyclothon' என்ற சைக்கிள் பேரணியைத் தொடங்கி உள்ள அமைப்பு எது?

அ) எல்லை பாதுகாப்பு படை ☑

ஆ) உள்துறை அமைச்சகம்

இ) இந்திய விமானப்படை

ஈ) டிஆர்டிஓ

✓ இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, எல்லை பாதுகாப்பு படையின் (BSF) தலைமை இயக்குநர் SS தேஸ்வால், ஜம்மு–காஷ்மீரின் RS புரா பகுதியில் இருந்து 'பிரீடம் சைக்ளோத்தான்' என்ற சைக்கிள் பேரணியைத் தொடக்கிவைத்தார்.

✓ இந்தச் சைக்கிள் பேரணி ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய 4 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கும். புதிய இந்தியா கட்டுடல் இந்தியா, ஆத்மநிர்பார் பாரத், ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம் மற்றும் தூய்மையான கிராமம் பசுமையான கிராமம் பற்றிய செய்திகளை பரப்புவதே இதன் நோக்கமாகும். இந்தச் சைக்கிள் பேரணி சுமார் 1993 கிமீட்டர் தூரத்தை கடந்து செல்லும்.

---

4. பொருளாதார வளர்ச்சி நிறுவன சங்கத்தின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

அ) டாக்டர் மன்மோகன் சிங்

ஆ) அமிதாப் காந்த்

இ) அஜய் தியாகி

ஈ) என்.கே.சிங் ☑

✓ 15ஆவது நிதி ஆணையத்தின் தலைவர் NK சிங், பொருளாதார வளர்ச்சி நிறுவன சங்கத்தின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1992 முதல் இந்தச் சங்கத்தின் தலைவராக இருந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கிற்குப் பிறகு NK சிங் இப்பதவிக்கு வந்துள்ளார்.

✓ உடல்நலக் காரணங்களுக்காக மன்மோகன் சிங் இந்தப் பதவியில் இருந்து விலகினார். மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்காக இந்த நிறுவனம் பணியாற்றுகிறது. கடந்த 1952ஆம் ஆண்டில் VKRV ராவால் நிறுவப்பட்ட இது, 1958இல்தான் செயல்பாட்டுக்கு வந்தது. புதுதில்லியின் தில்லி பல்கலைக்கழக வளாகத்தில் இது அமைந்துள்ளது.

5. இருதரப்பு கடற்படை பயிற்சியான 'கொங்கன்–2021'இல், எந்த நாட்டோடு இணைந்து இந்தியா பங்கேற்றுள்ளது?

அ) இலங்கை

ஆ) ஆஸ்திரேலியா

இ) ரஷ்யா

ஈ) ஐக்கிய இராச்சியம் ☑

✓ ஐக்கிய இராச்சியத்துடன் இருதரப்பு கடற்படை பயிற்சியான 'கொங்கன்–2021' பயிற்சியில் இந்தியா பங்கேற்றுள்ளது. இங்கிலாந்தின் போர்ட்ஸ் மௌத்தில், இந்திய கடற்படை மற்றும் பிரிட்டனின் ராயல் கடற்படைக்கு இடையே இந்தக் கடற்படை பயிற்சி நடைபெற்றது. இந்திய கடற்படை மற்றும் பிரிட்டனின் ராயல் கடற்படைக்கு இடையேயான வருடாந்திர இருதரப்பு பயிற்சியான கொங்கனில் INS தபார் பங்கேற்றது.

✓ இந்திய கடற்படையும் ராயல் கடற்படையும், 2004ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இப்பயிற்சியினை நடத்தி வருகின்றன.

---

6. உலகின் 50 'மாசுபட்ட நகரங்களுள்' இரண்டாவது மாசுபட்ட நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய நகரம் எது?

அ) காஜியாபாத் ☑

ஆ) கான்பூர்

இ) குருகிராம்

ஈ) தில்லி

✓ பிரிட்டிஷ் நிறுவனமான ஹவுஸ்பிரெஷ் தயாரித்த அறிக்கையின்படி, உத்தரபிரதேச மாநிலத்தின் காசியாபாத், 2020ஆம் ஆண்டில், உலகின் '50 மாசுபட்ட நகரங்களுள்' இரண்டாவது மாசுபட்ட நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின்படி காஜியாபாத் 106.6μg/m3இல் சராசரியாக 2.5 துகள் காற்றின் தரக்குறியீட்டை கொண்டுள்ளது.

✓ காஜியாபாத்தை விஞ்சி, சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் உள்ள ஹோதான் நகரம் 110.2μg/m3 என்ற PM2.5 உடன் மிகவும் மாசுபட்ட நகரமாக உள்ளது. ஹோதானின் இந்தக் காற்று மாசுபாட்டிற்கு மணல் புயல் காரணமாக அமைந்துள்ளது. அது தக்லிமகன் பாலைவனத்திற்கு அருகில் உள்ளது; அது உலகின் மிகப்பெரிய மணல் பாலைவனமாகும். காஜியாபாத்தைப் பொறுத்தவரை, மாசுபாட்டிற்கான காரணமாக அந்த நகரின் போக்குவரத்து கூறப்படுகிறது.

---

7. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள MyGov, எந்த அமைப்போடு இணைந்து அம்ரித் மகோத்சவ் ஸ்ரீசக்தி புத்தாக்க சவால் – 2021'ஐத் தொடங்குகிறது?

அ) பெண்களுக்கான உலக நிதியம்

ஆ) பெண்களுக்கான தேசிய அமைப்பு

இ) வுமன் பார் வுமன் இன்டர்நேஷனல்

ஈ) ஐநா பெண்கள் அமைப்பு ☑

✓ இந்தியாவின் 75ஆவது விடுதலை ஆண்டு நிறைவைக் கொண்டாடும் ஆசாதி கா அம்ரித் மஹோத்சவத்தையொட்டி, மின்னணு மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சகத்தின் கீழுள்ள 'மைகவ்' மற்றும் ஐநா பெண்கள் அமைப்பு இணைந்து அம்ரித் மகோத்சவ் ஸ்ரீசக்தி புத்தாக்க சவால் 2021 என்றவொன்றை உருவாக்கியுள்ளது.

✓ பெண்களின் முழு திறனை அடைய அவர்களுக்கு அதிகாரமளிப்பதே இதன் நோக்கம். வெற்றியாளர்களுக்கு தலா 5,00,000 வழங்கப்படும்.

---

8. அண்மையில், ஆம்வேயின் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) பிவி சிந்து

ஆ) நீரஜ் சோப்ரா

இ) சுசீலா சானு

ஈ) சாய்கோம் மீராபாய் சானு ☑

✓ ஆம்வே இந்தியா மற்றும் அதன் நியூட்ரிலைட் தயாரிப்புகளின் விளம்பர தூதராக ஒலிம்பியன் சைகோம் மீராபாய் சானுவை நியமித்துள்ளதாக ஆம்வே நிறுவனம் அறிவித்துள்ளது. மீராபாய் சானு, இந்நிறுவனத்தின் விளம்பரங்களை முன்னிலைப்படுத்துவார். பளுதூக்கும் வீராங்கனை

ஆன சாய்கோம் மீராபாய் சானு, கடந்த 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில், பெண்கள் 49 கி பிரிவில், வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---

9. செயற்கை நுண்ணறிவில் இயங்கும் மெய்நிகர் உதவியாளரான 'ஊர்ஜா'வை அறிமுகம் செய்துள்ள நிறுவனம் எது?

அ) இந்துஸ்தான் பெட்ரோலியம்

ஆ) NTPC நிறுவனம்

இ) பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா

ஈ) பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிட் ☑

- ✓ நாட்டின் எண்ணெய் & எரிவாயு துறையில் முதல்முறையாக சமையல் எரிகாற்று உருளைகளை முன்பதிவு செய்தல், எரிகாற்று உருளைகளை விநியோகிக்கும் நிறுவனத்தை மாற்றுதல் உள்ளிட்ட சேவைகளுக்காக 'ஊர்ஜா' என்ற தகவல்பரிமாற்ற வசதியை பாரத் பெட்ரோலிய நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், மலையாளம் உள்பட பதிமூன்று மொழிகளில் இந்தச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

---

10. ஹிரோஷிமா நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 6 ☑

ஆ) ஆகஸ்ட் 7

இ) ஆகஸ்ட் 10

ஈ) ஆகஸ்ட் 15

- ✓ கடந்த 1945ஆம் ஆண்டில் ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு மற்றும் மனித இனத்திற்கு நிகழ்ந்த துன்பங்களை நினைவுகூரும் நோக்கோடு ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.6ஆம் தேதி அன்று ஹிரோஷிமா நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.
- ✓ இந்த ஆண்டு (2021), இந்த அணுகுண்டுவெடிப்பு நிகழ்ந்த 76ஆவது ஆண்டாகும். அணுகுண்டால் தாக்கப்பட்ட முதல் நகரம் இதுவாகும். முறையே ஆகஸ்ட்.6 மற்றும் 9ஆம் தேதிகளில், ஹிரோஷிமா நகரத்தில் வீசப்பட்ட 'தி லிட்டில் பாய்' மற்றும் நாகசாகி நகரில் 'தி ஃபேட் மேன்' என்ற 2 அணுகுண்டுகளையும் உருவாக்கியது அமெரிக்காவாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ராணுவத்தில் 5 பெண் அதிகாரிகளுக்கு 'கர்னல்' பதவி உயர்வு

இந்திய ராணுவத்தில் பல்வேறு படைப் பிரிவுகளில் பணியாற்றி குறிப்பிட்ட கால வரையளவைப் பூர்த்தி செய்த 5 பெண் அதிகாரிகளுக்கு கர்னல் அந்தஸ்துக்கான பதவி உயர்வை முதல் முறையாக இந்திய ராணுவம் திங்கள்கிழமை வழங்கியுள்ளது. இந்திய ராணுவத்தில் பெண்களுக்கான நிரந்தரப் பணி அமர்வு ஏற்படுத்தப்பட்டதையொட்டி, இந்த பாலின சமத்துவத்தை ராணுவம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஆண் ஆதிகாரிகளுக்கு மட்டுமே நிரந்தரப் பணி அமர்வு பயிற்சி டேராடூன் போன்ற ராணுவ அகாதெமியில் (ஐஎம்ஏ) கொடுக்கப்படும். இந்த நிலையில் இந்திய ராணுவத்தில் பெண்களுக்கு தற்போது குறுகிய காலப் பணியமர்வு பயிற்சி சென்னை போன்ற ராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாதெமியில் (ஓடிஏ) நடைபெறுகிறது. ஆண் அதிகாரிகளுக்கு இணையாக ராணுவத்தில் மருத்துவம், ராணுவ நீதிபதி, வழக்குரைஞர்கள், கல்விப் பிரிவுகளில் பணியாற்றும் பெண்களுக்கு மட்டுமே கர்னல் அந்தஸ்துக்கு மேலான பதவி உயர்வு வழங்கப்பட்டு வரப்படுகிறது. மருத்துவத் துறை பெண் ராணுவ அதிகாரிகள் ஜெனரல் அந்தஸ்து வரை பதவி உயர்வு பெற்று புகழ்பெற்றுள்ளனர்.

ஆனால் போரில், ராணுவ ஆபரேஷன் பிரிவுகளில் இருக்கும் பெண் அதிகாரிகளுக்கும் நிரந்தர பணி அமர்வு இல்லாத நிலையில், இந்த கோரிக்கைகள் எழுந்தன. கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பே உச்சநீதிமன்றத்தில் பெண் ராணுவ அதிகாரிகளிடமிருந்து இதற்கான கோரிக்கைகள் வந்தன. மேலும், முப்படைகளில், தரைப்படை போன்ற பிரிவுகளிலும் இதுபோன்ற கோரிக்கைகள் வலுத்தது. இது தொடர்பாக ராணுவ நடுவர் மன்றங்களிலும், உச்ச நீதி மன்றங்களிலும் வழக்கு நடைபெற்றது. இறுதியாக கடந்த ஆண்டு ஆகஸ்ட் 1 – ஆம் தேதியும், பின்னர் நடப்பு ஆண்டு மார்ச் மாதமும் குறுகிய காலப் பணியமர்வில் சேர்க்கப்பட்ட ராணுவ பெண் அதிகாரிகளுக்கும் தகுதியின் அடிப்படையில் நிரந்தரப் பணி அமர்வு அதிகாரிகளாக நியமிக்க உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

இதன்அடிப்படையில் குறுகிய காலப் பயிற்சி பெற்ற பெண் அதிகாரிகளின் உடல் தகுதி உள்ளிட்ட பல்வேறு தகுதிகளின் அடிப்படையில் நானூறுக்கும் மேற்பட்ட பெண் அதிகாரிகள் நிரந்தரப் பணி அமர்வில் சேர்க்கப்பட்டனர். மேலும், இதுபோன்று சேர்க்கப்பட்ட பெண் அதிகாரிகளின் பணிக் கால வரையளவு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கவும் பாதுகாப்புத் துறை முடிவெடுத்துள்ளது. இதுவரை அதிகபட்சம் லெப்டினன்ட் கர்னல் வரை பெண் அதிகாரிகள் பதவி உயர்வு பெற்றனர். முதல் முறையாக பெண் அதிகாரிகளில், சிக்னல் படைப்பிரிவைச் சேர்ந்த லெப். கர்னல் சங்கீதா சர்தானா, எலக்ட்ரானிக், மெக்கானிக்கல் மற்றும் இன்ஜினியரிங் (இஎம்இ) படைப் பிரிவைச் சேர்ந்த லெப். கர்னல்கள் சோனியா ஆனந்த் மற்றும் நவ்னீத் துக்கல், இன்ஜினியர்ஸ் படைப் பிரிவைச் சேர்ந்த லெப்டினன்ட் கர்னல்கள் ரீனு கன்னா மற்றும் ரிச்சா சாஹர் ஆகியோர் கர்னல் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் துறை திங்கள்கிழமை அறிவித்துள்ளது.

இந்திய ராணுவத்தில் இந்த 5 பெண் அதிகாரிகளும் 26 ஆண்டு கால பணியை நிறைவு செய்ததையொட்டி கால வரையளவுக்கு மேலாக (டைம் ஸ்கேல்) பணியாற்றிய இவர்களின் சேவைக்கு ஆறுதலாக இந்த கர்னல் பதவி வழங்க, முன்னதாக இந்திய ராணுவத்தின் தேர்வு வாரியம் ஆய்வு செய்து அனுமதித்தது. இருபது ஆண்டு சேவைக்குள் தகுதி பெறும் பெண் அதிகாரிகளுக்கு தேர்வு நிலை அந்தஸ்தும் இனி வழங்கப்படும் என்றும் ராணுவ வட்டாரங்களில் கூறப்படுகிறது. இத்தகைய தேர்வு நிலை அதிகாரிகளே பிரிகேடியர், ராணுவ ஜெனரலாகவும் பதவு உயர்வு பெறவும் வாய்ப்புக் கிடைக்கும். இனி எதிர்காலத்தில் பெண்களுக்கான நிரந்தர பணி அமர்வு பயிற்சியும் தொடங்கப்படும் எனவும் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

2. ரூ.6 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளைப் பணமாக்கும் திட்டம் தொடக்கம்

மத்திய அரசுக்குச் சொந்தமான ரூ.6 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளைப் பணமாக்கும் திட்டத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடக்கிவைத்தார். சாலைகள், ரயில்வே, மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மத்திய அரசுக்குச் சொந்தமாக உள்ள ரூ.6 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளைப் பணமாக்குவதற்கான வழிமுறைகள் அடங்கிய திட்டத்தை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திங்கள்கிழமை தொடக்கி வைத்தார். அப்போது அவர் கூறுகையில், "சொத்துகளைப் பணமாக்கும் நடவடிக்கை என்பது அவற்றை விற்பதல்ல. சொத்துகளின் உரிமை அனைத்தும் மத்திய அரசு வசமே இருக்கும். அதே வேளையில், அந்தச் சொத்துகளைத் திறம்படப் பயன்படுத்தி நிதி திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாடு முழுவதும் மத்திய அரசுக்குச் சொந்தமாக உள்ள சொத்துகளைப் பணமாக்கும் நடவடிக்கையின் மூலமாக ரூ.6 லட்சம் கோடியைத் திரட்ட முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 2024–25–ஆம் நிதியாண்டு வரை செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு புதிய வழிகளில் நிதியைத் திரட்டுவதன் வாயிலாக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடியும். பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும் செயல்படுத்த முடியும். இத்திட்டத்தின் வாயிலாக அரசின் சொத்துகளைத் தனியார் நிறுவனங்கள் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டு, அரசு–தனியார் பங்களிப்பு வாயிலாக சமூகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவது உறுதி செய்யப்படும். இத்திட்டத்தின் வாயிலாக மக்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்' ' என்றார்.

அரசின் சொத்துக்களைப் பணமாக்குவது தொடர்பாக 2021–22–ஆம் நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பல்வேறு துறைகளின் கீழுள்ள சொத்துகளைப் பணமாக்குவது குறித்து நீதி ஆயோக் ஆராய்ந்து அறிக்கை தயாரித்துள்ளது. சென்னை, போபால், வாராணசி, வதோதரா உள்ளிட்ட 25 விமான நிலையங்கள், 40 ரயில்வே நிலையங்கள், 15 ரயில்வே அரங்கங்கள், ரயில்வே காலனிகள் ஆகியவற்றில் தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் இத்திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ளன.

---

3. சேதி தெரியுமா?

ஆக.13: பழம்பெரும் சைவ மடங்களில் ஒன்றான மதுரை ஆதீனத்தின் 292–வதுகுரு மகாசன்னிதானமான அருணகிரி நாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் உடல் நலக் குறைவால் காலமானார்.

ஆக.14: ஆகஸ்ட் 14ஆம் தேதி தேசப் பிரிவினை நினைவு தினமாக அனுசரிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

ஆக.14: 2021ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் சிறந்த மாநகராட்சிக்கான முதல்வர் விருதுக்கு தஞ்சாவூர் மாநகராட்சி தேர்வானது. சிறந்த நகராட்சியாக உதகமண்டலம், பேரூராட்சியாக திருச்சியில் உள்ள கல்லக்குடி தேர்வாயின.

ஆக.15: ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாட்டுப் படைகள் விலகத் தொடங்கிய நிலையில், 20 ஆண்டுகளுக்குப் பிறகு தலைநகர் காபூலை தாலிபான்கள் கைப்பற்றினர். ஆப்கன் அதிபர் அஷ்ரப் கனி வெளிநாட்டுக்குத் தப்பியோடினார்.

ஆக.15: நாட்டின் 75–வது சுதந்திர தின பவள விழாவையொட்டி டெல்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திரமோடியும் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினும் தேசியக் கொடியை ஏற்றினார்கள்.

ஆக.15: அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டத்தின்படி இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் பணியாற்ற பல்வேறு சாதிகளைச் சேர்ந்த 58 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

ஆக.16: 2020ஆம் ஆண்டில் உலகின் 50 மாசுபட்ட நகரங்களின் பட்டியலில் சீனாவின் ஹோடான் முதலிடத்தையும் இந்தியாவின் காசியாபாத் இரண்டாமிடத்தையும் பிடித்தன. தூய்மையான நகரங்களின் பட்டியலில் ஆஸ்திரேலியாவின் ஜூட்புரி முதலிடத்தைப் பிடித்தது.

ஆக.18: சுடோகு எனும் புதிர் விளையாட்டை உருவாக்கிய ஜப்பானைச் சேர்ந்த மகி காஜி காலமானார். இவர், சுடோகு விளையாட்டின் தந்தை என்றழைக்கப்படுகிறார்.

ஆக.20: உச்ச நீதிமன்றத்துக்குப் புதிதாக ஒன்பது நீதிபதிகளை நியமிக்க மத்திய அரசுக்கு கொலீஜியம் பரிந்துரை செய்தது.

---

1. இந்தியாவின் மிகவுயரமான மூலிகைப்பூங்கா திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?

அ) உத்தரகண்ட் ☑

ஆ) இமாச்சல பிரதேசம்

இ) சிக்கிம்

ஈ) மிசோரம்

✓ உத்தரகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தின் மனா கிராமத்தில் இந்திய –சீன எல்லைப்பகுதிக்கு அருகே 11,000 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட மூலிகைப்பூங்கா திறந்துவைக்கப்பட்டது. மத்திய அரசின் காடுவளர்த்தல் நிதித்திட்டத்தின் கீழ் உத்தரகண்ட் வனத்துறையால் இந்தப்பூங்கா அமைக்கப்பட்டது. இமயமலையின் உயரமான பகுதிகளில் காணப்படும் சுமார் 40 மூலிகை இனங்கள் இப்பூங்காவில் வளர்க்கப்பட்டுள்ளன.

---

2. அண்மையில், முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் காலமானார். அவர் எந்த மாநிலத்தின் முதல்வராக இருந்தார்?

அ) ஹரியானா

ஆ) இராஜஸ்தான்

இ) உத்தர பிரதேசம் ☑

ஈ) மத்திய பிரதேசம்

✓ உத்தரபிரதேச மாநில முன்னாள் முதல்வரும் இராஜஸ்தான் மாநில முன்னாள் ஆளுநருமான கல்யாண் சிங், 2021 ஆகஸ்ட்.21 அன்று தனது 89ஆவது வயதில் இலக்னோவில் காலமானார். கல்யாண் சிங், 1991இல் முதல்முறையாக உபி மாநிலத்தின் முதல்வரானார். 1992ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது உபி மாநில முதலமைச்சராக பதவி வகித்தவர் கல்யாண் சிங். அவர், 24 ஜூன் 1991 – 1992 டிச.6 வரை & 1997 செப்.21 முதல் 1999 நவ.12 வரை முதல்வராக இருந்தார்.

---

3. தேசிய அனல்மின் கழகமானது பின்வரும் எந்த நகரத்தில், 25 MW திறன்கொண்ட மிகப்பெரிய மிதவை சோலார் PV திட்டத்தை தொடங்கியுள்ளது?

அ) காயங்குளம்

ஆ) ஓம்கரேஷ்வர்

இ) இராமகுண்டம்

ஈ) விசாகப்பட்டினம் ☑

✓ தேசிய அனல்மின் கழகமானது, 25 MW திறன்கொண்ட மிகப்பெரிய மிதவை சூரியசக்தி ஒளிமின்னழுத்தத் திட்டத்தை ஆந்திர பிரதேசத்தின் விசாகப்பட்டினத்திலுள்ள அதன் சிம்காத்ரி அனல்மின் நிலையத்தின் நீர்த்தேக்கத்தில் உருவாக்கியுள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டு இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட நெகிழ்வுத்தன்மை திட்டத்தின்கீழ் உருவாக்கப்ப –ட்டுள்ள முதல் சூரியசக்தி திட்டமாகவும் இது அமைந்துள்ளது.

✓ இந்த மிதவை சூரிய ஆற்றல் திட்டம், நீர்த்தேக்கத்தில் சுமார் 75 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. 1 லட்சத்துக்கும் மேற்பட்ட சூரியசக்தி ஒளிமின்னழுத்த கலங்களிலிருந்து மின்சாரத்தை உருவாக்கும் திறனை இந்தத் திட்டம் பெற்றுள்ளது.

---

4. மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் பன்னாட்டு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) 23 ஆகஸ்ட்

ஆ) 22 ஆகஸ்ட் ☑

இ) 20 ஆகஸ்ட்

ஈ) 24 ஆகஸ்ட்

✓ மதம் / நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் பன்னாட்டு நாள் ஆக.22 அன்று ஐநா'ஆல் அனுசரிக்கப்பட்டது. மதம் / நம்பிக்கை சார்ந்த வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தார்க்கும் பொருந்தக்கூடிய சட்டத்தின்படி ஆதரவு மற்றும் உதவியை நல்குவதன் முக்கியத்துவத்தை இந்த நாள் நினைவுகூருகிறது. இது முதன்முதலில் 2019'இல் அதிகாரப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டது.

5. எந்த மாநிலத்தைச் சார்ந்த 7 உள்ளூர் உணவுப்பொருட்களை, மத்திய உணவுப்பதப்படுத்தும் தொழிற்துறைகள் மற்றும் ஜல் சக்தித் துறை இணையமைச்சர் பிரகலாத் சிங் படேல் அறிமுகம் செய்தார்?

அ) அஸ்ஸாம்

ஆ) மணிப்பூர் ☑

இ) ஒடிஸா

ஈ) மத்திய பிரதேசம்

✓ 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் ஒருபகுதியாக, மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் மற்றும் ஜல்சக்தித் துறை இணையமைச்சர் பிரகலாத் சிங் படேல், மணிப்பூர் மாநிலத்தின் ஏழு உள்ளூர் உணவுப் பொருட்களை இம்பாலில் அறிமுகம் செய்து வைத்தார். அவை, கருப்பரிசி லட்டு, கருப்பரிசி பழம் & கொட்டை பிஸ்கோத்துகள், சூடான மற்றும் காரமான புஜியா, கபோக் (பொறி) கலவை, மணிப்பூரி கிழங்கு பர்பி, மூங்கில் தளிர் முரபா மற்றும் அத்தி லட்டு ஆகும்.

✓ இப்பொருட்கள் மணிப்பூர் உணவுத் தொழிற்துறைகள் நிறுவன அடைவு ஆய்வகத் திட்டத்தின்கீழ் TQS குளோபல், காஜியாபாத்துடன் இணைந்து 10 லட்சம் பட்ஜெட் ஒதுக்கீட்டில் உருவாக்கப்பட்டது.

---

6. ஐநா பாதுகாப்பு அவையில், வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் ஒரு மொபைல் தொழில்நுட்ப தளத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தார். இந்தத் தளத்தின் பெயர் என்ன?

அ) UNITE Peace

ஆ) UNITE Aware ☑

இ) UNITE X

ஈ) UNITE World

✓ மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர், S ஜெய்சங்கர், ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையினரைப் பாதுகாக்க உதவுவதற்காக, "UNITE Aware" தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தார். நியூயார்க்கில் உள்ள ஐநா தலைமையகத்தில், அவர், "தொழில்நுட்பம் மற்றும் அமைதி காத்தல்" பற்றிய ஐநா பாதுகாப்பு அவையின் விவாதத்திற்கு தலைமை தாங்கியபோது இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

✓ "UNITE Aware" என்பது அமைதிப்படையினருக்கு தரை–தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக இந்தியாவால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். இது அப்படையினரின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக இந்தியா $1.64 மில்லியன் டாலர்களை செலவிட்டுள்ளது.

7.போர் வானூர்திகளை ரேடார் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்க, அதிநவீன சாப் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ள அமைப்பு எது?

அ) ISRO

ஆ) HAL

இ) DRDO ☑

ஈ) BHEL

✓ ரேடார்மூலம் செயல்படும் எதிரிநாட்டு ஏவுகணைகளிலிருந்து இந்திய விமானப்படையின் போர் விமானங்களை பாதுகாக்க அதிநவீன 'சாஃப்' தொழில்நுட்பத்தை இராணுவ ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ளது. ஜோத்பூரில் உள்ள DRDO ஆய்வகம், புனேவில் உள்ள DRDO'இன் உயராற்றல் பொருட்கள் ஆய்வகத்துடன் இணைந்து இந்த 'சாஃப்' காட்ரிட்ஜ் – 118/I சாதனத்தை உருவாக்கியுள்ளது.

✓ போர் விமானங்களில் பொருத்தப்படும் இச்சாதனத்தில், சிறு அலுமினியம் அல்லது துத்தநாகம் பூசப்பட்ட நார் துகள்கள் மில்லியன் கணக்கில் அடைக்கப்பட்டிருக்கும். தீப்பிழம்புடன் இது போர் விமானங்களிலிருந்து வெளியேறி காற்றில் பறக்கும்போது, லேசர்மூலம் செயல்படும் எதிரி நாட்டு ஏவுகணைகளை திசைதிருப்பும். இதன்மூலம் தாக்குதலில் இருந்து போர் விமானங்கள் தப்பிக்க முடியும்.

---

8. அண்மையில், தொலையுணர்திறன் செயற்கைக்கோள் தரவு பகிர்வில் ஒத்துழைப்பு நல்குவதற்காக, எந்த அமைப்பு, தங்களுக்குள் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுக்கொண்டது?

அ) G20 ஆ) BIMSTEC

இ) BRICS ☑ ஈ) ஐரோப்பிய ஒன்றியம்

- ✓ பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா (BRICS) ஆகியவை தொலையுணர்திறன் செயற்கைக்கோள் தரவு பகிர்வில் ஒத்துழைப்பு நல்குவதற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ✓ BRICS விண்வெளி முகமைகளின் குறிப்பிட்ட தொலையுணர்திறன் செயற்கைக்கோள்களின் மெய்நிகர் விண்மீன் தொகுப்பை உருவாக்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன்மூலம் அந்தந்த தரைநிலையங்கள் தரவைப்பெறும். இந்த ஒப்பந்தம், இந்தியா BRICS தலைமையின்கீழ் உள்ள இச்சமயத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

---

9. நடைபாதை பொறியியல் மற்றும் அறிவார்ந்த போக்குவரத்து அமைப்புகளுக்காக பின்வரும் எந்த நிறுவனத்துடன் மத்திய சாலை போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் ஒத்துழைத்துள்ளது?

அ) ஐஐடி மெட்ராஸ் ☑

ஆ) ஐஐடி காந்திநகர்

இ) ஐஐடி பம்பாய்

ஈ) ஐஐடி தில்லி

- ✓ நடைபாதை (pavement) பொறியியல் மற்றும் அறிவார்ந்த போக்குவரத்து அமைப்புகளுக்காக இந்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்துடன் (MoRTH) மெட்ராஸ் ஐஐடி நிறுவனம் கூட்டிணைகிறது. புதுமையான நடைபாதைபொருட்கள் மற்றும் தொழில் நுட்பங்கள், ஹைட்ரஜன் மின்கலத்தில் இயங்கும் போக்குவரத்து, தானியங்கி வாகன வகைப்பாடு, புதிய கட்டண அமைப்புகள், நிகழ்வு மேலாண்மை அமைப்புகள், பயணிகளின் தகவலமைப்புகள், FastTAG தரவு பகுப்பாய்வு மற்றும் போக்குவரத்து பாதுகாப்பு தவிர போக்குவரத்து உருவகப்படுத்துதல் ஆகியவை இதிலடங்கும்.
- ✓ நெடுஞ்சாலை பொறியியல் துறையில் MoRTH'ஆல் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரிகள் உட்பட 8–10 மாணவர்களுக்கு மெட்ராஸ் IIT நிறுவனம், பயிற்சியளிக்கும்.

---

10. உலக மனிதாபிமான நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 19 ☑

ஆ) ஆகஸ்ட் 21

இ) ஆகஸ்ட் 23

ஈ) ஆகஸ்ட் 25

- ✓ அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக மனிதகுலத்திற்கு சேவை செய்ய எண்ணும் அனைவரின் தியாகங்களையும் கௌரவிக்கும் வகையில், ஐநா அவை, ஆகஸ்ட்.19ஆம் தேதியை உலக மனிதாபிமான நாளாகக் கொண்டாடுகிறது. "#TheHumanRace: a global challenge for climate action in solidarity with people who need it the most" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.
- ✓ கடந்த 2009ஆம் ஆண்டில் ஐநா பொது அவையால் இந்நாள் முறையாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர், 2009 ஆகஸ்ட்.19 அன்று முதன்முறையாக நினைவுகூரப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் 6 புதிய மாநகராட்சிகள்

தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒருங்கிணைத்து மேலும் 6 புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்படும் என்று பேரவையில் நகராட்சித் துறை அமைச்சர் KN நேரு அறிவித்தர்.

தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய நகராட்சிகளையும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளையும் ஒருங்கிணைத்தும் மாநகராட்சிகள் உருவாக்கப்படும் என அறிவித்தார்.

நகராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் கே.என்.நேரு வெளியிட்ட அறிவிப்புகள்: 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புற மக்கள்தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள்தொகையில் நகர்ப்புற மக்கள்தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளது எனக் கருதப்படுகிறது. அதனால், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புறத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புறங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போதுள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புறத்தன்மை, மக்கள்தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புறமாக மாறி வரும் பகுதிகளிலும் நகரத்துக்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகளின் தரம் உயர்த்தப்படுகிறது.

தாம்பரம், பல்லாவரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு மாநகராட்சியாக அமைக்கப்படும். மேலும், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர் மற்றும் சிவகாசி ஆகிய நகராட்சிகள் அதனைச் சுற்றி வளர்ச்சி அடைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றிணைத்து மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும்.

4 மாநகராட்சிகள் விரிவாக்கம்: திருச்சி, நாகர்கோவில், தஞ்சாவூர், ஓசூர் ஆகிய மாநகராட்சிகளும், செங்கல்பட்டு, பூவிருந்தவல்லி, மன்னார்குடி ஆகிய நகராட்சிகளும் அவற்றைச் சுற்றியுள்ள வளர்ச்சியடைந்துள்ள பேரூராட்சிகளையும், ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து விரிவாக்கம் செய்யப்படும்.

புதிய நகராட்சிகள்: பள்ளப்பட்டி, திட்டக்குடி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம் – கூடுவாஞ்சேரி, பொன்னேரி, திருநின்றவூர், சோளிங்கர், இடங்கனசாலை, தாரமங்கலம், திருமுருகன்பூண்டி, கூடலூர், காரமடை, கருமத்தம்பட்டி, மதுக்கரை, வடலூர், கோட்டக்குப்பம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, அதிராம்பட்டினம், மானாமதுரை, சுரண்டை, களக்காடு, திருச்செந்தூர், கொல்லன்கோடு, முசிறி, லால்குடி ஆகிய பேரூராட்சிகள் அதன் அருகே வளர்ச்சியடைந்துள்ள ஊராட்சிகளை ஒன்றிணைத்து நகராட்சிகளாக மாற்றப்படும்.

மேலும், புஞ்சை புகளூர் மற்றும் புகளூர் ஆகிய 2 பேரூராட்சிகளையும் இணைத்து புகளூர் நகராட்சியாக அமைக்கப்படும்.

உறுப்பினர்கள் பதவிக்காலம்: தரம் உயர்த்தப்படும் அல்லது விரிவாக்கம் செய்யப்படும்போது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்படும் ஊராட்சிகளில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட (அ) தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அவர்களது பதவிக் காலம் முடியும் வரை அப்பதவிகளிலேயே தொடர்வார்கள்.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் பதவிக்காலம் முடிவடையும்போது இணைக்கப்படும் பகுதிகள் புதிதாக உருவாக்கப்படும் (அ) விரிவாக்கம் செய்யப்படும் நகராட்சி அல்லது மாநகராட்சியின் முழுமையான ஆளுமைக்கு உட்படுத்தப்படும் என்றார் அமைச்சர் K N நேரு.

மொத்தம் 21 மாநகராட்சிகள்

தமிழ்நாட்டில் ஏற்கனவே 15 மாநகராட்சிகள் உள்ளன. மாநகராட்சிகள் விவரம் (மாநகராட்சிகள் தொடங்கப்பட்ட காலம் அடைப்புக்குறிக்குள் அளிக்கப்பட்டுள்ளது):

சென்னை (1688), மதுரை (1971), கோயம்புத்தூர் (1981), திருச்சி (1994), சேலம் (1994), திருநெல்வேலி (1994), திருப்பூர் (2008), ஈரோடு (2008), வேலூர் (2008), தூத்துக்குடி (2008), தஞ்சாவூர் (2014), திண்டுக்கல் (2014), நாகர்கோவில் (2019), ஓசூர் (2019), ஆவடி (2019) ஆகிய மாநகராட்சிகள் உள்ளன. இத்துடன் புதிய ஆறு மாநகராட்சிகளையும் சேர்த்து மாநகராட்சிகளின் எண்ணிக்கை 21ஆக உயர்ந்துள்ளது. இதில் சென்னை மட்டும் பெருநகர மாநகராட்சியாக உள்ளது.

---

2. இந்தியாவின் கரோனா தடுப்பூசி 'ஹக்கோ19': முதல்கட்ட பரிசோதனையில் வெற்றி

கரோனா நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டுகின்ற, பாரம்பரிய முறையில் உருவான 'ஹக்கோ19 (HGCO 19) தடுப்பூசியின் முதல்கட்ட பரிசோதனையை மத்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு (DCGI) ஏற்றுக்கொண்டுள்ளது. 'ஹக்கோ19' பாதுகாப்பானது, செல்லத்தக்கது, தடுப்பூசி ஆய்வில் பங்கேற்றவர்கள் நோய் எதிர்ப்பாற்றலைக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்து டிசிஜிஐ நிபுணர் குழு அனுமதியை வழங்கியுள்ளது.

மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரி தொழில்நுட்பத் துறை தன்னுடைய உயிரி தொழில்நுட்ப தொழிலக ஆய்வு உதவி கவுன்சில் என்கிற லாப நோக்கமற்ற பொதுத் துறை நிறுவனத்தை அமைத்துள்ளது.

இந்த நிறுவனம் கரோனா பாதுகாப்புக்கான இயக்கத்தில் புணேவை சேர்ந்த ஜென்னோவா பயோ பார்மசூட்டிகல்ஸ் என்கிற தனியார் மருந்து நிறுவனத்துடன் இணைந்து, தடுப்பூசி தயாரிப்பு ஆய்வுகளை மேற்கொண்டது. இதற்கு மத்திய உயிரிதொழில்நுட்பத்துறை நிதியுதவி அளித்தது. இந்த 'ஹக்கோ19' தடுப்பூசி மற்ற தடுப்பூசிகளைவிட வேறுபட்டது. 'mRNA' அடிப்படையில் இந்திய பாரம்பரிய முறையில் நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் தூண்டும்விதமான தடுப்பூசியை உருவாக்குவதற்கான ஆய்வை மேற்கொண்டு, முதல்கட்ட பரிசோதனையில் வெற்றி பெற்றுள்ளது. இதற்கு அமெரிக்காவைச் சேர்ந்த ஹெச்டிடி பயோ கார்ப்பரேஷன் நிறுவனமும் உதவ முன்வந்துள்ளது. இந்தத் தடுப்பூசிக்கு 'ஹக்கோ19' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசிக்கான முதல்கட்ட ஆய்வை பரிசீலனை செய்து ஏற்றுக் கொண்ட மத்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு, இத்தடுப்பூசிக்கான 2ஆம், 3ஆம் கட்ட ஆய்வுகளை மேற்கொள்ளவும் அனுமதி அளித்துள்ளது.

---

3. இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் முக்கியக் கூட்டங்கள்

இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 3 முக்கியக் கூட்டங்கள் நடைபெற்றதாகவும், அந்தக் கூட்டங்கள் வாயிலாக உறுப்பு நாடுகளின் கருத்துகள் முழுமையாகப் பெறப்பட்டதாகவும் ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் டி.எஸ்.திருமூர்த்தி தெரிவித்துள்ளார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்து வருகிறது. கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை ஏற்றபிறகு கடல்சார் பாதுகாப்பு, அமைதிப்படை, பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய தலைப்புகளில் 3 முக்கியக் கூட்டங்களை இந்தியா நடத்தியது.

இன்னும் 1 வாரத்தில் இந்தியாவின் தலைமைப் பொறுப்பு நிறைவடைய உள்ள சூழலில், ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி எஸ் திருமூர்த்தி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

இந்தியாவின் தலைமையில் நடத்தப்பட்ட முக்கியக் கூட்டங்களின் வாயிலாக பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு கூட்டத்திலும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 15 உறுப்பு நாடுகள் தெரிவித்த முழுமையான கருத்துகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன. 3 முக்கியக் கூட்டங்கள் வாயிலாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஐ.நா.வின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு முக்கியப் பங்கு வகிக்கும். இந்தக் கூட்டங்களில் அனைத்து நாடுகளுடன் கலந்தாலோசித்து ஆவணங்களை இந்தியா தயாரித்துள்ளது.

உறுப்பு நாடுகளின் தேவைகள், பிரச்னைகள் உள்ளிட்ட அனைத்தும் அந்த ஆவணங்களில் இடம்பெற்றுள்ளன. கூட்டங்களில் இந்தியா முன்னெடுத்த கலந்தாலோசனை யுக்தியை அனைத்துத் தரப்பினரும் வரவேற்றனர். இந்தியாவின் தலைமையில் நடைபெற்ற 3 முக்கியக் கூட்டங்களும் வெற்றி பெற்றன. நாடுகள் வரவேற்பு: கடந்த 9-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற கடல்சார் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் பல்வேறு வழிகளில் சிறப்புவாய்ந்தது. இந்தியப் பிரதமர் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியது அதுவே முதல் முறை.

கடல்சார் பாதுகாப்புக்கென பிரத்யேகமாக நடத்தப்பட்ட முதல் கூட்டமும் அதுவே. கடல்சார் பாதுகாப்பு முக்கியத்துவம் பெற்று வரும் சூழலில் நடத்தப்பட்ட அக்கூட்டத்துக்குப் பல்வேறு நாடுகள் வரவேற்பு தெரிவித்தன. முக்கிய விவகாரத்தில் அனைத்துத் தரப்பினரின் கருத்துகளும் அந்தக் கூட்டத்தின் வாயிலாகப் பெறப்பட்டன.

தீர்மானம் நிறைவேற்றம்: அமைதிப்படை, பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவை தொடர்பான கூட்டங்கள் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்றன. உலகம் முழுவதும் அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்தியா தொடர்ந்து கைகொடுத்து வருகிறது. அமைதிப் படைகளுக்கு அதிக எண்ணிக்கையிலான வீரர்களை இந்தியா அனுப்பி வருகிறது.

அமைதிப் படையினருக்கு எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் நோக்கிலான தீர்மானம் இந்தியா சார்பில் நிறைவேற்றப்பட்டது. பயங்கரவாத எதிர்ப்பு விவகாரத்தில் அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென சிறப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் சிரியா, லெபனான், சோமாலியா, மியான்மர், யேமன் உள்ளிட்ட நாடுகளில் நிலவும் சூழல் குறித்தும் விவாதிக்கப்பட்டது என்றார் அவர்.

---

4. தொடங்கியது டோக்கியோ பாராலிம்பிக்: இன்று முதல் போட்டிகள் ஆரம்பம்

ஜப்பானின் டோக்கியோ நகரில் 16-ஆவது பாராலிம்பிக் போட்டி செவ்வாய்க்கிழமை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது. வரும் செப்டம்பர் 5-ஆம் தேதி வரை 13 நாள்களுக்கு நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான இந்த பாராலிம்பிக்கில், விளையாட்டுப் போட்டிகள் புதன்கிழமையிலிருந்து தொடங்குகின்றன. டோக்கியோவில் உள்ள தேசிய மைதானத்தில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் சர்வதேச பாராலிம்பிக் கமிட்டி (ஐபிசி) தலைவர் ஆன்ட்ரூ பார்சன்ஸ், ஜப்பான் அரசர் நருஹிடோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

தொடக்க நிகழ்ச்சியானது, எண்ண இயலாத துன்பங்களுக்கு இடையேயும் உயரப் பறக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகள் மேற்கொள்ளும் முயற்சிகளை சித்தரிக்கும் வகையில், 'எங்களுக்கும் சிறகுள்ளது' என்ற கருத்துருவை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் அதைச் சார்ந்தே இருந்தன. நிகழ்ச்சியானது, பாராலிம்பிக் போட்டியாளர்களின் பலத்தை பிரதிபலிக்கும் வகையிலான காணொலி திரையிடப்பட்டதில் இருந்து தொடங்கியது. அதைத் தொடர்ந்து கவுன்ட்டவுன் நடைபெற்று, அதன் நிறைவில் பாராலிம்பிக் போட்டி தொடங்கியதை குறிக்கும் வகையில் மைதானத்திலிருந்து வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. அதன் பிறகு ஐபிசி தலைவர், அரசர் நருஹிடோ ஆகியோர் மேடையில் தோன்ற, பாராலிம்பிக் போட்டி தொடங்கியதாக அரசர் நருஹிடோ அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து ஜப்பானைச் சேர்ந்த பாராலிம்பிக் மல்யுத்த சாம்பியன் காவ்ரி இசோ உள்பட 6 பேர் ஜப்பான் கொடியை மேடைக்கு ஏந்தி வந்தனர். அதன் பிறகு கொடியேற்றப்பட்டது.

பின்னர் பங்கேற்பு நாடுகளின் அணிவகுப்பு, அகதிகள் குழுவிலிருந்து தொடங்கியது. அதில் இஸ்ரேல் அணியினரை ஒரு வழிகாட்டி நாய் அணிவகுத்து நடத்தி வந்தது அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதாக இருந்தது. தலிபான்கள் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் வகையில், அந்நாட்டின் தேசியக் கொடியும் அணிவகுப்பில் ஏந்தி வரப்பட்டது. அப்போது மைதானத்தில் கூடியிருந்தவர்கள் பலமான கரவொலி மூலம் அதற்கு வரவேற்பு தெரிவித்தனர். நடப்பு அரசியல் சூழல் காரணமாக அந்நாட்டிலிருந்து போட்டியாளர்கள் பங்கேற்க முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.

இந்தியா...

தொடக்க விழா நிகழ்ச்சியில் இந்தியாவின் சார்பில் 5 போட்டியாளர்கள், 6 அதிகாரிகள் என 11 பேர் பங்கேற்றனர். முன்னதாக, இந்தியாவின் அணிவகுப்பில் தமிழக உயரம் தாண்டுதல் வீரர் மாரியப்பன் தேசியக் கொடியை ஏந்திச் செல்வதாக இருந்தது. எனினும், விமானத்தில் வரும்போது மாரியப்பனுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபருக்கு கரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, முன்னெச்சரிக்கையாக மாரியப்பனும், அவருடன் இருந்த வட்டு எறிதல் வீரர் வினோத் குமாரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதனால் நிகழ்ச்சியில் இந்தியாவின் தேசியக் கொடியை குண்டு எறிதல் வீரர் தேக் சந்த் ஏந்திச் சென்றார். எனினும், பரிசோதனையில் மாரியப்பன், வினோத் குமாருக்கு தொற்று பாதிப்பு இல்லை எனத் தெரியவந்ததால் அவர்கள் போட்டியில் பங்கேற்பதில் தடையில்லை என்று அணி நிர்வாகம் தெரிவித்தது.

பாராலிம்பிக் போட்டியானது 57 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டோக்கியோ நகரில் நடத்தப்படுகிறது. இதன் மூலம், பாராலிம்பிக் போட்டியை இரு முறை நடத்திய முதல் நகரம் என்ற பெருமையை டோக்கியோ பெற்றுள்ளது. 4,403 – டோக்கியோ பாராலிம்பிக்கில் பங்கேற்கும் போட்டியாளர்கள் எண்ணிக்கை. கடந்த ரியோ பாராலிம்பிக்கில் பங்கேற்றோர் எண்ணிக்கையை விட (4,328) இது அதிகமாகும். 2,550 ஆண் போட்டியாளர்கள்/ 1,853 பெண் போட்டியாளர்கள். 22/540 – இந்த பாராலிம்பிக்கில் மொத்தம் 22 விளையாட்டுகளில் 540 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.

---

5. நியூயார்க்கின் முதல் பெண் ஆளுநர் பதவியேற்பு

அமெரிக்காவின் நியூயார்க் மாகாணத்திற்கு முதல் பெண் ஆளுநராக கேத்தலீன் ஹோக்கல் (Kathleen Hogle) அவர்கள் பதவியேற்றார். அமெரிக்காவிலுள்ள நியூயார்க் மாகாணத்தின் முதல் பெண் ஆளுநராக கேத்தலீன் ஹோக்கல் (Kathleen Hogle) செவ்வாய்க்கிழமை

பதவியேற்றுக் கொண்டாா். 62 வயதாகும் அவா், 16 மாதங்களுக்கு ஆளுநா் பொறுப்பை வகிப்பாா். இதுவரை ஆளுநராக இருந்து வந்த ஆண்ட்ரூ குவாமோ மீது அடுக்கடுக்காக பாலியல் புகாா்கள் எழுந்ததைத் தொடா்ந்து அவா் பதவியை ராஜிநாமா செய்தாா்.

அதனைத் தொடா்ந்து, அந்தப் பதவிக்கு கேத்தலீன் ஹோக்கல் (Kathleen Hogle) தோந்தெடுக்கப்பட்டுள்ளாா். அவரையும் சோத்து, தற்போது அமெரிக்காவின் 9 மாகாணங்களில் பெண்கள் ஆளுநா்களாக உள்ளனா். இது, அந்த நாட்டில் இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

1. பின்வரும் எந்த மாநிலத்திலிருந்து, இந்தியாவிலேயே முதன் முறையாக ஓர் அரியவகை மந்தாரை இனம் கண்டுபிடிக்கப்பட்டது?

அ) உத்தரகண்ட் ☑

ஆ) இமாச்சல பிரதேசம்

இ) சிக்கிம்

ஈ) மிசோரம்

✓ '*Cephalanthera erecta var. oblanceolata*' என்ற ஓர் அரியவகை மந்தாரை இனம், இந்தியாவிலேயே முதன்முறையாக உத்தரகண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்தில் 1870 மீ உயரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. BSIஇன் 6 மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் இதழான நெலும்போவில் இந்திய தாவரங்களின் புதிய இனங்கள்பற்றிய ஆய்வுக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இந்திய மந்தாரை இனங்கள் குறித்த தகவல்களைக்கொண்ட தொகுதிகள் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

---

2. வடகிழக்கு மாநிலங்களில் அதிவேக இணையசேவையினை வழங்குவதற்காக, கீழ்காணும் எந்த நிறுவனத்துடன், யுனிவர்சல் சர்வீஸ் ஆப்ளிகேஷன் பண்ட் கூட்டுசேர்ந்துள்ளது?

அ) BSNL ☑

ஆ) MTNL

இ) ஏர்டெல்

ஈ) வி

✓ வடகிழக்கு மாநிலங்களுக்கு அதிவேக இணைய சேவை பெறுவதற்கு, யுனிவர்சல் சர்வீஸ் ஆப்ளிகேசன் பண்ட் (USOF) BSNL நிறுவனத்துடன் ஒப்பந்தம்செய்தது. இதன்மூலம் அகர்தலாவுக்கு இணைய இணைப்புக்கு 10 ஜிபிபிஎஸ் பன்னாட்டு அலைவரிசை, காக்ஸ் பஜார் வழியாக வங்க தேசத்தின் BSCCL நிறுவனத்திடமிருந்து வாடகை அடிப்படையில் பெறப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின்கீழ், மேற்கண்ட பன்னாட்டு அலை வரிசையை, மூன்றாண்டுகளுக்கு வாடகைக்குப்பெற, பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு, USOF நிதியுதவி அளிக்கும். இதன்மூலம் வடகிழக்குப் பகுதி மக்கள் அதிவேக இணைய இணைப்புடன் பல இ-சேவைகளை பெறுவர்.

---

3. தென்சீனக்கடலில் நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்புப்பயிற்சியைத் தொட-ங்கியுள்ள நாடு எது?

அ) ஜப்பான் ☑

ஆ) சீனா

இ) சிங்கப்பூர்

ஈ) இந்தோனேசியா

✓ ஜப்பான் இராணுவ அமைச்சகத்தின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, ஜப்பானின் கடல்சார் தற்காப்புப்படை தென்சீனக்கடலில் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் பயிற்சிகளைத் தொடங்கியுள்ளது. இந்தப் பயிற்சியில், உலங்கூர்தி விமானந்தாங்கி மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் உட்பட மூன்று கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. முழு தென்சீனக்கடலையும் உரிமை கோரும் சீனா, அங்கு செயற்கைத்தீவுகளை அமைத்து அதில் இராணுவ புறக்காவல் நிலையங்களை நிறுவியுள்ளது. தென்சீனக்கடலை சீனா இராணுவமயமாக்குவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

---

4. சமீபத்தில், COVID தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக COVIDஆல் பாதிக்கப்பட்டோருக்கான வாழ்வாதார ஆதரவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

அ) மணிப்பூர் ☑

ஆ) புதுச்சேரி

இ) மகாராஷ்டிரா

ஈ) ஒடிஸா

✓ மணிப்பூரில் COVIDஆல் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்காக, COVIDஆல் பாதிக்கப்பட்டோருக்கான வாழ்வாதார ஆதரவுத்திட்டத்தை மணிப்பூர் முதல்வர் என் பீரன் சிங் தொடங்கினார். இத்திட்டத்தின்கீழ் 6,276 பயனாளிகளுக்கு ஒரு பயனாளருக்கு ₹2500 வீதம் மொத்தமாக ₹1.56 கோடி வழங்கப்பட்டது.

---

5. தொலையுணரி & புவியியல் தகவலமைப்பு அடிப்படையிலான தரவைப்பயன்படுத்தி MGNREGA திட்டத்தின் புதிய செயல்பாடுகளை திட்டமிட உதவும் தளத்தின் பெயர் என்ன?

அ) பூமி இராசி

ஆ) மதத்

இ) யுக்தாரா ☑

ஈ) இ-சனத்

✓ 'யுக்த்தாரா' திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ள புதிய புவிசார் திட்டமிடல் இணையதளம், தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் கருவி (GIS) அடிப்படையிலான தகவல்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் (MGNREGA) புதிய செயல்பாடுகளை திட்டமிட உதவும்.

✓ பல்வேறு தேசிய ஊரக மேம்பாட்டு திட்டங்களின்கீழ் உருவாக்கப்பட்ட ஜியோடேக் (நிழற்படம் & காணொளிகள் அடங்கிய புவியியல் இடங்கள்) தகவல்கள் களஞ்சியமாக இந்தப் புவிசார் திட்டமிடல் இணையதளம் செயல்படும். இதில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம், சொட்டுநீர்ப்பாசனத்திட்டம், தேசிய வேளாண் மேம்பாட்டு திட்டம் குறித்த தகவல்கள் நிழற்படங்களுடன் இருக்கும்.

6.உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர் விமானம், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை 'ARMY-2021'இல் இந்தியா அறிமுகஞ்செய்தது. கீழ்கண்ட எந்த நாட்டில், 'ARMY-2021' நடைபெறுகிறது?

அ) இந்தியா

ஆ) ரஷ்யா ☑

இ) இஸ்ரேல்

ஈ) அமெரிக்கா

✓ மாஸ்கோ பிராந்தியத்தில் நடைபெறும் பன்னாட்டு இராணுவ-தொழில் நுட்ப மன்றமான 'ARMY-2021'இல் இந்தியா தனது உள்நாட்டுப்போர் விமானமான LCA தேஜஸ், பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டும் ஏவுகணைகள், அர்ஜுன் முதன்மை போர் பீரங்கி (MK1A) ஆகியவற்றை அறிமுகம் செய்தது.

✓ ஆகஸ்ட்.22-28 வரை மாஸ்கோவின் குபின்காவில் நடைபெறும் பன்னாட்டு இராணுவ-தொழில்நுட்ப மன்றமான 'ARMY-2021'இல் DRDO பங்கேற்கிறது. DRDO என்பது இந்திய காட்சியரங்கின் ஒருபகுதி ஆகும். அங்கு அதிநவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்களும் அமைப்புகளும் இந்திய பாதுகாப்புத் தொழில்களான கோவா ஷிப்யார்ட் லிமிடெட் (GSL), ஆயுதத் தொழிற்சாலைகள் மற்றும் பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட் (BEML) ஆகியவற்றுடன் இணைந்து காட்சிப்படுத்தப்படும்.

---

7. சமீபத்தில், 34 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்திய அமைப்பு எது?

அ) ISRO

ஆ) ஸ்பேஸ் X

இ) NASA

ஈ) ஒன்வெப் ☑

✓ பாரதி குழுமத்தின் ஆதரவில் இயங்கும் தாழ்புவி சுற்றுப்பாதை (LEO) செயற்கைக்கோள் தகவல் தொடர்பு நிறுவனமான ஒன்வெப், பைக்கோனூர் விண்வெளி ஏவுதளத்திலிருந்து அரியான்ஸ்பேஸ்மூலம் 34 செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியதை உறுதிசெய்துள்ளது. OneWeb'இன் 'ஐந்து முதல் 50' திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒன்வெபின் செயற்கைக்கோள்களை 288ஆக மாற்றியுள்ளது.

---

8. ஜெர்மனியில் பயிலவிரும்பும் மாணவர்களுக்காக டிஜிட்டல் & உடனடி தடுக்கப்பட்ட கணக்கை தொடங்கியுள்ள வங்கி எது?

அ) சிட்டி வங்கி

ஆ) ICICI வங்கி ஜெர்மனி ☑

இ) டாய்ச் வங்கி

ஈ) பாரத வங்கி

✓ ஜெர்மனியில் பயில விழையும் மாணவர்களுக்காக டிஜிட்டல் மற்றும் உடனடி தடுக்கப்பட்ட கணக்கை தொடங்குவதாக ICICI வங்கி ஜெர்மனி அறிவித்துள்ளது. தடுக்கப்பட்ட கணக்கு (Blocked Account) என்பது ஒரு

சிறப்பு வகை வங்கிக்கணக்காகும்; அதில் மாணவர்கள், ஒரு இருப்பு உறுதிப்படுத்தல் சான்றிதழை (Balance Confirmation Certificate (BCC)) பெறுவதற்காக குறிப்பிட்ட அளவு பணத்தை வைத்திருக்க வேண்டும். ஜெர்மனியில் மாணவ விசா பெறுவதற்கு இந்தக் கணக்கு கட்டாயமாகும். இக்கணக்கு, மாணவர்களுக்கு ஜெர்மனியில் பயன்படுத்தக்கூடிய ஒரு நடப்பு கணக்கை வழங்குகிறது. இது, உலகில் எங்கும் பயன்படுத்தக்கூடிய விசா பற்றட்டையுடன் வருகிறது.

---

9. தேசிய வேளாண் சந்தையில் (eNAM) வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கும் மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) இராஜஸ்தான் ☑

இ) மேற்கு வங்கம்

ஈ) கேரளா

✓ தேசிய வேளாண் சந்தையில் வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கும் மாநிலமாக இராஜஸ்தான் உருவெடுத்துள்ளது. வேளாண்பொருட்களின் இ–வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காக அனைத்து தனித்தனி வர்த்தக உரிமங்களையும் ஒருங்கிணைந்த உரிமமாக மாற்ற அனுமதித்த முதல் மாநிலம் இராஜஸ்தான் ஆகும். தற்போதுவரை, மொத்தம் 37346 வர்த்தகர்கள் ஒருங்கிணைந்த உரிமதாரர் வர்த்தகர்களாக பணியாற்றுகின்றனர்.

---

10. அண்மையில், அமெரிக்க சட்டமன்றத்தின் தங்கப்பதக்கம் பெற்ற முதல் இந்தியர் யார்?

அ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

ஆ) மகாத்மா காந்தி ☑

இ) பகத் சிங்

ஈ) B R அம்பேத்கர்

✓ நியூயார்க் காங்கிரஸ் பெண்மணி கரோலின் மாலோனி, 'மகாத்மா' காந்திக்கு, அமெரிக்க சட்டமன்றத்தின் தங்கப்பதக்கத்தை, அவரது இறப்பி–ற்குப்பின் வழங்குவதற்காக, அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் அதற்கான சட்டத்தை மீண்டும் அறிமுகம்செய்தார். அகிம்சைமுறைகளின் மூலம் அவராற்றிய பங்களிப்புகளுக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்–படுகிறது. அவர், அமெரிக்காவின் மிகவுயர்ந்த குடிமகன் விருதான காங்கிரஸ் தங்கப்பதக்கத்தை பெறும் முதல் இந்தியர் ஆவார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2021–22–ஆம் ஆண்டுக்கான கரும்புப் பருவத்தில் சர்க்கரை ஆலைகள், கரும்புக்கு அளிக்கவேண்டிய நியாயமான மற்றும் லாபகரமான விலையை நிர்ணயிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 2021–22 கரும்புப் பருவத்திற்கு (அக்டோபர் –செப்டம்பர்) சர்க்கரை ஆலைகள் அளிக்கும் கரும்புக்கான நியாயமான மற்றும் லாபகரமான விலைக்கு (எஃப் ஆர் பி) பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான, பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி கரும்பின் எஃப் ஆர் பி, அடிப்படை மீட்பு விகிதம் 10% உடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 290 வழங்கப்படும். மீட்பு விகிதம் 10%க்கு மேல் அதிகரித்தால் ஒவ்வொரு சதவிகிதத்திற்கும் ஒவ்வொரு குவின்டாலுக்கும் 0.1% அதிகமாக அதாவது குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2.90 கூடுதல் தொகை அளிக்கப்படும்.

விகிதம் குறைய நேரிட்டால், ஒவ்வொரு குவிண்டாலுக்கும் 0.1% குறைவாக, அதாவது எஃப் ஆர் பி விலையிலிருந்து ரூ. 2.90 குறைவாக வழங்கப்படும். 9.5%க்கு குறைவாக உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு விலை குறைக்கப்படாது என்ற முடிவின் மூலம் விவசாயிகளின் நலனை பாதுகாப்பதில் அரசின் ஆக்கபூர்வமான அணுகுமுறை வெளிப்படுகிறது. அத்தகைய விவசாயிகள் கரும்பு பருவம் 2021– 22 இல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 275.50 பெறுவார்கள். தற்போதைய கரும்பு பருவம் 2020–21 இல் இந்தத் தொகை ரூ. 270.75 ஆக உள்ளது. கரும்பு பருவம் 2021–22 க்கான உற்பத்தித் தொகை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 155 ஆகும். 10% மீட்பு விகிதத்துடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 290 என்ற இந்த எஃப் ஆர் பி, உற்பத்தி தொகையைவிட 87.1% அதிகம். இதன் வாயிலாக தங்கள் தொகையையும் விட கூடுதலாக 50% மீட்புத் தொகையை விவசாயிகள் பெறுவார்கள்.

தற்போதைய கரும்பு பருவம் 2020–21 இல் ரூ. 91,000 கோடி மதிப்பில் 2,976 லட்சம் டன் கரும்புகளை சர்க்கரை ஆலைகள் கொள்முதல் செய்துள்ளன. இதுவரையிலான கொள்முதலில் இந்த எண்ணிக்கை மிகவும் அதிகமானது. குறைந்தபட்ச ஆதரவு விலையில் நெல்லுக்கு அடுத்தபடியாக கரும்பு அதிகளவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கரும்பு பருவம் 2021–22– ல் கரும்பின் உற்பத்தி அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் சுமார் 3,088 லட்சம் டன் கரும்புகள் சர்க்கரை ஆலைகளால் கொள்முதல் செய்யப்படக்கூடும். கரும்பு விவசாயிகளுக்கு சுமார் ரூ. 1,00,000 கோடி கிடைக்கும். விவசாயிகளுக்கு உகந்த நடவடிக்கைகளின் வாயிலாக, உரிய காலத்தில் கரும்பு விவசாயிகளுக்கான தொகை அவர்களுக்கு வழங்கப்படுவதை அரசு உறுதி செய்யும்.

கரும்பு பருவம் 2021–22 இல் (அக்டோபர் 1, 2021 முதல் அமலுக்கு வருகிறது) சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் கரும்புகளுக்கு, அனுமதி அளிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் லாபகரமான விலையில் கரும்புகள் வழங்கப்படும். சுமார் 5 கோடி கரும்பு விவசாயிகள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் வாழ்வாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய வேளாண் அடிப்படையிலான துறையாக கரும்புத் துறை விளங்குகிறது. சுமார் 5 லட்சம் பணியாளர்கள் சர்க்கரை ஆலைகளில் நேரடியாக பணியாற்றுவதோடு ஏராளமானோர், வேளாண் தொழில் மற்றும் போக்குவரத்து சார்ந்த பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

---

2. அமெரிக்கா: சராசரி வருவாயில் இந்திய வம்சாவளியினர் முதலிடம்

அமெரிக்காவில் சராசரி குடும்ப வருவாய் மற்றும் கல்லூரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் ஒட்டுமொத்த அமெரிக்கா'களை இந்திய வம்சாவளியினர் விஞ்சியுள்ளனர். இதுகுறித்து அந்த நாட்டில் அண்மையில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாவது:

அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள், அந்த நாட்டின் குடியுரிமை பெற்ற இந்தியர்கள் மற்றும் அங்கு பிறந்த இந்திய வம்சாவளியினரின் சராசரி குடும்ப வருவாய் 1,23,700 டாலராக (சுமார் ₹91.78 இலட்சம்) உள்ளது. கல்லூரி பட்டதாரிகளில் 79% பேர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்க–ளாக உள்ளனர். இதன்மூலம், குடும்ப வருவாய் மற்றும் கல்லூரிக் கல்வியில் ஒட்டுமொத்த அமெரிக்கர்களை இந்திய வம்சாவளியினர் விஞ்சியுள்ளனர்.

கடந்த முப்பது ஆண்டுகளில் ஆசியர்களாக அடையாளம் காணப்படும் நபர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. தற்போது நாட்டின் நான்கு பெரிய இனக் குழுக்களில் ஆசியர்கள் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் குழுவினராக ஆகியுள்ளனர். அமெரிக்காவில் தற்போது சுமார் 40 லட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களில் 16 லட்சம் பேர் நுழைவு இசைவு பெற்று அந்த நாட்டில் வசிப்பவர்கள். 14 லட்சம் பேர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர்கள். 10 லட்சம் பேர் அந்த நாட்டிலேயே பிறந்தவர்கள் ஆவர்.

அந்தப் பிரிவினரின் சராசரி குடும்ப வருமானமான 1,23,700 டாலர்கள், நாடுதழுவிய சராசரி குடும்ப வருவாயான 63,922 டாலரைவிட இரு மடங்காகும். அறிக்கையின்படி, நாடு முழுவதும் சராசரியாக 34 சதவிகித –த்தினர் பட்டம் பெற்றுள்ள நிலையில், இந்திய வம்சாவளியினரில் 79% பேர் கல்லூரிகளில் பட்டம்பெற்றுள்ளவர்களாக உள்ளனர். சராசரி குடும்ப வருவாயில் இந்திய வம்சாவளியினருக்கு அடுத்தபடியாக தைவான் வம்சாவளியினரும் ($97,129), 3ஆமிடத்தில் பிலிப்பின்ஸ் நாட்டவர்களும் ($95,000) உள்ளனர் என்று அந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

---

3. BSF புதிய இயக்குநராக பங்கஜ் சிங் நியமனம்

எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) இயக்குநர் ஜெனரலாக மூத்த ஐபிஎஸ் அதிகாரி பங்கஜ் சிங் (58) நியமிக்கப்பட்டுள்ளார். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இதே பதவியை இவரின் தந்தை பிரகாஷ் சிங் வகித்தது குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான் மாநிலத்தின் 1988ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த பங்கஜ் சிங், ஆக.31ஆம் தேதி BSF இயக்குநராகப் பதவியேற்றுக்கொள்வார் என அதிகாரபூர்வ உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் தில்லியிலுள்ள BSF தலைமையகத்தில் சிறப்பு இயக்குநர் ஜெனரலாக பணியாற்றி வருகிறார். தற்போது BSF இயக்குநர் ஜெனரலாக இந்தோ–திபெத்

எல்லைப் பாதுகாப்பு காவல் படை இயக்குநர் S S தேஸ்வால் கூடுதல் பொறுப்பு வகித்துவருகிறார். அவர் ஓய்வுபெறவுள்ளதையொட்டி புதிய இயக்குநர் ஜெனரலாக பங்கஜ் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்கஜ் சிங்கின் தந்தை பிரகாஷ் சிங், 1993–94'இல் BSF இயக்குநர் ஜெனரலாகப் பணிபுரிந்தார். காவல்துறையில் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியதற்காக அறியப்படும் பிரகாஷ் சிங்கிற்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தோ–திபெத் எல்லைக் காவல் படையின் புதிய தலைவராக தமிழ்நாட்டின் 1988ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரி சஞ்சய் அரோரா, காவல் ஆராய்ச்சி & மேம்பாட்டுப் பிரிவு புதிய தலைவராக பாலாஜி வத்சவா ஆகியோரை நடுவணரசு நியமித்துள்ளது.

---

4. இந்தியா – கஜகஸ்தான் 5ஆம் கட்டகூட்டுப்பயிற்சி 30'இல் தொடக்கம்

இந்தியா–கஜகஸ்தான் நாடுகளுக்கு இடையேயான ஐந்தாவது கட்ட இராணுவ கூட்டுப்பயிற்சி ஆக.30ஆம் தேதி தொடங்குகிறது. இராணுவ ராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் கஜகஸ்தானுடனான வளர்ந்துவரும் உறவை வலுப்படுத்தும் நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

கஜகஸ்தானில் உள்ள ஆயிஷா பிபியில் இருக்கும் பயிற்சி நிலையத்தில் செப்.11 வரை நடக்கவுள்ள இக்கூட்டுப்பயிற்சியில், இந்தியா–கஜகஸ்தான் நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவை வலுப்படுத்தும் விதத்தில் இருநாட்டு ராணுவங்களும் பயிற்சிகளை மேற்கொள்ளும்.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்து இந்தியா மற்றும் கஜகஸ்தான் ராணுவத்தினருக்கு இந்தக் கூட்டு நடவடிக்கையின்போது பயிற்சியளிக்கப்படும். இந்தியா & கஜகஸ்தான் இராணுவங்களுக்கு இடையே நிலவிவரும் பரஸ்பர நம்பிக்கை, கூட்டு செயல்பாடு மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்தல் ஆகியவற்றை இந்தப் பயிற்சி வலுப்படுத்தும் என்று மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. முதல் தங்கத்தை ஆஸ்திரேலியா வென்றது

டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் முதல் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கிய நிலையில், முதல் தங்கப்பதக்கத்தை ஆஸ்திரேலிய சைக்கிளிங் வீராங்கனை பெய்ஜ் கிரேகோ வென்றார்.

மகளிருக்கான சைக்கிளிங் போட்டியில் 'C1–3' 3000 மீ பிரிவில் பெய்ஜ் கிரேகோ 3 நிமிஷம் 50.81 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார். சீனாவின் வாங் ஜியாவ்மெய் 3 நிமிஷம் 54.97 விநாடிகளில் வந்து வெள்ளியும், ஜெர்மனியின் டெனிஸ் ஷின்ட்லர் 3 நிமிஷம் 55.12 விநாடிகளில் வந்து வெண்கலமும் வென்றனர். கிரேகோவுக்கு இது முதல் பாராலிம்பிக் பதக்கமாகும். டோக்கியோ பாராலிம்பிக்கில் முதல் நாளில் 7 விளையாட்டுகளில் 24 பதக்க போட்டிகள் நடைபெற்றன.

---

1. பின்வரும் எந்த நகரத்தில், செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையம் திறக்கப்பட்டுள்ளது?

அ) சென்னை

ஆ) ஹைதராபாத் ☑

இ) திருவனந்தபுரம்

ஈ) பெங்களூரு

✓ ஹைதராபாத் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையத்தை மத்திய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் திறந்துவைத்தார். பொருண்ம அறிவியல் மற்றும் உலோகவியற்பொறியியல் துறையின் கட்டடம், உயர் செயல்திறன்கொண்ட கணினி மையம் மற்றும் உயர்-தெளிவுத்திறன் கொண்ட எலக்ட்ரான் நுண்ணோக்கி வசதி ஆகியவற்றையும் அவர் திறந்துவைத்தார்.

✓ செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையமானது ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு நிறுவனத்துடன் (JICA) இணைந்து அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வகத்தை நிறுவுவதற்காக ஹனிவெல் டெக்னாலஜி சொல்யூஷன்சுடன் பல்கலை ஒப்பந்தம் செய்துள்ளது.

---

2. 2021 உலக தடகள U20 சாம்பியன்ஷிப்பை நடத்துகிற நாடு எது?

அ) கானா

ஆ) கென்யா ☑

இ) தென்னாப்பிரிக்கா

ஈ) ஜமைக்கா

✓ 2021 உலக தடகள U20 சாம்பியன்ஷிப், உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் என்றும் அழைக்கப்படுகிறது; இது கென்யாவின் நைரோபியில் உள்ள நயாயோ விளையாட்டு வளாகத்தில் 2021 ஆகஸ்ட் 17 முதல் 22 வரை நடைபெறுகிறது. U20 சாம்பியன்ஷிப் என்பது ஜூனியர் சாம்பியன்ஷிப் ஆக தகுதிபெறுவதற்கான ஒரு சர்வதேச தடகள போட்டியாகும்.

---

3. உலக கொசு நாளாக கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட்.18

ஆ) ஆகஸ்ட்.20 ☑

இ) ஆகஸ்ட்.22

ஈ) ஆகஸ்ட்.24

✓ மலேரியாவிற்கான காரணங்கள் மற்றும் அதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் ஆகஸ்ட்.20 அன்று உலக கொசு நாள் கடைபிடிக்கப்படுகிறது. மலேரியாவால் ஏற்படும் நோய்க்கு எதிரான போராட்டத்தில் சுகாதார அதிகாரிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளின் முன்னெடுப்புகளை முன்னிலைப்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ ஒவ்வோர் ஆண்டும் உலக கொசு நாளன்று, கொசுக்களால் ஏற்படும் நோய்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. "Reaching the zero-malaria target" என்பது நடப்பாண்டு (2021) வரும் உலக கொசு நாளுக்கானக் கருப்பொருளாகும். கடந்த 1897ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் மருத்துவர் சர் ரொனால்ட் ராஸ், பெண் கொசுக்கள் மனிதர்களிடையே மலேரியாவை பரப்புகின்றன என்று கண்டுபிடித்த நிகழ்வையும் இந்த நாள் நினைவுகூர்கிறது. 1902'இல், ராஸ், மருத்துவத்திற்கான நோபல் பரிசை வென்றார் மற்றும் அதைப்பெற்ற முதல் பிரித்தானியர் ஆனார்.

4.கர்னால் ஏரி உல்லாச விடுதியில் முதல் சோலார் மின்சார வாகன மின்னேற்ற நிலையம் திறக்கப்பட்டதை அடுத்து, எந்த நெடுஞ்சாலை, இந்தியாவின் முதல் மின்-வாகனத்துக்குகந்த நெடுஞ்சாலையாக மாறியுள்ளது?

அ) தில்லி-சண்டிகர் நெடுஞ்சாலை ☑

ஆ) தில்லி-மும்பை நெடுஞ்சாலை

இ) தில்லி-ஜெய்ப்பூர் நெடுஞ்சாலை

ஈ) தில்லி-மீரட் நெடுஞ்சாலை

✓ மத்திய கனரக தொழிற்சாலைகள் அமைச்சின் FAME-1 (இந்தியாவில் மின்சார மற்றும் கலப்பு வாகனங்களுக்கு விரைவில் மாறுதல் மற்றும் உற்பத்தி) திட்டத்தின்கீழ் சூரிய ஆற்றல் அடிப்படையிலான வாகன மின்னேற்றி நிலையங்களை தில்லி-சண்டிகர் நெடுஞ்சாலையில் அதிகளவில் பாரத மிகுமின் நிறுவனம் நிறுவியிருப்பதால், இந்தியாவின் முதல் மின்சார வாகனங்களுக்கு தோழமையான நெடுஞ்சாலையாக அது உருவாகி இருக்கிறது.

✓ கர்னால் ஏரி விடுதியில் அமைந்துள்ள சூரிய ஆற்றல் மின்சார வாகன மின்னேற்றி நிலையத்தை மத்திய கனரக தொழிற்சாலைகள் அமைச்சர் டாக்டர் மகேந்திரநாத் பாண்டே காணொலிமூலம் திறந்துவைத்தார்.

---

5. உலகளவில் கிரிப்டோ ஏற்றலில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) முதலாவது

ஆ) இரண்டாவது ☑

இ) மூன்றாவது

ஈ) நான்காவது

✓ பிளாக்செயின் தரவுதளமான செயினாலிசிஸின்படி, 2021 உலகளாவிய கிரிப்டோ ஏற்றல் குறியீட்டில் (Crypto Adoption), உலகளவில் கிரிப்டோ ஏற்றலில் வியத்நாமிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. கிரிப்டோ ஏற்றலில் உள்ள முதல் 5 நாடுகளுமே ஆசியாவைச் சேர்ந்தவைதான். உலகளவில் 47,000 பயனர்களை அந்த நிறுவனம் ஆய்வுசெய்தது. இந்தியாவில், 30% பேர் தாங்கள் கிரிப்டோகரன்ஸிகள் வைத்திருப்பதாக கூறினர். அந்த அறிக்கையின்படி, பிட்காயின் என்பது இந்தியாவில் மிகவும் பிரபலமான நாணயமாகும். அதைத் தொடர்ந்து ரிப்பிள், எத்தேரியம் மற்றும் பிட்காயின் கேஷ் ஆகியவை உள்ளன.

---

6. அடிமை வர்த்தகம் & அதன் ஒழிப்பினை நினைவுகூருவதற்கான பன்னாட்டு நினைவு நாளாக அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட்.20

ஆ) ஆகஸ்ட்.21

இ) ஆகஸ்ட்.22

ஈ) ஆகஸ்ட்.23 ☑

✓ ஐநா அவையானது ஆண்டுதோறும் ஆக.23 அன்று "அடிமை வர்த்தகம் & அதன் ஒழிப்பினை நினைவுகூருவதற்கான பன்னாட்டு நினைவு நாளாக" அனுசரிக்கிறது. கொடூரமான நடைமுறை அல்லது முறையான இனவெறியால் மனிதாபிமானமற்ற முறையில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் நினைவாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1791'இல் செயிண்ட்-டொமிங்குவில், அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டுவர கலகம் செய்த ஆண்கள் மற்றும் பெண்களின் நினைவை இந்த நாள் கௌரவிக்கிறது.

---

7. சென்னை நாளாக கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட்.22 ☑

ஆ) ஆகஸ்ட்.24

இ) ஆகஸ்ட்.25

ஈ) ஆகஸ்ட்.27

✓ 2021 ஆகஸ்ட்.22 அன்று சென்னை தனது 382ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியது. 1639 ஆக.22 அன்று, மதராசப்பட்டணம் கிராமத்தை கிழக்கிந்திய நிறுவனம் விசயநகரப்பேரரசிடமிருந்து வாங்கியது. சென்னை நாளைக்கொண்டாடும் கருத்து 2004இல் உருவாக்கப்பட்டது.

---

8. உலக மூத்த குடிமக்கள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட்.21 ☑

ஆ) ஆகஸ்ட்.22

இ) ஆகஸ்ட்.24

ஈ) ஆகஸ்ட்.26

✓ வயோதிகர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் மற்றும் மூத்தோருக்கான ஆதரவு, மரியாதை மற்றும் பாராட்டு மற்றும் அவர்களின் சாதனைகளை அங்கீகரிப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக மூத்த குடிமக்கள் நாள், ஆகஸ்ட்.21 அன்று கொண்டாடப்படுகிறது. 1990 டிச.14 அன்று ஐநா பொது அவையால் இந்நாள் அறிவிக்கப்பட்டது.

---

9. அண்மையில் காலமான O சந்திரசேகரன், ஒலிம்பிக் போட்டியில், இந்தியாவை எந்த விளையாட்டில் பிரதிநிதித்துவப்படுத்தினார்?

அ) ஹாக்கி

ஆ) மல்யுத்தம்

இ) நீளந்தாண்டுதல்

ஈ) கால்பந்து ☑

✓ முன்னாள் இந்திய கால்பந்து வீரர் O சந்திரசேகரன் 2021 ஆகஸ்ட்.24 அன்று தனது 86ஆவது வயதில் கொச்சியில் காலமானார். 1960 ரோம் மற்றும் 1964 டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற இந்திய அணியில் சந்திரசேகரன் இருந்தார். 1962ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற இந்திய அணியின் உறுப்பினராகவும், அதே ஆண்டு டெல் அவிவில் நடைபெற்ற ஆசியக் கோப்பையில் வெள்ளியும் பெற்றார். 1963 சந்தோஷ் கோப்பையை வென்ற மகாராஷ்டிரா அணியின் கேப்டனாகவும் அவர் இருந்தார்.

---

10. தொற்றுநோய் ஆசியா மற்றும் பசிபிக் முன்னேற்றத்தை அச்சுறுத்துகிறது எனக்குறிப்பிடும், "ஆசியா & பசிபிக் 2021'க்கான முக்கிய சுட்டிகள்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ) உலக வங்கி

ஆ) ஆசிய வளர்ச்சி வங்கி ☑

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) ஐநா வளர்ச்சித் திட்டம்

✓ ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒரு புதிய அறிக்கையின்படி, வளர்ந்துவரும் ஆசிய நாடுகளில், கடந்த ஆண்டை ஒப்பிடும்போது, தோராயமாக 75 முதல் 80 மில்லியனுக்கும் அதிகமான மக்களை COVID-19 தொற்று, தீவிர வறுமையில் தள்ளியுள்ளது. 'ஆசியா & பசிபிக்-2021க்கான முக்கிய சுட்டிகள்', COVID-19 தொற்று ஆசியாவை அச்சுறுத்துவதாகவும், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் முக்கியமான இலக்குகளை நோக்கி பசிபிக் முன்னேறுவதாகவும் கூறுகிறது. பசி, நலவாழ்வு மற்றும் கல்வி போன்றவற்றிலும் முன்னேற்றம் தடைபட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உச்சநீதிமன்றத்துக்கு 9 புதிய நீதிபதிகள் நியமனம்

தலைமை நீதிபதி NV ரமணா தலைமையிலான கொலீஜியத்தின் பரிந்துரையை ஏற்று, உச்சநீதிமன்றத்துக்கு 9 புதிய நீதிபதிகளைக் குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் நியமித்துள்ளார்.

புதிய நீதிபதிகளில் ஒருவரான பி வி நாகரத்னா, வரும் 2027ஆம் ஆண்டில் நாட்டின் முதல் பெண் தலைமை நீதிபதியாகப் பணியாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது 10 நீதிபதி பதவியிடங்கள் காலியாக உள்ள நிலையில், 3 பெண்கள் உள்பட 9 பேரை புதிய நீதிபதிகளாக நியமிக்குமாறு தலைமை நீதிபதி NV ரமணா தலைமையிலான உச்ச நீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரைத்திருந்தது. அந்தப் பரிந்துரையை ஏற்ற மத்திய சட்டத்துறை அமைச்சகம், புதிய நீதிபதிகளின் நியமனத்தை உறுதிசெய்து அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிட்டது. அவர்களது நியமனக் கடிதத்தில் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் கையெழுத்திட்டார்.

அதன்படி, கர்நாடக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அபய் ஸ்ரீநிவாஸ் ஒகா, குஜராத் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி விக்ரம் நாத், சிக்கிம் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜிதேந்திர குமார் மகேஷ்வரி, கேரள உயர்நீதிமன்ற நீதிபதி சிடி ரவிகுமார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எம் எம் சுந்தரேஷ் ஆகியோர் உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளில் பி வி நாகரத்னா (கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி), ஹிமா கோலி (தெலங்கானா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி), பெலா எம் திரிவேதி (குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி) ஆகியோர் பெண்கள் ஆவர்.

உச்சநீதிமன்றத்தில் தற்போது இந்திரா பானர்ஜி மட்டுமே பெண் நீதிபதியாக உள்ளார். புதிதாக மூன்று பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து இந்த எண்ணிக்கை 4ஆக அதிகரிக்கும். உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதியையும் சேர்த்து 34 நீதிபதிகள் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் பெண் தலைமை நீதிபதி வாய்ப்பு:

உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாகும் வாய்ப்பு நீதிபதி பி வி நாகரத்னாவுக்கு ஏற்பட்டுள்ளது. அவர் 2027ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் சுமார் 1 மாதத்துக்குத் தலைமை நீதிபதியாகப் பணியாற்ற வாய்ப்புள்ளது.

நீதிபதியாகும் வழக்குரைஞர்:

மூத்த வழக்குரைஞரும் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலுமான பி எஸ் நரசிம்மா உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். வழக்குரைஞர் சங்கத்திலிருந்து உச்சநீதிமன்ற நீதிபதியாக நேரடியாக நியமனம் செய்யப்பட்டுள்ள 6ஆவது வழக்குரைஞர் இவர் ஆவார். நீதிபதி நாகரத்னாவின் ஓய்வுக்குப் பிறகு, அடுத்த தலைமை நீதிபதியாகும் வாய்ப்பு பி எஸ் நரசிம்மாவுக்கு உள்ளது. அவரது பதவிக்காலம் ஓராண்டுக்கும் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

---

2. கீழடி அகழாய்வில் தந்தத்தினாலான பகடை கண்டெடுப்பு

கீழடியில் நடைபெற்றுவரும் 7ஆம் கட்ட அகழாய்வில், தந்தத்தில் செய்யப்பட்ட பகடை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக, தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். சிவகங்கை மாவட்டம் கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் 7ஆம்கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக, அகரத்தில் 8 குழிகள், மணலூரில் 3 குழிகள், கொந்தகையில் 5 குழிகள், கீழடியில் 9 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

இதில், சுடுமண் முத்திரை, உறை கிணறுகள், காதணிகள், முதுமக்கள் தாழி, கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருள்கள் என ஏராளமான தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. இந்நிலையில், கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் தந்தத்தினாலான பகடை அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தொல்லியலாளர்கள் தெரிவித்தது:

கீழடி உள்ளிட்ட 4 பகுதிகளில் செப்டம்பர் மாதம் வரை அகழாய்வுப் பணிகள் நடைபெறும். அதேநேரம், இந்த ஆய்வில் கண்டெடுக்கப்படும் தொல்பொருள்கள் அனைத்தும் ஆவணப்படுத்தும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கீழடி அகழாய்வில், தந்தத்தில் செய்யப்பட்ட அழகிய வேலைப்பாடு கொண்ட சதுர வடிவிலான பகடை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இப்பகடையில் ஒவ்வொரு பக்கத்தின் முகங்களும் ஒரு புள்ளியைச் சுற்றி 2 வட்டக் கீறல்கள் முத்திரையிடப்பட்டுள்ளன. மிக நேர்த்தியாக ஒன்றன் மேல் ஒன்றாக வரையப்பட்டுள்ள இப்பகடையானது, 4 புறமும் 1.5 செமீ அளவுடையதாகவும், 4 கி எடையுடையதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பழங்கால மக்கள் பொழுதுபோக்குக்காக பகடை ஆடும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருக்கலாம் என்றனர்.

---

3. தமிழ்நாட்டில் பத்து புதிய அரசு கலை, அறிவியல் கல்லூரிகள்: அரசு அறிவிப்பு

தமிழ்நாடு முழுவதும் 10 இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடரில் ஒவ்வொரு துறை வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. ஆக.26 அன்று உயர்கல்வி மற்றும் பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

இதில் உயர்கல்வித்துறை சார்பில் வெளியான அறிவிப்பு: "தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான உயர்கல்வி வழங்குவதற்கும், மாணவர் சேர்க்கை விகிதாச்சாரத்தை அதிகப்படுத்துவதற்கும், 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கும் வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்காணும் இடங்களில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படும்.

விருதுநகர் – **திருச்சுழி**, கள்ளக்குறிச்சி – **திருக்கோவிலூர்**, ஈரோடு – **தாளவாடி**, திண்டுக்கல் – **ஒட்டன்சத்திரம்**, திருநெல்வேலி – **மானூர்**, திருப்பூர் – **தாராபுரம்**, தருமபுரி – **ஏரியூர்**, புதுக்கோட்டை – **ஆலங்குடி**, வேலூர் – **சேர்க்காடு** ஆகிய இடங்களில் புதிய இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், திருவாரூர் – **கூத்தாநல்லூரில்** புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் தொடங்கப்படும்". இவ்வாறு உயர்கல்வித்துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

4. செப்.1 முதல் அனைத்து வாகனங்களுக்கும் 5 ஆண்டுகளுக்கான காப்பீடு கட்டாயம்: உயர்நீதிமன்றம் உத்தரவு

செப்.1ஆம் தேதி முதல் விற்கப்படும் அனைத்து வாகனங்களுக்கும் 'பம்பர் டூ பம்பர்' என்ற அடிப்படையில் 5 ஆண்டுகளுக்குக் காப்பீடு செய்வதைக் கட்டாயமாக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஒகேனக்கல்லில் கடந்த 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த சாலை விபத்தில் மரணமடைந்த சடையப்பன் என்பவரின் குடும்பத்தினர், இழப்பீடு கேட்டு ஈரோடு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த தீர்ப்பாயம், சடையப்பன் குடும்பத்துக்கு 14 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவு பிறப்பித்தது. இதை எதிர்த்து, 'நியூ இந்தியா அஷுரன்ஸ்' நிறுவனம், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கை ஆக.26 அன்று நீதிபதி எஸ் வைத்தியநாதன் விசாரித்தார். வாகனத்திற்கான ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் என்ற அடிப்படையில் மட்டுமே வாகனத்துக்குக் காப்பீடு எடுக்கப்பட்டதாகவும், ஓட்டுநர் அல்லாத ஒருவர் இறப்புக்கு ஒரு லட்ச ரூபாய் மட்டுமே இழப்பீடு வழங்க முடியுமென காப்பீட்டு நிறுவனம் தெரிவித்தது.

சடையப்பன் வாகன ஓட்டுநராக அடையாளப்படுத்தப்பட்டு இருந்தாலும் விபத்து நடந்தபோது அவர் வாகனத்தை இயக்கவில்லை என்றும், அவர் சம்பளம் பெற்றதற்கான ஆதாரங்கள் இல்லை என்றும், காப்பீட்டு நிறுவனம் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இவற்றை ஏற்றுக்கொண்ட நீதிபதி வைத்தியநாதன், ஈரோடு தீர்ப்பாய உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார். அதேசமயம் புதிய வாகனத்தை வாங்கும்போது அது எவ்வாறு செயல்படும் என்று தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுபவர்கள், காப்பீடு நடைமுறைகளை முழுமையாகத் தெரிந்து கொள்வதில்லை என வேதனை தெரிவித்தார்.

வாகனங்கள் வாங்குபவர்களுக்கு காப்பீடு தொடர்பான விவரங்களை முழுமையாகத் தெரிவிப்பதில்லை என்று விற்பனையாளர்களைக் குற்றம் சாட்டினார். வரும் செப்டம்பர் 1–ம் தேதி முதல் விற்கப்படும் அனைத்துப் புதிய வாகனங்களுக்கும் பம்பர் டூ பம்பர் என்ற அடிப்படையில், வாகன உரிமையாளர், ஓட்டுநர், பயணி என அனைவரையும் உள்ளடக்கும் வகையில், ஐந்து ஆண்டுகளுக்குக் காப்பீடு செய்வதைக் கட்டாயமாக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, காப்பீட்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசின் போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றியது தொடர்பாக, செப்டம்பர் 30–ம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமெனவும் தமிழக அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

---

5. காச நோய் தடுப்பு கூட்டுக் குழுவின் தலைவராக மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா பொறுப்பேற்பு

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சர் மன்சுக் மாண்டவியா, காசநோய் தடுப்பு குழுவின் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டார். 2024ஆம் ஆண்டு வரை அமைச்சர் இந்த பொறுப்பை வகிப்பார். ஐக்கிய நாடுகளின் காசநோய் இலக்கை 2022ஆம் ஆண்டிற்குள் அடையவும், 2030ஆம் ஆண்டிற்குள் காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் மைல் கல் தருணத்தை அடையவும், காசநோய் தடுப்பு கூட்டு செயலகம், கூட்டாளிகள் மற்றும் காசநோய் சமூகத்தின் முயற்சிகளை அவர் முன்னெடுத்துச் செல்வார்.

---

6. அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட 4 நாடுகளின் மலபார் கூட்டு போர் பயிற்சி தொடங்கியது

மலபார் கூட்டு போர் பயிற்சி, கடந்த 1992ஆம் ஆண்டு தொடங்கியது. அப்போது, அமெரிக்கா, இந்தியா ஆகிய இரு நாடுகளின் கடற்படைகள் மட்டும் பங்கேற்றன. பின்னர், ஜப்பானும், ஆஸ்திரேலியாவும் இதில் இணைந்தன. மேற்கண்ட 4 நாடுகளும் 'குவாட்' நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் நடக்கும் 'குவாட்' நாடுகளின் மலபார் கடற்படை கூட்டு போர் பயிற்சி தொடங்கியது. குவாட் நாட்டு கடற்பகுதியில் 4 நாட்களுக்கு இப்பயிற்சி நடக்கிறது.

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால், அது சுதந்திரமான, வெளிப்படையான பிராந்தியமாக நீடிக்கும்வகையில், 4 நாடுகளும் ஒத்துழைப்பை அளிப்பதற்காக, இந்த பயிற்சி நடக்கிறது. அமெரிக்க கடற்படை இதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதில், 4 நாடுகளின் போர் கப்பல்கள், விமானங்கள், ஹெலிகாப்டர்கள் ஆகியவை பங்கேற்று சிக்கலான பயிற்சிகளில் ஈடுபடுகின்றன. இந்திய கடற்படை தனது ஐ என் எஸ் சிவாலிக் போர்க்கப்பல், நீர்மூழ்கி தகர்ப்பு கப்பலான ஐ என் எஸ் கட்மட், கடல்சார் உளவு விமானம் ஆகியவற்றை பயிற்சியில் பங்கேற்க வைத்துள்ளது.

26–08–2021 – 'தமிழ்த்தென்றல்' திரு. வி. க'இன் 138ஆவது பிறந்தநாள்.

1.நுண்நிதி ஊக்கத்தொகை & நிவாரணத்திட்டத்தை அறிவித்துள்ள மாநிலம் எது?

அ) புதுச்சேரி

ஆ) சிக்கிம்

இ) அஸ்ஸாம் ☑

ஈ) தெலுங்கானா

✓ அஸ்ஸாம் நுண்நிதி ஊக்கத்தொகை & நிவாரணத் திட்டம் (AMFIRS), 2021'ஐ செயல்படுத்துவதற்காக 37 நுண்நிதி நிறுவனங்களுடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அஸ்ஸாம் அரசு கையெழுத்திட்டுள்ளது. COVID-19 காலத்தில் நல்ல கடன் ஒழுக்கத்தை தொடர்ந்து பராமரிக்க உதவுவதற்காக, அஸ்ஸாமில் உள்ள நுண்கடன் வாங்குவோர்க்கு நிதி நிவாரணம் வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் வாடிக்கையாளர்கள் தங்களின் கடனை, தொடர்ந்து திருப்பிச் செலுத்துவதில் ஊக்கமளிக்கும்.

---

2. குஜராத்தில் உள்ள ஒரு தொகுதியில் இயற்கை எரிகாற்றைக் கண்டுபிடித்த நிறுவனம் எது?

அ) ரிலையன்ஸ் பெட்ரோலியம்

ஆ) வேதாந்தா ☑

இ) இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்

ஈ) எண்ணெய் மற்றும் இயற்கை எரிகாற்று நிறுவனம்

✓ வேதாந்தா நிறுவனமானது குஜராத்தில் உள்ள ஒரு இயற்கை எரிவாயு தொகுதியை திறந்த ஏக்கர் உரிமக்கொள்கைமூலம் கண்டறிந்துள்ளது. இந்த வாயு மற்றும் செறிவு வயலை (ஜெயா) கண்டுபிடித்ததாக, DGH & பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகத்திடம் அந்த நிறுவனம் தெரிவித்தது. இது குஜராத்தின் பரூச் மாவட்டத்தில் உள்ள தொகுதியில் துளையிடப்பட்டு கண்டறியப்பட்டது.

---

3. இந்தியாவின் முதல் புகைகோபுரம் திறக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ) கொல்கத்தா

ஆ) தில்லி ☑

இ) மும்பை

ஈ) பெங்களூரு

✓ இந்தியாவின் முதல் புகை கோபுரத்தை தில்லியின் கன்னாட் இடத்தில் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் திறந்துவைத்தார். சோதனை முறையிலான இந்தத் திட்டம், வெற்றியடைந்தால், மேலும் பல புகை கோபுரங்கள் நிறுவப்படும். நகர்ப்புறப் பகுதிகளில் காற்று மாசுபாட்டைக் குறைத்து, காற்றினை தூய்மையாக்குகிறது. இந்த ஆய்வு ஐஐடி தில்லி மற்றும் ஐஐடி பம்பாயால் மேற்கொள்ளப்படும். இரண்டு நிறுவனங்களும் திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசகர்களாக இருக்கும்.

---

4. மணிப்பூரின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) தமிழிசை சௌந்தரராஜன்

ஆ) இல கணேசன் ☑

இ) ஹரிஹரன் ராஜா சர்மா

ஈ) L முருகன்

✓ குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் ஆக.22 அன்று தமிழ்நாட்டின் மூத்த பாஜக தலைவர் இல கணேசனை மணிப்பூரின் புதிய ஆளுநராக நியமித்தார். இந்த மாத தொடக்கத்தில், நஜ்மா ஹெப்துல்லா ஓய்வுபெற்ற பிறகு, மணிப்பூர் ஆளுநர் பதவி காலியாகவே இருந்தது. ஆக.10 அன்று ஹெப்துல்லா ஓய்வு பெற்றார்; அதே நாளில், தற்காலிக பொறுப்பு, சிக்கிம் ஆளுநர் கங்கா பிரசாத்திடம் கொடுக்கப்பட்டது.

---

5. புதைபடிவமற்ற எஃகு தயாரித்த உலகின் முதல் நாடு எது?

அ) ஜெர்மனி

ஆ) இந்தியா

இ) ரஷ்யா

ஈ) சுவீடன் ☑

✓ பசுமை எஃகு என்றும் அழைக்கப்படும் புதைபடிவமற்ற எஃகு தயாரித்த உலகின் முதல் நாடு சுவீடன் ஆகும். இந்தப் பசுமை எஃகு HYBRIT தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதல் விநியோகம் வோல்வோ AB'க்கு சோதனை முறையில் வழங்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி 2016ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் இருந்துவருகிறது. முழு அளவிலான உற்பத்தி 2026 முதல் தொடங்கும். இவ்வறிக்கைகளின்படி, கோக்கிங் நிலக்கரிக்கு மாற்றாக ஹைட்ரஜனை பயன்படுத்துவது, எஃகு தயாரிப்பில் இருந்து குறைந்தபட்சம் 90% உமிழ்வைக்குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

6. 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப்பில், பெண்கள் நீளந்தாண்டுதலில் வெள்ளி வென்றவர் யார்?

அ) தீபிகா குமாரி

ஆ) பிரியங்கா கோஸ்வாமி

இ) சீமா புனியா

ஈ) ஷைலி சிங் ☑

✓ ஆக.22 அன்று நைரோபியில் நடந்த உலக தடகள 20 வயதுக்குட்பட்ட சாம்பியன்ஷிப் போட்டிகளில் 6.59 மீட்டர் பாய்ச்சலில் பெண்கள் நீளம் தாண்டுதலில் ஷைலி சிங் வெள்ளிவென்றார். சுவீடனின் மஜா அஸ்காக் (6.60 மீ) விட ஒரு சென்டிமீட்டர் குறைவாகப் பாய்ந்து அவர் தங்கத்தை இழந்தார். மும்முறைத் தாண்டலில் அஸ்காக் தங்கம் வென்றார். இந்த உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில், இந்தியா மூன்று பதக்கங்களுடன் (2 வெள்ளி மற்றும் 1 வெண்கலம்) போட்டியை நிறைவு செய்தது. எட்டு தங்கம் உட்பட 16 பதக்கங்களுடன் கென்யா முதலிடத்தில் உள்ளது.

---

7. சாலைகளிலும் சீரற்ற நிலப்பரப்பிலும் பயன்படுத்தக்கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ள நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) ஐஐடி மெட்ராஸ் ☑

இ) டிஆர்டிஓ

ஈ) ஐஐடி பம்பாய்

✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐஐடி) மெட்ராஸ் ஒரு மோட்டார் சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ளது. அதனை சாலைகளிலும் சீரற்ற நிலப் பரப்பிலும் பயன்படுத்தப்படலாம். 'நியோபோல்ட்' என்ற பெயரிலான மின் கலம்மூலம் இயக்கப்படும் இவ்வாகனம், மணிக்கு 25 கிமீ வேகத்தில் பயணிப்பதோடு ஒரு முறை முழு முன்னேற்றம் செய்தால் 25 கிமீ வரை செல்லும். இந்த வாகனம் 'நியோமோஷன்' என்ற துளிர்நிறுவனம்மூலம் வணிகமயமாக்கப்பட்டுள்ளது.

---

8. இந்தியாவில் உள்ள குழந்தைகள் பருவநிலை நெருக்கடியால் அதிக ஆபத்திலுள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ) UNICEF ☑

ஆ) உலக வங்கி

இ) உலக நலவாழ்வு அமைப்பு

ஈ) NITI ஆயோக்

✓ யுனிசெப்பின் புதிய அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள குழந்தைகள் பருவநிலை நெருக்கடியால் அதிக ஆபத்தில் உள்ளனர். இந்த அறிக்கையின்படி, குழந்தைகள் அதிகம் ஆபத்திலிருக்கும் 4 தெற்காசிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். காலநிலை மாற்றம் அவர்களின் உடல்நலம், கல்வி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துகிறது. பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய 4 தெற்காசிய நாடுகளின் குழந்தைகள் அதிக ஆபத்தில் உள்ளனர்.

✓ பாகிஸ்தான் 14ஆவது இடத்திலும், வங்கதேசம் 15ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 25ஆவது இடத்திலும், இந்தியா 26ஆவது இடத்திலும் உள்ளது. நேபாளம் 51ஆவது இடத்திலும், இலங்கை 61ஆம் இடத்திலும், பூடான் 111ஆவது இடத்திலும் உள்ளன.

✓ வரவிருக்கும் ஆண்டுகளில், இந்தியர்கள் 'கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை' சந்திக்க நேரிடும். அதே நேரத்தில், உலகளாவிய வெப்பநிலை 2° செல்சியஸாக அதிகரித்தபின் இந்தியாவின் நகர்ப் புறங்களில் திடீர் வெள்ளப்பெருக்கும் கணிசமாக அதிகரிக்கும். மேலும், கடந்த 2020'இல், உலகின் மாசுபட்ட காற்று உள்ள 30 நகரங்களில் 21

நகரங்கள் இந்தியாவில் இருந்தன. இந்த கண்டுபிடிப்புகள் யுனிசெப்பின் "The Climate Crisis Is a Child Rights Crisis: Introducing the Children's Climate Risk Index (CCRI)" என்ற அறிக்கையில் வெளியிடப்பட்டன. CCRI என்பது குழந்தைகள்மீது கவனம் செலுத்தி வெளிவந்த யுனிசெப்பின் முதல் அறிக்கையாகும்.

---

9. வேளாண்சார்ந்த துறைகளுக்கு கடன்வசதியுடன்கூடிய இரு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?

அ) சிக்கிம்

ஆ) மணிப்பூர்

இ) அருணாச்சல பிரதேசம் ☑

ஈ) நாகாலாந்து

- ✓ அருணாச்சல பிரதேச மாநில அமைச்சரவையானது கடன்வசதியுடன் கூடிய இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அது விவசாயம் சார்ந்த துறைகளில் ₹300 கோடி அளவுக்கு முதலீடு செய்ய உதவும்.
- ✓ 2021–22 நிதியாண்டில் விவசாயத்திற்காக ஆத்மநிர்பார் கிருஷி திட்டம் & தோட்டக்கலைக்காக ஆத்ம நிர்பார் பக்வானி திட்டம் ஆகியவற்றுக்கு மாநில அரசு தலா ₹60 கோடி மானியங்களை ஒதுக்கியுள்ளது. கடன் வசதியுடன் கூடிய இத்திட்டங்கள் 3 கூறுகளைக்கொண்டிருக்கும்.
- ✓ அவை வங்கி கடன்கள், மானியம் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பு ஆகும். உழவர்கள், சுய–உதவிக் குழுக்கள் & உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு இந்தத் திட்டங்கள் கிடைக்கும்.

---

10. COVID தொற்றின் காரணமாக கணவனை இழந்த மகளிர்க்கு உதவுவதற்காக, "மிஷன் வத்சல்யா" என்ற சிறப்புத் திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) மகாராஷ்டிரா ☑

ஆ) கேரளா

இ) தில்லி

ஈ) ஜார்க்கண்ட்

- ✓ மகாராஷ்டிரா மாநில அரசு COVID–19 நோயால் கணவனை இழந்த பெண்களுக்கு உதவுவதற்காக, "மிஷன் வத்சல்யா" என்ற சிறப்புத் திட்டத்தைத் தொடங்கியது. இந்தத் திட்டம் அதுபோன்ற பெண்களுக்கு பல சேவைகள் மற்றும் 18 நன்மைகளை ஒரே கூரையின்கீழ் வழங்கும். இது கைம்பெண்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், சஞ்சை காந்தி நிரதர் யோஜனா மற்றும் கர்குல் யோஜனா போன்ற திட்டங்கள் பெண்களுக்கு பயனளிக்கும். இத்திட்டம் மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டுத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உள்ளூர் பிரிவு அலுவலர்கள் அந்தப் பெண்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக அவர்களின் வீடுகளுக்கே செல்வர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. முகாம் வாழ் இலங்கைத் தமிழர் மேம்பாடுக்கு ரூ.317 கோடியில் 10 புதிய நல திட்டங்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் மேம்பாட்டுக்காக ரூ.317 கோடியில் பத்து புதிய நலத் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின், வெள்ளிக்கிழமை அறிவித்தார். சட்டப் பேரவையில் விதி 110–ன் கீழ் அவர் புதிய அறிவிப்புகளைச் செய்தார். இதுகுறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் படித்தளித்த அறிக்கை:

1983–ஆம் ஆண்டு முதல் இதுவரை 3 லட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கைத் தமிழர்கள் தமிழகத்துக்கு வந்துள்ளனர். அவர்களில் 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 822 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 29 மாவட்டங்களில் அமைந்துள்ள 108 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 13,540 குடும்பங்களைச் சேர்ந்த 34,087 பேர் காவல் நிலையங்களில் பதிவு செய்து, வெளிப் பதிவில் வசித்து வருகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்களின் முகாம்களில் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி இருப்பது தெரிய வந்துள்ளது. இதன்படி நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் புதிய அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

1. இலங்கைத் தமிழர்களின் முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகள் ரூ.231.54 கோடியில் புதிதாகக் கட்டித் தரப்படும். இதில் முதல்கட்டமாக 3,510 புதிய வீடுகள் கட்ட நிகழாண்டில் ரூ.108.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. முகாம்களில் உள்ள மின்வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ரூ.30 கோடி ஒதுக்கப்படும். இதைத் தவிர, ஆண்டுதோறும் இதுபோன்ற வசதிகளைச் செய்துதர இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை ஏற்கெனவே அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை உயர்த்தப்படும். அதன்படி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) படிப்புக்கு ரூ.10 ஆயிரம், இளநிலை கலை மற்றும் அறிவியல் படிப்புக்கு ரூ.12 ஆயிரம், இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு ரூ.20 ஆயிரம் அளிக்கப்படும். இதற்காக ரூ.1.25 கோடி ஒதுக்கப்படும்.

4. முகாம் வாழ் இலங்கைத் தமிழ் இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்படும். ஐந்தாயிரம் இளைஞர்களின் பயிற்சிக்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. முகாம்களில் உள்ள 300 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியாக ஒவ்வொரு குழுவுக்கும் தலா ரூ.1.25 லட்சம் அளிக்கப்படும். கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 குழுக்களுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்ட தொகையுடன் ரூ.75 ஆயிரம் கூடுதலாக வழங்கப்படும்.

6. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை இனி குடும்பத் தலைவருக்கு ரூ.1,500 ஆகவும், இதர பெரியவர்களுக்கு ஆயிரம் ரூபாயாகவும், 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ரூ.500 ஆகவும் உயர்த்தி அளிக்கப்படும்.

7. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு விலையில்லாத எரிவாயு இணைப்பு, இலவச அடுப்பு அளிக்கப்படும். மேலும், குடும்பத்துக்கு 5 எரிவாயு உருளைக்குத் தலா ரூ.400 வீதம் மானியம் அளிக்கப்படும். முகாம் வாழ் தமிழர்களுக்கு கிலோ 57 பைசா வீதம் மாதந்தோறும் 20 கிலோ அரிசி தற்போது வழங்கப்படுகிறது. இனி அரிசி விலையில்லாமல் அளிக்கப்படும்.

8. கோ–ஆப்டெக்ஸ் மூலம் ஆடைகளும், போர்வைகளும் வழங்கும் திட்டத்துக்கான தொகை குடும்பத்துக்கு ரூ.3,473 ஆக உயர்த்தி அளிக்கப்படும்.

9. முகாம் வாழ் தமிழர்களுக்கு ரூ.1,296 விலையில் சமையல் பாத்திரங்கள் வழங்கப்படும். மொத்தமாக இலங்கைத் தமிழர்களின் மேம்பாட்டுக்கென ரூ.317.40 கோடி மதிப்பில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இலங்கைத் தமிழர் நலன் காக்க ஆலோசனைக் குழு

தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன்களைக் காத்திடவும், உரிய ஆலோசனைகளை வழங்கிடவும் தனியாக குழு அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதுகுறித்து, பேரவை 110–ன் கீழ் அவர் வெளியிட்ட அறிவிப்பு:

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள், வெளிப்பதிவில் உள்ளவர்களுக்கு உரிய உதவிகள் அளிக்கவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், குடியுரிமை வழங்குதல், அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வை கண்டறிந்திட ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

இந்தக் குழுவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டப் பேரவை உறுப்பினர் தலா ஒருவர், பொதுத் துறைச் செயலாளர், மறுவாழ்வுத் துறை இயக்குநர், பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர் பிரதிநிதி, வெளிப்பதிவில் வசிக்கக் கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோர் இடம்பெற்றிருப்பர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

---

2. தமிழக ஆளுநருக்கு கூடுதல் பொறுப்பு

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு பஞ்சாப் மாநில ஆளுநராகவும், சண்டீகர் யூனியன் பிரதேச நிர்வாகியாகவும் கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான உத்தரவை குடியரசுத்

தலைவர் ராம்நாத் கோவிந்த் வெள்ளிக்கிழமை பிறப்பித்துள்ளார். இதுதொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகை அறிக்கையில் கூறியிருப்பதாது: தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு பஞ்சாப் மாநில ஆளுநர் பொறுப்பு கூடுதலாக அளிக்கப்படுகிறது. பஞ்சாப் ஆளுநர் பணியிடத்துக்கு முறையான மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, அம்மாநில ஆளுநர் பணிகளை தமிழக ஆளுநர் கூடுதலாக கவனிப்பார். மேலும், சண்டீகர் யூனியன் பிரதேச நிர்வாகியாகவும் பன்வாரிலால் புரோஹித் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பஞ்சாப் மாநில ஆளுநராகவும், சண்டீகர் நிர்வாகியாகவும் வி.பி.சிங் பத்னோர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1940 ஆம் ஆண்டு பிறந்த பன்வாரிலால் புரோஹித், தமிழகத்தின் 14–வது ஆளுநராக, 2017–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பொறுப்பேற்றார். அதற்கு முன்பு அவர் அஸ்ஸாம் மாநில ஆளுநராகப் பதவி வகித்தார். முன்னதாக, மகாராஷ்டிர மாநிலம், நாகபுரி மக்களவை தொகுதியிலிருந்து இரு முறை காங்கிரஸ் சார்பாகவும், ஒருமுறை பாஜக சார்பாகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

3. அதிக கண்காணிப்பு கேமரா உள்ள நகரங்கள்: உலகளவில் மூன்றாமிடத்தை பிடித்த சென்னை

உலகம் முழுவதும் அதிக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்ட நகரங்களில், சென்னை மூன்றாமிடத்தை பிடித்துள்ளது. சென்னை பெருநகரத்தின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் விளைவாக கடந்த 2017ஆம் ஆண்டு முதல் குற்றத் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், வழிபாட்டு தலங்கள், மார்க்கெட்டுகள், பொதுஇடங்கள், சாலைகள், தெருக்கள் ஆகியவற்றில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு வருகிறது.

இதில் தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் பங்களிப்புடன் நகர் முழுவதும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு வருகின்றன. 'மூன்றாவது கண்' என்ற பெயரில் பொதுமக்களிடம் கண்காணிப்பு கேமரா பொருத்தும்படி காவல்துறை தீவிர விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டது. இதன் காரணமாக 50 மீட்டருக்கு ஒரு கேமரா உள்ளது. இதன் அடுத்த இலக்காக 25 மீட்டருக்கு ஒரு கேமரா பொருத்தும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். நான்கு ஆண்டுகளாக காவல்துறை எடுத்து வரும் நடவடிக்கையின் காரணமாக, சென்னையில் இப்போது 2.60 லட்சம் கண்காணிப்பு கேமராக்கள் உள்ளன. நகர் முழுவதும் கண்காணிப்பு கேமராக்களின் பார்வை பரந்து, விரிந்து இருப்பதினால் தங்கச் சங்கிலி பறிப்பு 48 சதவீதம்,கொள்ளை 24 சதவீதம்,அடிதடி 11 சதவீதம், குறைந்துள்ளதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இதேபோல செல்லிடப்பேசி பறிப்பும் பெருமளவு குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல காவல்துறையின் பணிச்சுமையையும் பெருமளவில் கண்காணிப்பு கேமரா குறைத்துள்ளது. முக்கியமாக 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட குற்ற வழக்குகளில் துப்பு துலக்குவதற்கு கண்காணிப்பு கேமராவே உதவுவதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

மூன்றாவது நகரம்: இந்நிலையில் 'போர்ஃபஸ் இந்தியா ' நிறுவனம் உலகம் முழுவதும் அதிக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்ட 20 நகரங்கள் குறித்த பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் தில்லி, லண்டன், சென்னை ஆகியவை முதல் 3 இடங்களை பிடித்துள்ளன மேலும் இப் பட்டியலில் இந்தியாவில் தில்லி, சென்னை, மும்பை ஆகிய 3 நகரங்கள் மட்டுமே இடம் பிடித்துள்ளன. உலகளவில் அதிகளவில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்ட நகரங்களில் முதலிடத்தை பிடித்திருக்கும் தில்லியில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 1,826 கண்காணிப்பு கேமராக்கள் இருப்பதாகவும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இரண்டாமிடத்தில் இருக்கும் லண்டனில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 1,138 கண்காணிப்பு கேமராக்களும், மூன்றாமிடத்தை பிடித்திருக்கும் சென்னையில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 609 கண்காணிப்பு கேமராக்கள் இருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தப் பட்டியலில் மும்பை 18ஆவது இடத்தில் உள்ளது.

இந்த நகரத்தில்.2.5 சதுர கிலோ மீட்டருக்கு 157 கண்காணிப்பு கேமராக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகளவில் அதிக கண்காணிப்பு கேமராக்கள் உள்ள நகரங்களில் சென்னை மூன்றாமிடத்தை பிடித்திருப்பது, சென்னை பெருநகர காவல்துறையினரிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

---

4. எல்ஐசியின் 'ஆனந்தா' செயலி அறிமுகம்

எல்ஐசி நிறுவன முகவர்களுக்கான 'ஆனந்தா' என்ற செல்லிடப்பேசி செயலி அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டது. எல்ஐசியின் தலைவர் எம்.ஆர்.குமார், மேலாண்மை இயக்குநர்கள் முகேஷ் குமார் குப்தா, ராஜ்குமார், சித்தார்த்தா மொஹந்தி மற்றும் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் காணொலி வாயிலாக இந்த செயலி அறிமுகம் செய்யப்பட்டது. இந்தச் செயலி மூலம் முகவர் அல்லது புது வணிகம் சார்ந்தோர் மூலமாக ஆயுள் காப்பீட்டு முன்மொழிவாளரின் ஆதார் மூலம் கே.ஒய்.சியின் அங்கீகாரம் பெற்று ஆயுள் காப்பீட்டைப் பெற முடியும். இதன் மூலம் வாடிக்கையாளர்களை முகவர்களால் தொடர்பு கொள்ளவும் முடியும். மேலும் இதில் தொடக்கம் முதல் முடிவு வரை ஆயுள் காப்பீடு பெறுவது குறித்த விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

---

5. 3 மாவட்டங்களில் புதிய வேளாண்மைக் கல்லூரிகள்: அரசு அறிவிப்பு

3 மாவட்டங்களில் புதிய வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒவ்வொரு துறை வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இன்று (ஆக.28) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

இதில் வேளாண் துறை சார்பில் வெளியான அறிவிப்பு:

"வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் (கீழ்வேளூர்), சிவகங்கை (செட்டிநாடு) ஆகிய மூன்று மாவட்டங்களில் ரூ.30 கோடி மதிப்பில் அரசு வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்கப்படும். தற்போது, வேளாண் கல்வி மற்றும் வேளாண் ஆராய்ச்சியின் தேவை அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் நிதிநிலை அறிக்கையில் கிருஷ்ணகிரியில் புதியதாக அரசுத் தோட்டக்கலைக் கல்லூரி தொடங்க அறிவிக்கப்பட்டது.

வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, 2021–2022ஆம் ஆண்டில், கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்குவதற்கு மாநில அரசு தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.30 கோடி நிதியை ஒதுக்கும்". இவ்வாறு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அறிவித்துள்ளது.

---

6. அகதிகள் முகாமை மறுவாழ்வு முகாம் என பெயர் மாற்றம்: அரசாணை வெளியீடு

இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம் என்பது இனி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் என அழைப்பதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. வேளாண்மை, கால்நடை, மீன்–பால் வளத் துறைகள் மானியக் கோரிக்கை மீது சனிக்கிழமை நடைபெற்ற விவாதத்தின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், இலங்கை அகதிகள் முகாம் இனி, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என அழைக்கப்படும். ஏனென்றால் அவர்கள் ஆதரவற்றவர்கள் அல்ல. நாம் அவர்களுக்குத் துணையாக இருக்கிறோம். அந்த உணர்வுடன் அகதிகள் முகாம் என்று அழைக்காமல் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று அழைக்க அரசு ஆணையிட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிலையில், இலங்கை தமிழர் அகதிகள் முகாம், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்கள் என அழைப்பதற்கான பெயர் மாற்றத்திற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் பழுதடைந்துள்ள 7469 வீடுகளை கட்டித்தரவும், குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் வாழ்க்கை தரம் மேம்பாடு நிதியாக ரூ.5 கோடி, 300 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.6.16 கோடி, விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு உருளை மானியத்திற்காக ரூ.10.50 கோடி ஒதுக்கீடு, கல்வி உதவித் தொகை, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, குடிநீர் வசதி, சாலை வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் என ரூ. 317 கோடிக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

7. 'BH' தொடர் வாகனப் பதிவெண் முறை அறிமுகம்

பணி நிமித்தமாக வெவ்வேறு மாநிலங்களில் அடிக்கடி குடிபெயர்வோர் தங்கள் வாகனங்களுக்கு 'பிஹெச்' தொடரில் அமைந்த பதிவெண் முறையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. வாகனங்கள் பதிவு செய்யப்படும் மாநிலங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கான எண்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசு அதிகாரிகள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் பணியாற்றுவோர் பணி நிமித்தமாக அடிக்கடி வேறு மாநிலங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலைமை உள்ளது.

அவ்வாறான சூழலில், இடம்பெயரும் மாநிலத்துக்குச் சென்ற ஓராண்டுக்குள் சம்பந்தப்பட்ட மாநிலத்தில் வரி செலுத்தி புதிய வாகனப் பதிவெண்ணைப் பெற வேண்டிய கட்டாயம் உள்ளது. வாகனத்தை வேறு மாநிலத்தில் மறுபதிவு செய்வதற்கு ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட மாநிலத்தில் இருந்து தடையில்லாச் சான்று பெற்று வழங்க வேண்டியுள்ளது.

இந்த நடைமுறையை எளிதாக்கும் நோக்கில், 'பிஹெச்' என்ற பாரத் தொடர் அடிப்படையிலான வாகனப் பதிவெண்களை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றுக்கு இடையே அடிக்கடி குடிபெயர்வோர் தங்கள் வாகனங்களுக்கு 'பிஹெச்' தொடர் அடிப்படையிலான பதிவெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த முறையில், வாகனம் முதலில் பதிவு செய்யப்படும் ஆண்டு (இரு இலக்கம்)–பிஹெச்–வாகனத்துக்கான 4 இலக்க எண்–இரு ஆங்கில எழுத்துகள் என்ற வரிசையில் வாகனப் பதிவெண் அமையும் என்று மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய பதிவெண்ணைக் கொண்ட வாகனங்கள் மாநிலங்களுக்கிடையே எளிதில் குடிபெயர முடியும் என்று அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'பிஹெச்' தொடர் அடிப்படையில் பதிவு செய்வதற்கு, வாகனத்தின் விலையைப் பொருத்து 8 முதல் 12 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. டீசலை எரிபொருளாகப் பயன்படுத்தும் வாகனங்களுக்குக் கூடுதலாக 2 சதவீத வரியும், மின்சார வாகனங்களுக்கு 2 சதவீதம் குறைவான வரியும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய வாகனப் பதிவெண் முறை செப்டம்பர் 15–ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

---

8. தஞ்சாவூரில் ரூ.25 கோடியில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை

தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் ரூ.25 கோடியில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும் என்று பால்வளத்துறை அமைச்சர் சா.மு.நாசர் அறிவித்தார். சட்டப்பேரவையில் பால்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் சா.மு.நாசர் வெளியிட்ட அறிவிப்பு: தற்போது மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் மெட்ரிக் டன் கால்நடை தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதில், ஈரோட்டில் உள்ள கால்நடை தீவன ஆலையிலிருந்து 3,500 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும், இதர கூட்டுறவு அமைப்புகளின் மூலம் 6,500 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மற்றும் இதர மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். சேலம் பால் பண்ணையில் நாளொன்றுக்கு 2 மெட்ரிக் டன் அளவில் நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய இனிப்பு இல்லாத பால்கோவா தயாரிக்கும் நவீன மற்றும் தொடர்ச்சியான உற்பத்திக்கான இயந்திரங்களுடன் கூடிய அலகு ரூ.8 கோடி மதிப்பில் நிறுவப்படும்.

பால் பொருள்கள், சிப்பம் கட்டும் பொருள்கள் மற்றும் மூலப் பொருள்களுக்கான ஆய்வுக்கூடம், ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம் மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வுக்கான ஆய்வுக்கூடம் ஆகியன அம்பத்தூர் பால்பண்ணையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்துக்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்கள் வழங்கும் பாலினை பகுப்பாய்வு செய்து, உடனே பாலின் தரம் மற்றும் பாலின் மதிப்புக்கு ரசீது வழங்க 453 பால் பகுப்பாய்வு கருவிகள் ரூ.2.26 கோடி மதிப்பில் வழங்கப்படும்.

கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை: கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் பால் வழங்குகின்ற, பால் உற்பத்தியாளர்களுடைய கறவை மாடுகளுக்கு இலவச சிகிச்சை இனப்பெருக்க வசதி மற்றும் அவர்களுக்கு தூய முறையில் பால் உற்பத்தி பயிற்சி, சமச்சீர் தீவனம், தாது உப்புக் கலவை, பசுந்தீவனத்தின் முக்கியத்துவம் மற்றும் கறவை மாடுகள் பராமரிப்பு பற்றிய ஆலோசனைகள் ஆகியன வழங்குவதற்காக கால்நடை மருத்துவ வழித்தடங்களில் 162 கால்நடை மருத்துவ ஆலோசகர்களை ரூ.6.80 கோடி திட்டமதிப்பில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

---

9. கரூர், நாகப்பட்டினம், சிவகங்கையில் வேளாண்மை கல்லூரிகள்

கரூர், நாகப்பட்டினம், சிவகங்கை ஆகிய இடங்களில் 3 புதிய அரசு வேளாண்மை கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அத்துறையின் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்தார். வேளாண் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வெளியிட்ட அறிவிப்புகள்: வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி 2021–22–இல் கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் 3 புதிய அரசு வேளாண்மை கல்லூரிகள் துவங்குவதற்கு மாநில அரசு தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.30 கோடி நிதியினை ஒதுக்கும்.

அரியலூர், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி, விருதுநகர் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள 200 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளின் நலன்களுக்காக தமிழக வரலாற்றில் முதல்முறையாக 2021–22–இல் நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்டங்களின் ஆழ்துளை அல்லது குழாய் கிணறுகள் அமைத்து மின்வசதியுடன் மின்மோட்டார் பொருத்தி, நுண்ணீர் பாசன வசதிகள் 100 சதவீத மானியத்தில் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.12 கோடி நிதி செலவிடப்படும். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருள்களைச் சந்தைப்படுத்த சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மாநகராட்சி பகுதிகளில் ரூ.8 கோடி செலவில் 50 சிறப்பு அங்காடிகள் அமைக்கப்படும்.

வேளாண் விளைபொருள்களைச் சேமிக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில் திருப்பூர் பூளவாடி, புதுக்கோட்டை சிதம்பரவிடுதி, நாமக்கல் எருமைப்பட்டி, ஈரோடு பர்கூர் ஆகிய இடங்களில் 250 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள சேமிப்புக் கிடங்குகள் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.

நெய்தல் பூங்கா: 2021–22–இல் நாகூரில் நெய்தல் பாரம்பரிய பூங்கா 3.06 ஹெக்டேரில் ரூ.2 கோடி நிதியில் மீன்வளம் மற்றும் மீனவ நலத்துறையின் ஒருங்கிணைப்புடன் அமைக்கப்படும். இது இளம் தலைமுறையினருக்கு பண்டைய தமிழர்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் செயல்படும்.

2021–22–இல் 100 பெண் விவசாயிகளுக்கு, ஒருவருக்கு ரூ.1 லட்சம் என்கிற விகிதத்தில் குடிசை தொழிலாக குறைந்த பரப்பிலான காளான் உற்பத்திக்கூடம் அமைத்திட மானியம் வழங்க மகளிர் திட்டத்துடன் இணைந்து ரூ.1 கோடி செலவிடப்படும். நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில் 2021–22–இல் 1,077 நபர்களுக்கு 6 மாத கால உறைவிடத் தோட்ட தொழில்நுட்பவியலாளர் பயிற்சி ரூ.1.77 கோடி நிதியிலும், 3 ஆயிரம் நபர்களுக்கு பூங்கொத்து, பூ அலங்காரம் செய்தல், நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறுவுதல் மற்றும் பராமரித்தல், தேனீ வளர்ப்பு குறித்த 30 நாள் பயிற்சிகள் ரூ.1.69 கோடி நிதியிலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் வழங்கப்படும். இந்தப் பயிற்சியில் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வேளாண் பொறியியல் பட்டயப் படிப்பு: வேளாண் இயந்திரங்கள் தொடர்பான அடிப்படை கல்வியினை பரவலாக்கும் வகையில் 2021–22–இல் திருச்சி குமுளூர் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2 ஆண்டு வேளாண்மை பொறியியல் பட்டயப் படிப்பு ரூ.1 கோடி நிதியில் தொடங்கப்படும். இந்தப் படிப்பில் ஆண்டுக்கு 40 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். இதன் மூலம் கிராமப்புற மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு உயரும் என்பதுடன் விவசாயிகளின் வேளாண் இயந்திரங்களை அவரவர் பகுதியிலேயே பழுதுபார்க்க இயலும்.

திருப்பூரில் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்கக்ச் சான்றளிப்பு துறை சார்பில் 2021-22-இல் புதிதாக விதை பரிசோதனை நிலையம் அமைக்கப்படும். 2021-22-இல் கோயம்புத்தூரில் இயங்கி வரும் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்கக்ச் சான்றளிப்பு துறையின் தலைமை அலுவலகம் மாநிலத்தின் தலைநகரான சென்னைக்கு மாற்றப்படும் என்றார்.

---

10. 34 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டம்

நாட்டில் உள்ள 34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தகுதியான குடும்பங்களுக்கு நியாய விலைக் கடைகள் வாயிலாக மானிய விலையில் உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஒவ்வொரு மாநிலமும் குடும்ப அட்டைகளை விநியோகித்து வருகின்றன. அந்த அட்டைகளைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட மாநிலத்தில் மட்டுமே உணவு தானியங்களைப் பெறும் சூழல் நிலவி வந்தது. இந்நிலையில், குடும்ப அட்டைகளைப் பெற்ற புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் நாட்டில் உள்ள எந்த நியாய விலைக் கடையிலும் உணவு தானியங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தில் இதுவரை 34 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் இணைந்துள்ளதாக மத்திய உணவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேற்கு வங்கம் ஆகஸ்டிலும், தில்லி கடந்த ஜூலையிலும் இத்திட்டத்தை அமல்படுத்தின. அஸ்ஸாம், சத்தீஸ்கர் மாநிலங்கள் மட்டும் இத்திட்டத்தை இன்னும் செயல்படுத்தவில்லை. விரைவில் அவ்விரு மாநிலங்களும் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டத்தைச் செயல்படுத்தும் என்று மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் சராசரியாக 2.2 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பலனடைந்து வருகின்றனர். கடந்த 2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் இத்திட்டத்தின் கீழ் சுமார் 40 கோடி முறை உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பிகார் (10.14 கோடி முறை), ஆந்திரம் (6.92 கோடி முறை), ராஜஸ்தான் (4.56 கோடி முறை) ஆகிய மாநிலங்களில் அதிக முறை உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டைகளுடன் ஆதார் எண்ணை இணைத்தது, நியாய விலைக் கடைகளில் மின்னணு இயந்திரத்தின் வாயிலாக உணவுப் பொருள்களை விநியோகிப்பது ஆகிய நடைமுறைகளின் வாயிலாக இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

11. ரூ.188 கோடியில் புதிய ரோந்துக் கப்பல் 'விக்ரகா' : நாட்டுக்கு அர்ப்பணித்தார் அமைச்சர் ராஜ்நாத் சிங்

இந்தியக் கடலோரக் காவல் படையின் ரோந்துப் பணிக்காக சுமார் ரூ.188 கோடி செலவில் கட்டமைக்கப்பட்ட 'விக்ரகா' எனப் பெயரிடப்பட்ட அதிநவீன கப்பலை சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நாட்டுக்கு அர்ப்பணித்தார். சென்னையை அடுத்த காட்டுப்பள்ளியில் எல் அன் டி நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளம் உள்ளது. இங்கு கடற்படை, கடலோரக் காவல் படைக்குத் தேவையான ரோந்துக் கப்பல்கள், அதிநவீன இடைமறிக்கும் படகுகள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 2015-ஆம் ஆண்டு 7 ரோந்துக் கப்பல்கள் தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தை எல் அன் டி நிறுவனத்திற்கு பாதுகாப்பு அமைச்சகம் வழங்கியது. இதில் விக்ரம், வீரா, விஜயா, வராக, வரத், வஜ்ரா ஆகிய 6 ரோந்துக் கப்பல்கள் ஏற்கனவே கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து சுமார் ரூ.188 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 'விக்ரகா' எனப் பெயரிடப்பட்ட புதிய ரோந்துக் கப்பல் கடந்த ஆண்டு அக்.5-இல் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டு முதல் முறையாக கடல் நீரில் இறக்கி வெள்ளோட்டம் விடப்பட்டது. கடந்த 10 மாதங்களாக இக்கப்பலில் நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதன்பிறகு கடலோரக் காவல் படையில் முறைப்படி இணைக்கப்படும் நிகழ்ச்சி சென்னைத் துறைமுகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. கடலோரக் காவல் படை தலைமை இயக்குநர் கே.நடராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 'விக்ரகா' -வை முறைப்படி நாட்டுக்கு அர்ப்பணித்தார். பின்னர் கப்பலின் பெயர் பலகையை அமைச்சர் திறந்து வைத்தார்.

கப்பலின் சிறப்பம்சங்கள்: கடலோரக் காவல் படையில் இணைக்கப்பட்டுள்ள 'விக்ரகா' 2,200 மெட்ரிக் டன் எடையும், 98 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் கொண்ட இக்கப்பல் மணிக்கு அதிகபட்சமாக 26 கடல் மைல் வேகத்தில் செல்லக் கூடியது. மேலும் கரைக்குத் திரும்பாமல் சுமார் 5,000 கடல் மைல் தூரம் பயணிக்கும் வகையில் பல்வேறு நவீன கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதில் ஹெலிகாப்டர் இறங்கும் வசதி உள்ளது. மேலும் மாசுக் கட்டுப்பாட்டுக் கருவிகள், கண்காணிப்புக் கருவிகள் அதிநவீன ரக துப்பாக்கிகள், கடல் வழித்தடத்தை துல்லியமாகக் காட்டும் கருவிகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. 11 அதிகாரிகள், 110 பணியாளர்கள் உள்ளிட்ட 121 படை வீரர்களுடன் பயணிக்க உள்ள 'விக்ரகா' - வின் உத்தேச ஆயுள் காலம் சுமார் 25 ஆண்டுகள் ஆகும்.

---

12. ரயில் பயணிகள் குறைகளை தெரிவிக்க - 'ரயில் மதாத்' புதிய செயலி அறிமுகம் :

மதுரை ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ரயில் பயணிகளின் புகார்கள் மற்றும் ஆலோசனைகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க 'ரயில் மதாத்' (MADAD - Mobile Application for Desired Assistance During travel) என்ற செல்போன் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் தங்களது புகார்களை தொலைபேசி, இணையதளம், சமூக ஊடகம் வாயிலாக பதிவு செய்கின்றனர். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து உடனடி நடவடிக்கைக்காகவே 24 மணி நேரமும் செயல்படும் செயலி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. தமிழ் உட்பட 12 மொழிகள் மூலம் இந்த செயலியை பயன்படுத்தலாம்.

இந்த செயலியை இணையதளம், குறுஞ்செய்தி, சமூக ஊடகம் மற்றும் உதவி எண் 139 மூலம் அணுகலாம். இதன்மூலம் பாதுகாப்பு, மருத்துவ உதவி, விபத்து பற்றிய தகவல்கள், மாற்றுத்திறனாளிகள், பெண்களுக்கான உதவிகள், பொதுப்புகார், லஞ்சப்புகார், பார்சல் சரக்கு போக்குவரத்து பற்றிய விசாரணை, ஐஆர்சிடிசி ரயில்கள் விவரங்கள், ஏற்கெனவே அளித்த புகாரின் நிலையை பற்றியும் அறிந்து கொள்ளலாம். இந்த செயலியை பயன்படுத்த முடியாத காலங்களில் ரயில் பயணச்சீட்டு பரிசோதகர், நிலைய அதிகாரி, பணியில் உள்ள ரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் ரயில்வே காவலர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

13. கீழடி அகழாய்வில் தானியக் கொள்கலன் கண்டெடுப்பு

சிவகங்கை மாவட்டம், கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் தானியக் கொள்கலன் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். சிவகங்கை மாவட்டம், கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் 7 -ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் நடைபெற்று வருகின்றன. இதில் சுடுமண் முத்திரை, உறை கிணறுகள், காதணிகள், தந்தத்தினாலான பகடை, முதுமக்கள் தாழி, கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய புழங்குப் பொருள்கள் உள்ளிட்ட ஏராளமான தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் சிவப்பு நிறத்திலான சுடுமண்ணால் ஆன தானியக் கொள்கலன் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அகழாய்வுப் பணி மேற்கொள்ளும் தொல்லியலாளர்கள் சனிக்கிழமை கூறியது : கீழடியில் நடைபெற்று வரும் 7 ஆம் கட்ட அகழாய்வில் கடந்த ஆகஸ்ட் 8 ஆம் தேதி பணி மேற்கொள்ளும் போது 348 செ.மீ ஆழத்தில் பெரிய வாய்ப்பகுதி கொண்ட சுடுமண் பானையின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டது. தொடர்ந்து, அதே பகுதியில் ஆய்வு மேற்கொண்டதில் 30 செ.மீ விட்டமும், 60 செ.மீ உயரமும், 2 செ.மீ. தடிமனும் கொண்ட முழு பானையாக அண்மையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இந்த பானை அழகிய வேலைப்பாடுகளுடன் அமையப் பெற்றுள்ளது. மேலும், இதன் வெளிப்புற மையப்பகுதியில் கயிறு போன்ற வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை பழங்கால மக்கள் தானியங்களை சேமித்து வைப்பதற்கு தானியக் கொள்கலனாக பயன்படுத்தி இருக்கலாம் என்றனர்.

1. 'ஆனந்தா' என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?

அ) பாரத வங்கி

ஆ) பணியாளர் வருங்கால வைப்பு நிதியம்

இ) இந்திய அஞ்சல்துறை

ஈ) இந்திய ஆயுள்காப்பீட்டு கழகம் ☑

✓ ஆத்மநிர்பார் திட்டத்தின் ஒருபகுதியாக, LIC முகவர்கள் வாடிக்கையாள –ர்களை பல்வேறு காப்பீடுகளில் சேர்க்கும்போது காகிதம் இல்லாமல் மின்னணு முறையிலேயே அவர்களின் விவரங்களைப் பெற்று சமர்ப்பிக்கும் வகையில் 'ஆனந்தா' செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. Atma Nirbhar Agents New–business Digital Application என்பதின் சுருக்கந்தான் 'ANANDA'.

✓ இப்புதிய செயலிமூலம் வாடிக்கையாளர்களின் விவரங்களை ஆதார் எண் அடிப்படையில் உறுதிசெய்யவும், காகிதத்தில் விண்ணப்பப் படிவம் இல்லாமல் மின்னணு முறையிலேயே விண்ணப்பங்களைப் பெறவும் முகவர்களால் முடியும். இதன்மூலம் அவர்களின் பணி விரைவில் முடிவதோடு, அதிக வாடிக்கையாளர்களை பெறவும் முடியும்.

---

2. சுஜலாம் என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ள அமைச்சகம் எது?

அ) நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஆ) ஜல் சக்தி அமைச்சகம் ☑

இ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ விடுதலையின் அம்ரித் மகோத்சவ் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக 100 நாள் 'சுஜலாம்' பிரச்சாரத்தை ஆக.25 அன்று நடுவண் ஜல் சக்தி அமைச்சகம் தொடங்கியுள்ளது.

✓ கழிவுநீர் மேலாண்மையை கிராம அளவில் மேற்கொண்டு, திறந்த வெளி மலங்கழித்தலற்ற கிராமங்களை அதிகளவில் உருவாக்குவதை இப்பிரச்சாரம் நோக்கமாகக்கொண்டுள்ளது. 10 இலட்சம் குட்டைகளை அமைப்பது உள்பட, கிராமங்களில் கழிவு & கழிவுநீர் மேலாண்மைக்கு தேவையான உட்கட்டமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துவ –தோடு மட்டுமில்லாமல் நீர்நிலைகளின் நீடித்த மேலாண்மையையும் இந்தப் பிரச்சாரம் கருத்தில்கொள்ளும்.

---

3. EASE 3.0'இன்கீழ், அடிப்படை செயல்திறனில் இருந்து சிறந்த முன்னேற்றத்திற்கான விருதை வென்ற வங்கி எது?

அ) கனரா வங்கி

ஆ) பஞ்சாப் நேஷனல் வங்கி

இ) இந்தியன் வங்கி ☑

ஈ) யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

✓ தொழில்நுட்பம் சார்ந்த, எளிமையான மற்றும் கூட்டு வங்கியியலுக்கான 2021–22ஆம் ஆண்டுக்கான பொதுத்துறை வங்கிகள் சீர்திருத்த செயல்திட்டம் – EASE 4.0 என்னும் நான்காம் பதிப்பை மத்திய நிதி & பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சர் நிர்மலா சீதாராம் வெளியிட்டார்.

✓ 2020–21ஆம் ஆண்டுக்கான பொதுத்துறை வங்கிகள் சீர்திருத்த செயல் திட்டம் – EASE 3.0'இன் வருடாந்திர அறிக்கையையும் வெளியிட்ட அவர், EASE 3.0 வங்கிகள் சீர்திருத்த குறியீட்டில் சிறந்து விளங்கிய வங்கிகளை கௌரவிப்பதற்கான விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியிலும் பங்கேற்றார். பாரத வங்கி, பரோடா வங்கி மற்றும் இந்திய யூனியன் வங்கி ஆகியவை EASE 3.0 வங்கிகள் சீர்திருத்த குறியீட்டில் சிறந்து விளங்கியதற்கான பரிசுகளைப் பெற்றன. இந்தியன் வங்கி, EASE 3.0' இன்கீழ், அடிப்படை செயல்திறனிலிருந்து சிறந்த முன்னேற்றத்திற்கான விருதை வென்றது

---

4. குஷ்மேன் & வேக்பீல்டின் நடப்பாண்டுக்கான (2021) உலக உற்பத்தி அபாயக்குறியீட்டின்படி, உலகில் அதிகம் விரும்பப்படும் உற்பத்தித் தளங்களில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) முதலாவது

ஆ) இரண்டாவது ☑

இ) மூன்றாவது

ஈ) நான்காவது

✓ உலகளவில், 'மிகவும் விரும்பப்படும் உற்பத்தி மையங்கள்' பட்டியலில், இந்தியா, அமெரிக்காவை விஞ்சி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. முதலிடத்தில் சீனா உள்ளது. இதற்கு முக்கியமான காரணம், உற்பத்தி செலவு மிகவும் குறைவாக இருப்பதுதான் என, 'குஷ்மேன் & வேக்பீல்டு' நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டில், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாமிடத்திலும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

5. காசநோயாளிகளில் கடுமையான COVID–19 நிலைமைகளின் தாக்கத்தை ஆய்வு செய்ய, எந்த நிறுவனத்துடன், பயோடெக்னாலஜி துறை ஒத்துழைத்துள்ளது?

அ) BRICS ☑

ஆ) G20

இ) G7

ஈ) BIMSTEC

✓ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறை, BRICS நாடுகளுடன் ஒருங்கிணைந்து, காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடையே தீவிர COVID–19 தொற்றின் தாக்கம் குறித்து ஆய்வுசெய்வதற்காக SARS–CoV2 NGS–BRICS கூட்டமைப்பை செயல்படுத்தி வருகிறது. சிறந்த நோய் மேலாண்மைக்காக COVID–19 தொற்றால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படாத நுரையீரல் காசநோய் நோயாளிகளில் இணைநோய் குறித்த தகவலை இந்த ஒருங்கிணைந்த ஆய்வு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

6. ஆப்கானிஸ்தான் தொடர்பான ஆலோசனைகளுக்காக நிரந்தர இருதரப்பு சேனலை உருவாக்குவதற்காக, இந்தியா, எந்நாட்டோடு ஒப்புக்கொண்டுள்ளது?

அ) ரஷ்யா ☑

ஆ) ஈரான்

இ) சீனா

ஈ) அமெரிக்கா

✓ ஆப்கானிஸ்தான் தொடர்பான ஆலோசனைகளுக்கு நிரந்தர இருதரப்பு சேனலை உருவாக்க இந்தியாவும் ரஷ்யாவும் ஒப்புக்கொண்டுள்ளன. 1996–2001'க்கு இடையில், காபூலில் இஸ்லாமியக் குழு கடைசியாக ஆட்சியில் இருந்தபோது இந்தியா, ரஷ்யா மற்றும் ஈரான் ஆகியவை தலிபான் எதிர்ப்பு கூட்டணியின் முக்கிய ஆதரவாளர்களாக இருந்தன.

---

7. வங்கி மற்றும் நிதி மோசடிகளுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) பத்மஜா சுந்துரு

ஆ) SS மல்லிகார்ஜுன ராவ்

இ) T M பாசின் ☑

ஈ) ஹஸ்முக் ஆதியா

✓ மத்திய விஜிலென்ஸ் கமிஷன்மூலம் வங்கி & நிதிமோசடிகளுக்கான ஆலோசனைக்குழுவின் தலைவராக TM பாசின் நியமிக்கப்பட்டுள்ளார். 2 ஆண்டுகாலத்திற்கு அவர் இப்பதவியிலிருப்பார். ₹50 கோடிக்கும் அதிகமான வங்கி மோசடிகளை ஆராய்ந்து அதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்காக இக்குழு உருவாப்பட்டது.

---

8. பயனர்கள், தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்பதிவு செய்வதற்காக, சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்துடன் கூட்டுசேர்ந்துள்ள நிறுவனம் எது?

அ) வாட்ஸ்ஆப் ☑

ஆ) டுவிட்டர்

இ) டெலிகிராம்

ஈ) கூகிள்

✓ சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்துடன் வாட்ஸ்ஆப் கூட்டு சேர்ந்துள்ளது. இதன்மூலம் வாட்ஸ்ஆப்பில், MyGov கொரோனா உதவி எண்ணுக்கு 'Book Slot' என அனுப்புவதன்மூலம் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்பதிவு செய்துகொள்ளவியலும். மேலும் தடுப்பூசி செலுத்திக்

கொண்டாதற்கான சான்றிதழையும் வாட்ஸ்ஆப்பில் இருந்து பதிவிறக்கம் செய்யும் வசதியும் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

---

9. எந்த மாநிலத்தின் திட்டமிடல் துறையுடன் இணைந்து, இந்தியக் குடியரசுத்துணைத்தலைவர் 'தடுப்பூசி இந்தியா' திட்டத்தைத் தொடங்கினார்?

அ) உத்தர பிரதேசம்

ஆ) தெலங்கானா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கர்நாடகா ☑

✓ இந்தியக்குடியரசுத்துணைத்தலைவர், M வெங்கையா, ஆக.24 அன்று 'தடுப்பூசி இந்தியா' திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்தை பெங்களூரில் 'கிவ்விங் இந்தியா' அறக்கட்டளை & நீடித்த இலக்குகள் ஒருங்கிணைப்பு மையம் ஏற்பாடு செய்தன. இது கர்நாடக மாநில அரசின் திட்டமிடல் துறையுடன் இணைந்து CSIR'இன் கீழ் தொடங்கப்பட்டது. இந்தியா தனது COVID-19 தடுப்பூசி திட்டத்தை 2021 ஜனவரி.16 அன்று தொடங்கியது.

---

10. உலக தண்ணீர் வாரமானது ஆகஸ்ட் மாதத்தில் எத்தேதியில் இருந்து எத்தேதி வரை ஏற்பாடு செய்யப்பட்டது?

அ) 19-23 ஆகஸ்ட்

ஆ) 23-27 ஆகஸ்ட் ☑

இ) 20-26 ஆகஸ்ட்

ஈ) 27-31 ஆகஸ்ட்

✓ உலக நீர் வாரம் என்பது ஸ்டாக்ஹோம் பன்னாட்டு நீர் நிறுவனத்தால் (SIWI) கடந்த 1991ஆம் ஆண்டு முதல் உலகளாவிய நீர் பிரச்சனைகள் மற்றும் பன்னாட்டு வளர்ச்சி தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்படுகிற வருடாந்திர நிகழ்வாகும். உலக நீர் வாரம், 2021 ஆக.23-27 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் (2021) நிகழ்வு முற்றிலும் மெய்நிகரான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "Building Resilience Faster" என்பது 2021 உலக நீர் வாரத்திற்கான கருப்பொருளாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. டோக்கியோ பாராலிம்பிக்: ஒரே நாளில் இந்தியாவுக்கு 2 வெள்ளி, 1 வெண்கலம்

டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் ஒரே நாளில் இந்தியா 2 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றியது. ஒலிம்பிக் போட்டிகளைத் தொடர்ந்து பாராலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அதன்படி டோக்கியோ நகரில் தற்போது பாராலிம்பிக் போட்டிகள் நடந்து வருகின்றன. மொத்தம் 4,400-க்கு மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். இந்தியா சார்பில் தமிழகத்தின் தங்கவேலு மாரியப்பன் உள்பட 54 பேர் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்றுள்ளனர்,.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மகளிர் டேபிள் டென்னிஸ் கிளாஸ் 4 பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பவினா பென் படேல் 0-3 என்ற கேம் கணக்கில் உலகின் நம்பர் ஒன் நிலை வீராங்கனை சீனாவின் யிங் ஸூவிடம் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார். டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் இந்தியா வென்ற முதல் பதக்கமாகவும், டேபிள் டென்னிஸ் விளையாட்டில் இந்தியாவின் முதல் பதக்கமாகவும் இது அமைந்தது.

உயரம் தாண்டுதல்-நிஷாத் குமார்:

ஆடவர் உயரம் தாண்டுதல் டி47 பிரிவில் 21 வயதே ஆன இந்திய வீரர் நிஷாத் குமார் 2.06 மீட்டர் குதித்து புதிய ஆசிய சாதனையுடன் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஹிமாசலபிரதேசம் ஆம்ப் நகரைச் சேர்ந்த நிஷாத் குமார் தங்கள் விவசாய நிலத்தில் புற்களை வெட்டும் போது அந்த இயந்திரத்தில் வலது கையை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டு எறிதல்-வினோத் குமார்:

41 வயதான பிஎஸ்எப் வீரரான வினோத்குமார் வட்டு எறிதல் எஃப் 52 பிரிவில் 19.91 தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார். வினோத்குமாரும் புதிய ஆசிய சாதனையை படைத்தார். வெள்ளிப் பதக்கம் வென்ற பவினா படேல், நிஷாத்குமார், வெண்கலம் வென்ற வினோத்குமார் உள்ளிட்டோருக்கு தலைவர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

---

2. தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைய வயது வரம்பு அதிகரிப்பு

தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (என்பிஎஸ்) இணைவதற்கான உச்ச வயது வரம்பு 65-லிருந்து 70-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தேசிய ஓய்வூதியத் திட்டத்தை ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை-வளர்ச்சி ஆணையம் (பிஎஃப்ஆர்டிஏ) செயல்படுத்தி வருகிறது. அத்திட்டத்தில் இணைவது, திட்டத்தின் பலன்களைப் பெறுவது உள்ளிட்டவை தொடர்பான மாற்றப்பட்ட விதிமுறைகளை பிஎஃப்ஆர்டிஏ வெளியிட்டுள்ளது.

அதன்படி, தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைவதற்கான அதிகபட்ச வயது வரம்பு 65-லிருந்து 70-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச வயது வரம்பு 18-ஆகவே நீடிக்கிறது. இந்தியர்கள், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் ஆகியோர் 75 வயது வரை தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் சேமித்து வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிஎஃப்ஆர்டிஏ வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஓய்வூதியத் திட்டத்தில் இணைவோரின் சேமிப்புத் தொகை எந்த வகையில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்பதைப் பொருத்து முதலீட்டு சதவீதம் மாறுபடும். 65 வயதைக் கடந்தோர் தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணையும்போது, ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட சொத்துகளில் (ஆட்டோ சாய்ஸ்) 15 சதவீதம் வரை மட்டுமே முதலீடுகளை மேற்கொள்ள முடியும்.

சொத்துகள் மீதான முதலீடுகளை ஓய்வூதியதாரர்களே முடிவு செய்தால் (ஆக்டிவ் சாய்ஸ்), அதில் 50 சதவீதம் வரையிலான தொகையை முதலீடு செய்ய முடியும். 65 வயதைக் கடந்தவர்கள் தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தால், குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்குப் பிறகே திட்டத்தை விட்டு வெளியேற முடியும். திட்டத்தில் இருந்து வெளியேறும் ஓய்வூதியதாரர்கள், குறைந்தபட்சம் 40 சதவீதத் தொகையை எதிர்கால ஓய்வூதியத்துக்காக வைத்துக் கொண்டு மீதத்தொகையை ஒரே தவணையில் பெற்றுக் கொள்ளலாம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

3. முறிந்த எலும்பை விரைவாக இணைக்கும் ஆராய்ச்சி: கும்மிடிப்பூண்டி மாணவர் சாதனை

கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த உயிரியல் தொழில்நுட்ப இறுதியாண்டு மாணவர், முறிந்த எலும்புகளை 15 நாள்களுக்குள் ஒட்ட வைக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, வெற்றி பெற்றுள்ளார். கும்மிடிப்பூண்டியை சேர்ந்த பாஸ்கரன்-லதா தம்பதியின் மகன் வைத்தியநாதன் (21). இவர் தஞ்சை சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் உயிரியல் தொழில்நுட்பப் படிப்பில் இறுதி ஆண்டு படித்து வருகிறார். இவர் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் மேற்கொண்ட ஆராய்ச்சி குறித்த அறிக்கை, பலரின் கவனத்தை ஈர்த்து வருகிறது. எலும்பு முறிவு சிகிச்சையில், முறிந்த எலும்புகள் ஒன்றுகூட, ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் வரை கால அவகாசம் தேவைப்படும். இதனால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க, முறிந்த எலும்புகள் விரைந்து கூடுவதற்கான ஆராய்ச்சியை வைத்தியநாதன் தோர்வு செய்தார்.

இவரது ஆராய்ச்சியின் பலனாக, எலும்புகளை விரைந்துகூட வைக்கும் 'கய்டோசன்' என்ற பயோ பாலிமருடன், தொற்று பாதிப்பு ஏற்படாமல் இருக்க சில்வர் நானோ துகள்கள் கலந்து தயாரித்த கலவையை, முறிந்த எலும்புகளுக்கு இடையே நிரப்ப வேண்டும். அப்படி செய்தால், முறிந்த எலும்புகள், 15 நாள்களுக்குள் ஒன்றுகூடும் என ஆராய்ச்சி அறிக்கையை 2020-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், பல்கலைக்கழகத்தில் வைத்தியநாதன் சமர்ப்பித்தார். அவரது ஆராய்ச்சியை, மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை அங்கீகரித்தது. இதையடுத்து, 2021-ஆம் ஆண்டின் இளம் சாதனையாளர் விருதான இன்ஸ்டிட்யூட் ஆப் ஸ்காலர்ஸ் விருதினை வழங்கியது.

அதைத் தொடர்ந்து பாக்ஸ் க்ளூஸ் மற்றும் ஜி நியூஸ் இணைந்து, 2021-ஆம் ஆண்டின் 'இந்தியா பிரைம் குவாலிட்டி எஜுகேஷன்' விருதினை வைத்தியநாதனுக்கு வழங்கியது. இந்த உயிரியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பால், அவருக்கு விருதுகளும் பாராட்டுகளும் தொடர்ந்து குவிந்து வருகின்றன.

1. நடப்பாண்டுக்கான (2021) காசநோய் தடுப்புக் கூட்டுக் குழுவின் தலைவராக பொறுப்பேற்ற நாடு எது?

அ) ஐக்கிய இராச்சியம்

ஆ) ஆஸ்திரேலியா

இ) இந்தியா ☑

ஈ) வங்காளதேசம்

✓ மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சர் மன்சுக் மாண்டவியா, காச நோய் தடுப்புக்கூட்டுக்குழுவின் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டார். 2024ஆம் ஆண்டு வரை அமைச்சர் இந்தப்பொறுப்பை வகிப்பார்.

✓ ஐநா'இன் காசநோய் இலக்கை 2022ஆம் ஆண்டிற்குள் அடையவும், 2030ஆம் ஆண்டிற்குள் காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் மைல்கல் தருணத்தை அடையவும், காசநோய் தடுப்புக்கூட்டுச்செயலகம், கூட்டாளிகள் மற்றும் காசநோய் சமூகத்தின் முயற்சிகளை அவர் முன்னெடுத்துச் செல்வார்.

---

2. "Accelerating India: 7 Years of Modi Government" என்ற நூலின் ஆசிரியர்/தொகுப்பாசிரியர் யார்?

அ) K J அல்போன்ஸ் ☑

ஆ) கும்மனம் இராஜசேகரன்

இ) A P அப்துல்லாகுட்டி

ஈ) A N இராதாகிருஷ்ணன்

✓ முன்னாள் மத்திய அமைச்சர் K J அல்போன்ஸ், "இந்தியாவை முன்னேற்றுதல்: நரேந்திர மோடி அரசின் 7 ஆண்டுகள்" என்ற தமது நூலை பிரதமர் மோடியிடம் வழங்கினார்.

✓ இந்திய நிர்வாகத்தின் 25 துறைகள் குறித்த இந்த நூலில், 28 புகழ்மிக்க எழுத்தாளர்களின் 25 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இது மோடி அரசின் சாதனைகளின் ஆவணமாகும்.

---

3. பெண்கள் தொழில்முனைவு தளம் என்பது கீழ்காணும் எந்த நிறுவனத்தின் முன்னெடுப்பாகும்?

அ) NITI ஆயோக் ☑

ஆ) ஐநா பெண்கள் அமைப்பு

இ) மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) NASSCOM

✓ நாடு முழுவதும் உள்ள பெண்கள் தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் NITI ஆயோக்கும், CISCOஉம் மகளிர் தொழில் முனைவு தளத்தின் அடுத்த கட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.

✓ WEP Nxt எனப்பெயரிடப்பட்டுள்ள இத்தளம், சிஸ்கோவின் தொழினுட்பம் மற்றும் பணி அனுபவத்தால் நாடு முழுவதுமுள்ள பெண்களால் நடத்தப்ப–டும் வர்த்தகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவிகரமாக இருக்கும். இந்தத் தளம் NITI ஆயோக்மூலம் கடந்த 2018 மார்ச்.8 அன்று முறையாக தொடங்கப்பட்டது.

---

4. "Shared Destiny–2021" என்ற பாதுகாப்புப் பயிற்சியை நடத்த திட்டமிட்டுள்ள நாடு எது?

அ) சீனா ☑

ஆ) தாய்லாந்து

இ) பாகிஸ்தான்

ஈ) மங்கோலியா

✓ சீனா, பாகிஸ்தான், மங்கோலியா மற்றும் தாய்லாந்தின் ராணுவத்தினர் "Shared Destiny–2021" பாதுகாப்புப் பயிற்சி என்ற பெயரில் பன்னாட்டு அமைதிகாக்கும் பயிற்சியில் பங்கேற்பதாகக் கூறப்படுகிறது. இப்பயிற்சி அடுத்த மாதம் சீனாவின் மத்திய ஹெனான் மாகாணத்தில் மக்கள் விடுதலை ராணுவத்தால் நடத்தப்படவுள்ளது. இந்த நான்கு நாடுகளும் பங்கேற்கும் முதல் பன்னாட்டு அமைதிகாக்கும் நேரடிப்பயிற்சி இது ஆகும். இந்தப் பாதுகாப்பு பயிற்சி சீனாவில் செப்.6–15 வரை நடைபெற உள்ளது.

---

5. 'கொடுப்பனவு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித்திட்டம்' என்பது எந்த நிறுவனத்தின் முன்னெடுப்பாகும்?

அ) NPCI

ஆ) RBI ☑

இ) NASSCOM

ஈ) DSCI

✓ 'கொடுப்பனவு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித்திட்டம்' என்பது இந்திய ரிசர்வ் வங்கியின் முயற்சியாகும். இது ₹345 கோடி மதிப்பில் தொடங்கப் பட்ட திட்டமாகும். ஆண்டுதோறும் 30 லட்சம் புதிய டச் பாயிண்டுகளை அடுக்கு–3 முதல் அடுக்கு–6 வரையிலான மையங்களில் டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்காக உருவாக்க வேண்டும் என்பது இதன் நோக்கம் ஆகும். 1ஆவது மற்றும் 2ஆவது மையங்களில் PM SV நிதி திட்டத்தின் கீழ் உள்ள வீதியோர விற்பனையாளர்களுக்கு விற்பனை முனையங்களில் (POS) உட்கட்டமைப்பை விரிவுபடுத்தும் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் விரிவுபடுத்தியுள்ளது.

---

6. அண்மையில் தென்சீனக்கடலில், எந்த நாட்டுடன் இணைந்து, இந்திய கடற்படை, பயிற்சியொன்றை நடத்தியது?

அ) பிலிப்பைன்ஸ் ☑

ஆ) மலேசியா

இ) தாய்லாந்து

ஈ) இந்தோனேசியா

✓ இந்திய கடற்படை மற்றும் பிலிப்பைன்ஸ் கடற்படை இடையே, பிலிப்பைன்ஸ் கடல்பகுதியில், கடல்சார் கூட்டு பயிற்சி நடக்கிறது. இதில் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் ரன்விஜய், ஐஎன்எஸ் கோரா ஆகிய 2 போர்க்கப்பல்கள் பங்கேற்கின்றன.

✓ மேற்கு பசிபிக் கடல்பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த 2 போர்க்கப்பல்களும், பிலிப்பைன்சு கடற்படையின் BRP ஆன்டனியோ லுனா என்ற போர்க்கப்பலுடன், மேற்கு பிலிப்பைன்ஸ் கடல்பகுதியில் கடல்சார் கூட்டு பயிற்சியில் ஈடுபடுகின்றன. இதன்மூலம் பிலிப்பைன்ஸ் கடற்படையுடன் இருதரப்பு உறவுகள் ஒருங்கிணைக்கப்படும்.

---

7. மாநிலத்தில் உள்ள நீர்நிலைகள் மற்றும் பூங்காக்களை மீட்டு உருவாக்கம் செய்வதற்காக ₹300 கோடி நிதி ஒதுக்கியுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) மத்திய பிரதேசம்

ஈ) கர்நாடகா

✓ தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர்நிலைகள் மற்றும் பூங்காக்கள் மீட்கப்பட்டு, ₹300 கோடி மதிப்பீட்டில் அதன் வசதிகள் மேம்படுத்தப்படும். மேலும், ₹100 கோடி செலவில் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்பு திட்டத்தை அரசு செயல்படுத்தும்.

✓ இந்தத் திட்டமானது நகர்ப்புற ஏழைகளை பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், மழைநீர் வடிகால்கள், சாலைகள், கட்டடங்கள் மற்றும் நீர்நிலைகளுக்கு புத்துயிர் அளித்தல்போன்ற பொதுச்சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பதில் ஈடுபடவைப்பதன்மூலம் வேலை வாய்ப்பை வழங்குகிறது. நகர்ப்புற நிர்வாக அமைச்சர் KN நேரு, "நமக்கு நாமே" திட்டத்திற்கு, ₹300 கோடி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட அனைத்து மாநகராட்சிகளிலும் நீர்நிலைகள் மீட்கப்பட்டு அங்கு புதிய பூங்காக்கள் அமைக்கப்படும்.

---

8. 2021 – பாதுகாப்பான நகரங்கள் குறியீட்டின்படி, அறுபது உலக நகரங்களுள், உலகின் பாதுகாப்பான நகரமாக தேர்வு செய்யப்பட்ட நகரம் எது?

அ) டோக்கியோ ஆ) சிட்னி

இ) ஹாங்காங் **ஈ) கோபன்ஹேகன் ☑**

- ✓ டென்மார்க் நாட்டின் தலைநகரமான கோபன்ஹேகன், அறுபது உலக நகரங்களுள் உலகின் பாதுகாப்பான நகரமாக பெயரிடப்பட்டுள்ளது. கோபன்ஹேகன், நூற்றுக்கு 82.4 மதிப்பெண்களைப்பெற்றது. இந்த நகரம், நகர்ப்புற பாதுகாப்பை அளவிடும் EIU குறியீட்டின் நான்காவது பதிப்பில் முன்னிலை வகிக்கிறது. யங்கோன் 39.5 மதிப்பெண்ணுடன் குறியீட்டின் கடனிலையில் உள்ளது. புது தில்லி 56.1 மதிப்பெண்ணுடன் 48ஆவது இடத்திலும், மும்பை 54.4 மதிப்பெண்ணுடன் ஐம்பதாவது இடத்திலும் உள்ளது. இந்தக்குறியீடு முதன்முதலில் 2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 2021ஆம் ஆண்டில், நகரங்கள் டிஜிட்டல், சுகாதாரம், உட்கட்டமைப்பு, தனிப்பட்ட மற்றும் சுற்றுசூழல் உள்ளிட்ட 76 பாதுகாப்பு அம்சங்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டன.

---

9. "கார்பன் வெளியேற்றமற்ற போக்குவரத்துக்கான அமைப்பினை" கீழ்காணும் எந்த நிறுவனத்துடன் இணைந்து NITI ஆயோக் அறிமுகப்படுத்தியுள்ளது?

அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியம்

ஆ) உலக பொருளாதார மன்றம்

இ) உலக வளங்கள் நிறுவனம் ☑

ஈ) பன்னாட்டு வளர்ச்சி மையம்

- ✓ இந்தியாவில் கார்பன் வெளியேற்றம் இல்லாத போக்குவரத்துக்கான அமைப்பை நிதிஆயோக் மற்றும் உலக வளங்கள் இந்திய மையம் (WRI) ஆகியவை கூட்டாக இணைந்து தொடங்கியுள்ளன. ஆசியாவுக்கான NDC–போக்குவரத்து முயற்சித் திட்டத்தின் (NDC–TIA) ஒருபகுதியாக இந்த அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ ஆசியாவின் போக்குவரத்துத் துறையில் கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. NDC–TIA என்பது கார்பன் வெளியேற்றமில்லா போக்குவரத்துக்கான ஒருங்கிணைந்த விரிவான அணுகுமுறையை ஊக்குவிக்கும் கூட்டுத் திட்டமாகும். இதில் சீனா, இந்தியா மற்றும் வியட்நாம் உள்ளிட்ட ஏழு நிறுவனங்கள் உள்ளன.

---

10. நக்சலியத்தை எதிர்த்து சுக்மா மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு உள்ள 32 பெண் ஊழியர்களைக்கொண்ட படைக்கு பெயர் என்ன?

அ) துர்கா ஃபைட்டர் ☑

ஆ) பத்ரா ஃபைட்டர்

இ) நாரி ஃபைட்டர்

ஈ) தேவி ஃபைட்டர்

- ✓ நக்சல்களால் பாதிப்படைந்த சுக்மா மாவட்டத்தில் நக்சலிசத்தை எதிர்த்து 32 பெண் ஊழியர்கள் அடங்கிய 'துர்கா ஃபைட்டர்' என்ற பெயரிலான படை அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தப்படை உருவாக்கப்பட்டதன் பின்னணியில் பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பத எண்ணம் உள்ளது. இந்தப் படைப்பிரிவில் உள்ளோர்க்கு ஒரு மாதகாலத்திற்கு கமாண்டோ பணிக்கான பயிற்சி அளிக்கப்படும். ஆஷா சென், இந்த 'துர்கா ஃபைட்டரின்' தலைவராக இருப்பார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பாராலிம்பிக்கில் இந்தியா பதக்க மழை: ஒரே நாளில் 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம்

டோக்கியோ பாராலிம்பிக்கில் இந்தியாவுக்கு ஒரே நாளில் 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என 5 பதக்கங்கள் கிடைத்தன. இதையடுத்து இந்த பாராலிம்பிக்கில் இந்தியாவுக்கு இதுவரை கிடைத்த பதக்கங்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது. 2016 ரியோ பாராலிம்பிக்கில் 4 பதக்கங்கள் கிடைத்ததே அதிகபட்சமாக இருந்த நிலையில், தற்போது இந்த பாராலிம்பிக்கில் இந்திய போட்டியாளர்கள் புதிய உச்சத்தை எட்டியுள்ளனர். இப்பதக்க எண்ணிக்கை இன்னும் உயர வாய்ப்புள்ளது.

துப்பாக்கி சுடுதல்: மகளிருக்கான துப்பாக்கி சுடுதலில் (ஆர்–2) 10 மீட்டர் ஏர் ரைபிள் ஸ்டான்டிங் எஸ்ஹெச்1–இல் அவனி லெகாரா (19) தங்கம் வென்றார். பாராலிம்பிக்கில் இந்தியாவுக்காக தங்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். பாராலிம்பிக்கில் இந்தியாவுக்காக தங்கம் வென்ற 4ஆவது போட்டியாளார் அவனியாவார். அவர் வென்றதே பாராலிம்பிக் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் பதக்கமாகும். அவருக்கு இது முதல் பாராலிம்பிக் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

ஈட்டி எறிதல்: ஆடவர் ஈட்டி எறிதலில் 'எப்64' பிரிவில் சுமித் அன்டில் (23) உலக சாதனையை 3 முறை முறியடித்து தங்கம் வென்றார். மற்றொரு பிரிவான 'எப்46'இல் தேவேந்திர ஜஜ்ஜரியா (40) வெள்ளியும், சுந்தர் சிங் குர்ஜர் (25) வெண்கலமும் வென்றனர். சுமித் அன்டில் தனது முதல் பாராலிம்பிக்கிலேயே தங்கம் வென்றுள்ளார். ஏற்கெனவே 2 முறை தங்கம் வென்ற ஜஜ்ஜரியாவுக்கு இந்த வெள்ளி இது 3ஆவது பதக்கம்.

ரியோ பாராலிம்பிக்கிலேயே களம்கண்ட சுந்தர் சிங், போட்டிக்காக ரிப்போர்டிங் செய்வதில் தாமதமானதால் அப்போது தகுதிநீக்கம் செய்யப்பட்டார். தற்போது வெண்கலம் வென்று அதை ஈடு செய்துள்ளார். இத்துடன் பாராலிம்பிக் ஈட்டி எறிதலில் இந்தியாவுக்கு 3 தங்கம் உள்பட 7 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

வட்டு எறிதல்: ஆடவர் வட்டு எறிதலில் 'எப்56' பிரிவில் யோகேஷ் கதுனியா (24) வெள்ளி வென்றார். பாராலிம்பிக்கிற்காக பயிற்சியாளரே இல்லாத நிலையில் ஓராண்டாகத் தயாராகி சளைக்காமல் பதக்கம் வென்றுள்ளார் யோகேஷ். 2019 உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்றதன்மூலம் டோக்கியோ பாராலிம்பிக்கிற்கு தகுதி பெற்றிருந்தார்.

---

2. வங்க எழுத்தாளர் புத்ததேவ் குஹா காலமானார்

புகழ்பெற்ற வங்கமொழி எழுத்தாளரான புத்ததேவ் குஹா (85) சமீபத்தில் காலமானார். 'மதுகரி', 'ஜங்கல்மஹால்', 'சோரோய்பேடி' உள்ளிட்ட பல சிறந்த வங்கமொழி நூல்களின் ஆசிரியராவார் அவர். இயற்கை மீது அதிக ஈடுபாடு கொண்டிருந்த புத்ததேவ் குஹா தனது படைப்புகளுக்காக ஆனந்த புரஸ்கார், சிரோமண் புரஸ்கார் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

---

3. குத்துச்சண்டை: இந்தியாவுக்கு 3 தங்கம் உள்பட 9 பதக்கம்

துபையில் நடைபெற்ற ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில் இந்தியா 3 தங்கம், 6 வெள்ளி என 9 பதக்கங்கள் வென்றது.

ஆடவருக்கான இறுதிச்சுற்றில் 51 கிலோ பிரிவில் விஷ்வாமித்ர சோங்தம் 4–1 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் குஸிபோயேவ் அஹ்மத்ஜோனை வென்றார். 80 கிலோ பிரிவில் விஷால் 5–0 என்ற கணக்கில் கிர்ஜிஸ்தானின் அக்மதோவ் சன்ஸாரை வீழ்த்தினார். மகளிருக்கான 54 கிலோ பிரிவில் நேஹா 3–2 என்ற கணக்கில் கஜகஸ்தானின் ஐஷாகுல் யலுபயேவாவை தோற்கடித்தார். எனினும், ஆடவர் பிரிவில் விஷ்வநாத் சுரேஷ் (48 கிலோ), வன்ஷாஜ் (63.5 கிலோ), ஜெய்தீப் ராவத் (71 கிலோ) ஆகியோரும், மகளிர் பிரிவில் நிவேதிதா (48 கிலோ), தமன்னா (50 கிலோ), சிம்ரன் (52 கிலோ) ஆகியோரும் இறுதிச்சுற்றில் தோல்விகண்டு வெள்ளி பெற்றனர்.